

மான் பூனைகளும்
எலி பிடிக்கும்
மருதூர்க்கனி

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்

நூலகம் நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்

10/04/[illegible]

This book is presented to
Shams Central College
Maruthamunai.

By—

U. L. M. HANIFFA
"MARUTHOOR GHANI"
Member of Parliament
Senior Deputy Leader - SLMC
Maruthamunai Kalmunai

260

# மண் பூனைகளும் எலி பிடிக்கும்

(சிறுகதைகள்)

மருதூர்க்கனி

LIBRARY
Km / Shams Central College
Maruthamunai

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்

| | |
|---|---|
| Title: | MANN POONAIKALUM ELI PIDIKKUM |
| Subjects: | Short Stories |
| First Edition: | October 01, 2002 |
| Author: | U.L.M.Haniffa |
| Copy Right: | Mrs.Kamila Haniffa |
| No. of Pages: | 214 |
| Point: | 10 Points |
| Paper: | 80gsm Bank Paper |
| Cover: | Art Board |
| Cover Photo Selection: | Miss.Layana Haniffa |
| Cover Design & Printing: | MBL Print,<br>465/1, Galle Road,<br>Colombo - 03<br>Phone: 01 - 589606 |
| Published By: | VIDUTHALAI VIRUTCHAM Publications,<br>No.: 11, 4th Lane,<br>KAWDANA BROAD WAY,<br>DEHIWELA, SRI LANKA.<br>☎ 01 - 734030, 717407, 067-29069 |
| Price: | 240/=<br>US$ 5 |

'வல்லார்' வகுத்த
வயலைப் 'புரட்ட'
சொல்லேர் பூட்டி
உழும் நாளெல்லாம்
எல்லா 'வெயிலையும்'
'நிழலையும்' தாங்கிய
இல்லாள்- 'காமிலா'
இவர்க்கே சமர்ப்பணம்

— கனி —

## உள்ளடக்கம்


1. என் கதைகளின் அடிச்சுடர்
   –மருதூர்க்கனி– 7–11

2. முற்போக்கு பாரம்பரியத்தின் இலக்கியச் செழுமை
   –பேராசிரியர் கா. சிவத்தம்பி– 12–14

3. மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதில்லை
   –பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு– 15–18

4. தனித்துவம் பெற்ற எழுத்துக்கள்
   –செ. யோகநாதன்– 19–29

5. A HUMANIST WITH A FINE CRAFT
   -K.S. SIVAKUMARAN- 30–31

6. மேலும் ஒரு குறிப்பு
   –மருதூர்க்கனி– 32–34

7. பசி 35–43

8. கோடரிகள் நச்சு மரங்களுக்காக 44–56

9. நிழலைத் தேடி 57–73

10. சந்தன மரம் 74 – 84

11. நெருப்புத்துளி 85 – 100

12. இரங்கிய போது 101 – 112

13. காலத்தின் குரல்கள் 113 – 120

14. மண்பூனைகளும் எலி பிடிக்கும் 121 – 131

15. கடுகதி பறக்கிது 132 – 143

16. நவயுகப் பிசாசுகள் 144 – 159

17. வெறும் கைகளும் முழமிடும் 160 – 171

18. கருகாத அரும்புகள் 172 – 185

19. சப்பாத்து 186 – 195

20. ஒரு மல்லிகை 196 – 204

21. சீரழிவு தொடர்கிறது 205 – 214

# என் கதைகளின் அடிச்சுடர்...

'உலகின் வயதான இலக்கிய வடிவம் எது?' என்று கேட்டால் உடனேயே நமக்குக் கிடைக்கும் பதில், 'கதை' என்பது தான். இது வாய் வழியான இலக்கியம்.

பனி மூடிய கூடாரத்திலே வாழ்ந்த சூரியனையே காணாத பின்லாந்துக் குழந்தை, தன் பாட்டியின் முன் இருந்து ஆர்வமாகக் கதை கேட்டது.

வெய்யில் கொழுத்தும் பூமத்திய ரேகைக் காட்டுப் பகுதியில் ஊசியிலை மரநிழலில் கறுப்பினப்பாட்டி தன்னைச் சுற்றியுள்ள குழந்தைகளுக்கு கதை சொன்னாள்.

கதிரவன் தனது முதல் வெளிச்சத்தை உதிர்த்திய ஜப்பானின் கடதாசி வீட்டினுள் இருந்த பேரர்களுக்கும் பேத்திகளுக்கும் மஞ்சள் நிறப் பாட்டி கதை சொன்னாள்.

இதுபோல தமிழிலே 'முன்னொருகாலத்திலே' என்று, தொடங்கி சந்திரனைக் காட்டி அதிலுள்ள ஔவைப் பாட்டியை, 'தனது தோழி' என்று, கூறினாள் எங்கள் பாட்டி. இப்படி உலகிலே தொடங்கிய வாய்வழிக் கதை மரபு அச்சிற்கு இடம் மாறிற்று.

அச்சிலே முதலில் தமிழிற்கு கதை சொன்னவன் மகாகவி பாரதி. பிறகு புதுமைப்பித்தன், அழகிரிசாமி, ஜெயகாந்தன், இலங்கையர்கோன் என்ற, இந்த வழி தொடர்ந்தது.

தமிழகத்தின் வெறும் கற்பனைக் கதை மரபு, இலங்கையையும் பாதித்தது. 'கலை கலைக்காக' என்ற, கவசத்தை ஏற்றி ஒன்றுக்கும் பயனில்லாத ஆக்கங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், இலங்கையில் வேகமான இலக்கியப் புயல் நிலை கொண்டது.

'மனிதன், மனிதனைவிட அற்புதமான எதுவும் உலகில் இல்லை' என்ற குரல் கணீரென ஒலித்தது. 'கலை மக்களுக்காக' என்ற, இலக்கிய சித்தாந்தம் ஆரோக்கியமான படைப் பாளிகளை தன் பக்கமாக ஈர்த்தது.

முற்போக்கு இயக்கம், தினகரன் (கைலாசபதிகாலம்) சரஸ்வதி, தாமரை இதழ்களின் தொடர்புகள் பலரைப் புடம் போட்டன.

கிழக்கிலே இந்த ஒளிக்கீற்று, என் போன்றோரைத் தொட்டு இயக்கமாய் உருவாக்கிற்று. எழுத்தே போராட்ட வடிகாலாயிற்று. சாதாரண அடிமட்ட மக்களின் வாழ்வினது பார்வையாளனாக இல்லாமல் பங்காளியாக இருந்த எனக்கு கண்ணெதிரே கதைகள், வாழ்வாக தெரிந்தன.

இவற்றை நான் கதைகளாக எழுதினேன் என்பதைவிட, வர்க்க முரண்படிந்த மனித அவலங்களையே என் கைபற்றி அவற்றை யதார்த்தமாயும் சித்தாந்தத் தெளிவுடனும் ஆவணப்படுத்தினேன் என்றே சொல்வேன்.

'இலக்கியம் என்பது மறைமுகமான அரசியல்' என்பதை எனக்கு மாமேதை மார்க்ஸும் லெனினும் மாசேதுங்கும் மார்க்ஸிம் கோர்க்கியும் லூசூனும் கைலாசபதியும் இளங்

கீரனும் சொல்லித் தந்தார்கள். அது எனது எழுத்து நெறியாயிற்று. இன்றும் அதுவே எனது நிலை.

பசியை, எவ்வாறு இன, மத, குல, நிற, மொழியின் அடிப்படையில் பிரித்துப் பார்க்க முடியாதோ, அவ்வாறே இலக்கியத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. குறிப்பாக, இலக்கியத்தை இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ, பௌத்த இலக்கியமென்று பிரித்துப் பார்க்கவே முடியாது. வேண்டுமானால் இந்தப் பிரிவுகள் சமயம், மொழி, சமூகம் என்பவற்றின் அடிப்படையில் கலாச்சார, பண்பாட்டு அம்சங்களை அடையாளம் காண்பதற்கு உதவலாமே தவிர, மனித விழுமியங்களை பிரிப்பதற்கும் அவற்றுக்கு வேலி போடுவதற்கும் உதவவே கூடாது.

'இலக்கியம் என்பது மனிதனின் ஆத்மா' என்று, நம்புபவன் நான். அடிப்படையில் எல்லாச் சமயங்களும் மனிதாபிமானத்தையே தேடின, நாடின, போதித்தன. அதைத் தொழுது கொண்டுதான் இலக்கியங்கள் தோன்றின. ஆனால், சமயங்களின் பார்வையில் மனிதாபிமானம் பற்றிய கண்ணோட்டம் காலத்தின் நிர்ப்பந்தங்களால் முன்னோக்கி வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

பசிக்கின்றவனும் பசியாதவனும் சுரண்டப் படுகின்றவனும் சுரண்டுகின்றவனுமாக உருவாகிவிட்ட ஓர் உலகத்தில், பசிக்கின்றவனுக்காகவும் சுரண்டப் படுகின்றவனுக்காகவும் என் எழுத்துக்கள் இலக்கியமாவது தர்மமாகி தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இலங்கையின் கலை இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டத்தில் இத்துறையினுள் அறிமுகமாகும்

நிலை எனக்கு ஏற்பட்டது. 'இலங்கைத் தமிழ் எழுத்து, தமிழகப் படைப்பிலிருந்து இருபது ஆண்டுகள் பின்தங்கி உள்ளது' என்று, 'கங்கை' இதழ் பகீரதனும் 'இலங்கைத் தமிழ் எழுத்துக்கு அடிக்குறிப்பு விளக்கம் வேண்டும்' என்று, 'கலைமகள்' கி.வா. ஜெகநாதனும் அப்போது கூறியிருந்தனர்.

தேசிய உணர்வுள்ள படைப்பாளிகளுக்கு இது, கொந்தளிப்பை உண்டாக்கி இருந்தது. இதற்குச் சிகரம் வைத்தாற்போல முற்போக்கு எழுத்தாளர்கள் மக்கள் மொழியில் எழுதிய படைப்புகளை பண்டிதர் கூட்டம் 'இழிசனர் இலக்கியம்' என்று, புறங்கூறி கேவலப்படுத்த முயன்றது.

இது, அடிப்படையில் வர்க்க, ஜாதி மேலாதிக்க உணர்வின் காட்டமான வெளிப்பாடென்பதை முற்போக்கு இயக்கம் அணிதிரண்டு அம்பலப்படுத்திற்று. இந்தக்களத்திலே நானும் பங்கு கொண்டேன்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, தென்கிழக்கு பிரதேசத்தில் சாதாரண, அடித்தட்டு மக்களின் வாழ்வு, அவலங்களை, துயரை, எதிர் கொண்ட மீறல்களை.... அவர்களின் மொழியில், அவர்களின் குரலில் சொன்னேன். இது, காலத்தின் பதிவாகி 'இழிசனர் இலக்கியந்தான் மக்களின் இலக்கியம்' என்று, ஆதார பூர்வமாக நிலை நிறுத்தப்பட்டது.

ஒடுக்குமுறை, சுரண்டல் என்பனவற்றுக்கு எதிராக என் எழுத்து, குரல் கொடுத்ததோடு 'வர்க்க பேதமற்ற வாழ்விலேயே இவற்றுக்கு தீர்வுவரும்' என்ற, நம்பிக்கையையும் கதைகளின் அடிச்சுடராய் இழையவும் வைத்தது. இது முற்போக்குச் சித்தாந்தத்தின் அடிநாதம்.

மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதில்லை. காலாவதியாவதில்லை. மீண்டும் என் கதைகளைப் படித்து இதை மேன்மையான எழுத்தாய்ச் சொல்லும் விமர்சன ஆய்வு எனக்கு நிறைவும் பலமும் தருகிறது.

சமுக வாழ்வினுடைய தேடுதல்களில் மக்கள், **'மண்பூனைகளும் எலிபிடிக்கும்!'** என்ற, நம்பிக்கைக் காற்றையே சுவாசிக்க வேண்டும்! என்று, விரும்பினேன். அவற்றை, நானும் சுவாசித்து மற்றவர்களும் சுவாசிக்க வேண்டும் என்று, ஆசைப்பட்டேன்.

அவற்றையே கதையாய்-கவிதையாய் சொல்லி வருகிறேன். அதில், மனிதாபிமானம் சுத்தமான காற்றாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. சுத்தமான காற்று எப்போதாவது காலாவதியானதுண்டா? அதிலும் மக்கள் இலக்கியத்தை சுத்திகரிக்கும் சுத்தமான காற்று என்றுமே காலாவதி ஆவதில்லை. அவற்றைப் பதிவு செய்து ஆவணப்படுத்த 'சிலிண்டர்களில்' அடைத்து வைக்க விரும்பினேன். அதுவே, இக் கதைத் தொகுதியாயிற்று.

எப்போதோ எழுதப்பட்ட மார்க்சிம் கோர்க்கியின் 'தாய்' இப்போதும் மூன்றாம் உலக நாட்டுத் தொழிலாளர்களின் பாடப் புத்தகமாய் இருப்பது போல, எனது சில கதைகளாவது முற்போக்கு உதாரண எழுத்தாய் நின்று நிலை பெறும் என்று, தன்னடக்கத்தோடு நான் நம்புகிறேன்.

மருதூர்க்கனி
100/1/B, அளுத்மாவத்த வீதி
கொழும்பு-13, இலங்கை
☎ 01-432472, 730525, 725782, 007-29069

# முற்போக்குப் பாரம்பரியத்தின் இலக்கியச் செழுமை

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

## 'மருதூர்க்கனியின் சிறுகதைத் தொகுதிக்கான ஒரு சிறு முன்னுரை'

'**ம**ருதூர்க்கனியின் இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு ஒரு நீண்ட முன்னுரை எழுதவேண்டும்' என்ற அவாவில் முன்னுரை எழுதுவதைச் சற்றுப் பின்போட்டு வந்தேன்.

இடையே 'மற்றொன்று சூழ்ந்து'விட்ட ஒரு நிலையில் இதற்கு ஒரு சிறு குறிப்பையே இப்போது எழுதுகிறேன்.

ஒன்று, மருதூர்க்கனி என்ற படைப்பாளியின் பரிணாமம். மற்றது, முற்போக்கு இலக்கிய அலை கிழக்கு மாகாணத்தில் 'அடித்த' முறைமை.

கனி, பிரதானமாக ஒரு கவிஞர்தான். 1960களில் ஈழத்தில் அலையடித்த கவித்துவ வெள்ளத்தின் கிழக்கிலங்கை ஊற்றுக்களில் மருதூர்க்கனியும் ஒருவர்.

கனியின் கவித்துவம் கற்பனைகளின் இரசனைக் கூடாரமாக அமையவில்லை. அது சமத்துவமான ஒரு சமூகத் தேடலுக்கான ஒரு ஆயுதமாக அமைந்தது. கம்யூனிஸ்டுகள் கவிஞர்களாக இருப்பது ஆச்சரியத்தைத் தருவது ஒன்றல்ல. சத்தியவேட்கை, இலட்சியக் கனவு, போராட்ட உணர்வு என்பன மார்க்சிய நோக்கு முறையினால் புடம் போடப்பட்டு ஒரு மார்க்சியக் கவிஞன் தோன்றுகிறான்.

இதில் மட்ட வித்தியாசம், தர வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அடிப்படை இதுதான்.

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாறு, குறிப்பாக தமிழ் பேசும் இனங்களைச் சார்ந்தவர்களை பல்வேறு திசைகளுக்கு இட்டுச் சென்றது. மருதூர்க்கனி ஒரு திசை, புதுவை இரத்தினதுரை இன்னொரு திசை. திசைகள் வேறானாலும் ஆத்ம ஆதங்கம் ஒன்றுதான்.

இன்று, மருதூர்க்கனி ஒரு முக்கிய அரசியல் வாதி.

ஆயினும் தனது அடிப்படை இயல்பூக்கம் இலக்கியத்தின் பாற்பட்டதே என்பதை நிலை நிறுத்தும் வகையில் அமைவதே இப்பொழுது வெளிவரும் கவிதை, சிறுகதைத் தொகுதிகள்.

முற்போக்கு இலக்கிய இயக்கம் 1950-60களில் இலங்கையின் தமிழ் கூறும் பிரதேசங்களில் பரவிய பொழுது, அது கண்டதுண்டு கேட்டதில்லையாக இருந்த பல சமூகத் தேவைகளுக்கு இலக்கியக் குரல் கொடுப்பதாக அமைந்தது. இவ்வாறு குரல் கொடுக்கும் பொழுது, அவ்வப் பிரதேசத்தின் பிரதான சமூக முரண்பாடுகள் இலக்கியத்தின் கருவாகின.

யாழ்ப்பாணத்திலே சாதிமுரண்பாடு, சாதிமுரண்பாடு வழியே முனைப்புப் பெற்ற வர்க்கமுரண்பாடு ஆகிய இரண்டும் முக்கியம் பெற்றன. இதனால் அங்கு மேற்கிளம்பிய புதிய இலக்கியத் தலைமுறை இந்தச் சமூகக் குறைபாடுகளைப் பற்றிப் பேசுவதாக அமைந்தது. இவர்களில் பெரும்பாலானோருக்கு இது அவர்கள் சொந்தப் பிரச்சினையாகவே அமைந்தது.

இந்த எழுத்துக்களைக் கண்டு யாழ்ப்பாணத்தின் பழமை வாதிகள் நவீன இலக்கியத்தையே எதிர்த்தனர். ஆனால் 10, 15 வருஷங்களுக்கு முன்னர் மறுமலர்ச்சி இயக்கம் ஏற்பட்ட

பொழுது பண்டிதர்கள் பலருக்கு நவீன இலக்கிய ஈடுபாடு இருந்தது. ஜீவா, டானியல், இளங்கீரன், ரகுநாதன் கையில், இலக்கியம் சமூக ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதமாகவே கையாளப்பட்டது. ஆனால், கிழக்கின் நிலைமை இவ்வாறிருக்கவில்லை. மட்டக்களப்பு நகர்ப்புறத்தைப் பொறுத்த வரையில் முற்போக்குப் பற்றியதொரு ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் கல்முனை-மருதமுனை-அக்கரைப்பற்று பகுதிகளில் இது ஒரு புதிய சமூகப் பிரச்சினையை ஏற்படுத்திற்று. மட்டக்களப்பின் பிரதான முற்போக்கு அறுவடையாக அமைந்தவர்கள் கவிஞர்களே. சண்முகம் சிவலிங்கம், நு.ஃமான் என்போர் ஒருபுறம். மருதூர்க்கனி, இக்பால் என்போர் மறுபுறம்.

இன்னொரு அம்சம், முஸ்லிம்-தமிழ் நல்லுறவு வளர்ந்தமையாகும்.

இந்த அலை தென் பகுதியில் வீசிய பொழுது இலங்கையின் தென் கோடியிலுள்ள ஒரு முஸ்லிம் கிராமத்திலிருந்து தமிழ் இலக்கியம் பீறிட்டுக் கிளம்பியது. திக்குவல்லை, ஈழத்து இலக்கிய வரலாற்றில் அழியா இடம் வகிக்கின்றது.

இதே அலைதான் மலையகத்தின் நவீன எழுத்தாளர்களின் காலமாகவும் அமைகின்றது.

இவ்வாறாக, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் தொழிற்பாடு ஒட்டுமொத்தமான ஈழத்தமிழிலக்கியத்துக்கு வழிவகுத்தது.

அந்த எழுச்சியின் பெறுபேறுகளில் ஒருவர்தான் மருதூர்க்கனி.

மருதூர்க்கனியின் இந்தச் சிறுகதைத் தொகுதியில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை கவித்துவ ஆற்றலுடன் வெளிப்படுகின்றது. கவிஞனுக்குரிய நுண்ணுணர்வுடனும், புனைகதையாசிரியனுக்குரிய சித்திரிப்புத் திறனுடனும் கதைகள் அமைந்துள்ளன.

21.11.98

**கார்த்திகேசு சிவத்தம்பி**

# மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதில்லை

## பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு

**ம**ருதூர்க்கனியின் " **மண்பூனைகளும் எலிபிடிக்கும்** " என்ற தலைப்பிலான இச் சிறுகதைத் தொகுதியில் பதினைந்து சிறுகதைகள் அடங்கியுள்ளன. 1965ஆம் ஆண்டிலிருந்து 1981ஆம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் எழுதப்பட்ட சிறுகதைகள் இவை. தாமரை, வீரகேசரி, தினகரன், காலரதம் ஆகியவற்றில் வெளிவந்தவை.

1960ஆம் 70ஆம் ஆண்டுகளில் இலங்கையின் இலக்கிய உலகில் சமூகப் பிரக்ஞையும் முற்போக்குச் சிந்தனையும் பிரதான இடம்பெற்றன. 'சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை இலக்கியம் மூலம் வெளிப்படுத்த வேண்டும்' என்ற, கருத்து மேலோங்கியிருந்தது.

இலக்கிய கர்த்தாக்கள், **சமூகத்தில் ஒடுக்கப்படுகின்ற மக்கள் திரளின் பக்கம் சார்ந்து நின்று குரல் கொடுக்க வேண்டும். ஒடுக்கப்படும் மக்களின் ஆத்மாவின் சாட்சிகளாக அவர்கள் செயற்பட வேண்டும்** என்றெல்லாம் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இவை இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் பிரதான கோஷங்களாக அமைந்தன.

சாதி அமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்கள், பொருளாதார ரீதியாக சுரண்டப்படுகின்ற மக்கள் - தொழிலாளர், விவசாயிகள் ஆகியோருடைய வாழ்க்கை பற்றி எழுத்தாளர் கவனம் செலுத்தினர். அவர்களது வாழ்க்கையை யதார்த்தமாகச் சித்தரித்து அவர்கள் பக்கம் நின்று எழுதுவது என்ற, முற்போக்கு இலக்கியக் கொள்கையை வரித்துக் கொண்ட இலக்கிய கர்த்தாக்களில் முக்கியமானவர்தான் மருதூர்க்கனி.

"ஒடுக்குமுறை, சுரண்டல் என்பவற்றுக்கு எதிராக என் எழுத்து குரல்கொடுத்ததோடு வர்க்க பேதமற்ற வாழ்விலேயே இவற்றுக்குத் தீர்வு வரும்'' என்ற, நம்பிக்கையையும் கதைகளின் அடிச்சுடராய் இழையவும் வைத்தது. இது முற்போக்குச் சித்தாந்தத்தின் அடிநாதம். ''கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, தென்கிழக்கு பிரதேசத்தில் சாதாரண, அடித்தட்டு மக்களின் வாழ்வின்

அவலங்களை, துயரை எதிர்கொண்ட மீறல்களை... அவர்களின் மொழியில் அவர்களின் குரலில் சொன்னேன்" என, அவர் தனது முன்னுரையில் கூறியவை இத்தொகுதியிலுள்ள கதைகளை நாம் அணுகுவதற்கு வழிகாட்டுதலாக அமைகிறது.

முற்போக்கு இலக்கிய சித்தாந்தத்தின் இலட்சிய வாதத்தினால் **(Idealism)** ஈர்க்கப்பட்ட மருதூர்க்கனி, தனது பிரதேசத்தில் தனது மருதமுனைக் கிராமத்தில் தான் கண்ட ஏழை மக்களை, நெசவாளிகளை, மீனவர்களை பாய்பின்னிப் பிழைத்தாலும் சுய கௌரவத்துடன் வாழ்கின்ற பெண்களை தனது கதைகளுடாக இனம்காட்டுகிறார். அவர்கள் பக்கம் நின்று குரல் கொடுக்கிறார்.

அவர்களது ஏழ்மையும் அவர்கள் ஏமாற்றப்படு வதையும் சொல்லுகின்ற அதே வேளை அவர்களது ஓர்மையையும் மனிதாபிமானத்தையும் வாழ்க்கையில் அவர்களுக்கு உள்ள பிடிப்பையும் வெளிப்படுத்துகிறார்.

ஒடுக்கப்படும் மக்களிடையே வாழ்வு பற்றிய நம்பிக்கை, அவர்களது உறுதி, அநீதி கண்டு பொங்கும் போக்குகள் என்பவற்றை இந்தப் பதினைந்து கதைகளில் பெரும்பாலானவற்றில் பதிந்து வைத்துள்ளார். இங்குதான் மருதூர்க்கனியின் இலட்சியவாதம் தென்படுகிறது. கதைகளில் இடம்பெறுகின்ற மனிதர்களின் வாழ்வு, மருதூர்க்கனியின் கதை சொல்லும் அழகோடு இலட்சியவாத வடிவத்தைப் பெறுகின்றது.

இலட்சியவாதம் முக்கியமானது. வாழ்வின் மீதான நம்பிக்கை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கை போன்றவற்றை அவரவர் கருத்து நிலைகளுக்கேற்ப அது வடிவமைக்கிறது.

"மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதில்லை" என மருதூர்க்கனி பிரகடனப்படுத்தும் நம்பிக்கை இந்த இலட்சியவாதத்துடன் தொடர்புடையது.

ஈழத்துச் சிறுகதை தனது அரை நூற்றாண்டுக் கால வரலாற்றில் பல்வேறு போக்குகளைக் கடந்து வந்துள்ளது. அந்த வரலாற்றுப் பாதையில் ஒரு மைல் கல்லாக விளங்குவது சிறுகதையூடாகப் பேசப்பட்ட இலக்கிய முற்போக்குவாதம்.

அதன் இன்னோர் அடையாளமாக, குறிப்பாக கிழக்கிலங்கையின் வாழ்க்கை நிலைமையூடாக அதனைப் பேசுவதாக இச்சிறுகதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

இன்று அரசியலும் அரசாங்க வேலைகளும் மருதூர்க்கனியின் பொழுதுகளைக் கைப்பற்றிக் கொண்டபோதிலும் இந்தச் சிறுகதைகளைத் தேடி எடுத்துத் தொகுக்கும் ஆர்வம் அவரிடம் இன்னும் இருப்பது முக்கியமான அம்சம். இத்தொகுதியின் வெளியீடு அந்த ஆர்வத்தை மேலும் தூண்டிவிடும் என்று நம்புகிறேன். வாழ்த்துக்கள்.

**திருமதி சித்திரலேகா மௌனகுரு,**
**கிழக்குப் பல்லைக்கழகம்,**
**இலங்கை.**

# தனித்துவம் பெற்ற எழுத்துக்கள்

எழுத்தாளர் செ. யோகநாதன்

**பேராசிரியர்** க. கைலாசபதி அவர்கள், . . . "கால ஒழுங்கில் வகுத்தமைக்கும் பொழுது அறுபதுகளில் புதிய ஒரு தலைமுறை இலக்கிய உலகிற் பிரவேசித்ததை நாம் காணுகின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் புதிய தலைமுறையில் முக்கியமானவர் மருதூர்க்கனி. உலகின் பல படைப்பாளிகளைப் போல அவரின் முதல் வெளிப்பாடு கவிதையே. பழந்தமிழ் இலக்கியங்களையும், பாரதியையும், பொருள் முதல் வாதத்தையும் தனது ஆசான்களாக வரித்துக்கொண்டு, ஒரு ஏகலைவனாக நின்று படைப்பாளியாக உருவானவர் மருதூர்க்கனி என்று குறிப்பிடலாம்.

மார்க்சிம் கோர்க்கி, ஜெயகாந்தன் ஆகியோரின் படைப்பாக்க முதற்புள்ளி, கவிதை. பின்னர் புனைகதையிலேயே இவர்கள் ஆழமாகக் கால்பதித்தனர். ஆனால் மருதூர்க்கனி இவை இரண்டோடும் கைகோர்த்து படைப்பிலக்கியத்துறையில் கம்பீரமாக நடை போடுவது குறிப்பிடத்தக்க ஒரு சாதனை என்றே தோன்றுகிறது.

'மண்பூனைகளும் எலி பிடிக்கும்' என்ற சிறுகதைத்தொகுதியை காலந்தாழ்த்தியே படிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ள போதும், இதை வாசிக்கின்ற எந்தத் தரமான வாசகனும் பிரமிப்படைவான். அனுபவசாரமின்றி, அரைத்த மாவை அரைப்பது போல குறுகிய விஷயங்களை எழுதுவது, சொற்சிலம்பமாடுவது, மாய்மாலத் தத்துவங்களுக்கு உரை விளக்கமாக எழுதுவது என்று, நில

வும் சூழலிடையே-பன்முகவாழ்வில் அவதியுறும் ஒடுக்கப்பட்ட சாதாரனமான மக்களின் வாழ்வை வெகுயதார்த்தமாக எழுதும் மருதூர்க்கனி தனித்துவம் பெற்று நிற்பதை அவரது எழுத்து துல்லியமாகச் சொல்லி நிற்கின்றது.

வாழ்வின் பலவித அனுபவங்களிடையே ஆசிரியரின் சுவடுகள் பதிந்துள்ளன. ஒடுக்கு முறைகளுக்கு எதிர்க் குரல் கொடுக்கும் இளைஞனாய் -

வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தைப் பயின்று மாணவர்களுக்கு செம்மையான கல்வியை 'ஏன்?' என்ற கேள்வியோடு பாடஞ் சொல்லிக்கொடுத்த எதற்கும் வணங்கிப் போகாத ஆசிரியனாய் -

சுரண்டப்படும் தறித்தொழிலாளருக்காக குரல் கொடுத்து அவர்களை இணைத்து, திரண்ட அடம்பன் கொடியின் மிடுக்குடன் போராட்டம் நடத்திய தொழிற்சங்கவாதியாய் -

தகர்ப்பின்றி நிர்மாணமில்லை, அழிவின்றி ஆக்கமில்லை என்பதை உறுதியாய் நம்பி, நிறைந்த எதிர்காலக் கனவுகளுடன் தோழமைக் கவசத்தோடு இயங்கிய மக்களுக்கான அரசியல் சித்தாந்தகாரனாய்-

குமுறியெழும் கடலில் மீன் பிடிக்கச் சென்று, குமுறும் மனதோடு கரை திரும்பும் மீனவர் படகு அணியத்தில் அமர்ந்து உழைப்பாளரின் கரம் இணைந்த தோழனாய் -

தறியில் வடிவமான துணிகளை கிழக்கிலிருந்து வடக்கு வரை எடுத்துச் சென்று விற்று வாழ்வு நடத்திய தொழிலாளியாய்-

பேரினவாத நசுக்குமுறைகளுக்கு தன் தாய்மொழி ஆளானபோது, அதை ஒத்துக்கொள்ள மறுத்து 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என, ஆர்ப்பரித்து செயற்பட்ட மொழிப்பற்றாளனாய் -

'தமிழ் பேசும் மக்கள் மொழியால், பாரம்பரியப் பிரதேச வாழ்வால் ஒன்றுபட்டவர்களே' என்ற, தெளிவாளனாய்... மருதூர்க்கனியினது வாழ்க்கைப் பக்கங்கள் அமைந்துள்ளன.

இளம் பருவத்தில் இருந்தே நாடகப் பிரியர் மருதூர்க் கனி. மனித இயக்கத்தை அவரது கண்கள் நாடகமாகக் கண்டன. மனிதர்களின் குணாதிசயங்கள், ஆளுமை, துலங்கித் தெரியும் குணப்பாங்கு என்பனவற்றை இதனால் வெகு நுணுக்கமாக அவர் கவனிக்கலானார். காணும் சூழலை எல்லாம் அவரது கண்கள் படம் பிடித்து

மனதிலே பதிவு செய்தன. இது தேர்ந்த நாடக சிருஷ்டியாளனின் அடிப்படையான மனோநிலை. அத்தோடு இளமை வேகத்துடன் 'காமரா' ஒன்றோடு புகைப்படப்பிடிப்பாளனாயும், பத்திரிகை நிருபராகவும் இயங்கி வளர்ந்த ஆளுமை. இதன் வழியாகவும் சிறந்த படைப்பாற்றல் வெளிப்பட்டு மெருகேறியது. இந்த நிலைகள் மருதூர்க்கனிக்கு வாய்த்தன.

மாணவர்காலமும், ஆசிரியப்பருவமும் மருதூர்க்கனியை நாடகத்தில் ஈடுபடுத்தியது. ஒரு முழுமையான படைப்பாளியாக அவர் உருவாகிடக் காரணமாயிற்று என்று குறிப்பிடலாம்.

அவரது, 'சோழன் மகன்' கவிதை நாடகம் அகில இலங்கைக்கான போட்டியில் சிறந்த நாடகமாகத் தேர் வாகி பேராசிரியர் க. கைலாசபதியின் பாராட்டைப் பெற்றது.

ஒடுக்கப்பட்ட, சாதாரணமக்களின் வாழ்வுதான் இவரது நாடகப் படைப்புகளுக்கு பெருமளவு ஆதாரசுருதியாயிற்று. கிழக்கு மாகாணத்தின் சமூக வாழ்வை இவரது நாடகங்கள் சித்தாந்த நெறிப்பாட்டோடு சித்தரித்தன.

நாடகத்துறையின் எல்லாக் கூறுகளிலும் மருதூர்க்கனியின் ஆற்றல் பற்றிப் படர்ந்திருக்கிறது. ஆக்கம், நெறியாள்கை, நடிப்பு என்ற யாவிலும் பிரகாசித்திருக்கிறார் மருதூர்க்கனி. 'போடியார்' என்ற நாடகபாத்திரப் பெயரால் ஆசிரிய கலாசாலை போதனாசிரியர்களாலும் மாணவர்களாலும் அன்பாகவும் பாராட்டோடும் செல்லமாகவும் அழைக்கப்பட்டு அக்காலத்தில் பிரசித்தமானவர், மருதூர்க்கனி.

நாடகம் ஒரு வலுவான வெளிப்பாடு, அதுதான் கலை வெளிப்பாட்டின் பேராயுதமும் போராயுதமும். நாடகத்துறையில் தன்னை அழுத்திய மருதூர்க்கனி, தான் அரசியலில் பிரவேசித்தத, இவை யாவற்றையும் கைவிடுவதற்கு காரணமாகியது என்று, சொல்லலாம். ஆனால் அந்தக் காரணத்தை மீளாய்வு செய்யும் வேளையும் இப்போது தோன்றியுள்ளது. எந்தப் படைப்பாளியும் ஒரு அரசியல் சித்தாந்தம் சார்ந்தவனாகவே இருக்க முடியும். 'கலைத்துறையில் அரசியல் சாரக்கூடாது' என்பவனும் எதிர் அரசியலின் பின்னே ஆக்ரோஷமாக நிற்கிறவனே.

உலகின் சிறந்த படைப்பாளியான மார்க்சிம் கார்க்கி, ருஷ்யப் புரட்சியில் லெனினுக்கு அருகே நின்றவன். போல்

ஷிவிக்குகளுக்காக தன் பேனாவை ஆயுதமாகப் பயன்படுத்தியவன். ஜார் ஆட்சியை தோலுரித்து, மக்களை அரசியல் மயப்படுத்த நாடகத்தை கூர்மையான கலாச்சாரக் கருவியாக்கியவன். 'அதலபாதாளம்' (LAW DEPTHS) என்ற அவனது நாடகம், சோவியத் ருஷ்யாவையும் பின்னர் ஒடுக்கப்பட்ட நாடுகளையும் உலுப்பிக் கிளரவைத்தது.

இன்றைய கலை இலக்கியப் பண்பாட்டுத்துறை அருகிப் போய் வருகிறது. இதன் கர்ப்பத்திலேயே மக்கள் கலை இலக்கியம் உருவாயுள்ளது. இந்தக் கருவை ஆரோக்கியமாய் உருவாக்கும் பணியில் மக்கள் அரசியல் சார்ந்த படைப்பாளிகளே பங்காளராக இருக்க முடியும். மருதூர்க்கனி அவர்களில் ஒருவர்.

மக்களை உடனேயே சென்றடைந்து சிந்திக்க வைக்கும் கலையாக, இன்று மக்கள் படைப்பாளி களிடம் உள்ள கலை வடிவம் நாடகம். மக்கள் விரோத உணர்வையும் நசிவு இலக்கியத்தையும் இன்று வளர்க்கும் வெகுஜன தொடர்பு சாதனங்களான ஒலி, ஒளி ஊடகங்களுடன் உடனேயே மோதும் ஆற்றல் நாடகத் துறைக்கே உரியது.

இதனாலேயே இன்று வீதி நாடகங்கள் இடதுசாரி, போராட்ட அரசியல் இயக்கங்களாலும் அடக்குமுறைகளுக்கு எதிராக மக்களை எழுச்சிபெறவைக்கும் வடிவமாகவும் பரவலாக மக்களிடையே நடத்தப்படுகின்றன. மக்களைப் பெரிதும் பாதித்து சிந்திக்கவைக்கின்ற வடிவம் இது. ஆனால் இவை மக்கள் உணர்வை மதித்து இயங்குகின்ற படைப்பாளிகளாலேயே-மருதூர்க்கனி போன்றவர்களாலேயே உருவாக்கப்படத்தக்கவை. 'பரீட்சார்த்தம்' பண்ணுவதாகக் கூறும் மக்களிலிருந்து அந்நியப்பட்ட 'அறிவாளிக் கலைஞர்கள்' இத்துறைக்கு முற்றிலும் நிராகரிக்கப்படத்தக்கவர்கள்.

ஒடுக்கப்படுகின்ற மக்களின் எதிர்க்குரலான இந்த வடிவம் இப்போதைய நிலையில் நிச்சயமாக பரவலாகவே வளர்ந்து வருவதற்குரிய சூழ்நிலை உள்ளது. ஏற்கனவே வீதி நாடகங்கள் நமது மண்ணில் கூர்மையுற்று வந்தன. நசிவுக் கலாசார சூழலில் இந்த இயக்கம் மக்களுக்கு உத்வேகம் தரும் வடிவம். இதை இன்றைய மக்கள் பக்கம் சார்ந்த கலைஞர்கள் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை உள்ளது.

'தனித்திருந்து வாழும்' தவமணிகளும், குறுகிய எல்லையுள் நின்று கொண்டே அகண்ட பார்வையினராய்

வேஷமிடும் செவிட்டுத் தன்மை கொண்ட விமர்சன மேதாவிகளும் இத்துறை பற்றியும் வியாக்கியானம் பண்ணலாம். அதை இந்தப் படைப்பாளிகள் ஒதுக்கித்தள்ளிவிடலாம், ஒரு கருகிப்போன சருகினைப் போல. இவை எல்லாவற்றிற்கும் அடிநாதமானவை மருதூர்க்கனியின் மானிட நேயமும், நேர்மையும், தன் கருத்திலிருந்து வழுவிடாத கொள்கை ஒழுக்கமும் என்பதை அவரோடு நெருங்கிப் பழகிய எவரும் அறிவார்கள்.

இந்தப் பின்னனி தெரிந்தவர்களுக்கு அவரது படைப்பு வீச்சு, மேன்மை, யதார்த்தம், தெளிவு என்பனவற்றின் அடிப்படை ரகசியம் பட்டுக் கயிறாய் அவிழ்ந்து, அவரது ஆக்கங்களை மென்மேலும் வசீகரமாக வெளிப்படுத்திக் காட்டும். மேலும் மேலும் தன்னை விசாலித்துக் காட்டும் ஓவியச்சேலை போல (CANVAS) அவரது எழுத்தை உணர்ந்திட வைக்கும்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த மண்ணை விட மனிதனுக்கு இனியது வேறென்ன? அந்த இனியதளத்தின் சுகந்தமான மண் மணத்தை மருதூர்க்கனியின் படைப்புகள் நெஞ்சை அள்ளும் விதத்தில் பதிவு செய்கின்றன. மக்கள் மொழி, எழில் கொஞ்சும் கவிதையாய் உயிர்ப்போடு இவர் படைப்புகளில் கேட்பதற்கு யதார்த்த நெறியை இவர் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டதே மூலகாரணம்.

சாதாரண மக்களின் மொழி மந்திரச் சொல். வலுவான உயிர்க்குரல். இதைக்கிரகித்து சரியாக வெளிபடுத்தும் ஆற்றல், இந்த மக்களை நேசித்து, இவர்களாய் வாழ்ந்து, இவர்களை ஆனமுறையில் உணர்ந்து கொள்ளும் படைப்பாளிக்கே வசப்படும். இந்த ஆற்றல், நேசம், வாழ்வு, உணர்வு என்பன மருதூர்க்கனிக்கு வெகு இயல்பாக வசப்பட்டிருக்கிறது.

இந்த இயல்பு முன்னர் பல படைப்பாளிகளிடம் செறிந்திருந்தது. திருநெல்வேலித் தமிழில் வாழ்ந்த புதுமைப் பித்தனின் மனிதர்கள், தஞ்சாவூர் மண்மணத்தில் கமழ்ந்த தி. ஜானகிராமனின் பாத்திரங்கள், கோவைத் தமிழில் கேட்ட ஆர். சண்முகசுந்தரத்தின் மாந்தர் குரல், கரிசல் காட்டின் புழுதி படர்ந்த மண்ணில் வாழ்ந்த மக்களை வெளிப் படுத்திய கு. அழகிரிசாமி, பொன்னீலன், சூரியதீபன், பூமணி ஆகியோரின் சொற் சித்திரம் என்பன, தம் உன்ன

தத்தைச் சொல்லி நிற்கின்றன. இதன் தொடர்ச்சி செழுமையாக விரிவு படாமற்போனது படைப்புத்துறைக்கு கவலை அளிக்கின்ற நிகழ்வு.

இலங்கை இலக்கிய வளர்ச்சியில், இந்தப் போக்கு செம்மையாகவும், அழுத்தமாகவும் பதிவாகி வருகிறதென்பதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம், இலங்கையர் கோனிலிருந்து இன்று எழுதத் தொடங்கும் முற்போக்கு எழுத்தாளன் வரை இந்த நெறிக்கு உட்பட்டிருக்கிறார்களென்று சொல்லலாம். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை அவர்கள் மொழியில் அப்படியே சொல்லி தமிழிலக்கியப் பரப்பிலே அடையாளம் பதித்தவர் கே. டானியல்.

கிழக்கின் சாதாரண மக்களது வாழ்வை சொற்சிலம்பமோ, நகாசு வேலைப்பாடுகளோ இன்றி அவர்களது மொழியில், முற்போக்கு அணுகு முறையில் ஆக்குபவருக்கு முன் உதாரணமானவர் மருதூர்க்கனி. இன்னும் சொன்னால் ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவனாக வாழ்ந்து, அவர்களோடு சேர்ந்து போராடி, அதனுள் கற்று, கற்றதைச் செழுமைப்படுத்தி மக்களிடம் கொடுத்த படைப்பாளியாய் மருதூர்க்கனியை இனங்காணலாம். இவ்வகையில் அவர் அப்பழுக்கற்ற முற்போக்கு இலக்கியப் படைப்பாளி.

மருதூர்க்கனி புத்தகங்களிலிருந்து வாழ்க்கையை அறிந்து கொண்டவரல்ல. அவர் வாழ்வின் போராட்டங்களிலிருந்தும் இயங்கியலில் இருந்தும் வாழ்க்கையைக் கற்று இலக்கியமாகப் படைப்பவர். இவரின் சமகால இலக்கிய நண்பர்களோடு இவர் செய்த விவாதங்கள், கருத்தாடல்கள் இவரை மெருகூட்டி வைத்தவை.

இலக்கியமே வாழ்வான இளங்கீரனும் இவரும் ஒன்றாக வாழ்ந்தவர்கள். விடிய விடிய இலக்கியம் பேசியவர்கள். விவாதித்தவர்கள். லாவகமாக தீக்குச்சியைத் தட்டி, பீடியைப் பற்றவைத்து, ஒரு இழுப்பில் லேசாய்ப் புகை ஊதி, புன்னகை மலர்ந்த முகத்தோடு இளங்கீரன் இவரோடு பேசிய பொழுதுகள் எவராலேதான் மறக்கக் கூடியன?

சொல்லும் செயலும் ஒன்றான முற்போக்குப் படைப்பாளிகளெல்லாம் மருதூர்க்கனிக்கு ஆதர்ஸம். அது போலவே மருதூர்க்கனியும் தன்பின்னோருக்கு ஆதர்சம், இந்த மரபு தொடரவேண்டுமென்பதும் இவரின் ஆசை.

இஸ்லாமிய மக்களின் வாழ்வை, உணர்வுகளை, இருப்பை, பண்பாட்டை வெகு இயல்பாக உணர்த்திய படைப்பாளிகளில் ஒருவராக மருதூர்க்கனி குறிப்பிடத்தக்கவர். இதை தமிழில் என்று பரவலாகவே குறிப்பிடலாம். 'இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் ஏறக்குறைய ஐம்பது ஆண்டு வரலாற்றைக் கொண்டது' என்று, சொல்கிறார், பேராசிரியர் சாயபு மரைக்கார்.

தமிழகத்தில் 1950-60 ஆம் ஆண்டு காலப் பகுதியை இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகக் குறிப்பிடுவார்கள். இந்த, பொற்கால வேளையில் மேலும் விகாசிப்புடன், தமிழ் பேசும் மக்களின் படைப்பாளியாய் முற்போக்குத் தளம் சார்ந்தவராக உருவானவர் மருதூர்க்கனி. கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப் பட்டினத்தில் பிறந்து தமிழிலும் மலையாளத்திலும் எழுதி வரும் தோப்பில் முகம்மது மீரானை மருதூர்க்கனியுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சாதாரண மனிதர்களை - அவர்களின் சலனங்கள், சஞ்சலங்கள், அவலங்கள், சுமையாய் அவர்களை வருத்தும் சுரண்டல்கள் என்பனவற்றை இயல்பு குன்றாமல் இவர்கள் இருவரும், அந்த மக்களின் மொழியில் கவித்துவம் ததும்ப எழுதி வருகின்றனர். அந்த மக்களையும் அவர்களின் பேச்சையும் இயக்கத்தையும் ஆழ்ந்த வாசிப்பில் எந்தக் குறுக்கீடுமின்றி விளங்கிக் கொள்ள முடியும். நெருங்கி அவர்களோடு பழகி எம்மில் ஒருவராய் உற்றாராய் அறிந்திட முடியும். அவர்கள் அநுபவிக்கும் துயரங்களுக்கு எதிராக வெறுப்பும் கோபமும் பூண்டு, அவை நீங்கவேண்டுமென்ற ஆவேசமும் கொண்டிட மனம் தூண்டுதல் செய்யும். இதுவே மக்கள் இலக்கியத்தின் ஆணிவேரான குணாம்சம்.

இவர்கள் இருவரோடும் எனக்குப் பழக்கம் உண்டு, அது நட்பும் தோழமையும். தோப்பில் முகம்மது மீரானின் சுற்றுப்புறம், முற்போக்கு இலக்கியப் படைப்புலகமே. தி.க.சி, வல்லிக்கண்ணன், சிதம்பர ரகுநாதன் என்ற அருமையான இலக்கிய வட்டம். தோப்பிலோடு ஒருநாள் பேசிக் கொண்டிருந்தபோது, "செ. யோ, மனிஷங்கள உள்ளபடி எழுதறத விட நமக்கென்ன வேல ... மனிஷங்கன்னா நாம நேசிக்கிற சாதாரண மனிஷங்க" என்றார். நான் அந்த வார்த்தைகளில் மிகவும் திருப்தியடைந்தேன். ஏனென்றால் படைப்புலகிற்கு வந்தபோது எமக்கு எழுத்து நெறி கூறிய

மார்க்சிம் கோர்க்கி சொன்னான்: "மனிதன் ... மனிதனை விட மேன்மையானது உலகில் என்ன?"

மாக்சிம் கோர்க்கி சொன்ன இலக்கணத்தையே மருதூர்க்கனி இலக்கியமாய் எழுதுகிறார். தோப்பில் முகம்மது மீரான் படைப்பாய் மலர்விக்கின்றார். இந்த மரபு இனியும் இனியும் தொடரும் உலகு தழுவிய மரபு. இவர்கள் இருவரையும் படிக்கின்ற எவருக்கும் மார்க்சிம் கோர்க்கியும், லூசூனும், அலன்பேடனும், கிருஷன் சந்தரும், தகழியும், கேசவதேவும் புதுமைப்பித்தனும், டானியலும், இலங்கையர்கோனும், என். எஸ். எம். ராமையாவும், செ. கதிர்காமநாதனும், பெனடிக்ற் பாலனும் நினைவுக்கு வருவது இதனாலேதான்.

1965-ல், தான் முதன் முதலாக எழுதிய 'பசி' என்ற கதைக்குப் பரிசு பெற்று, படைப் பிலக்கிய வாதியாய் அறிமுகமானவர் மருதூர்க்கனி. இந்தக் கதையிலேயே படைப்பாளியின் திறனை அவர் வெளிப்படுத்துகிறார். இலியா எக்ரன் பேர்க் சொல்லுவார்: "ஒரு தேர்ந்த படைப்பாளியின் ஆளுமைத்திறனை அவனது படைப்பின் முதல் சிலவார்த்தைகளிலேயே தெரிந்து கொள்ளலாம். கைதேர்ந்தஓவியனின் தூரிகைக் கோட்டில் பளிச்சிடும் ஓவியம் போல, அவனது எழுத்து வித்தை வெளிப்பட்டுவிடும். அந்தச் சிலவார்த்தைகளிலேயே கதையின் உயிரோட்டம் புலனாகி வாசகனை வசீகரிக்கும்..." இது முற்றிலும் உண்மையே.

'பசி!' இப்படித்தான் தொடங்குகிறது.

"அரசாங்க உத்தியோகம் பார்ப்பவராக இருந்திருந்தால், கட்டாயப் பென்ஷனோடு இளைப்பாறிச் சம்பளம் பெற்றிருக்க வேண்டியவர் முத்து முஹம்மது."

உடனேயே நமக்கு அறிமுகமாகும் முத்து முஹம்மதுவுக்கு எதிரே நாற்காலி போட்டு அமர்ந்து கொள்கிறோம் நாம். பின்னர், அவரின் வாழ்க்கையைத் தொடருகின்றோம். முத்து முஹம்மது கோபத்தோடு கிளருகின்றபோது நாம் திகைப்பும் சினமுமாய் முஷ்டிகள் இறுகிட நிற்கின்றோம். வகைமாதிரி மனிதனின் அவலமாய் அந்தப் பாவப்பட்ட ஜீவன்களின் உணர்வை நெஞ்சார அறிகிறோம்.

'மண்பூனைகளும் எலிபிடிக்கும்!' ஒரு வகைமாதிரியான கதை. காமிது ஹாஜியர் என்ற பாத்திரம் முதல் வார்த்தையிலே கோட்டோவியமாக வாசகனின் கண்கள் முன்னே அறிமுகமாகி விடுகின்றது. மேல்தட்டு வர்க்க குணும்சம் பாத்திரத்தின்வாய்ச்சொல்லில் சட்டென்று உறுதியாகிவிடுகின்றது. "குடும்பம் சாதிசனம் என்டெல்லாம் பார்த்தால் காரியம் நடக்குதில்ல! இது காசோட கூடிய காரியம். கண்ணான வாப்பா என்டாலும் சரிதான், பிஸ்னஸ் என்டால் பிஸ்னஸ்தான்!"

தறிக் கடனுக்காக, சொத்தையே 'விதானை' என்ற, அரச பாதுகாவலரின் துணையோடு கைப்பற்றவரும் காமிது ஹாஜியார் எதிர்நோக்கும் நிலை என்ன? என்பது தான் கதை. இதை எவராலும் கதையாக எழுத முடியும். இப்படியே எல்லாரும் எழுதி ஒரு அவலக் குரலோடு கதையை முடிப்பார்கள். மருதூர்க்கனி இந்த விதமான இயற்பண்பு எழுத்தாளரல்ல. தறித்தொழிலாளராய் வாழ்ந்து அவர்களின் வாழ்வினை நன்கு அறிந்த அவர்கள் தளம் சார்ந்த படைப்பாளி இவர். எனவே பாய்ச்சலோடு முன் செல்கிறார்.

அவரது கதை, காரண அடியினின்று எழுவது. தொழிலாளி வர்க்கம் இழப்பதற்கு ஒன்றுமில்லாத புரட்சிகரத் தன்மையும் துணிவும் வாய்ந்தது. அது உறுதியானது.

எனவே முதலாளியையும் அரசையும் அது நிர்ப்பயமின்றி சவால் விடுகிறது: "என்ன செய்யப் போறயள்? அல்லாவின் பேரில் சத்தியமா சொல்லிறன் ... என்னவும் நடந்திதோ இந்த அரிவாக்கத்திதான் பதில் சொல்லும்...!"

'மண்பூனைகளும் எலிபிடிக்கும்' - யதார்த்தவாதக் கதை எப்படி அமைய வேண்டுமென்பதற்கு அருமையான உதாரணம்.

முற்போக்கு எழுத்திற்கு தெளிவான வரைவிலக்கணம் இருக்கிறது. அது மக்களை மேன்மைப்படுத்துவது, யதார்த்தமானது. எளிமையானது. மக்களுக்கானது.

முற்போக்கு எழுத்துப்பற்றி இப்போது சந்தர்ப்பவாத வியாக்கியானங்கள் வெளியிடப்படுகின்றன, உருவத்தை முதன்மைப்படுத்தும் இந்த வியாக்கியானகாரர் அடிப்படையிலே பிற்போக்கு சார்ந்த சந்தப்பவாதிகள். பேராசிரியர் கைலாசபதி யால் ஆற்றுப்படுத்தப்பட்ட மருதூர்க்கனியின் இந்த ஆக்கங்கள் எல்லாச் சந்தர்ப்பவாதங்களையும், தளம்பல்களையும் உடைத்தெறிகின்றன.

இப்படித்தான் இத்தொகுதியிலுள்ள ஒவ்வொரு கதையும் எதிர்க்குரலிடும் கதைகள். இப்போது தான் நமக்கு அருகே இருந்து பேசிவிட்டு சென்றவர்களை நினைவூட்டும் பாத்திரங்கள். 1965-1981 காலப் பகுதிக்குள் எழுதப்பட்ட இக்கதைகள் அக்கால சமுதாய, அரசியல், பண்பாட்டுப் போக்குகளில் ஆழமாக வேரூன்றி எழுந்தவை.

முன்னர் நான் குறிப்பிட்டது போல எத்தனையோ துறைகளில் வாழ்ந்து அனுபவசாரம் பெற்ற மருதூர்க்கனி என்ற படைப்பாளியின் நுட்பமான பார்வை, கண்ணோட்டம், கலைத்திறன், மானிட நேயம் ஆகியவை கலந்து உயிர்த்தெழுந்த படைப்புகள். இவை சமகால வரலாற்றை அழகுற, அது அவலக்குரலாயினும் எதிர்க்குரலாக பதிவு செய்து கொண்ட இலக்கியம்.

ஒவ்வொரு கதையையும் விமர்சித்து, வாசகனை முன்னரே கைவிரல் பற்றி அழைத்துச் செல்ல நான் விரும்பவில்லை. அது முறையுமல்ல என்று நான் எண்ணுகிறேன். ஒவ்வொரு கதையும் சிறந்தவை, முற்போக்கு எழுத்துக்கு வகை மாதிரியானவை என்று மட்டும் சொல்லி வைப்பதையும் குறுக்கீடாகவே நான் நினைக்கின்றேன்.

முற்போக்கு எழுத்துப் பற்றி அன்று முதல் இன்று வரை வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. காலத்துக்கு காலம் தோற்றுப்போய், தூசி படிந்திருக்கின்ற மாய்மாலத் தத்துவங்களை தூசி தட்டி, புதிய சிந்தனையாய் பிரகடனம் செய்யும் பிற்போக்கு வாதிகள் மானிட மேன்மைக்கு என்றும் எதிராய் நிற்பவர்களே. ஆறுகள் என்றாவது பின் நோக்கி ஓடுவதுண்டா? இந்தப் பிற்போக்கு வாதிகள் ஆறுகள் பின் நோக்கி ஓடுமென்று எண்ணி, வியர்த்தமாய் இயங்குகிறார்கள். இவர்களால் சாடப்படுகின்ற முற்போக்கு எழுத்து, என்றும் வலுவும் திறனும் உள்ளதாகக் கொள்ளப்படும்.

மருதூர்க்கனியின் எழுத்துக்கள் யதார்த்த பூர்வமானவை. நவீன எழுத்தாளனுக்கு யதார்த்த இலக்கிய நெறியின் இன்றியமையாமை குறித்துப் பிரபல ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர் றேமண்ட் வில்லியம்ஸ் கூறியிருப்பதைப் பேராசிரியர் க. கைலாசபதி எடுத்துச் சொல்லியுள்ளார். அதை இங்கே மேற்கோளாகக் கூறுவது பொருத்தமாக அமையும்.

"எமது காலத்திலே உண்மையான ஆக்க முயற்சி முழுமையான உறவுகளை உண்டாக்கும் போராட்டமாகும். இவ்வுறவு தனிமனித நிலையிலும், சமுதாய நிலையிலும் உள்ளது. இதனை விரிவுபடுத்துவதே சாதிக்க வேண்டிய

காரியம். யதார்த்த இலக்கியம் இதற்குகந்த கட்டளைக்கல்: ஏனெனில் கருத்தும் உணர்ச்சியும், தனிமனிதனும் சமூகமும் மாற்றமும் உறுதிப்பாடும் மாறிமாறி ஒன்றையொன்று ஊடுருவிப் பாதிப்பதை அது நுணுக்கமாகக் காட்டுகிறது. பிளவுபட்டுக் கிடக்கும் எமது காலத்துக்கு இது இன்றியமையாதது. உயர்தரமான யதார்த்தப் படைப்பிலே சமுதாயம் அதற்காதாரமான தனிமனிதர் வாழ்க்கை வடிவத்திலும் சித்திரிக்கப்படும் வாய்ப்பு உண்டாகிறது.

இவ்விணைப்பும் அமைதியும் ஓர் எழுத்தாளனது மனவிருப்பத்தாற் சாதிக்கக் கூடியன அல்ல. அவை கண்டறியப்படல் வேண்டும். அதற்குத் துணை செய்வது யதார்த்த நாவலின் இயல்பும் கட்டமைப்புமாகும். பழைய எளிமையான யதார்த்தம் காலாவதியாகிவிட்டது. ஏனெனில், உள்ளவாறே பார்த்தல் அதன் அடிப்படையாயிருந்தது. அது இக்காலத்தில் இயலாது. இயற்கையான புறவுலகைப் பார்த்துக் கொண்டு காணுங் காட்சியைப் பதியலாம் என்று எண்ணிய நிலையில் அது ஏற்றதாயிருந்தது. இன்றோ நிலைமைவேறு.

நாம் காணும் உலகம் எம்மால் ஆக்கப்படுவது என்னும் உணர்வு வளர்ந்துள்ளது. இவ்வுணர்வு சாத்வீகமான மானசீகக் காட்சி மட்டுமன்று. அதாவது செயலற்ற உணர்வு அன்று. மாறாகச் செயற் பண்பும் இயக்கமும் சார்ந்த நிலையாகும். அது மட்டுமின்றி, இவ்வுலகில் எவ்வாறு வாழ்வது என்னும் பிரச்சினை பற்றியது."
மேற்கூறிய கருத்துக்கு அப்படியே உட்பட்டதாக மருதூர்க்கனியின் சிறுகதைகள் அமைந்துள்ளன எனலாம்.

படைப்பிலக்கிய வாதியான மருதூர்க்கனி, இதுவரை எழுதியவற்றை விட எழுதாதவையே அதிகமென்று நான் எண்ணுகிறேன். ஆழ்ந்த அனுபவ சாரங்களை அவர் இன்னமும் நிறைய வெளிப்படுத்தும் தகைமை கொண்ட இலக்கிய செல்வந்தன். அவற்றை அவர் தமிழ்ப்படைப்பிலக்கியத்துக்கு வாரிக் கொடுக்க வேண்டும்.

நெசவாளி மக்களின் வாழ்வை தமது எழுத்தால் லேசாகத் தொட்டுக் காட்டியவர்கள் சிதம்பரரகுநாதனும், எம். வி. வெங்கட்ராமும். தறியோடேயே வாழ்ந்த நெசவாளியான, யதார்த்தப் படைப்பாளியான மருதூர்க்கனி, தமிழ் கர்வப்படும் விதத்தில் இந்த வாழ்வை, இலக்கியமாய் ஆக்கித்தரவேண்டுமென்பது அவரது முதல் வாசகர்களில் ஒருவனான எனது வேண்டுகோள்: விருப்பம்.

27.10.98 **செ. யோகநாதன்**

## A HUMANIST WITH A FINE CRAFT

I wouldn't do justice to Maruthoor Ghani's collection of short stories, 'Mun Poonaikalum Eli Pidikkum' ( 'Even clay cats can catch rats' ) if I do not analyse each individual story herein, in terms of context, content, structure, style, language, etc..

However, in view of the exigencies of time to read these stories at short notice and write my comments, I can only generalise my statements on the book.

It is evident that the writer documents slices of the life in an artistic manner from the proletarian point of view. He is of the view that "literature after all is nothing but concealed politics." Neverthelles, the bloodline in all his stories is the ebbing of 'humanism', because he contends that literature is the soul of the human kind.

Coming from the South - Eastern region of SriLanka, Maruthoor Ghani captures almost successfully the actualities of the agonising life of the down-trodden. He is out and out a progressive Marxist writer with a deep concern for the people at large; but with a fine artistic expression. Maruthoor Ghani, being a poet does know the power of the words and so does he execute his thoughts and feelings in appropriate diction.

What is more, Ghani, as another artistic writer Yuoganathan says, has a "dramatic sense" in portraying characters. This gives an added dimension to Ghani's stories. His style is that of a painter and gives pleasure to the reader in discovering nuances.

For want of an anthology of his stories, Ghani has not been rightly considered as a fine short story writer from the East. With the availability of this collection historians of Sri Lankan literature cannot ignore Maruthoor Ghani any more.

Here is a writer with a profound consciousness of the human society, and he delights the reader with his fine sense of the craft of short story writing.

**K.S.SIVAKUMARAN**

21, Murugan Place
Colombo - 06

August. 08. 1999

## மேலும் ஒரு குறிப்பு

இந்த கதைகளைத் தேடி எடுத்து புத்தகங்களாக்க எடுத்த முயற்சிகள், இடையில் நின்று போயிற்று. மீண்டும் இப்பொழுது தான் கைகூடியிருக்கின்றது.

இந்த இடைவெளி, இவ்வாறு மூன்றாண்டுகள் நீளும் என்று தெரிந்திருந்தால்.. இதற்கான முன்னுரைகளையும் ஓவியங்களையும் அவசரப்படுத்தி வாங்கியிருக்கமாட்டேன். அவர்களும் எனது வேண்டுகோளை ஏற்று-மதித்து அவசர அவசரமாக அவற்றைத் தந்தனர். அவர்களுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் எனது ஐந்து தொகுதிகளையும் படித்து, அவற்றை பூரணமான ஓர்

ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என்று விரும்பியிருந்தார். அதற்கு கால அவகாசமும் கேட்டிருந்தார். நான் தான் அதற்கு அவகாசம் கொடுக்கவில்லை. அதனால், அவரிடமிருந்து இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு, ஒரு சிறு முன்னுரையே பெறமுடிந்தது. ஆயினும் எனது எழுத்துகள் பற்றிய முழுமையான விமர்சனத்தை அவரிடமிருந்து எதிர்பார்த்திருக்கின்றேன். நன்றி

எனது எழுத்துகளின் வெட்டுமுகத் தோற்றத்தையாவது பிற மொழி வாசகர்களும் எழுத்தாளர்களும் அறிந்து கொள்வதற்கு வசதியாக ஆங்கிலத்தில் முன்னுரைகளை எழுதி வழங்கிய பிரபல கலை-இலக்கிய விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன், ஏனைய முன்னுரைகளை எழுதித் தந்த பிரபல எழுத்தாளர் செ.யோகநாதன், பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, இந்த கதைகளுக்கு ஓவியங்களை வரைந்து தந்த "தினக்குரல்" ஓவியர் "சந்திரா" ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

பட்டமரமாயினும், அதன் பொந்துக்குழியிலிருந்து நம்பிக்கையுடன் தலையை நீட்டி, பறப்பதற்கு பரந்த ஆகாய வெளியைப் பார்க்கும் அந்த "மரங்கொத்திக் குஞ்சுகளை" தனது கமராவுக்குள் பிடித்து அதை, அழியா ஓவியமாக்கிய அந்த அற்புதக் கலைஞன் எவனோ... அவனை, எனக்குத் தெரியாது. ஆயினும் அக்கலைஞனுக்கும் என் நன்றிகள்.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு காலத்தின் குரல்களாக வெளிப்பட்ட வாழ்க்கையை அழகிய ஓவியங்களாகத் தொகுத்து ஆவணப்படுத்தியிருக்கின்றேன்.

எந்த முரண்பாடுகளாலும் எதிரூன்றல்களாலும் பாதிக்கப்பட்டு இந்த கதைகள் பிறந்தனவோ, அதே முரண்பாடுகளும் எதிரூன்றல்களுமே இப்பொழுதும் காணப்படுகின்றன. மாற்றினால் அல்லாமல் அதுமாறவே மாட்டாது. அதற்கு, எழுத்து தனது பங்கைச் செலுத்தியாக வேண்டும். ஆவேசம் கொப்பளித்து செயலுக்கு தூண்டும் அழகிய எழுத்துகள் அதற்கு அரண் செய்ய வேண்டும். அவ்வாறான எழுத்துகளை காண்பது இன்று அரிதாகிவிட்டது.

ஏன், என்ன காரணம்? "பாலும் தேனும் வழிந்து ஓடுகிறது" அதை அள்ளிப்பருகி ஆடிப்பாடியபடி மக்கள் பஞ்சம் பசி தெரியாமல் வாழ்கின்றார்களோ என்னவோ...? எவ்வாறாயினும் கலையும் இலக்கியமும் மனிதாபிமான வேட்கைக்கு பசளையாகாமல் அது நீண்டகாலம் உயிர்வாழமுடியாது. அதை உணர்ந்து அறிந்தபடி என்னால் முடிந்தவரை எனது எழுத்துக்களையும் அதற்கு உதாரணமாக்கியிருக்கின்றேன். அது என் காலச்சுவடு. இனிமேலும் அது தொடரும்.

U.L.M. Haniffa, 'MARUTHOOR GHANI'
Senior Leader SLMC , Ex: Member of Parliament,
No.: 11, 4th Lane, KAWDANA BROAD WAY,
DEHIWELA, SRI LANKA
☎ 01 - 734030, 717407, 067-29069

# பசி!



அரசாங்க உத்தியோகம் பார்ப்பவராக இருந் திருந்தால், கட்டாயப் பென்ஷனோடு இளைப்பாறிச் சம்பளம் பெற்றிருக்க வேண்டியவர் முத்து முஹம்மது.

முழுமையாக முகச்சவரம் செய்யப்பட்ட முகம். அதில் வகிடுவிழுந்த தடங்கள். காகக் கறுப்பான நிறம். சற்று தளர்ந்தாடும் ஆகிருதி. வம்மிப்பூத்தலைக்கு பாதுகாப்புத் தேடும் வெள்ளைநிற வட்டத் தொப்பி. கைவிரல்களில் தங்கப்பழங்கள் ஒலித்துக் கிடப்பதான கோலம்.

சாதாரண நேரங்களிலெல்லாம் அந்த விறாந்தையில் கிடக்கும் சாய்வு நாற்காலிதான் அவருக்கு இருக்கை. வயிறு புடைக்க உணவருந்திவிட்டார். உப்பிப் பெருத்து பிரிவிழுந்து கிடக்கிறது தொந்தி. அதற்கு ஆறுதல் தேடுகிறது இடுப்பிலிருக்கும் பளயகாட் சாறன். கடைவாயில் அகப்பட்ட யாழ்ப்பாணச் சுருட்டு 'கமழ்ந்து கொண்டு' தனக்கு விளம்பரம் தேடுகிறது! அவரின் நெஞ்சில் வளர்ந்திருக்கும் நரைத்த ஊசி இலைக் காடுகள், மின் விசிறியின் வீச்சுச் சுகந்தத்தில் ஆடிக்களித்து ஆனந்திக்கின்றன.

அவரின் கையிலிருப்பது, படம் போட்டு மாதிரிக் கிளர்ச்சி ஊட்டும் இந்திய மஞ்சள் பிரசுரம்! உள்ளத்தைப் புரிந்துகொண்ட கள்ளி, உடம்பெல்லாம் களிப்புக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் பாவத்தில், அது அவருக்கு போதையை ஊட்டுகிறது. அதில் லயித்து கிறங்கி கொட்டாவி தானாகப்பறிய நித்திராதேவி அவரை ஆலிங்கனம் செய்கிறாள். கையிலிருந்த பிரசுரத்திற்கும் தற்காலிக உறக்கம். உடல் உறக்கத்தில் துவழ, குறட்டை விழித்துக் கொள்கிறது! உள்ளம்...?

தனக்கு வந்து வாய்க்கப் போகின்ற கைபடாத அந்தக் கன்னியின் அழகை, மானசீகமாக தனது மனக் கண் முன்

கொண்டுவந்து நிறுத்தி, மெய்மறந்து இன்ப நினைவுகளைஅளையத் தொடங்கியது அவரின் மனம்.

வாசற்கதவை, யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

"வாப்பா,... ஆதம் காக்கா வாறார்!"

மகள் கூப்பிட்டுச் சொன்னது கேட்டது!

"என்ன ... ஆதம் காக்காவா ...?

முத்து முஹம்மது சட்டென்று விழித்துக் கொண்டார்!

"என்ன ... இந்த வேகா வெயில்ல, வெள்ளரிப்பழமா உருகி வழிய அவ்வளவு அவசரமா ... வரவேணுமா ... ? ஆறுதலா வரப்படாதா...? பகற்சாப்பாடும் தின்டிருக்க மாட்டயள் என்று, நினைக்கிறன்! புள்ள...! ஆதம் காக்காவுக்கு சோறு வச்சிக் குடுமனேய்...!"

"சாப்பாடு ஒரு காரியமா...? எடுத்த காரியத்தில வெற்றியோ தோல்வியோ கண்டு போட்டுத்தான் சோறு தண்ணியப் பார்க்க வேணும்"

மருதமுனை பஸாரிலிருக்கும் கடைகண்ணிகளுக் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல, நிமிர்ந்து நிற்பது அவருடைய கடைகள்தான்!

மேட்டு வட்டைக்குள் கிடக்கும் காணிகளிலும் அவரின் உறுதிக்கு சொல்லிய பூமிதான் அதிகம். சனங்கள் மத்தியில் தனிப்பட்ட அவரின் செல்வாக்கு, பேர் புகழ் எப்படியிருந்தாலும்,...அவருடைய, பணத்தின் செல்வாக்கும் மதிப்பும் வேறுதான்.

காரியப்பர் றோட்டில், அந்தக்காலத்திலேயே சுற்றிவர கோட்டை மாதிரி உயர்ந்த மதிலும் கட்டி, அதற்குள் அழகாக நிமிர்ந்து நின்றது முத்து மஹால்! அதொன்றும் அவருக்கு சீதனமாக கிடைத்ததில்லை, மகனுக்கு, வாப்பா விட்டுச் சென்ற முதுசங்களில் அதுவுமொன்று.

"கைக்கு அடக்கமாக சாமானை தூக்கிக் கொண்டாற்தான் பயணம் லேசாக இருக்கும். அது மாதிரித்தான் வாழ்க்கைப் பயணத்திற்கும் அடக்க ஒடுக்கமான

– அழகும் குணமுமுள்ள அனாதைகளாகப் பார்த்து கட்டிக் கொண்டாற்தான் சரி"

என்பதுதான், முத்து முஹம்மதின் இல்லறக் கோட்பாடு. இதுக்கமைய தேடிப்பிடித்து ,,, திருமணம் செய்து கொண்டவர் அவர்.

ஆனால், முத்து முஹம்மதின் வாழ்க்கைப் போரினால் குடும்பம் என்ற, இரட்டைமாடு பூட்டிய வண்டி வழுக்கி தட்டுத்தடுமாறியது. தள்ளாடித் தள்ளாடி நத்தைபோல ஊரத்தொடங்கியது.

கணவனின் கசப்பான நரகவாழ்க்கைக்கு அவளால் துணை போக முடியவில்லை. அவரை, வழிப்படுத்த அவள் எடுத்துக் கொண்ட அத்தனை உபாயங்களும் அர்த்தமற்ற உத்திகளாகி மாண்டு மடிந்தன.

கணவன் என்ற, கடமைப்பெயர், சிருஷ்டிக்காக இல்லா விட்டாலும் இடைப்பசிக்கு மட்டும் புசிக்கத் தவறியதில்லை. அது மட்டும்தான் வாழ்க்கை என்று, மனைவியை நம்பவைத்துக் கொண்டிருந்தவர் அவர்.

தன்விதியை எண்ணி, இந்த உலகத்தையே மறந்து விட அவள் எண்ணியதுண்டு. ஆனால், தன் நிழலின் கீழேயே ஒதுங்கிக்கிடக்கும் பருவம் எய்தி பழம் தரக் காத்து நிற்கும் கொடிகளும், பால்வடியும் பச்சிளம் தளிர்களும் அவளின் மனக்கண் முன்னால் வந்து நின்று, ஏக்கத்தோடு பார்க்கும் பார்வை, எல்லாவிதமான அவநினைவுகளையும் மென்று, தின்றுவிடும்.

ஒருநாள்! கட்டிவந்த இரண மூட்டையை திடீரென்று முடித்துக்கொண்டு சமரச பூமிக்கு 'டிக்கெட்' வாங்கிக்கொண்டாள்! அவளுடைய மறைவு, குமர்குட்டிகளின் நெஞ்சங்களையெல்லாம் மண்ணுண்ணிப் புழுக்களைப் போல குடையத் தொடங்கியது.

அப்போது, முத்து முஹம்மதின் மனதில் மேலாட்டமாக நின்றதெல்லாம் 'முறிந்து போன தன்குடும்பத்திற்கு முட்டுக் கொடுக்க – பிள்ளை குட்டிகளை பார்க்க, கேட்க ஒருத்தி வேணும்' என்ற, நினைவுதான்.

அதனால் தன் தசைப்பசிக்கு பொருத்தமான இரையைத் தேடி அலையத் தொடங்கினார். அதனாற்தான் ஆதம் காக்காவின் தம்பட்டம் அடிக்கும் வாய்க்கும், 'சேர்த்து வைக்கும்' தொழிலுக்கும், அதற்காக அலைந்து திரியும் கால்களுக்கும் வேலைகள் அதிகமாகின.

ஆதம் காக்காவின் தன்னெடுப்பான பார்வையும் பேச்சும் அதைப் பிரதிகாட்டும் முகமலர்ச்சியும் 'காரியம் கைகூடிவிட்டது' என்று, கோடிகாட்டிக் கொண்டிருந்தது. அதை உணர முடியாத அளவுக்கு விவேகம் மட்டமான வரல்ல முத்து முஹம்மது.

"போன காரியம் என்ன ... பழந்தானே...!"

"பழம்தான் ... ஆனா, தானாக்கனிய இல்ல ... என்ர கெட்டித்தனத்தால, இப்ப, தானாக் கனிஞ்சமாதிரித்தான்! காக்கா,... பொண்ணெண்டால் பொண்தான்! பத்தாயிரம் 'மகர்*' குடுத்த எடுக்கலாம்! அழகில, கிளிக்குஞ்சு

பிச்சை வாங்கவேணும்! மானத்துக்கு மானெங் கிறானுகள், நான் நம்பமாட்டன்! குணத்துக்கும் வேற பொண்ணிருக்குமெண்டு நான் நினைக்கயில்ல!"

"நீ, பார்த்து, பேசிவந்தா மறுபேச்சும் பார்வையும் என்னத்துக்கு ...?"

இருவரின் மனப்படகுகளும் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்து தடுமாறுகின்றன. ஆனால், ஆதம்காக்கா சொன்னார்;

"பெரிசா ஒன்டுமில்ல, அத பெரிய காரியமுமில்ல பொடிச்சிக்கு, அறமிஞ்சிப் போனா பதினெட்டு வயசுதான் இருக்கும். நாலு வயசுப் பொடியன் இருக்கிறான் அதுகும்

---

மகர்* - மணப்பெண்ணுக்கு, மாப்பிள்ளை கொடுக்கவேண்டிய (கட்டாயமாக) பரிசப்பணம்.

உங்களுக்குப் பாரமா வராது. அதை, பொடிச்சியிர வாப்பாக்காரன் பாரமெடுத்துக்குவான்."

தேன்பூச்சி கொட்டிவிட்ட தோரணையில், முத்துமுஹம்மதின் இனிய நினைவுகள் அறுந்து விழுந்தன!

"பசுவம் கன்டுமா...? என்ன பொன் பார்த்து வந்திருக்கிறாய் ஆதம்...! போட்டிட்டு வேற வேலையிருந்தால் போய்ப் பாரு!"

முத்துமுஹம்மதின் முகம், மீனெண்ணை குடித்து வழிந்த வாக்கில் கோணிக்குறுகியது! தலைப் பிடரியை கைவிரல்களால் சொறிந்து கொண்டார்.

"சரிசரி, ஆர்ர மகளெண்டு சொல்லு பார்ப்பம்...?"

"நம்மட, சரிபுத்தம்பியிட உள்ளதும் ஒண்டுதான்"

"அந்தப் பொடிச்சா...? அப்ப, நல்லதுதான்! நல்ல இடமாத்தான் பார்த்திருக்கிறாய்! எல்லாரும் சம்மதப் பட்டிருப்பாங்களே...?"

"ராவைக்கெண்டாலும் அவங்க 'றெடி'தான்!"

ஆதம்காக்காவின் முகத்தில் நம்பிக்கை ஒளி படர்ந்தது!

முத்துமுஹம்மதின் முகமோ, அவரது தன்மானம் நேரடியாகவே பாதிக்கப்பட்டுவிட்டதான தோரணையில் சவங்கியது! அவர், இப்போது அவராக இல்லை!

"அடி செருப்பால ... !! ஆதம்,...! நீ, என்னப்பத்தி என்ன நெனைச்சிருக்காய்? கன்னி கழிஞ்ச, கண் பொட்டாட்டிதான் ஒனக்கு கண்ணில பட்டுதாக்கும்? அதுகும் எங்கேயோ கெடந்து வழிஞ்சி வந்த வழிசல்! நீயும், நீபார்த்து வந்த பொண்ணும்...!"

கனல் தெறிக்கும் அவரின் பேச்சைத் தணிப்பதற்கு, ஆதம் காக்காவிடம் 'மௌனம்' என்ற, மருந்தைத் தவிர வேறு எதுவுமே இருக்கவில்லை! இதையெல்லாம் சமாளிக்கத்

தெரியாவிட்டால்தான் ஆதம்காக்காவின் தொழிலுக்கு மதிப்பேது ?

தனது அந்தரங்கத்தில் காத்துக்கொண்டிருக்கும், ஏழைக் குமர்களின் நாமாவளிகளை ஆதம்காக்கா நினைத்துப் பார்த்துக் கொண்டார்.

"தம்பி ... போனால் போகிது, அதை விட்டுத்தள்ளுங்க! தான் சாக, மருந்து குடிக்கலாமா ...? இப்பவும் ஒண்டும் காரியம் கெட்டுப் போகல்ல...!"

"காரியம் கெட்டுப் போகல்லயா என்ன சொல்லுறாய்?"

"பின்னென்ன...?, அது மட்டுந்தான் பொண்ணா...? கஷ்டப்படுகிற குடும்பந்தான், ஆனா,...கண்ணியமான குடும்பம்! அந்த ஆள், இருந்ததையெல்லாம் வித்துச் சுட்டு, வைத்தியம் வைத்தியமெண்டு பரிசாரியை பணக்காரனாக்கிப் போட்டு-போதாக்குறைக்கி, காலுக்கும் கைக்கும் கடன்தனிசையும் பட்டு வச்சிப் போட்டு, கண்ணை மூடிற்றான்! மாட்டிக்கி முளிக்கிறது, அவள் ஆமினாம்மாவும் மகளும்தான்! வீடு வளவும் ஈட்டிலையாம்... ? பீடிக்கொம்பனியும் இல்லாட்டி வயிறு கழுவுறதும் கஷ்டம்! 'ஒருமாதிரியான' குடும்பம் என்டால் இந் நேரம் 'காரியம்' முடிஞ்சிருக்கும்! மகள் பொடிச்சும் கடும் ரோசக்காரி! பட்டகடனை, இறுத்துப் போட்டுத்தான் வாழுறதெண்டால் வாழுறது...எண்டு, ராவும் பகலுமா காத்தாப் பறக்கிதுகள்,,,!"

ஆமினாம்மாவின் மகளையும் தனது அலுமாரியிலிருக்கும் அந்த வளவுறுதியையும் ஒருதரம் நினைத்துப் பார்த்துக் கொண்டார் முத்துமுஹம்மது.

"ஆதம்...! காசைப்பத்தி யோசிக்காத. காசுபணம் இல்லாட்டி, குமர்கள் வாழுறதில்லயா...? கண்ணுக்கு லட்சணமா நம்மிட கௌரவத்துக்கும் ஏற்றதா, இருந்தால் சரிதான்!"

"அப்பநான், ஒரு நல்ல முடிவோட வாறன்"

**கா**ரியப்பர் றோட், ஓடிச்சென்று கடற்கரைக் கொளனியை முத்தமிட்டுக் கொண்டுதான் முடிகிறது. கடற்கரை வித்தனை எதிர்த்தாற் போல மேற்குப்பக்கமாக கிடக்கும் வெம்புமணல் பூமியில் ஒரு துண்டு நிலம் அரசாங்கத்தால் ஆமினாம்மாக்கு கிடைத்ததே பெரும் பாக்கியம்தான்! அடிக்கும் கடற்கரைக் காற்றுக்கு, நின்று பிடித்துக்கொண்டு அங்கு கம்பீரமாக நிற்கும் கிடுகும் வைக்கோலுமாக வேய்ந்த குடிசை அவர்களின் பெருமுயற்சி.

"புள்ள... ஆமினாம்மா...? இருக்கிறயா...?"

"ஆரது...?" ஆமினாதான் குரல் கொடுத்தாள்.

"நான்தான்...! ஆதம் காக்கா... வந்திருக்கிறன் என்ட குரல்... மதிக்கல்லயா?"

"ஒ... நீங்களா...? இருக்க வாங்களன்..."

வீட்டுக்குள் சென்ற ஆமினா, அசவிலிருந்த பாயைக் கொண்டு வந்து திண்ணையில் போடுவதற்கும் அவர், திண்ணைக்குள் ஏறும்போது வளையில் அவர் தலை தட்டுவதற்கும் சரியாக இருந்தது.

"என்னகாக்கா-வந்ததும் வராததுமா...

தலை தட்டிற்றா...?"

"எல்லாம் நலவுக்குத்தான் புள்ள..."

என்று, சமாளித்துக் கொண்டு, கொட்டைப் பாக் காகப் புடைத்தவிட்ட நெற்றியைத் தடவிக் கொண்டார்.

"என்ன காக்கா... திடீரெண்டு இந்தப்பக்கம்...?"

"ஒனக்கும் ஒன்ட புள்ளைக்கும் இப்பதான், அல்லாஹ் முகம்பார்க்க நெனனச்சிருக்கான்! ஆனமான மாப்பிள்ளை ஒன்டு வந்து படுது. ஊர்ப் பொறந்தவன், அதுவும் சீமான்!"

"அப்பிடிப்பட்ட மாப்பிள்ளை, சும்மா வருவானா...? அவனுக்கு குடுத்தெடுக்க நமக்கிட்ட என்ன இரிக்கி? அதுக்குள்ள, நம்மிட கடன்தனிசி அதுவேற...!"

"கடன் தனிசி இருக்குதென்டு நீ கவலப்படத் தேவையில்ல. அடுப்படிச் செலவும் கேட்கிற 'மகரை'யும் தந்து, பொண்ணெடுக்க மாப்பிள்ளை றெடியாயிருக்கு! நீ, சம்மதிச்சால் சரிதான்!"

"அவ்வளவு லேசா மாப்பிள்ளை வருகிதா...?"

"அதிஷ்டம் வந்தால் அப்பிடித்தான் வரும்!"

ஆமினாவின் உள்ளம், உவகைக் கடலாக பொங்கியது. அந்த, மாப்பிள்ளையை யாரென்று அறியும் ஆவல், அவளையும் மீறிக்கொண்டு தெறித்தது.

"அது, ஆரு பொடியனென்று சொல்லுங்களன் காக்கா...?"

"ஆரு... நம்மிட முத்து முஹம்மதுத் தம்பிதான்...!"

ஆமினாவின் நெஞ்சம், சூறாவளியில் அகப்பட்ட, குலைதள்ளிய வாழை மரமாகியது! அடிபட்டு முறிந்த, தலைவாழை இலையாகியது அவள் வதனம். கண்கள் இரண்டும் கட்டுடைத்த குளங்களாகிப் பிரவாகித்தன.


"காக்கா... நாங்க, ஏழையள்தான்! ஆனா, எங்களுக்கும் கண்ணிரிக்கி...!! என்ட புள்ள-குமர்! அதுக்கு சோடி வராட்டிப் போகட்டும்! எங்களுக்கு அல்லா இருக்கான்! அவர, வேற எடத்தப் பார்க்கச் சொல்லுங்க..."

அதுக்கு, பதில் சொல்லக் கூடிய திராணி அப்போது, ஆதம் காக்காவுக்கு இருக்கவில்லை!

---

**1965ல், 'செய்தி'ப் பத்திரிகை நடத்திய, சிறு கதைப் போட்டியில் இக்கதை பரிசுபெற்றது. 'கதை' என்று, நான் முதன் முதலாக எழுதியதே இதுதான்.**

# கோடரிகள் நச்சு மரங்களுக்காக



"இன்டைக்கும், 'டிஆர்ஓ'ட கந்தோருக்குத்தான் போய்வரப்போறன்! ஆனால் ... இன்டைக்கி பழத்தோட வராட்டியும் காயோட வரமாட்டன்!! அந்த மரத்தில் கோடாலி போட்டு பார்க்காமல் வரவேமாட்டன்...!"

இக்பால் கொஞ்சம் ஆக்ரோஷமாகத்தான் சொன்னான்.

"அந்தமரத்தில் நம்மிட கோடாலி ஏறுமென்டு நினைக்கிறீங்களா...?அது திரும்பி வந்து, நம்மிட காலில்தான் விழும். அநியாயமாய்ப் போய் அவனுகள்ள கூட்டுக்க மாட்டிக்காதீங்க! அவனுகள், உத்தியோக காரனுகள், ஆள் பேர் உள்ளவனுகள், சட்டதிட்டம்படிச்சவனுகள், நெனைச்சால் எதையும் சாதிச்சிருவானுகள்...!"

இக்பாலின் பாதி, ஆயிஷா அவனுக்கு பதில் சொன்னாள்.

அவர்களின் கதைவழி தொடர்ந்தது.

"அப்ப, என்னடி செய்யச் சொல்லிறாய்? இந்த மசிர் கூப்பனை வாங்கிறதுக்கு நம்மிட தொழிலையும் போட்டிட்டு, எத்தின தரந்தான் அந்தக் கந்தோருக்க ஏறி இறங்கிறது? கால் பாதமும் தேய்ஞ்சி போச்சடி...!"

"அதென்டால் மெய்தான். அவன நாசமத்துப் போவானுகளுக்கு, நாம - ஏழை எளியதுகள் படுறபாடு-கஷ்டம் விளங்குதில்லையே! இன்டைக்கும் நீங்க நெய்யப் போகாட்டி, அவன் தறிக்காரன் ஏசப்போறான் செலவுக்கு காசு தரவும் மாட்டான். பகலைக்கி ஆக்கவும் அரிசியில்ல..."

"அதுக்கு...இப்ப... என்ன செய்யச் சொல்லிறாய்? கூப்பன் பொத்தகத்தை எடுக்கப் போக வேணாமா...?"

"அப்பிடிச் சொல்லல்ல, நம்மிட நெலமையச் சொல்லிறன்...!"

"எனக்கென்ன தெரியாத நெலமையாடி...? காலத்தால, பள்ளிக்குப் போன பிள்ளையள் என்ன தின்டிதுகள்?"

"ராவு அவிச்ச மயிறுக் கிழங்கில ரெண்டு துண்டு எடுத்து வச்சன்...அதத்தான், தின்டு-தண்ணி குடிச்சிற்றுப் போகிதுகள்...! மத்தியானம் பள்ளிகலைஞ்சால் பத்திப் பதறிக்கிட்டு ஓடிவருங்கள். பகலைக்கு அதுகளை பட்டினி போட ஏலாது! எப்படி என்டான தேடி, பகலைக்கு ஆக்க வேணும்"

"ஆரு ஆக்கவேணாமென்டது? ஆரிட்ட என்டான கால் மாத்து கைமாத்துக்கு, வாங்கிப் போட்டு ஆக்கு! இந்த, அக்கிர்மக் காரனுகள்ர கந்தோருக்கு ஏறி இறங்கிறதிலயே நம்மிட காலமும் நேரமும் கழியிது...! ஒழுங்கா தொழில் செய்தால்...ஒரு நேரமில்லாட்டியும் ஒரு நேரமாச்சும் தின்னலாம்...அப்ப, இன்டைக்கி பகலைக்கி என்ன செய்யப் போறாய்?"

"அசனார் மரைக்கார்ர தறிமாலுக்க தார் சுத்தின காசி மூணுரூபா வரக்கெடக்கு, கேட்டுப்பாப்பம். தந்தாலும் தராட்டியும் ஆக்கத்தானே வேணும். அத, நான் பாக்கிறன்...பொறப்பிட்ட பயணத்த நீங்க போய் வாங்க. போறது சரிதான்...எப்பென்டான கூப்பன எடுத்துக்கலாம் ஆனா, அவன் கிளாக்கனோட சண்டைக்கிப் போயிராதீங்க...!"

"இந்தா . . . என்ர, கோபத்தை கிளப்பாத! நானென்னடி, சண்டைக்கா போறன்? இந்த மண்ணாங்கட்டிக் கூப்பன வாங்கத்தானடி நாயா அலையிறன்! அப்ப . . ., அவன், எப்பென்டான கூப்பனைத் தரட்டும் . . .! நான் போகல்ல!"

"நான், ஒங்கள போக வேணாமெண்டு சொல்லல . . . போங்க ஆனா . . ., அவனோட மனத்தன்மையா– கதைச்சிப் பேசி . . . கூப்பன வாங்கப் பாருங்க . . . என்டுதான, சொல்லிறன் . . ."

"அப்ப . . . எனக்கு, மனத்தன்மையா . . . பேசிக் கதைக்க தெரியாதென்டு சொல்லிறாய்? என்ன . . . ?"

"ஒங்களுக்கு என்ன கோவத்தத்தான் வருகிது . . . ? அப்பிடி நான் சொல்லுவனா . . . ?"

"பின்ன என்னடி . . . ? எத்தின மாதமா அலையிறன் . . . ! எப்பிடியெல்லாம் கேட்டுப் பாத்திற்றன் . . . ! அவனிட்ட காரியம முடிக்கிறதென்டால் கைக்குள்ள 'வைக்க' வேணுமாம்! அதையெல்லாம் வாங்கக்குடுக்க அதுக்கு ஆள் நிக்கானுகளாம்! நாலு கூப்பனுக்கும் நாலு பச்சைத்தாள் – நாப்பது ரூபா நசிக்க வேணுமாம்! இத . . ., நேத்துத்தான் ஒருத்தன் சொன்னான்."

"இத்தின மாதமா தொழிலையும் போட்டிட்டு அலைஞ்சதக் கணக்குப் பாத்தா, குடுத்திருந்தால் லாபம் போல இருக்கே . . ."

"நம்மிட்ட இருக்காடி . . . ? கடனப்பட்டுக் குடுத்தாலும் எப்பிடி இறுக்கிறது? அந்த, நாப்பது ரூபா இருந்தா . . . இந்த ஒழுகிக்கரையிற குடிலுக்கு கிடுகக்கட்டலாமே . . . ! அதல்லாம . . . இவனுகளுக்கு ஏன்டி, கொடுக்கவேணும்? அவனுகளுக்குத்தான் அரசாங்கம் மாதா மாதம் சுளை சுளையா கொடுக்கிதே! அதுவுமல்லாம, அவனென்ன இல்லாத செல்லாதவனா . . . ? வைரமுத்துக் கிளாக்கனென்டால் கல்முனைப் பகுதியில ஆருக்குத் தெரியாத? படுவான் கரையில கிடக்கிற பூமியில

விளையிறது...பத்துத் தலை முறைக்கி சும்மா படுத்துக் கொண்டு தின்னக் காணுமாம்..."

"இப்பிடிப்பட்டவன் தானா..., ஏழையளிட்ட கேட்கிறான்...?"

"இருக்கிறவனுகளுக்குத்தான்டி, இன்னமும் ஆசை! அவனுகள்ர ஆசைக்காக, நாம சாகவேண்டியிரிக்கி...இந்த, இருக்கிற சாதியள் இருக்கிற வரைக்கும் நாம இல்லாத சாதியள் உருப்பட ஏலாது...!!"

"இதையெல்லாம் கதைச்சி, இப்ப என்ன ஆகப்போகிது? எங்கயென்டாலும் கடன்தனிசைப்பட்டு அவனுக்கு 'கத்தம்*' ஓதிப்போட்டு, நம்மிட கூப்பனை எடுப்பம்"

"எனக்கு கடன்படவும் ஏலாது ... அதுக்காக பல்லுக்காட்டவும் ஏலாது! இந்த நாச மறுப்பெல்லாம் ... ஒன்னாலதான்டி வந்தது...!"

"எதுக் கெடுத்தாலும்...கடைசியில கொண்டு வந்து என்ன, ஒருதரம் தனகாட்டி ஒங்களுக்கு பத்தியமில்ல...! நானென்ன செஞ்சது...? நானா, குடிலைப் பத்த வச்சது...? அப்பஞ்சுட்டு விளையாடின ஒங்கட செல்ல மக்களத்தான் கேக்க வேணும்!"

"நீ கொஞ்சம் கவனமா இருந்திருந்தா...குடில் பத்தியிருக்கவும் மாட்டாது! அதில செருகியிருந்த கூப்பன் எரிஞ்சிருக்கவும் மாட்டாது. நமக்கிந்த கஷ்டமும் அலைச்சலும் வந்திருக்கவும் மாட்டாது...!!"

"அப்ப...இனி, ஒங்கட மக்கள் ரெண்டு பேரையும் மடிக்குள்ள கட்டிக்கொண்டுதான் திரிய வேணும்! போன விஷயத்தை, இப்ப என்னத்துக்கு கிண்டுறீங்க...?"

"சரி சரி, அப்ப அத விடு. இப்ப...என்ன செய்வம்?"

"இந்த கூப்பன வாங்கிறதுக்கு போறவாறதில தான் நம்மிட தொழில் செய்யிறதும் அலையிது...! அதோட, ஒங்களுக்கு வாற ஆத்திரத்த, அவனிட்ட காட்டப்

---

கத்தம்*-குர்ஆனை ஓதி பூரணப்படுத்தல் என்பது இதன் அர்த்தம். ஆனால், இங்கு 'கொடுத்துவிட்டு' என்ற அர்த்தத்தில் பேசப்படுகிறது.

போனா அவன் என்ன செய்வானோ...? அது தான் எனக்கிப்ப பயமாயிருக்கி...?"

"என்னத்தானடி நீயும் பிழை சொல்லிறாய்...? இனி நீ, இந்தக் கூப்பனுகளை எடுத்தாலும் சரிதான் வச்சிக்கு படுத்தாலும் சரிதான்! சுத்தின தார் கிடந்தா எடு, நெய்யப் போகப் போறன்!"

"ஒங்களுக்கு, என்ன கோவத்தத்தான் வருகிது...! ரெண்டு பிள்ளைக்கி வாப்பா ஆனதுக்குப்பொறகும் முறுக்கு அடங்கல்ல...! ஒங்களப் பிழை சொல்லுவனா...? நம்மட கஷ்டகாலம்...ஏழை எளியதுகள் என்டால் மோளையும் பாயுது! அதுக்காகத்தான் சொன்னன்...இனி, ஒங்கட இஷ்ட்டம். என்னென்டாலும் செய்ங்க..., அந்த, அல்லாதான் காப்பாத்த வேணும்"

"காப்பாத்திறது அல்லாதான்! இது, இப்ப...எல்லாம் மனுசனுகள்ர கைக்குள்ள அகப்பட்டுப் போச்சுடி...! இதுக்கு என்ன செய்ய...?"

"அதையும் அல்லா பார்த்துக்குவான்! சத்தம் போட்டு கதைக்காதீங்க. ஆலிமுமார்ர* காதில விழுந்தா ஒங்கள ஈமான் இஸ்லாம்* தெரியாத 'காபிர்*' என்டு, சொல்லுவாங்க!"

"சொன்னா, சொல்லிற்றுப் போகட்டும்! எனக்கென்ன? என்ர மனச, அல்லா அறிவான்! எல்லாம் உள்ளவன்ர கைக்குள்ள அகப்பட்டுப் போச்சுடி...! எங்கட வயித்தில பத்திற பத்தும் எங்கள, இவனுகள் போட்டுப் படுத்திற பாடும் எங்களுக்குத்தான்டி தெரியும்! அந்த, ஆலிமுமார் என்டால்... என்னவாம்? வேலிக்கு ஓணான் சாட்சிமாதிரி, உள்ள வன்ட பக்கம் நிண்டு கொண்டு ஆமாச்சாமி போடிறதுதானே அவங்கட தொழிலாப் போச்சு...!"

"ஒங்களோட கதைச்சி, எனக்குத் தப்ப ஏலாது...புறப்பிட்ட பயணத்தை போயிற்றுவாங்க! ஆனா,

---

ஆலிம்கள்*-மார்க்க அறிஞர்கள்.

ஈமான் இஸ்லாம்*-இறை நம்பிக்கையும் அதன் செயற்பாடுகளும்.

காபிர்*-இறை நிராகரிப்போர்.

ஒன்டு. அவன் பெரியகிளாக்கனோட சண்டைக்கிப் போக மாட்டன் என்டு, சத்தியம் செய்து தரவேணும்!"

"ஏன்தான் பயந்து சாகிறயோ...? அல்லா அறியச் சத்தியமா, நான் அவனோட சண்டைக்கிப் போகல்ல, கூப்பன் வாங்கத்தான் போறன்...! போதுமா...?"

"பயத்துக்காக சொல்லல்ல...! 'நிறுக்கிறத, சரியா நிறு!' என்டு, நீங்க நியாயத்தை கேட்டதுக்குத்தானே அந்த கூப்பன் கடைக்கார மனேஜர், பொலிஸ்காரனக் கூட்டியந்து எச்சரிக்க பண்ணிப் போட்டுப் போனான்! நெனவிருக்குதா?"

"அதையும் மறக்கிறதா...? எனக்கு வாற ஆத்திரத்தில இந்த அநியாயம் செய்யிறவனுகளையெல்லாம் அடிச்சி நொறுக்கவேணும் போல இருக்குடி...!!"

"அதுதான் நமக்கு வேணாம்...எங்கிறன்! இதுக்காகத்தான் ஒங்களிட்ட சத்தியம்பண்ணிக் கேட்டன். உங்கட பிள்ளையள்ர முகத்துக்காகவாவது அப்பிடியெல்லாம் ஒன்டும் செய்திராதீங்க! நாம, ஏழையள்...தப்பித்தவறி நீங்க என்னவும் செய்திற்றா..., பொலிசுக்குப் போகவும், பிணை எடுக்கவும், அதுக்கு செலவளிக்கவும் நமக்கு ஆரிருக்காங்க...? நம்மிட்டத்தான் என்ன இரிக்கி? ஒங்கட கால்ரெண்டையும் பிடிச்சி கெஞ்சிக் கேட்கிறன்...! நம்மிட புள்ளையள்ர முகத்துக்காகவாவது, அவன் கிளாக்கன் என்ன கதைச்சாலும் கேட்டுக்கு பொறுமையா வந்திருங்க...! அவனுக்கு கூலி, அல்லா குடுப்பான்!"

"அப்ப ஒன்டு செய்வம்...!"

"என்ன...அது?"

"நான், போகல்ல!! அப்ப...கோழிமுட்டை ஒன்டை எடு, அதுக்குள்ள பூந்துக்குவம்...!"

"..............................."

"என்னடி . . . பேசாம இருக்கிறாய் . . . ?

"உங்களால எனக்கு முடிவெடுக்க ஏலாது . . . ! அந்த அல்லாதான் காப்பாத்தவேணும் . . . நீங்க போய்வாங்க"

**மா**சி மாதத்து மழைப்பனி! கூதல், குளிர் இன்னும் கலையவில்லை! ஆனால், சுள்ளென்று சுட்டுக்கொண்டு எழுந்து கொண்டிருக்கும் பத்துமணிச் சூரியனைப்போல, இக்பால் நடந்து கொண்டிருந்தான்! அவனது நடையில் இருந்த வேகம் மாரிக்கடலின் வேகத்தை நினைவூட்டியது. ஆனால் அந்த மாரிக் கடலில் அகப்பட்டுக் கொண்டு, கரையை அடைய தோணியை செலுத்திக் கொண்டிருப்பானே, அந்தத் தண்டயல் – அவன் 'சவள்' பிடிப்பதிலுள்ள நிதானமும் கம்பீரமும் இக்பாலின் நடையில் தெரிந்தது!

ஆயினும், அவனது மனதைக் குத்திக்குடைந்து, சதா தாக்கிக் கொண்டிருந்த புறத்தாக்கங்களும் அதன் தழும்புகளும் விடியற் பொழுதின் செவ்வானத்தை நினைவூட்டின!

நினைவுகளை அசைபோட்டபடியே நடந்து கொண்டிருந்தான்.

". . . . . . . . . பெரிய கிளாக்கனும் மனிசன் தானே . . . ? இன்டைக்காலும் இரங்க மாட்டானா . . . ? எத்தின மாதமாத்தான் நானும் அலையிறன் . . . ? இன்டைக்கும் வரச்சொல்லி இருக்கிறான் . . . இன்டைக்கி கூப்பனை தருவான் . . . ! ஆனால் இப்படி எத்தின தரம் வரச் சொல்லியிருக்கிறான். இன்டைக்கும் தராட்டி . . . ? எப்பவோ ஒரு நாளைக்கு தரத்தானே வேணும்! அதுவரைக்கும் . . . ? அவளிட்ட சத்தியம் பண்ணிக் குடுத்திற்றன்! அவன் என்ன சொன்னாலும் பொறுமையாத்தான் வருவன் . . . ஆனா, இடக்கு முடக்கா அவன் பேசி . . . எனக்கும் கோவம் வந்திற்றால் . . . ? ஏழை எளியதுகள் என்டால் . . . மானம், ரோசம், கோபம் வரப்படாதா . . . ? என்ன செய்யிறது . . . ? பிள்ளைகுட்டிகள்ர முகத்துக்காக சதையை சப்பிக் கொண்டு திரும்பி வருவன் . . . !"

கல்முனை 'கந்தவாசா' கட்டிடத்தில், 'டி ஆர் ஓ' கந்தோர்.

அதன், நீண்ட முன் விறாந்தையில், நாலு நெடிய

வாங்குகள். அந்த வாங்குகளில் வேட்டியும், சாறனும், தொப்பியும், முக்காடும் சமத்துவமாக இருந்த போதிலும் அந்த முகங்களில்தான் எத்தனை கேள்விக் குறிகள்?

அங்கு கிடந்த தனிக்கதிரைகளில் பிரமுகர்கள் சிலர் இருந்தார்கள்.

நெடியகாற்சட்டை போட்டிருந்தவர்களும், கசங்காத சாறன் சட்டை உடுத்தவர்களும் வாங்கிலும் இருக்காமல் கதிரையும் கிடைக்காமல் கூடிநின்றுகொண்டு உள்ளூர் வெளியூர் விவகாரங்களை அரைகுறையாக அலசிக் கொண்டிருந்தார்கள்.

அங்கு கிடந்த, அந்த வாங்கின் ஓர் ஓரத்தில் இக்பால் வந்து இருந்துகொண்டான். அங்கு இருந்த அந்த மனிதர், தள்ளியிருந்து, அவனுக்கு இடம் தந்தார்.

"டி ஆரோ வந்திற்றாரா...?" இக்பால் கேட்டான்.

"வந்திற்றாராம்..."

அந்த மனிதர் பதில் சொன்னார்.

"பெரிய கிளாக்கர்..."

"அவர்தான் இன்னும் வரல்லயாம். அப்ப..., ஒங்கட விஷயமும் இன்னமும் முடியல்லயா...?"

"அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீங்க...?"

"என்ட, மரப் பேமிட்டும் அந்த ஆளிட்டத்தான் அகப்பட்டுப் போச்சு...இதுக்கு, அந்த ஆள் எங்களுக்கு சொந்தக்காரன்!"

"அண்ணே...இங்க, சொந்தம் பந்தமெல்லாம் சரிவராது...! ஒங்களிட்டையும் இருந்தா சொந்தமும்தான் பந்தமும்தான் எல்லாம் தானாக நடக்கும்..."

"அதென்டால் மெய்தான் தம்பி. அந்தா...! அவர்

வந்திற்றார்!"

கந்தோர் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வந்து தகைந்த அந்த ஜீப் வண்டியிலிருந்து வைரமுத்தக் கிளாக்கர் இறங்கி வந்துகொண்டிருந்தார்.

"குட் மோனிங் ஸேர்!"

"குட் மோனிங்"

அவசரஅவசரமாக ஒடிச்சென்ற ஒபிஸ் பியோன் எஜமான விசுவாசத்தோடு குழைந்து-குனிந்து கொண்டு, அவரது விருப்பம் போல இங்ளிஷ் வணக்கம் கூறினான். அதைத் தொடர்ந்து, ஜீப்பின் பின்ஸீட்டில் கிடந்த 'பைல்' கட்டுகளைத் தூக்கிக் கொண்டு அவரைப் பின்தொடர்ந்தான்.

அவரின் தயவுகளை வேண்டிநிற்கும் கந்தோர் உத்தியோகஸ்தர்களில் சிலர் எழுந்து நின்று, 'குட்மோணிங்' சொல்லி தலையை குனிந்து கொண்டனர். இன்னும் சிலர் கண்டும் காணாதது போல, வேலையில் கவனமாயிருந்தனர்.

**கூ**டிய விரைவில், தொகுதி "எம். பி." யாகவும், ஜூனிய மினிஸ்ட்டராகவும் இருக்கின்ற ஒருவரின் சிபார்சில், கிளாக்கருக்கு 'டி. ஆர். ஒ.'வாக புறமோஷன் கிடைக்க இருக்கின்ற ரகசியம், ஏற்கனவே கந்தோரில் சிலருக்கு தெரிந்திருந்தது.

கிளாக்கர் பார்ப்பதற்கு வாட்டசாட்டமான ஆள்தான்! நல்ல நிறம். முகத்தில் நெய்யொழுகும். டையை ஒருதரம் தடவிவிட்டுக் கொண்டு அவர் நடக்கும் அந்த நடையும் சீமந்துத் தரையில் கிறீச்சிடும் அவரின் பூட்ஸ் சத்தமும், அவரின் வெள்ளைத் துரைத் தனத்துக்கு வாழ்த்துப் பாடும்!

ஆடும் அந்த நாற்காலியில், அவர் வந்து அமர்ந்து கொள்ளும் போதே தலைக்கு மேல் நின்றிருந்த மின் விசிறியும் ஆடத் தொடங்கியது.

"இன்றைக்கி ஒபீஸ் வேலை மட்டும்தான்! ஆரும்

சந்திக்க ஏலாது!! என்று, போய்ச் சொல்லு! நான் 'கோல்' பண்ணிற ஆட்களை மட்டும் உள்ளுக்கு விடு!"

விறாந்தைக்கு ஓடிவந்த பியோன் தனது கடமையை சொல்லிவிட்டுப் போனான்.

இக்பாலின் முகத்தில் மட்டுமல்ல, அந்த வாங்கிலிருந்த அனேகரின் முகங்களில் ஏமாற்றமும் விரக்தியும் கொப்பளித்தது!

விறு விறென்று, கிளாக்கரின் அறைக்குள் புகுந்தான் இக்பால்!

அங்கு நின்றவர்களின் கண்கள், ஆச்சர்யத்தில் விரிந்தன! என்ன நடக்கப் போகிறதோ...? என்று அறிய அவர்கள் அவாக்கொண்டு நின்றனர்.

"ஹூ இஸ் திஸ் இடியட். இவனை இங்க ஆர்விட்டது?" என்று, அவர் கத்திய கத்தோடு மேசையிலிருந்த கோலிங் பெல்லும் அலறியது!!

"நான் தானையா...!"

ஈனக் குரலில் இக்பால் சொன்னான்.

கிளாக்கரின் நெருப்புக் கண்களால் அவனைச் சுட்டெரிக்க முடியவில்லை! அவனது முகத்தில், விடியற் பொழுதில் மதமதத்து நிற்கின்ற தலை வாழை இலையின் குளுமை குடிகொண்டிருந்தது.

மீண்டும் மேசையிலிருந்த அழைப்பு மணி அலறியது!

'என் தலை எழுத்தே...!' என்று கூறிக்கொண்டு, இளைக்க இளைக்க ஓடி வந்த பியோன், கேள்விக் குறிபோல உடம்பை வளைத்து, கையை கட்டிக் கொண்டு நின்றான்!

"என்னடா பார்த்துக் கொண்டு நிற்கிறாய்...? இவன இங்க, ஆருவிட்டது...?"

"மன்னிக்க வேணும் ஸேர்! அவர் விடயில்ல... நானாகத்தான் வந்தன்"

"அவ்வளவு துணிவாடா உனக்கு?"

"நீங்கதானே ஐயா, இன்டைக்கு வரச்சொன்னீங்க..."

"ஷட்அப்! பிளடி பாஸ்டராட்!! பிச்சைக்கார நாயே...!! போடா வெளியே!"

"பளார்! பளார்!!"

எதிர்பாராத அந்த தாக்குதலினால், இக்பால் நிலை குலைந்தான்! சுவரில் தலை, அடிபடவிழுந்து மெள்ள எழுந்தான். தலையிலும் வாயிலும் கசிந்த இரத்தத்தை, தொட் டுப்பார்த்துக் கொண்டான். கன்னத்தை பதம்பார்த்த விரல்அடையாளங்கள், கொவ்வைப் பழங்களாக வீங்கத் தொடங்கின. கடைவாயிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது.

இந்த அலங்கோலத்திலும் அந்த அறைக்குள்ளேயே அவன் அசையாமல் நின்றான். அங்கு வந்து கூடிய சிலர், அவனை வெளியே வருமாறு அனுதாபத்தோடு அழைத்தனர்.

ஒபீஸ் பியோன் உட்பட, அங்கு நின்ற அநேகரின் நெஞ்சில், வெப்புசாரம் விம்மி அடங்கி, ஒரு நீண்ட பெருமூச்சாக மெதுவாக தணிந்தது!

"இங்கேயே செத்தாலும் சாகுவனே அல்லாமல், என்ட கூப்பனுகளை வாங்காமல், அசையவே மாட்டன்!! எத்தின தரந்தான் நான், வந்து வந்து ஏமாந்து போறது? எனக்கு இதுக்கொரு முடிவு வேணும்!!"

அவனின் அந்த வார்த்தைகளில் கம்பீரமும் உறுதியான தீர்மானமும் தெறித்துப் பறந்தது!

"உனக்கு, இப்ப ஒரு முடிவா வேணும்? உன்னைப் பிடிச்சி பொலிஸில் கொடுத்தால்தான் – மற்றவனுகளுக்கும் ஒரு பாடமாக இருக்கும்!"

கிளாக்கர் பல்லைக் கடித்துக்கொண்டு டெலிபோனை சுழட்டத் தொடங்கினார்.

"எனக்கு அடிச்சுப் போட்டு, பொலிஸிலையுமா பிடிச்சிக் கொடுக்கப் போறாய்?!"

ஒரு மின்னல் வெட்டியது!! பக்கத்தில் நின்றவர்கள் அதிர்ந்தார்கள்!!

அடிபட்ட காயத்துடன் பதுங்கிக் கொண்டு நின்ற வேங்கை ஒன்று, சந்தர்ப்பத்தைப் பார்த்துப் பாயும் பாய்ச்சலில் மத்தகத்தின் தலையைப் பிளந்து குதறுமாமே...அந்தக் களத்தையே அந்தக் காட்சி நினைவூட்டியது!

அடுத்தகணம், அந்த வேங்கை வெளியே பாய்ந்தது! அதை, மறிப்பதற்கோ அல்லது அதை, துரத்திப் பிடிப்பதற்கோ,

அங்கு நின்ற ஆருக்கும் துணிவுமில்லை! திராணியுமில்லை! அவர்களுக்கு அதற்கு அவசியமும் இருக்கவில்லை!

கந்தோரில் குழப்பம்!

வாங்கில் இருந்த அவர்கள், அவனுக்காக அனுதாபப்பட்டனர். ஆனால், தங்களின் அனுதாபங்களை மிகவும் அடக்கமாகப் பரிமாறிக் கொண்டனர்.

கதிரைகளில் இருந்த 'பிரமுகர்கள்' கிளாக்கரைக் கண்டு, தமது அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டனர். 'இவனுகளை விட்டுவைக்கக் கூடாது!' என்ற, தோரணையில் முகஸ்துதியும் கூறினர்.

அங்கு நின்ற, காற்சட்டைக்காரர்களும், கசங்காத சாறன் சட்டை போட்டவர்களும் சார்ந்தும் சாராமலும் நியாயம் கதைத்துக் கொண்டு நின்றனர்.

இந்தக் குழப்பங்ளையெல்லாம் காணச் சகிக்காத டி ஆரோ தர்மசேகர, தனக்குத் தெரிந்த கொச்சைத் தமிழில் எல்லாருக்கும் கேட்கும்படியாக பின்வருமாறு கூறிக்கொண்டிருந்தார்.

"இவன், சிசியும் அப்பிடித் தாங்...! சனங்களும் அப்பிடித் தாங்...இது...நமக்கு மிச்சம் கரச்சல்...! இந்த இடம் நமக்கு சரிப்பட்டு வரமாட்டாங்...இன்டைக்கே நாம, கொழும்புக்குப் போறது...ராண்ஸ்வர் எடுக்கப் போறது...!"

---

குறிப்பு :

1966 ஆம் ஆண்டில், உமா வரதராஜன் நடத்திய, "காலரதம்" சஞ்சிகையில் இது வெளிவந்தது. பயங்கர வாதங்களுக்கிடையில் அகப்பட்டு, அகால மரணமடைந்துவிட்ட, தோழர் "சம்மாந்துறை ஆனந்தன்" இக்கதைக்குரிய தலைப்பை இட்டார் என்பதை, இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

# நிழலைத்தேடி...



மீ 4

**வி**டிந்தால் பெருநாள்! முஹ்மீன் மாமியின் மனந்தான் இன்னும் விடியவில்லை!! அவளின் இதயநெடுவானத்தில் அப்பியிருந்த மப்பும் மந்தாரமும் இன்னும் அகலவில்லை!

எந்த வீட்டில் மௌத்து, ஹயாத்து – நன்மை தீமை நடக்கிறதோ அந்த, வீடுகளிலெல்லாம் முஹ்மீன்மாமியின் கலகலவென்ற சிரிப்பும் களங்கமில்லாத பேச்சும்தான் முதலில் கேட்கும். அந்த வீடுகளில், நடக்க வேண்டிய எடுபிடி வேலைகள் தொடக்கம், மணவறையில் நடக்க வேண்டிய சம்பிரதாயங்கள் வரைக்கும் மாமியின் மேற்பார்வையில்தான் நடந்து முடியும்.

'மாமி' என்ற, சொல்லுக்கும் நேரடியான உறவு முறைக்கும் எந்த விதமான சம்மந்தமும் கிடையாது. ஆனால், அந்த ஊராரெல்லாம் அவளை, 'முஹ்மீன்–மாமி' என்றுதான் அழைத்தார்கள். அப்படி, மற்றவர்கள் அழைப்பதில்தான் அவள் பெருமையும் கொண்டாள்.

ஆரோடு என்றாலும் சரிதான், அது, எந்த நேரமாக இருந்தாலும் சரிதான் சதா, கலகலப்பாக சிரித்துப் பேசிக் கொண்டு, மாமி திரிவதைக் கண்டால்...லட்சம் லட்சமாகச் சம்பாதித்து கட்டிவைத்துக் கொண்டு நிம்மதியில்லாமல் வாழ்கிறார்களே–அவர்களுக்குத்தான், ஆகவும் எரிச்சலாக இருக்கும்.

மாமிக்கு, இப்பவும்...இருக்கிற, மாம்பழ நிறத்தையும், வீச்சுவாள் மாதிரி நீண்ட நாசியையும், பாலை மீன் கண்கள் மாதிரி–பெரிய அழகான கண்களையும் மழைக்கால் மாதிரி நீண்ட கூந்தலையும்...பார்த்தால், அந்தப் பருவத்தில் பொடியனுகளை என்ன பாடுபடுத்தியிருப்பாளோ...? என்றுதான், நினைக்கத் தோன்றும்!

உண்மையும் அதுதானாம்! அந்த நேரத்தில மாமியைக் கட்டிக்க எக்கச்சக்கமான போட்டியாம்! எவ்வளவோ கஷ்ட

நஷ்டங்களுக்கிடையில், மாமியும் 'அவரை', விரும்பின காரணத்தால் மீரான் மாமாவுக்கு அப்போது, 'பென்ஸ் கார்' சுவீப் விழுந்த மாதிரித்தானாம்...!

இந்த மாதிரிக் கதைகளையெல்லாம் மாமியே, பகிடி பகிடியாக சிரித்துச் சிரித்து கதைக்கத் தொடங்கி விட்டால்...கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு பொழுது போவதே தெரியாது.

கவலையே கண்டிராத மனுஷி! இதுக்கிடையில், ஆராவது, இடக்கு முடக்காக எதையாவது கேட்டு, மாட்டிக்கொண்டாங்களோ அவ்வளவுதான்! நாறு முணுசதம், வாங்கி கட்டிக்கொள்ள வேண்டியதுதான்!! கேட்கிறவங்களுக்கும் அது ஒரு தனிச்சுகம்!

முஹ்மீன்-மீரான் தம்பதிகளுக்கிடையில் தவிர்க்க முடியாத, பொருளாதாரக் கெடுபிடிகள் ஏற்பட்டு, மனுஷனுக்கு 'கறுப்பு' போடிறதுக்கு காசுகிடைக்காமல் படுத்த படுக்கையில் கிடக்கும் சந்தர்ப்பங்களில், அந்த, 'நல்ல காரியத்தை' அவருக்குப் பழக்கிவிட்ட அந்தப் புண்ணியவாளனின் பாடு, பம்பல்தான்! அதைத் தொடர்ந்து...மாமாவுக்கும் நல்ல பாட்டுக் கிடைக்கும்!! ஆனாலும் அதைத் தொடர்ந்து தனக்கு என்ன நடக்கும்...' எப்படி நடக்கும்? அவ-முஹ்மீன் என்ன செய்வா...? என்றெல்லாம், அவருக்கு நன்றாகத் தெரியும்! அடிக்கிற, கைதான் அணைக்கும் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை!

தன், தவறை-பலஹீனத்தை ஒப்புக்கொள்வது போல, தலையைக் குனிந்து கொண்டு, அவர் குந்தியிருக்கிற கோலம்! உடுத்த சாறனும் போட்ட சட்டையும் ஒட்டைத் தொப்பியும் ஆளுமாக வம்மிப்பூ மாதிரி முகவாய்க் கட்டையும் தொங்கப் போட்டு, கைகளிரண்டையும் நாடியில் குத்திக்' கொண்டு அந்த திண்ணைத் தாழ்வாரத்தில் அவர் குந்தியிருக்கின்ற காட்சியைப் பார்த்தால், பார்க்கின்ற கண்கள்தான் பாவம் செய்திருக்க வேண்டும்!

மாமிக்கு, மாமா ஒரு தலை எழுத்து! அந்தக் கோலத்தில் அவரைக் கண்டால் போதும், அவளின் கண்களிலிருந்து கடல்நீர் கசியத் தொடங்கிவிடும்! அவரை, நொந்து பேசிவிட்டதற்கு பிராயச்சித்தமோ என்னவோ, தன் சேலையின் முந்தானை முடிச்சை அவிழ்த்து, இருப்பதை அவரிடம் கொடுத்துவிடுவாள்.

அந்த விநாடியே, அவரின் கால்கள் கணக்கப்பிள்ளையின் 'இடு முடுக்கு' கடையைத் தேடி 'றொக்கட்' வேகத்தில் பறந்து கொண்டிருக்கும். 'அதை' நினைத்தாலே அவருக்கு, அப்படி ஒரு வேகம்!!

மீரான் மாமாவைப் பொறுத்த மட்டில், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று, ஆரும் கிடையாது! பச்சைத்தண்ணி மனுஷன்! நடந்த இடத்து புல்லும் சாகாது! உசிரை விட்டாலும் விடுவார், ஆனால், அல்லாஹ்வின் சன்னிதானத்துக்குப் போய் ஐந்து வேளை தவறாமல் சிரம்பணிகிறதையும், ஒரு நாளைக்கு ஒரு தரமாவது அந்த "இடுமுடுக்குக் கடை"த் தரிசனத்தையும் விடவே மாட்டார்!திடீரென்று, ஒரு நாளைக்கு 'அதுக்கு' வழி கிடைக்காமல் போனாற்தான், ...அந்த மனுஷன் படுகிறபாடும் பதையத்தும் பார்க்கவே ஏலாது! ஆர் காலைப் பிடித்தாவது 'அதுக்காக' தேடிக் கொள்வார். அதையெல்லாம் மீறிக்கொண்டு காலம் சதி செய்தால்தான் வந்தது மராயம்! படுத்த படுக்கைதான்!! எழுப்ப வேணுமென்றால் 'அதைக் கொண்டு வந்து' நாக்கில் வைத்தாகவேணும்!

**ஐ**ந்தாறு, பெண் பெற்றால் அரசனே ஆண்டியாம்! மீரான் மாமாவைக் கேட்க வேணுமா? ஆனால், அதைப் பற்றியெல்லாம் மனுஷனுக்கு எந்தக் கவலையுமில்லை. எல்லாப்பாரமும் மாமி தலையோடுதான்!

'குடும்பமே குமர்குட்டியள் இருக்குதே...!' என்று, அவரிடம் ஆராவது கேட்டால் போதும், "என்ன

கேட்கிறாய்...? வாயைப் படைச்சவன் மண்ணைப் போடாமலா போவான்...? இஞ்ச, எத்தின கொமர் வாழாமல் கிடக்கிது...? ஒவ்வொன்றுக்கும் சோடியை, அல்லா படைச்சிருக்கிறான்...அதுஅது, நடக்கிற காலத்தில் நடந்துதான் ஆகும்...!"

என்று, கேட்டவரை மடக்கி விடுவார்.

"உத்தியோகம் பார்க்க படிக்காவிட்டாலும் நம்மட நம்மட தகுதிக்கு ஏற்ற மாதிரி, பெண்பிள்ளைகளை எழுத வாசிக்க நாலெழுத்து படிப்பிக்க வேணும்"

என்ற விஷயத்தில் முதல் மனுஷி மாமிதான்!

இதுக்கிடையில், மாமியின் குடும்பத்து வருமானமெல்லாம், பாயை, பன்னை பின்னி விற்பதிலும் குமர்குட்டிகள், பீடித்தட்டமும் ஆட்களுமாக இருந்து கொண்டு இடுப்புக் கடுக்குவதிலும், இருந்திருந்துபோட்டு மழை பெய்கிற மாதிரி, எப்பவாவது...ஒருநாள், கடலில் மீன்பிடிபட்டால் "அந்தச் செலவுக்குப்" போக, அவர் கொண்டுவந்து மாமியின் கையில் கொடுப்பதிலும்தான் தங்கியிருந்தது!

ஸீனத்! பெயருக்கு ஏற்றாற் போல, நல்ல அழகி! ஆனானப்பட்ட அழகு ராணிகளெல்லாம் அவளின் அழகுக்கு முன்னால் பிச்சை வாங்கவேணும்!'

முதிரை மரத்தில் கடைந்தெடுத்து, 'பொலிஷ்' பண்ணின மாதிரி ஓர் அழகு! அவள்தான் மாமியின் மூத்த மகள். தொட்டாற் சுருங்கித் தளிர் மாதிரி நாணிக் கோணிக்கொண்டு, வெண்மாதாளம் பழத்தை பிளந்து வைத்த மாதிரி அவள் சிரிக்கிற சிரிப்பும், தயிர்ப்பானைக்குள் விழுந்து கிடக்கிற நாவற்பழம் மாதிரிக் கண்ணும், கருக்கொண்ட மேகம் மாதிரி நீண்ட கூந்தலும் கடற்சங்கு மாதிரி கழுத்தும் மாம் பழத்தில் குழி பறிக்கிற கன்னங்களும்...அப்பப்பா...! 'பர்தா'வின் அவசியத்தை மிகவுமே வலியுறுத்தும்!!

ஸீனத்து மட்டுமல்ல, மாமியின் வயிற்றில் பிறந்த அத்தனையும் அழகு முத்துக்கள்தான்! பெண் பெத்தால்...மாமியின் பெண் மக்களைப் போலத்தான் பெறவேணும்!'

என்று, அந்த கொளனிக்குள் பலருக்கு கொள்ளை ஆசை!

**ம**ஹ்றூப் மாஸ்ட்டர், ஒங்கி உயர்ந்த ஒரு ராணுவத் தளபதி மாதிரி வாட்டசாட்டமான ஆம்பிள்ளை! ஹிந்திப்பட கதாநாயகன் மாதிரி தோற்றம். லோங்ஸும் ஷோர்ட்டும் அவனுக்குத்தான் பொருத்தம் என்பது போல அவ்வளவு அழகாக இருக்கும்!

அந்த ஊர்ப் பாடசாலையின் முன்னேற்றம், அவனுடைய முன்னேற்றம் மாதிரி. இரவு பகலென்று பாராமல், மாணவர்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டான். ஊரிலும் நல்ல பெயர். எதற்கெடுத்தாலும் "மஹ்றூப் மாஸ்ட்டர்!!" என்று, பெற்றார்கள் உசிரைவிட ஆயத்தமாக இருந்தார்கள். மஹ்றூப் மாஸ்ட்டருக்கு கிடைத்த இந்த நல்ல பெயரும் செல்வாக்கும் சில சோம்பேறி ஆசிரியர்களுக்கு 'தலை இடி'யாக இருந்து, இப்போது 'காய்ச்சலாக' மாறியிருந்தது! ஆனால், அவற்றையெல்லாம் வெளிப்படையாக காட்டிக் கொள்ளக் கூடிய தைரியம்தான் அவர்களுக்கு இருக்கவில்லை!

வகுப்பு நேரங்களில் அதுவும் தமிழ்ப்பாஷை-இலக்கியப் பாடங்களை படிப்பிக்கத் தொடங்கினான் என்றால், மகுடிக்கு ஆடுகின்ற நாகங்களைப் போல மாணவர்கள் அப்படியே கட்டுண்டு போவார்கள்! அதை, இந்த வருஷம் வெளியாகி இருந்த பரீட்சைப் பெறு பேறுகளும் நிரூபித்திருந்தது அதனால், அந்தப் பாடசாலைக்கும் பெயர் எழும்பியது!

அன்று, வெள்ளிக்கிழமை. வாரவிடுமுறையில் தனது, பிறந்த ஊரான வாழைச் சேனைக்குப் போய்வருவதற்கு புறப்பட்டுக் கொண்டு நின்றான் மஹ்றூப். அவன், எதிர் பார்க்கவே இல்லை! எதிரில் வந்து நின்றாள் அந்தச் சிறுமி!

"என்ன ஜெஸீமா...?" அவன் வினவினான்.

"இன்டைக்கி...ராவைக்கி...எங்கட ஊட்டில... ஒங்களுக்கு சாப்பாடாம்...என்டு, உம்மா, ராத்தா எல்லாரும் சொல்லச் சொன்னாங்க...!" என்று, வார்த்தைக்கு வார்த்தை செல்லம் குழைய, சொல்லி முடித்து விட்டு பதிலுக்காக காத்து நின்றது அந்தச் சின்னஞ் சிறுசு!

அவனோ, அதற்கு என்ன பதில் சொல்லி அனுப்புவது என்று தெரியாமல் ஒரு கணம் குழம்பிப் போனான். அந்தக் குழப்பத்தினால், அவனது இதயத்தடாகத்தில் படிந்து கிடந்த நினைவலைகள் மேலெழுந்து புரளத் தொடங்கின!

ஏற்கனவே, சக ஆசிரியர்களில் சிலர், தன்னையும் அந்தப் பிள்ளை ஸீனத்தையும் தொடர்புபடுத்தி, இங்கிதம் தெரியாத பகிடியும் குத்தலுமாக இதயத்தில் எய்த அம்புகளையெல்லாம் இன்னும் அவன் பிடுங்கி முடியவில்லை! 'தங்கள் தங்கள், விருப்பு வெறுப்புக்களையெல்லாம் மற்றவர்களில் ஏற்றி நோக்கி, சுயதிருப்தி கொள்வதில்தான் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம்!'

என்று, தனக்குள் நினைத்துக் கொண்டு மௌனமாக இருக்க தன்னைப் பழக்கிக் கொண்டவன் மஹ்றூப்.

"இத்தகைய, ஒரு பகைப்புலனில், முஹ்மீன்மாமியின் வீட்டுக்கு விருந்துக்கும் போய்வந்தால்...சும்மா அலம்பிய வாய்களுக்கு அவல் கிடைத்து விடாதா...? ஆனாலும் என்னையும் மதித்து – நினைத்து, கூப்பிட்டார்களே...! இதை, நான் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அந்த ஏழைகளின் மனம் என்ன பாடுபடும்...?"

என்றெல்லாம் நினைத்துப் பார்த்தான்.

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவனை ஒரு தர்ம சங்கடமான நிலைமைக்குள் மாட்டி வைத்துவிட்டு நிற்கும், அந்தச் சிறுமியின் முகத்தில் வடிந்த பால் போன்ற புன்னகை, அவனை என்னென்னவோ செய்தது!

“ஸேர்...! அப்ப நான் போகட்டா...?”

“சரி சரி, வாறனென்று போய்ச் சொல்லுங்க”

மருதமுனையை கிழக்கு மேற்காக, குறுக்கறுக்கும் அந்த மக்காமடி கிறவல் வீதி, ஓடிச் சென்று, மணல் ஒழுங்கையாகி வங்காளக் குமரியின் வெண்பட்டு முந்தானையை முத்தமிட்டவாறுதான் முடிகின்றது.

அந்தப் பகுதியில் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு, வெறும் பொட்டை வெளியாகக் கிடந்த அந்தக் கடற்கரை வெம்புமணல் பூமிக்கு இப்போது, ‘கடற்கரைக் கொளனி’ என்று பெயர். கடலாமை ஓடுகளை கவிழ்த்து வைத்த மாதிரி கிடக்கின்ற குடிசைகள்!

அதற்கு, மத்தியில் கொஞ்சம் பெரிய கடலாமை ஓடு! அதுதான் அவர்களின் வீடு!! சுற்றிவர ‘கிளிசரியா’ மரத்தால் வேலி. முற்றத்தில், இன்னும் பாளை போடாத கன்னித்தென்னம் பிள்ளைகள்! அதற்கு முன்னால், கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்ற குடிசைதான், முஹ்மீன்–மீரான் தம்பதிகளுக்கும் அவர்களின் வாரிசுகளுக்கும் அந்த இறைவனால் பார்த்துக் கிடைத்த சீதனம்.

விருந்துக்குப் போயிருந்த மஹ்றூப், திருப்தியும் மகிழ்ச்சியுமாக திரும்பியிருந்தான். ஏழைகளுக்கேற்ற எள்ளுருண்டைதான்! அதில்தான் எவ்வளவு மன நிறைவு!

பச்சரிசிச் சோத்துக்கும், பால் நெத்தலி மீன் சொதிக்கும் பொருத்தமாகத்தானிருந்தது! அதோட, மொறுமொறுவென்ற கீரிமீன் பொரியலும் பொன்னாங்கண்ணிச் சுண்டலும் சேர்ந்திருந்தால் கேட்கவாவேணும்? அதையெல்லாம் விட, கலகலவென்று சிரித்துப் பழகுகிற அவர்களின் சுபாவமும், வெள்ளரிப்பழத்தை பிட்டுப் பிட்டு வைக்கிற மாதிரி, மனசைப் பிட்டுபிட்டு வைக்கிற தன்மையும்...ஏழ்மை வாழ்விலும் இப்படியொரு திருப்தியான வாழ்க்கை நடத்துகின்ற அவர்களின் மன நிலையும்...அவனது நெஞ்சில், பசுமையான நினைவுகளாகப் பதிந்து விட்டன!

அந்த, நினைவுகளை அவன் மீட்டும் போதெல்லாம் அவை, பசிய சோலை ஒன்றினூடாக பெருகி, ஓடி வருகின்ற அருவியாகவே அவனுக்கு காட்சியளித்தன!

**வா**ர விடுமுறைக்குப் பின்னர், பாடசாலை தொடங்கியிருந்தது. ஆனால், வழமைக்கு மாறாக ஒரு சோகம், அது அப்படியே பாடசாலையை விழுங்கிவிடும் போலிருந்தது! ஒரு இழவு வீட்டைத்தான் பாடசாலை நினைவூட்டியது!

கச்சான் காற்றுக்கு அடிபட்டு முறிந்த கொடிகள், தளிர்களைப் போல மாணவர்களின் வதனங்கள் வாடி வதங்கி சோர்ந்து கிடந்தன! ஆனால், ஆசிரியர்களில் சிலர், கூடிக்கூடி, குசுகுசுத்துக் கொண்டு நின்றார்கள்...

ஹெட் மாஸ்டருக்கு ஒரு வேலையுமே ஓடவில்லை! அலுவலக அறைக்குள் அதிர்ந்துபோய் உட்கார்ந்திருந்தார்!

"இன்றைக்கு, மஹ்றூப் மாஸ்டர் லீவாக்கும்...?"

ஆசிரியர்களின் தினவரவுப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த 'ஸீனிய அஸிஸ்ட்டன்' கேட்டார்.

"இன்றைக்கு மட்டுமென்ன? இனி அவன், எந்த நாளும் லீவுதான்! நம்மட ஆக்கள் செய்திருக்கிற

கெட்டித்தனத்துக்கு அவன், லீவு போடாமல் வேற என்ன செய்யிறது? அவனுக்கென்ன? இந்த ஸ்கூள் இல்லாட்டி, வேறொரு ஸ்கூள்! ஆருக்கு நட்டம்? கொஞ்சமாவது யோசித்தானுகளா? ஊர்மானத்தைப் போக்காட்டிற்றானுகளே! றோட்டும் சுவரும் புளுத்துப் போய்க்கிடக்குதே...! எழுதினவனுகள்ள கைமட்டுமில்ல, எழுத தூண்டி விட்டானுகளே அவனுகள்ள கையும் அழுகத்தான் போகிது. அவன் கெட்டிக்கார வாத்தியார்தான்...அதுக்கு, இங்க கொஞ்சப் பேர் எரிச்சல்பட்டு-பொறாமைப்பட்டு என்ன செய்ய? இந்த எரிச்சல் குணம் இருக்கிறவரைக்கும் இவனுகள் உருப்படவே மாட்டானுகள்"

என்று, ஹெட் மாஸ்ட்டர் மூச்சு விடாமல் கொம்பினார்!

"அதெல்லாம் சரிதான்...நெருப்பில்லாம புகைய மாட்டாதே ஸேர்...?"

"நெருப்பில்லாம ... புகையமாட்டாதா ...? உங்களைப் போல கொஞ்சப் பேர்...நெருப்பை, இப்ப மூட்டி இருக் கிறயள்! இனி புகைய மாட்டாது, எரியும்! அப்ப, என்ன செய்வயள்? சும்மா எனக்கிட்ட, தேவையற்ற கதை, கதையாமல், உங்கட வகுப்பைப் போய் பாருங்க மாஸ்ட்டர் ... !! ஒரு பாவமும் அறியாத, அவன்ர மானத்தையும் அந்த ஏழைக் குமர்ர மானத்தையும் போக்காட்டிற்றானுகளே...இனி அந்தக்குமர், எந்த முகத்தோட பள்ளிக்கு வரப்போகிது...? ஒரு கெட்டிக்காரப் பிள்ள.., அநியாயம்...!!"

ஸீனிய அஸிஸ்ட்டன், அந்த இடத்தை விட்டு, மெள்ள நழுவிக் கொண்டிருந்தார்.

**ஹா**ஜி, 'சாவன்னா மூனா' என்றால், ஊரிலுள்ள ஏனைய போடிமார், ஹாஜிமார் தொடக்கம், செய்யக்காரன் கூலிக்காரன் வரைக்கும் தெரியாதவர்கள் இல்லை. 'சாவன்னா மூனா' என்றால், ஊரில் பலருக்கு

ஒருவகைப் பக்தி அல்லது பயம். காகம் பறக்காத இடமிருந்தாலும் இருக்குமாம், ஆனால், அவருக்கு காணி பூமி இல்லாத இடம் இருக்காதாம்...! அதுக்கென்ன...? எச்சிக்கையாலையும் காகம் விரசமாட்டார்! அவருடைய குமர்குட்டிகளைக் கரைசேர்க்க ஆனமான மாப்பிள்ளைமார் கிடைக்காவிட்டாலும் காணிபூமி, காசுபணத்தைக் கரைசேர்க்க கடும் போட்டி!

ஹாஜியார், ஊருக்கும் பெரிய மனிதர். உருவத்திலும் அப்படித்தான். முடாப்பானை மாதிரி வயிறும் ஆளுமாக, நல்ல தடாரிக்கமாக இருப்பார். எந்த நேரம் பார்த்தாலும் வழித்த சிரட்டை மாதிரித்தான் முகம் இருக்கும். பள்ளி வாசல் பக்கம், தலை வைத்துப்படுக்காவிட்டாலும் தலையில் வெள்ளைத் தொப்பிக்கு மட்டும் குறைச்சலில்லை. அதுவும், அது 'மக்கா'த் தொப்பியாம்!

ஆளைப் பார்த்தால், அரை நூற்றாண்டை விழுங்கிய மாதிரித் தெரியாது. அப்படி ஓர் இளமை-தேஜஸ்! அந்த, "சுல்தான்! - இரகசியம்," அவரது தர்மபத்தினிக்கும், மீரான் மாமாவுக்கும் மட்டும்தான் தெரியும் என்பது, அவரின் எண்ணம்.

சாவன்னா மூனா, ஒரு கோட்டைக்கீறி, "இதைத் தாண்டக் கூடாது" என்று, கட்டளை பிறப்பித்தால், அதற்கு உடனடியாக தலைவணங்குகிற முதல் மனிசன் மீரான் மாமாவாகத்தானிருப்பார்! 'சாவன்னா மூனா', என்றால், மாமாவுக்கு ஒரு பக்தி, பரவசம். அதற்கு, மிகவும் நியாயமான காரணமிருந்தது. எல்லாம் அந்த "...சுல்த்தான் இரகசியம்தான்!" சாவன்னா மூனாவுக்கு அவருடைய தர்ம பத்தினி செய்யாத அணிவிடை பணிவிடையெல்லாம் மாமாதான் செய்வார். எல்லாம்அந்த, 'சுல்த்தானுக்'காகத்தான்!

நிர்மலமான வானம். அதில் தென்னம்பாளை வெடித்துச் சிதறிய கோலம்! நிலவுக்கன்னி, பால் மணலில் நெய்க்குடத்தை கவிழ்த்துவிட்டிருந்தாள். அந்த, இரவின் இளமையும் குளுமையும் மீரான் மாமாவின் இதயத்தையும் கவ்விக் கொண்டதோ...என்னவோ...?

ஒரு நாளுமில்லாத பூரிப்பு! ஓட்டமும் நடையுமாக தன் குடிலை நோக்கி வந்துகொண்டிருந்தார்!

சில்லென்று வீசிக்கொண்டிருந்த அந்த கூதற்காற்றிடையில், மிதந்து வந்து கொண்டிருந்த அந்த 'கவி'யின் குரல் இனிமை, முஹ்மீன் மாமிதான் பனி மசப்பில் குந்தியிருந்து கொண்டு பாயிழைத்துக் கொண்டிருக்கிறாள் என்று, கட்டியம் கூறியது.

வாசலுக்கு வந்து சேர்ந்த மாமா, குடிலை ஒருதரம் நோட்டம் விட்டுப் பார்த்துக் கொண்டார். குமர் குட்டிகளின் கவனமெல்லாம் குசினிக்குள்...! குஞ்சுகுரால்களெல்லாம் நல்ல நித்திரை ... மாமி மட்டும் தனிமையில் ... நல்ல சந்தர்ப்பம்தான். 'அந்த சமாச்சாரத்தை' தனக்குள், மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டார். ஒரு கிளுகிளுப்பு. மாமியின் அருகில் மெள்ள, போய் அமர்ந்து கொண்டு விஷயத்தை அவிழ்க்கத் தொடங்கினார்.

"என்ன..., என்னத்துக்கோ, அடிப்போடிறாப் போல கிடக்கு...?" மாமி, கேட்டுவைத்தாள்.

"இப்பதான்டி...அல்லா, நமக்கு முகம் பார்த்திருக்கான்..."

"அப்ப...இவ்வளவு காலமா, அல்லா முகம்பார்க்காம, ஆரு முகம் பார்த்ததாம்...?"

"ஒனக்கிட்டத்தான் ஒன்டும் கதைக்க ஏலாதே..., வசதியான ஒரு இடத்திலிருந்து, வலிய ஒரு சம்பந்தம் வருகுது...அதத்தான் சொல்ல வந்தன்..."

"என்ன நிதானமாத்தான் கதைக்கயளா...? இல்லாட்டி, ஹாஜியார்ர ஊட்டில ஏதும் விஷேசங்களா...?"

"என்னத் தனகாட்டி ஒனக்குப் பத்தியமில்ல. நாம, என்னமாக் கிடந்தாலும், நம்மிட ஸீனத்து நல்ல லக்குக்காரிதான்!"

"சும்மா அலட்டாம, விஷயத்தை சொல்லுங்க"

"சந்தோஷத்தில, ஒரு சுத்து, பெருத்தாலும் பெருப்பாய். நம்மட போடியார்ர மூத்தவனுக்கு நம்மிட ஸீனத்தை கேட்கிறாங்கடி!"

"அடி செருப்பால! அந்த அரைலூசுக்கு பொண் தேடுறாங்களா...? வேலையில்லாட்டிப் போய், வெங்காய கூடைக்கு காத்தடிக்கச் சொல்லுங்க! ஹாஜியார்தான் புத்தியத் திண்டிட்டான்! புள்ளயப் பெத்த நீங்களுமா புத்திய திண்டிட்டியள்?!"

அருங் கோடைக்குள் அடிபட்டு முறிந்து, வாடிப்போன கறிவேப்பந் தளிர் மாதிரி, மாமியின் முகம் வாடி வதங்கிச் சாம்பியது! அவளின் கண்கள் இரண்டும் கட்டுடைத்த குளங்களாயின! அதைப் பார்க்க, மாமாவுக்கும் கஷ்டமாகத்தானிருந்தது!

"அல்லாட விதியிருந்தா, அதை, யாரால தட்ட முடியும்? இல்லாத செல்லாத நமக்கு, இதை விட, வசதியான சம்மந்தம், வரவா போகிது...? ஹாஜியார்ர பெரிய மனசைப் பார்த்தயாடி...? ஐநூறு ரூபா – அஞ்சி தாளை அப்பிடியே சுளையாத் தூக்கித் தந்திருக்கார்! இந்தக் காலத்தில், எவன்டி தருவான்? எப்பிடியோ...நம்மிட கடமையும் முடிய வேணுமடி...! இது, வலிய வாற சீதேவி...!"

"ச்சீ...! இது வலியவாற மூதேவி! இல்லாத செல்லாத ஏழையள் என்டாலும் அதுகளுக்கும் அல்லா மனசை வச்சிப் படைச்சிருக்கானே...இல்லாட்டி, எப்பிடியும் முடிச்சுக்கலாம்! என்ட, உசிர் இருக்கிற வரைக்கும் அதுகள்...விரும்புகிறவனாப் பார்த்து...சாடிக்கு ஏத்த மூடியாத்தான் செய்து வைப்பன்! கிளிக் குஞ்சு மாதிரி, பிள்ளைகளப் பெத்து வச்சிற்று, கடுவன் பூனைக்கு 'கட்டிவைக்க' ஒங்களுக்கு எப்படி மனசு வந்தது...?"

"அடியேய்! பொட்டைக் கோழி கூவி விடியவா போகிது...? செத்தாலும் சாகுவேனே அல்லாமல், இந்தக் கல்யாணத்த மட்டும் நடத்தாமல் விடமாட்டன்! நீ, கத்திறதக் கத்து! எல்லாத்துக்கும் விடியட்டும்!!...அது...,வேற போதாக்குறைக்கி, அவன் மாஸ்ட்டரையும் ஒன்ட குமரையும் இட்டுக்கட்டி றோட்டெல்லாம் நோட்டீஸ் ஒட்டி இருக்கானுகள்...? இதையெல்லாம், தெரிஞ்சிகொண்டுதான் ஹாஜியார் பொண்டி, இவளை, மருமகளாக்க நெனைக்கிறா...எவ்வளவு பெரிய மனசுவேணும்டி...! ஆகவேண்டியதை நான் பார்க்கிறன்...!

மாமா, மெள்ள எழுந்துபோய் குடிசையின் ஒரு மூலையில் சுருட்டிக் கொண்டார்.

**"எ**ன்ன நடக்கிறது...? எது நடக்கப் போகிறது...?" என்று, ஸீனத்து ஊகித்துக்கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. எங்கிருந்தோ வந்து விழுந்த, மாரி வெள்ளத்தினால் கலங்கிப் போன கழிமுகம் போல, ஸீனத்தின் மனமும் கலங்கியது!

"எல்லாம்...அந்த ஹாஜியார்ர காசுபணம் படுத்திற பாடு! என்ர குருவிக் கூட்டுக்கல்லவோ இந்த ஆள், கல்லெறிய வந்திட்டான்...! இவன், நல்லா இருப்பானா...? அட, ஆண்டவனே...! எல்லாத்துக்கும் நீதான் போதுமானவன்... இந்த, மனிசனும் ஒரு சாதிப் பிடிவாதக்காரன். என்னடா, அல்லா செய்வன்...? நீதான் ஒருவழிகாட்ட வேணும்..."

புயலில் அகப்பட்டு, நடுக்கடலில் தத்தளிக்கின்ற ஒரு பாய்மரத்தைப் போல, மாமி, தவித்தாள்! இறுதியாக, அல்லாஹ்விடம் தனது முறையீட்டை விண்ணப்பித்து விட்டு, தானும் ஒரு பக்கத்தில் போய் சுருண்டு கொண்டாள்.

"முஹ்மீன் மாமிர மகள் - ஸீனத்துக்கு, ராவைக்கு எழுதிறதாம்! ஒரு மணிக்கி, எழுதிமுடிய ஒன்றரை மணிக்கி தாலி கட்டிறதாம். மாப்பிள்ள-ஹாஜியார்ர மூத்தவனாம்...!"

அந்தச் செய்தி, ஊர் முழுவதும்'டும்'மென்று இருந்தது!

விரலுக்கேற்ற வீக்கம் என்பார்களே, அது மாதிரி, கல்யாணத்துக்கு பந்தலெல்லாம் போட்டு-வெள்ளை கட்டி, ஓலைக்குருத்தெல்லாம் தூக்கி, சோடிக்கப்பட்டது.

சாதிசனம் என்றிருந்த ஒருசிலர், மட்டும் கடமைக்காக வந்து நிற்பது போலத் தெரிந்தது. அதனால் கல்யாண வீட்டுக்குரிய கலகலப்பைக் காண முடியவில்லை. முஹ்மீன் மாமி, இடிந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

"முகூர்த்தம் நெருங்கிற்று... பொண்ணைக் கூட்டியாங்க, முழுகாட்டவேணும்...!"

பொறுப்புள்ள ஒரு பெண்குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து, மச்சி முறையான ஒருத்தி கல்யாணப் பெண்ணை கூட்டிவரப் போனாள்.

"இஞ்ச..., பொண்ணைக் காணல்லயே...? ஸீனத்து... ஸீனத்து...!"

"என்ன...?! பொண்ணைக் காணல்லயா...? அங்கால அடுத்த ஊட்டில பாருங்க...போயிருப்பா"

"ம்...ஹும்...! ஸீனத்து இல்ல...!"

புளியங் கொட்டை சிதறினாப் போல, பத்திப் பதறிக்கொண்டு, ஆளுக்கொரு திக்கில் தேடி ஓடினார்கள்.

நடு நிசியையும் தாண்டிவிட்ட அந்த இரவிலும், "பொண்ணைக் காணல்லயாம்...!?" என்ற, செய்தி, ஊரையே ஒருதரம் உலுப்பி விட்டது!

தேடினதும் ஓடினதும் தான் மிச்சம். பலரும் பலவித மாகப் பேசிக் கொண்டார்கள்.

பித்துப் பிடிச்சவளைப் போல, பேச்சுமுச்சு எதுவும் இல்லாமல், எங்கோ, எதையோ வெறித்து பார்த்த மாதிரி, இருந்த இடத்தில்யே அசையாமல் இருந்தாள், முஹ்மீன் மாமி.

"கொஞ்ச நஞ்சமா இருந்த, மிச்ச மானத்தையும் போக்காட்டிற்றாளுகளே...! மனுஷனுகள்ள முகத்தில இனி நான் எப்படி முளிப்பன்...? எல்லாம்...இவள் வளர்த்த வளர்ப்பு!! இந்த, நல்லநாள் பெருநாளாப் பார்த்து என்ர மானத்த வாங்கிற்றாளே...! இப்ப, என்னடா அல்லா செய்வேன்...?!"

என்று, தனது கை சேதத்தையெல்லாம் அழுது கொட்டி விட்டு, இடுப்புக்களன்று போய்க்கிடந்தார் மீரான் மாமா.

**கி**ழக்கு வானம் சிவந்தது. ஆழக்கடலில் தங்கத் தட்டொன்று மெதுவாக, தலையை நீட்டியது. அலைகள் ஆர்ப்பரித்தன!

பொலுபொலுவென்று, விடிந்ததோ இல்லையோ ஹாஜியார் வந்து வாசலில் நின்றார்! அவரின் முகத்தில் தெறித்த அக்கினித் திவலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு அவரின் வார்த்தைகள் தெறித்தன.

"மகளுக்கு கல்யாணம் பண்ணி வச்சிப் போட்டு படுக்கிறயா...? மானம் ரோசம் உள்ளவனென்டால், இந்நேரம் செத்திருக்கவேணும்டா...! இனி, ஒன்ட, பொண்ணக் கொண்டுபோய் எந்தச் சக்கிலியனுக்காச்சும் கட்டு! எப்பிடிப் பெத்தாலும்...வளர்க்காப் போல வளர்க்க வேணும்டா! மறு பேச்சுப் பேசப்படாது! காசு ஐநூறு ரூபாவையும் எண்ணி வச்சிப் போட்டுத்தான் கதைக்க வேணும்"

மீரான் மாமாவுடைய அறுபது வயது அனுபவத்தில் இப்படி ஒரு ஏச்சுப் பேச்சைக் கேட்டதே இல்லை! அதுவும்...சாவன்னா மூனா ஹாஜியார்தான், தன்னை இப்படிப்

பேசினாரா...? என்ற, சந்தேகத்திலுருந்து விடுபட அவரால் முடியவேயில்லை! மாமாவின் நாக்கு வறண்டு, அண்ணத்தோடு அண்ணமாக ஒட்டிக் கொண்டது! பேச முடியவில்லை. அழ முடிந்தது! அழுதார், தலையைக் குனிந்து, அழுது கொண்டே இருந்தார்.

"என்ட, நொந்த புண்ணில நெருப்பள்ளிக் கொட்டிறயளே ஹாஜியார்...?"

என்று, கேட்பது போலிருந்தது அவர் பார்த்த பார்வை!

எல்லாவற்றுக்கும் மேலாக, அந்த ஐநூறு ரூபாதான், பூதாகாரமாக உருவெடுத்து அவரைப் பயமுறுத்தியது! போடியாரின் உருவத்தில் அது, தன்னை பலி எடுக்க வந்து நிற்பதாகவே உணர்ந்தார்.

நடந்ததையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த மாமி, விசுக்கென்று எழுந்து குடிலுக்குள் நுழைந்தாள்! ஐநூறு ரூபாத்தாள்களைக் கொண்டு வந்து ஹாஜியாரின் முகத்தில் வீசினாள்!! உலக அதிசயங்களைப் பற்றியெல்லாம் மீரான் மாமாவுக்குத் தெரியாது. தனது வீட்டுக்காரிதான் அவருக்கு, அதிசயத்திலும் அதிசயமாகத் தெரிந்தாள்.


மெல்ல, தலையை ஒருதரம் நிமிர்த்தி, அளவிட முடியாத ஆதங்கத்தோடு தன், பாதியைப் பார்த்தார்! அந்தப் பார்வையில் ஒரு புது உலகத்தையே கண்டார்.

"வாழைச்சேனைக்கு போய்வரப் போறன்! சம்மதமென்டால், நீங்களும் எழும்புங்க!...எல்லாருமா போய்வருவம்..."

இருண்ட வானில் ஒருமின்னல், அவரின் இதய நெடுவானத்திலும் பளிச்சிட்டது

**தினகரன்** – 1967

# சந்தனமரம்



அந்த முற்றத்தில், செவ்வலரி மரங்கள் செழு செழுவென்று வளர்ந்து நின்றன! ஆனால், அவைகள் பூத்துச் சொரிந்து, நிழல் தந்து கொண்டே கோடை வெய்யிலின் கொடுமையைத் தாங்க முடியாமல் வாடி வதங்கின.

நான் ஓடிவந்த பைசிக்கிள் வண்டியை அந்த நிழலில் நிறுத்தி வைத்துவிட்டு, கரைவாகு வடக்கு கிராம சபை அலுவலகத்தின் 'செயாமனின்' அறைக்குள் நுழைந்தேன்.

மேசை, கதிரைகளெல்லாம் அனாதைகளைப் போல வெறிச்சோடிக்கிடந்தன! அடுத்த அறைக்குள், பள்ளிவாசல், 'சீவ் டிறஸ்ட்டி'மார்களோடு, அலுவலக உத்தியோகஸ்தர்கள் எதையோ இரகசியமாக கதைத்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரிந்தது. அதே வேளை, அவர்களின் முகத்தில் ஏதோ ஒரு சோகம் இழையோடுவதையும் என்னால் உணர முடிந்தது. அவர்களின் மத்தியில், வழக்கமாகவே கம்பீரமாக, கலகலப்போடு ஒலிக்கும் எனது தாய் மாமனின் குரல். அடங்கி, தளர்ந்து கேட்டது...?

அப்போதுதான், எனது மனம்...அந்த, நினைவுகளை உணாவத் தொடங்கியது!

அவசர அவசரமாக அங்கு வந்த 'செயாமன்' அவரின் கதிரையில் தொப்பென்று இருந்தார். கறுத்த 'கூளிங் கிளாஸும்' வெள்ளை கோட்டும் சூட்டுமாக எப்போதுமே கலகலப்பாக இருக்கும் அவரா இவர்...? என்னால் நம்பவே முடியவில்லை.

கண்ணாடியைக் கழற்றி, மேசையில் வைத்துவிட்டு, முழங்கைகளிரண்டையும் ஊன்றிக்கொண்டு கைகளிரண்டையும் நெற்றியில் வைத்திருந்த அந்தக் காட்சி எனது இதயத்தைப் பிழிந்து என்னென்னவோ செய்தது.

"ஸேர்..."

"ஆ...மாஸ்ட்டரா...இருங்க"

"என்ன ஸேர்...? கண்ணெல்லாம் கலங்கிப் போய்...ஒரு மாதிரியா இருக்கிறீங்க..."

"உங்கட சாச்சா பார்த்திருக்கிற வேலையப் பார்த்தீங்களா...?"

"இல்லையே...! என்ன விஷயம் ஸேர்...?"

"உண்மையாத்தான் சொல்லுறயளா? உங்களுக்குத் தெரியாதா...?"

"தெரியாது ஸேர்...!"

"அவர் உங்கட சாச்சா - அக்கிராசனர், வைஸ் செயாமன் போஸ்ட்டையும் 'மெம்பர்' பதவியையும் றிசைன் பண்ணியிருக்கிறார். என்ன வேலையை பார்த்திருக்கிறார்...? எனது, வலது கை முறிஞ்சால் கூட கவலைப்பட மாட்டன்! இவர், இதைச் செய்திருக்கிறாரே...? இதுக்கு, ஊராக்கள் சம்பதிப்பாங்களா...? எனக்கென்றால்...ஒன்டுமே விளங்கயில்ல...!"

என்று, கூறிக்கொண்டே, உள்ளூராட்சி சபைகளுக்கான சட்டதிட்டங்கள் அடங்கிய புத்தகத்தின் உப விதிகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

நானும், அங்கு கிடந்த கதிரை ஒன்றில் சாய்ந்து கொண்டு, நேற்று இரவு, சாச்சி என்னைத் தேடி வீட்டுக்கு வந்திருந்ததையும்...கதைத்ததையும்...ஒருதரம் நினைத்துப் பார்க்கத் தொடங்கினேன்.

"என்ன...சாச்சி...இந்த நேரம் வாறயள்?"

"ஒன்டுமில்ல...மகன்"

"அப்பிடித்தான் சொல்லுவீங்க...என்ன விஷேசம்...சாச்சா எங்க...? இருக்காங்களா...?"

"ஒங்க சாச்சாக்கு...இருக்க, நேரமிருக்கா...? ஆரோ...காணிபூமி வாங்கிறதுக்கு, அதுக்கு விலைதலையத் தீர்மானிக்க...மத்தியானம் வந்து கூட்டிக்குப் போனாங்க...இப்பதான் வந்து, 'இஷா'த் தொழுதுபோட்டு சாப்பிட்டுக் கை, காய இல்ல...அவர், ஆராய்ச்சியார் மனிசன் வந்து...'இறமுளார்ர மகளுக்கு கல்யாணம் பேசவாம்' என்டு, கூட்டிக் கொண்டு போறார்! இனி, விடிஞ்சாலும் விடியும். இல்லாட்டி, அங்காலயே ஆரும் போய் ஏதும் அலுவலென்டு கூட்டிக்கொண்டு போனாலும் போவாங்க! அதை...அந்த, அல்லாதான் அறியவேணும்!"

"நல்ல மனுஷன் – பெரிய மனுஷன் என்டு, இருக்கிறவங்கதானே சாச்சி...ஊருலகத்தில நடக்கிற நன்மை தீமையள, பார்த்துக் கேட்டு, சீர் செய்து வைக்கவேணும்"

"அதையெல்லாம், நான் வேணாமென்டு சொல்லயில்லயே மகன்...! ரா நாலு சாமத்துக்கும் பகல் நாலு சாமத்துக்கும், 'ஊர் மத்திசம்' என்டு, கூட்டிக்கொண்டு திரிஞ்சி அவர்ர, உசிரை வாங்கிறாங்களே...நன்றியாவது இருக்கிதா...? கண்டு ஒன்று, காணாம ஒன்று கதைக்காங்களே...!"

"காய்ச்சமரமென்டால்...கல்லெறி சில்லெறி விழாம காப்பாத்திறது கஷ்டம் தானே சாச்சி...! அதுவுமல்லாம, மனிசரிட்ட நன்றியை எதிர்பார்க்கிறது...கஷ்டந்தான் சாச்சி...! ஆனா, அதுக்குக் கூலி அல்லா தருவான்!"

"அது சரிதான் மகன்...அதுக்காக, தான், சாக மருந்து குடிக்கலாமா...?"

"சரி சரி, இப்ப என்ன செய்ய வேணும் என்று, சொல்ல வாறயள்...?"

"இந்த...அங்கத்தவர் பதவி, நமக்கு வேணாம் என்டு சொல்லுறன்...! ஊட்டில இருந்துகொண்டு, நம்மட தொழிலையும் செய்து...ஏழை எளியதுகள் கூப்பிட்டு வந்தா, என்ன ஏதென்று கேட்டு, உதவி செய்து கொண்டு இருந்தால் போதும்...! என்டுதான் சொல்லவந்தன்.

முந்தியெல்லாம்...சாச்சா அக்கிராசனர் வேலை பார்க்கக்க, காணி பூமி என்டும், காசு பணமென்டும் தொழில் தொறை என்டும்...இருந்திது...! இராப் பகலா செலவு செய்துகொண்டு, இந்த ஊராருக்குத்தான் உசிரையும் உடம்பையும் 'குர்பான்' கொடுத்தார்! அப்பிடியெல்லாம் செலவு செய்ய-திரிய, நமக்கிட்ட இப்ப, என்ன இரிக்கி...?

என்டாலும்...என்னால முடிஞ்சமட்டிலையும் விழுகிற பள்ளத்த மூடிக்கொண்டுதான் வந்தன்! ஆனா, இப்ப என்னால என்டால் ஏலாது...! சாண் தைத்தால் முழம் கிழியிது...!! என்னவோ...இந்த 'மெம்பர்' பதவியால அள்ளிக் கொட்டிற மாதிரி, நாக்கில நரம்பில்லாம கதைக்காங்களே... அதுக்காகத்தான் மகன், சொல்லிறன் நமக்கிந்த 'மெம்பர்' பதவி வேணாம்! நீங்களும்...சாச்சாக்கிட்ட சொல்லவேணும்! இதைச் சொல்லிற்றுப் போகத்தான் நான் வந்தது...!"

"நான் சொல்ல மாட்டன்! ஏனென்டால், சொல்லி, பிரயோசனமில்ல! அது, அவர்ர ரத்தத்தில ஊறிப்

போச்சி! அப்பிடித்தான்...சாச்சா ராஜினாமாச் செய்தாலும்..."நன்மைதீமை–நீதிநியாயம் சொல்லுங்க" என்டு, கூப்பிட்டு வந்தால், போகாம இருப்பாரா? நீங்கதான் போகவேணாமென்டு சொல்லுவீங்களா...? வீட்டில, மையித்து கிடந்தாலும் அதைப் போட்டிட்டு, அவர் போகத்தான் செய்வார்! அவர் போகாம வராம அவர் ஒரு நியாயம் சொல்லாம அவங்களுக்கு திருப்தியும் வராது!"

"அதென்டால் மெய்தான்.! நம்மிட சாந்தும்மாட தலைப் பிள்ளைப் பெறுவுக்கு...சாச்சா ஊட்டில இருந்ததா...? துடிக்கப்பதைக்க...அவள் மருத்துவிச்சி பார்த்த வேல...நஞ்சுக்கொடி விழாம...ஒரு உசிரைப் பறிகொடித்தமே...! நீயும் அன்டைக்கி, இல்லாம இருந்திருந்தா...புள்ளய மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கி கொண்டுபோயிருக்கவும் ஏலாது...அங்க ஏலாம, 'மையித்த' உடன கொண்டு வந்திருக்கவும் ஏலாது...! தம்பி வாத்தியார்...! நன்மை தீமைக்கென்டு ஊரார் கூப்பிட்டுவாற நேரமெல்லாம் அவர் போகட்டும், வரட்டும்! ஆனா, நமக்கிந்த 'மெம்பர்' வேலமட்டும் வேணாம்!"

"எனக்கென்டால்...அதை, வேணாமென்று சொல்லிறது விருப்பமாத் தெரியல்ல சாச்சி...! அதுவுமல்லாம, ஊர்ச்சனங்கள், சாச்சாவை விடுமென்றும்...நான் நினைக்கயில்ல...! இதுக்கெல்லாம் முந்தி, சாச்சா சம்மதிக்க வேணுமே...? சாச்சி...! இந்த, உலகத்தில எத்தினயோ ஆயிரம் செடிகொடிகளையும், மரம் மட்டைகளையும் அல்லா படைச்சி வச்சிருக்கான்! அத்தனை மரத்தையும், சந்தன மரமாகவும் கறிவேப்பில மரமாகவும் படைச்சி வச்சிருக்கானா...? அந்த மரங்கள், தங்களைத் தாங்களே, அழிச்சிக் கொள்ளாம அடுத்தவங்களுக்கு மணம் கிடைக்குதா...சாச்சி? இதுக்கு பதில் சொல்லுங்க!"

"அதையெல்லாம்...இல்லை என்டு, நான் சொல்ல இல்லையே மகன்...! ஆனா...அந்த சந்தனமரம் நாளா வட்டத்தில பட்டுப் போகப் பார்க்கிது என்டுதான் சொல்லுறன்!

நிலத்தில இருந்த தண்ணியும் பசளையும் முடிஞ்ச பிறகும் என்னால முடிஞ்ச அளவில அந்த, மரத்திற்கு தண்ணியும் ஊத்தி பசளையும் போட்டுத்தான் வாறன்! என்னாலயென்டால் இனி ஏலாது! எல்லாரும் வந்து சந்தனக் கட்டைகளை தறிச்சி ஏத்திக் கொண்டு போக வாறாங்களே அல்லாம, அதுக்கு தண்ணி ஊத்தவும் பசளை போடவும் அவங்களுக்கு மனமுமில்ல, நேரமுமில்ல...!"

சாச்சியின் கண்கள் கலங்கிவிட்டன! நிமிர்ந்து பார்ப்பதற்குக்கூட எனக்கு, திராணி இருக்கவில்லை. எனது நெஞ்சும் வாயும் அடைத்துக் கொண்டது.

"நான் வாறன்...மகன்"

"எல்லாத்துக்கும் அல்லா இருக்கான் போய் வாங்க"

ஈயமாக உருகிய எனது இதயத்தைப் பொத்திப்பிடித்துக் கொண்டு, சாச்சியை வழி அனுப்பி வைத்தேன். ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளாக யார் யாருக்காகவோ எல்லாம் தன்னையே அழித்துக் கொண்டு ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது ஒரு தீபம்! அந்தத் தீபத்தின் சிமிழ்களுக்கு எண்ணெய் ஊற்றுவதற்குக் கூட வழியில்லாமல் திண்டாடிய போதும்கூட, சாச்சியின் அந்தத் தாயுள்ளம் தாங்கிக் கொண்டது. அதே உள்ளம்தான் இன்று, நெஞ்சம் புண்ணாகி நொந்து பொத்து வடிகின்றது...!

ஓங்கி உயர்ந்த திடகாத்திரமான ஆகிருதி! அரைக்கை, அரோ ஷேட்டை வெளியிலேவிட்டு வெள்ளைச்சாறன் உடுத்திருப்பார். தலையிலே வெள்ளைத் தொப்பியும் தோளில் சால்வையும் அணிந்திருப்பார். கால்களில் மிதியடி. கையிலொரு குடை. கம்பீரமாக, அவர் நிமிர்ந்து நடந்து வருகின்ற அழகைப்பார்த்தால், சாச்சாவின் உருவில், நேர்மையே உருவெடுத்து நடந்துவருவது போலிருக்கும். அவருடைய தோற்றப் பொலிவும், முகத்தில் பிரகாசிக்கின்ற சத்தியத்தின்

ஒளியும் நல்லவர்கள், தொடக்கம் நட்டாமுட்டிகள் வரைக்கும் ஈர்த்துவிடும்!

சாச்சியும் சாச்சாவுக்கு ஏற்ற சோடிதான்! சாச்சியும் நல்ல வாக்கு வடிவான ஆள். பிள்ளை குட்டிகளைப் பெற்று, பேரன் பேத்தி கண்ட பிறகும் சாச்சி ஒரு அழகுதான்! அவவின் தேகம்தான் கொஞ்சம் இப்போது...இளைச்சிப் போச்சு. தோலும் சதையும்தான் அழகா! சாச்சியில் சாச்சாவுக்கு உசிர்!

சாச்சா மட்டும் உடையவே இல்லை! அது, அவரின் உடம்பு வாகு. நீதி, நியாயத்திற்கு கட்டுப்படாதவர்களுக்கு மத்தியில், அதை நிலைநாட்ட, 'கைஎறியும்' சண்டித்தனமும் இன்னும் குறையவில்லை. ஒன்று மட்டும் நிச்சயம், ஆயிரம் 'கவலைகக்கிஷம்' இருக்கும்! சாச்சியைத் தவிர, ஆருக்கும் தெரியவராது. ஆனால் சாச்சா, கவலையோடு இருந்ததை நான் கண்டதே இல்லை. ஒரு புதினமான மனுஷன்!...

"மாஸ்ட்டர்...! என்ன, கடுமையாக யோசிக்கிறயள்..."

நான், மீட்டிக் கொண்டிருந்த நினைவு வீணை அறுந்து விழுந்தது!

"ஒன்றுமில்ல ..." நான், சமாளித்துக் கொண்டேன்.

உள்ளூராட்சி உப விதிகள் அடங்கிய அந்தப் புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டி வைத்துக் கொண்டு, "இங்க பாருங்க...மாஸ்ட்டர்...!"

அந்த, உப விதிகளை வாசித்துக் காட்டுகிறார்.

"...அங்கத்தவர் ஒருவரின் இராஜினாமா, அந்த கிராம சபையின் தலைவருக்கூடாக, தேர்தல் அதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும்."

"...அப்பாடா! எனக்கு இப்பதான் நிம்மதி. உங்க, சாச்சா அனுப்பியிருக்கிற ராஜினாமாக் கடிதம் செல்லுபடியாகாது ... அது சரி.., உங்க, சாச்சாவுக்கு என்ன நடந்தது...? நீங்களெல்லாம் சொல்ல இல்லையா...?"

நான் தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக இருந்தேன்.

"என்ன பேசாம இருக்கிறீங்க...?"

"...அதையெல்லாம் ஆறுதலா சொல்லுறன்"

எனது மனக்கண்ணின் முன், அன்று இரவு, கலங்கிய கண்களுடனும், களை இழந்த முகத்துடனும் வந்து பலாச்சுளைகளை பிடுங்கிப்பிடுங்கி வைத்த மாதிரி, பிரச்சினைகளை எனது, மனத் தாம்பாளத்தில் அடுக்கிவைத்த சாச்சியை...நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

**நா**ன், மெள்ள எழுந்து, முற்றத்தில் நின்ற, அந்த அலரிமரத்தின் நிழலுக்கு வந்தேன். அங்கு வீசிய காற்று உடம்புக்கு மட்டுமல்ல எனது உள்ளத்துக்கும் ஆறுதலாக இருந்தது! அங்கு, தூரத்தில் நின்ற வேப்ப மரம் ஒன்றிலிருந்து, சோகம் ததும்பி வழிய ஒரு பெட்டைக் குயில் கூவிக் கொண்டிருந்தது! அது, எனக்கு,... சாச்சியை...நினைவூட்டியது! கிளைகள் தறிக்கப்பட்ட 'அந்த சந்தன மரத்திலிருந்து.' அந்தக்குயில், சோகமான இசை எழுப்புவது போல எனக்குப்பட்டது!!

உடுத்த சாறமும் தோழில் போட்ட துண்டுமாக ஒருவர், இளைக்க இளைக்க ஒட்டமும் நடையுமாக வந்து, எனக்குப் பக்கத்தில் நின்றார். அவருக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. தோளில் கிடந்த துண்டை எடுத்து, முகத்தைத் துடைத்துக் கொண்டார். அவருடைய எளிமையான முகத்தில், ஏமாற்றத்தின் அடையாளங்கள் இழையோடின!

"தம்பி..., உங்க, சாச்சா...எங்க மனே...? இருக்காங்களா...?"

"ஓம் ... நின்டுகொள்ளுங்க...வாறன்..."

கந்தோருக்குப் பின்னால் நிற்கும் தென்னைமர நிழலில் கிராமத்தை சுத்திகரிக்கும் அந்த தோட்டிகளோடு எதையோ கதைத்துக் கொண்டு நின்றார், சாச்சா.

அவரிடம் போய், உங்களைத் தேடி, ஆட்கள் வந்திருப்பதாக கூறினேன். அதைத் தொடர்ந்து சாச்சா, அந்த, அலரி மர நிழலுக்கு வந்து சேர்ந்தார்.

"காக்கா...! ஒங்களத்தான் கூட்டிக்குப் போக வந்தன்...!" என்று, கூறி விட்டு, பெரியப்பாவுக்கு மரியாதை செலுத்துவது போல, ஒரு ஓரமாகப் போய் கையை கட்டிக் கொண்டு சின்றார் அந்த மனிதர்.

"என்ன...இப்றா லெவ்வை...? இந்த அதியா குதியா நேரம், என்ன, அவ்வளவு அவிசரமா வந்து நிற்கிறாய்...?"

"என்ட வளவுக்கு, முன்வளவை அந்த, அப்துல் றகீம் கிளாக்கர் வாங்கினதானே...! அதை..., இப்ப, அப்பிடியே அடச்சிப் போட்டார்! போற வாறதுக்கு...என்ட பிள்ளை குட்டியளுக்கு ஒழுங்கயில்ல...! ஒரு முணுமுள அகலத்திலயாவது ஒழுங்க விடச் சொல்லி அவர்ர கால்லையும் விழுந்து பார்த்திற்றன்...ஒழுங்க விடுறதென்டா...விடுகிற பூமிக்கு காசு தரட்டாம்...எனக்கிட்ட காசு ஏது காக்கா...? இவ்வளவுக்கும் உறுதியில, ஒழுங்கை பேசிது! நீங்க, அந்த இடத்துக்கு வந்தால்தான் காக்கா, அந்த ஆள் ஒழுங்க விடுவான் ... அந்த, ஆளைப்பத்தி உங்களுக்கு தெரியும் தானே...!"

அவரின், அந்த முறைப்பாடு, அங்கு நின்ற மற்றவர்களின் காதுகளிலும் விழுந்து தைத்துக் கொண்டது. அவர்கள் ஒருரை ஒருவர் பார்த்துக்கொண்டு எல்லாருமாக சாச்சாவின் முகத்தைப் பார்த்தார்கள்.

"ஆராய்ச்சியார்...! எங்க, நிற்கிறயளா...? இவன், இப்றா லெவ்வை கூப்பிடுறான்...என்ன ஏதென்று பார்த்திற்று



LIBRARY
Km / Shams Central College
Maruthamunai

வருவம் வாருங்க...!"

சாச்சாவும் அவர்ர கூட்டாளி, ஆராய்ச்சியார் அப்பச்சியும் அந்த, பங்குனி மாத பகல் வெயிலிலும் கம்பீரமாக நடந்து போகின்ற அழகைப் பார்த்துக்கொண்டு எல்லாரும் நின்றார்கள்.

கந்தோர், வாசற்படியில் வந்து நின்ற 'செயாமனு'ம் மூக்கில் விரலை வைத்து, பார்த்துக் கொண்டு நின்றார்.

செவ்வலரி மரநிழலின் கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எனது பைசிக்கிள் வண்டியை எடுத்துக்கொண்டு நானும் புறப்பட்டேன்.

"மாஸ்ட்டர்...நில்லுங்க...!! நானும் வாறன்...!" 'செயாமனின்' குரல் கேட்டது!

திரும்பிப்பார்த்தேன். பின்னால், புறங்கைகளைக் கட்டியபடி அவர், வந்துகொண்டிருந்தார்.

பைசிக்கிள் வண்டியின் முன் 'டயரை' ஒருதரம் நசித்துப் பார்த்துக் கொண்டேன்.

அங்கு, தூரத்தில் நிற்கின்ற அந்த வேப்ப மரத்திலிருந்து, துயரம் ததும்பி வழியும்படியாக ஒரு பெட்டைக் குயில் கூவிக்கொண்டே இருந்தது!

1967 - தினகரன்



LIBRARY
Km / Shams Central College
Maruthamunai

# நெருப்புத் துளி!



இந்த உலகத்தில் இருக்கிற எல்லாரையும் எல்லாருக்கும் பிடிக்குதா? எனக்கென்னவோ ஹாஜியார் அப்பச்சியை பிடிக்கவேபிடிக்காது! ஆட்டுக்குட்டிக்கு ஓநாயை பிடிக்குமா?

அப்பச்சியென்றால், அப்படி இப்படி அப்பச்சியல்ல, தாய்க்கு தாய்மாமன்–எனக்கு அப்பச்சி! என்னதான் என்றாலும் அப்பச்சியைப் பற்றி நொந்து, ஒரு கதை கதைக்க உம்மா விடமாட்டாங்க!

"மல்லாந்து படுத்துக் கொண்டு துப்பினால்... முகத்தில் தானே விழும்...! ஆடுமேய்கிறது ஆட்டுக்கு, குட்டி மேய்கிறது குட்டிக்கு! அவர், கொடுக்காட்டியும் கொள்ளாட்டியும் வராட்டியும் போகாட்டியும்...அவர் நல்லா இருக்கட்டும்...! நீங்க, ஒன்றும் பேசாதீங்க மகன்...!"

என்றுதான், உம்மா எப்பவும் சொல்லுவாங்க.

"அப்ப..., ஆரென்டாலும் ஆருக்கும் என்ன அநியாயம் செய்தாலும் பார்த்துக்கொண்டு, நிற்கவேணுமா உம்மா...?"

என்று, நான் திருப்பிக்கேட்பேன்.

அதுக்கு, உம்மா பதில் சொல்ல மாட்டாங்க! அழுவாங்க!

ஊரிலிருக்கிற, ஒருமாதிரியான பெரிய–கொழுத்த ஆட்களுக்குத்தான், அப்பச்சியோடு நல்ல கொண்டாட்டம். ஏழை எளிய சனங்களை...அப்பச்சிக்கு அறவே பிடிக்காது! அதிலையும் ..., குடும்பம் - தாய்பிள்ளைகள் என்றால் ... அவருக்கு தின்னாமீனும் இறைச்சியும்தான்!

ஆனால், ஆரெண்டாலும் சரிதான் அப்பச்சியைப் பற்றி 'அப்படி இப்படி' என்டு, அவருக்கு முன்னால ஆரும், மூச்சுவிட மாட்டாங்க பயப்பிடுவாங்க.

நான், இதுக்கு நேர் மாறு. எனக்கு மனதில் ஏதாவது பட்டால் பட்டென்று முகத்தில் சொல்லிருவன். அது அப்பச்சிக்கு பிடிக்கவே பிடிக்காது. இதால எனக்கு, ஏச்சுப் பேச்சுக்கள்தான் அதிகம்! ஆனாலும் ...என்ன, செய்ய...? நான் அப்படித்தான்! அதுவுமல்லாமல்...உண்மையைச் சொல்லிறதுக்கு ஏன் பயப்பிடவேணும்? ஆர்ரயும் வீட்டு சோத்தைக் கறியை தின்டால் பயப்பிடத்தான் வேணும். எனக்கு, தின்னச் சோறுகறியும் உடுக்க சட்டை, கழிசானும் படிக்க, புத்தகம் பென்சிலும்...வாங்கித்தாறது உம்மாவும் வாப்பாவும்தானே!

எங்கட, ஐந்தாம் வகுப்பில் நான்தான் முதலாம் ஆள். இந்த வருஷம் 'ஸ்கொலஷிப்' சோதினையும் எடுத்திருக்கிறன். கட்டாயம் 'பாஸ்' பண்ணுவன். "நீ, கட்டாயம் 'பாஸ்' பண்ணுவாய்" என்று, ஸேர் மாரும் சொல்லி யிருக்காங்க...இதை, நான், ஏன் சொல்லிறே னென்றால்...நான் பள்ளிக்குப் போறது-கெட்டித்தனமா இருக்கிறது...இதெல்லாம் அப்பச்சிக்கு கண்ணுக்குள் விழுந்த கந்தல் மாதிரி! அதுக்காகத்தான்...!

வருஷா வருஷம், நோன்பு வந்தால், பிறை இருபத்தேழன்றைக்கு அப்பச்சிபொண்டி, எங்கட வீட்டுக்கும் சாச்சி, பெரியம்மா மார்ர வீட்டுக்கும் வந்து, அரிசி ஒரு

கொத்தும் காசு ஒரு ரூபாவும் கொடுத்திற்றுப் போவா. அதுதான், அவங்க, குடும்பங்களுக்கு கொடுக்கிற சதக்கா ஸக்காத்து!*

குடும்பத்தில் நடக்கிற, குடும்பத்திலுள்ள ஏழை எளியதுகளின் வீடுகளில் நடக்கிற நன்மை தீமை எதுக்குமே அப்பச்சி தெறிச்சியும் விழமாட்டார். அவர்ர, தகுதிக்கும் பெருமைக்கும் ஏழை எளியதுகளின் உறவு தயவுகள் சரிப்பட்டு வராது. அதுவுமல்லாமல்...வந்தால் போனால்...அதிலுள்ள 'நஷ்டம்...,' 'கஷ்டம்...' அவ ருக்குத்தான் தெரியும்!

அவர் ஹாஜியார், பள்ளிவாசல் டிரஸ்ட்டி, குடிவழி மரைக்கார், எல்லாத்துக்கும் மேலாக, அப்பச்சி நல்ல காசிக்காரன்! ஆனால், மண்ணில் இருந்து தைலம் வடிக்கிறவன் அப்பச்சியிடம் பிச்சை வாங்கவேணும்!

அன்றைக்கு, 'போயா' நாள்! லீவு நாளையில் பிள்ளைகளோடு சேர்ந்து குண்டு விளையாடிற தென்டால்...எனக்குப் பசியே வராது. ஐந்து சதத்துக்கு குண்டு வாங்கினால்...விளையாடி வென்று, ஐம்பது சதத்துக்கு, சில நேரம் ஒரு ரூபாவுக்கும் குண்டு விற்பேன்! அந்தக் காசெல்லாம் என்ட, சேமிப்புப் புத்தகத்தில கிடக்கிது.

என்னோட, விளையாடி தோற்றுப் போன பிள்ளைகளைப் பார்த்தால், எனக்கு இரக்கமாயிருக்கும். கூட்டாளிமார் கடனுக்கு குண்டு கேட்டால் கொடுப்பன். அவங்க, தோற்றாலும் வெண்டாலும் கடன் கொடுத்த குண்டுகளை கேட்க மாட்டன்! தந்தால் கண்டுக்குவன்.

அப்பச்சிக்கும் ஒரு மகன்! என்னோட, குண்டு விளையாட வருவான். "எனக்கு உன்னோட ஏலாது. நீ, சோலி புரட்டுவாய்!" என்று, அவனுக்கு சொல்லுவன். "உனக்கு ஏலுமென்டால் என்னோட விளையாட வாடா பார்ப்பம்!" என்று, என்னை, கிட்டுவான்.

எனக்கென்ன ரோசமில்லையா...? விளையாடினால், அவன்பாடு நூறு மூணுசதந்தான்! மூக்கால அழுது கொண்டு போவான்...அதுக்குப் பொறகு அப்பச்சி வருவார்!

---

சதக்கா – ஸக்காத்து* -தானதர்மமும் கட்டாய வரியும்.

"சோலி புரட்டி, குண்டுகளையெல்லாம் வெண்டு போட்டாயாமே...? அவன்ர குண்டுகளை குடுக்கிறயா இல்லையா...?" என்று கேட்பார்.

"ஏலாதவன் தான் சோலி புரட்டுவான்...வாப்பாவை யெல்லாம் போய் கூட்டிக்கி வருவான்...இப்ப, அவன்ர குண்டுகளைக் கொடுக்கிறன். ஆனால் ரோசம் இருக்குமெண்டால் இனி, அவன் என்னோட குண்டு விளை யாட வரப்படாது..."

"அப்ப, நீதான், பெரிய குண்டு விளையாட்டுக் காரனோ...!"

"ஓம்...! அதிலென்ன சந்தேகம்? இந்தா பாருங்க...நான் வெண்ட குண்டுகளையும் வித்த காசையும்..."

"முதலாவது..., குண்டு விளையாடிறதே...ஹறாம்!"

"அப்ப...உங்கட மகன் விளையாடினது?...ஹறா மில்லையோ...? எல்லாரையும் போல, நானும் அதே, கோட்டுக்குள்ள குண்டுகளை கட்டிறன்! என்ட, 'டேண்' வந்தால், சரியா குறிபார்த்து, ஒரு கண்ணைப் பொத்திக் கொண்டு அடிச்சனெண்டால் அடிதான்! தப்பாது. அது, என்ட கெட்டித்தனம்! அப்பச்சி..., உங்களுக்கு ஏலுமெண்டால்...என்னோட, 'கெட்டப்போல்' தெறிக்க வாறயளா...? தெறிச்சனெண்டால் தெறிதான்! மஞ்சள் குருவி தலை பறக்கும்! ஆனா, நான் இப்பவெல்லாம் குருவி தெறிக்கப் போறதில்ல, ஓணான் இறுக்கி விளை யாடிறதுமில்ல...அதெல்லாம் பாவமெண்டு உம்மா சொல்லிற்றாங்க...!'

'எந்த உசிரையும் அநியாயமாக சாகவைக்கிறது ஆகாதாம்! அப்பிடிச்சாகவச்சா, மறுமை நாளையில் அதுகளுக்கு, நாம உசிர் கொடுக்க வேணுமாம்...!' என் றெல்லாம் உம்மா சொல்லியிருக்காங்க...! ஆனால்...நான், குண்டு விளையாடுவன்தான். அதால ஒருத்தருக்கும் கஷ்டமில்ல. அதால, பாவமுமில்ல! அது, என்ட கெட்டித்தனம்-

நான் வெல்லுறன்! ஆனால், தோற்கிறவங்களைப் பார்த்தால்தான் எனக்கு, கஷ்டமாயிருக்கும்..."

என்று, நான் மூச்சுப் பிடிச்சு கதைச்சி முடிச்சனோ இல்லையோ, அப்பச்சியின் கண்கள், தேன்குழல் மாதிரி சிவந்து போச்சு! நறுநறுவென்று பல்லை நறும்பினார்! எனக்கு, நாக்கும் நெஞ்சுக் குழியும் வறண்டு போகிற மாதிரி இருந்தது! 'இவருக்கு, ஏன் என்னோட...இவ்வளவு, கோவம் வருகிது...?' என்று, எனக்கு விளங்குதேயில்ல...!

"கதைக்கிற, கதையப்பாரு...! ஹறாமில பொறுக்கி!* எருமை கொம்பால அடிக்கும்! எடுப்புண்ணி வாயால அடிக்கும்...!!"

என்று, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, வேலியில் நின்ற பூவரசந்தளையை முறித்து, இலைகளை உருவிப்போட்டு, ஓட ஓட எனக்கு கிசிக்கினார். விழந்த அடி ஒவ்வொன்றும் சில்சில்லென்றிருந்தது! அடி விழுந்த இடம், மசிக்கட்டாம் புளு பட்ட இடம் போல தடிச்சிப் போச்சு.

**ந**டந்ததைப் போய் உம்மாவுக்குச் சொன்னேன். கரிசானுக்குக்கீழ்..., பின் தொடையில் பட்டை பட்டையாக கிளம்பிப் போயிருந்த காயங்களையெல்லாம் உம்மா பார்த்தாங்க.

"ஈனமிரக்கம் இல்லாமத்தானே...மாமா, அடிச்சிருக்காங்க...? நல்ல காலம், அவியளும் ஊரில இல்ல. இருந்திருந்தால், இருந்தும் ஒழிவுதான்! நீங்க, பேசாதீங்க மகன்...! அவருக்கு, அல்லா கூலி கொடுப்பான். இனி..., அவர்ர கடைப்பக்கம் போகாதீங்க...!"

என்று, எனக்கு ஆறுதல் கூறிக்கொண்டே உம்மா, அந்த காயங்களுக்கு மஞ்சளையும் உப்பையும் அரைத்து பூசினாங்க. இது, ஒருநாளும் எனக்கு மறக்காது.

சூடுகண்ட பூனைக்குட்டி மாதிரி, அதுக்குப் பிறகு நான் அப்பச்சியின் அந்தக் கடைப்பக்கம் தலைவைத்துக் கூடப் படுப்பதில்லை. அதனால், அந்த போயா-லீவு* நாள்

---

'போயா லீவு'*-பௌர்ணமி விடுமுறை.

'ஹறாமில பொறுக்கி'*-தவறான உறவு முறையில் பிறந்தவன்.

வந்தால், அந்தப்பக்கமாப் போய் குண்டு விளை யாடிறதயே மறந்திருந்தன். ஆனால், அந்த நேரத்தில் மற்றக் கூட்டாளிமாரோட சேர்ந்து கொண்டு, கிட்டிப்புள்ளு...கிடு விளையாடுவன்!

**வா**ப்பாக்கு, அஞ்சாறு ஏக்கர் வெள்ளாமக் காணி இருந்தது. அது, பாலமுனை – கணக்கன்ட காட்டு வட்டைக்கதான் இருந்தது. இப்ப, வெள்ளாம வெட்டு-சூடு போடிற காலம்! சூடுபோடப் போயிருந்த வாப்பா, வந்திருந்தாங்க. வண்டில்ல நெல்லுச்சாக்குகளும் வந்திருந்தது. சீமந்துப் பேப்பரால சுத்தின மாதிரி, கொண்டுவந்து, உம்மாக்கிட்ட வாப்பா ஒரு 'பார்சல்' கொடுத்தாங்க. அது, சங்கத்துக்கு நெல்லுக் கொடுத்த காசாத்தான் இருக்கவேணும்!

"இந்தக் காசைக் கொண்டுபோய் மாற்றிக் கொண்டு ஓடியாங்க மகன். வண்டிக்காராக்களுக்கு கூலி கொடுக்க வேணும்."

என்று, சொல்லி வாப்பா, ஒரு நூறு ரூபாத் தாளைத் தந்தாங்க.

"ஒரேயடியாய்ப் போய், அப்பச்சிர கடையில மாத்திக் கொண்டு ஓடியாங்க, அங்கதான் சில்லறைக் காசு இருக்கும்"

என்று, உம்மா என்னைப் பார்த்து...சொன்ன போது நான், பேசாமல் நின்றேன்.

"என்ன மகன்.., போகாம நிற்கிறயள்...? சண்டை பிடிச்சால்...மனிசர், திரும்ப உறவாகிறதில்லையா? அப்பிடி இருந்தா, ஒருதரும் ஒருதர்ர முகத்த பார்க்காமத்தான் சீவிக்க வேணும். அங்க, போனாத்தான் கெதியா மாத்திக்கொண்டு சுறுக்கா வருவியள். அதுக்காகத்தான் சொன்னன்"

"என்ன...அப்பச்சிர கடை...உறவாகிற கதையெல்லாம் வருகிது...? என்னமோ நடந்திரிக்கி...முதல்ல அதைச் சொல்லு பார்ப்பம்...?"

வாப்பா, உம்மாவப் பார்த்து கேட்டார்.

"இஞ்ச . . . ஒண்டும் நடக்கல்ல . . .! நீங்க போய், முகத்த, காலைக் கையை கழுவிப்போட்டு சாப்பிட வாங்க"

"நீ, சும்மா மூடி மறைக்காத . . . நான் ஊரில இல்லாத நேரம் என்னவோ நடந்திரிக்கி . . .? சொல்லு பார்ப்பம் . . .?"

என்று, வாப்பாவும் உம்மாவும் கதைக்க தொடங்கும் போது . . . நான், எங்கட வீட்டு தலைவாசல் கதவைத் தாண்டிக் கொண்டிருந்தேன்.

வாப்பாவும் அப்பச்சியும் கொஞ்சம் அப்படித்தான்! வாப்பாக்கும் அப்பச்சியோட ஒத்து வாறதில்ல. வாப்பாவோட, உம்மா வாய்த் தர்க்கப்படுற நேரத்தில எல்லாம். . .

"ஓ . . . ஒன்ட, சாதிசனத்த . . . மாமன் ஐயனை எல்லாம் எனக்குத் தெரியாதாடி . . .? காசு, ஐநூறு ரூபாவை, கைமாத்தா தந்துபோட்டு, அஞ்சி நாள் ஆகிறதுக்கிடையில; கேட்டுப் பிடிச்சானடி . . ., ஒன்ட மாமன்! வளவு மண்ணும்போய், மானமும் போகப்போகிது என்டுதானே . . . ஏக்கர் ஆயிரம் ரூபா, பெறுமதியான காணிய, அறாவிலை– ஐநூறு ரூபாவுக்கு வித்துப் போட்டு அந்தாள்ள முகத்தில அதை, தூக்கி எறிஞ்சதை மறந்திட்டயாடி . . .? இந்த ஆளும், இந்த ஆள்ர காசுபணமும்! மனிசன மனிசன் அறியவேணும், ஆத்து மீனை புளியங்காய் அறிய வேணும் . . .! நான், போடி மகன் போடிதான்டி! கயிறு பத்தினாலும் முறுக்கு உடைய மாட்டன்!!"

என்று, கதைச்சது . . . என்ட காதிலையும் விழுந்தது, எனக்கு ஞாபகமிருக்கிது . . .

எப்பவோ ஒருநாள் . . . கடற்கரையில் வலை போட்டு, காசு பிரிச்சுக் கொண்டு போன கரைவலைக்காரர்கள் . . .

"லேசா காசு மாத்திறதென்டால் . . . ஒரு ரூபாக்கு ஒரு சதம் கொடுத்தால், எவ்வளவும் காசும் மாத்தலாம்!" என்று, அப்பச்சியின் பேரைச் சொல்லி, கதைச்சிக் கொண்டு போனதும் . . . நான், அவர்ர பேரன் – சொந்தக் காரனென்று . . . அது, என்ட காதில, விழுந்து விடக்கூடாது . . . என்று, 'கதையை மாற்றி' அவர்கள், கதைச்சிக் கொண்டு போனதும் . . . எனக்கு ஒவ்வொன்றாக ஞாபகத்திற்கு வந்தது!



ம 7

வாய்க்குள் அள்ளிப் போட்ட அவலையும் தேங்காய்க்கட்டியையும் சப்புகிற மாதிரி, அவர்ர நினைப்பை எல்லாம் மனசுக்குள் அள்ளிப்போட்டு சப்பிச்சப்பி, நடந்து கொண்டிருந்தேன்.

அப்பச்சிட கடை வந்திற்று!

தலையில வட்டத் தொப்பியும் வெறும் மேலும் ஆளுமாக அப்பச்சி நிற்கிறார்! கழிமண் பிட்டியில், புல்லு வளர்ந்த மாதிரி, அவர்ர முகத்தில் நரைத்த தாடி மீசை. கறுகறுவென்ற கண்! சத்தியமாச் சொல்லுறன், அவர்ர கண்ணை, என்னால பார்க்கவே ஏலாது! அவ்வளவு பொல்லாத கண்!

காரிக்கன் துணியில் அவருக்கென்றே, 'கொலர்' வைத்துத்தைக்காத நெடிய கைச்சட்டை. இடுப்பில், கண்டாங்கிச் சாறன். 'சிறுவாலை'* உள்ளுக்குப் போட்டு, சாறனை மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டுதான் நிற்பார். எங்கயும் தூரப்பயணம் போறதென்டால் சாறனை அவிட்டு, அந்த மக்கத்து மஞ்சள் சால்வையை தோளில் போட்டு குடையை கையில் எடுத்துக்கொள்ளுவார்! இதுதான் அப்பச்சியுடைய யூனிபோம்!

விறுவிறென்று போய் கடைக்குள் ஏறினேன்.

"உம்மா...இதை மாற்றித் தரட்டாம்...?"

என்று, காசை நீட்டினேன்.

"ஆர்ராப்பா...? மம்மதுப் பெரியாளா...? என்ன கன நாளைக்கு பொறகு, இந்தப்பக்கம்? என்ன, நூறு ரூபா நோட்டெல்லாம் பரிமாறுது...?"

என்று, நையாண்டி பண்ணிக் கொண்டே காசை வாங்கி கண்ணில் ஒத்திக் கொண்டார்.

"மாற்றித்தரட்டாமா...?"

"ஓம்" என்ற, தோரணையில் தலையை ஆட்டினேன்.

"என்ன...பெரியாள் வாய்திறக்க மாட்டயளோ...?"

நான், பேசாமலே நின்றேன்.

"நான், கேட்கிறதென்னடா...? நீ, நெட்டப்பனை மாதிரி நிற்கிறதென்னடா...? பொல்லாத, தலைக்கனம்

---

சிறுவால்*-இடுப்பில் தொப்புளுக்கு மேலிருந்து முழங்காலுக்கீழ் வரை, முஸ்லிம்கள் மரபாக அணிந்து வந்த ஒருவகை குட்டைக் காற்சட்டை.

பிடிச்சவன்!!" என்று, முகத்தையும் வாயையும் கோணி பல்லைக் கடித்துக் கொண்டு எனது செவியைப் பிடித்த முறுக்கினார்.

எனக்கு வந்த கோபத்துக்கு, அவர்ர கையையாவது கடிச்சிருப்பன்! என்ன செய்ய..., வயதுக்கு மூத்த மனிசன் என்டு, பல்லைக் கடிச்சுக் கொண்டு உசும்பாமல் நின்றன்! என்ர, காது பிய்ஞ்சி போயிருக்கும் என்டுதான் நினைச்சன்...! ஆனால்...அவர்ர நல்ல காலம் என்டுதான் சொல்லவேணும், அப்பிடி ஒன்டும் நடக்கல்ல!

'ஆய் ஊய்'...என்று, கத்தி, 'என்ட உசிர் போகுது டா...அல்லாஹ்...!' என்று, பதறுகிறவரைக்கும் என்ட காதைப் போட்டுத் திருகினார்! எனக்கு சலிப்பு வந்து முட்டிற்று.

"என்ன அப்பச்சி...? கதைச்சாலும் ஏசுறயள்...! கதையாம நின்டாலும் ஏசுறயள்? 'ஒத்துக்காத நேரத்தில, பேசாம-மௌனமா நிற்கிறதுதான் நல்லது...' என்டு, எங்கட ஸேர், சொல்லியிருக்காங்க...! அதனால தான்... சகிச்சுக்கொண்டு பேசாம நிற்கிறன்...!" என்றேன்.

"சேறும் சுரியும்...! இங்க, படிச்சுக் கிழிச்சாக்கள் கனபேர்! நீயெல்லாம் படிச்சி...மனிசனாகத்தான்...? போட்டிட்டு, கடற்கரைக்கு வலபோடப் போ...! இல்லாட்டி தறிக்குழிக்குள் இறங்கி நெய்...! காசு, உழைக்கப்பாருடா...!" என்று அவரும் சொன்னார்.

அப்பச்சியின் மக்களெல்லாம்...அவரிட்ட, எவ்வளவு வாய்ப்பு வசதியிருந்தும் அவங்களைப் படிப்பிக்காமல்...கடற்கரைக்கு போய், வலைபோட்டுக் கொண்டும்...கூலிக்கு நெய்யப் போய்க்கொண்டும் வருவதை...நினைத்துப் பார்த்துக் கொண்டேன்.

"நீங்க, அப்பிடி..., ஒங்கட மக்களைச் செய்யுங்க...எங்கட, வாப்பாவும் உம்மாவும் என்னை, நல்லாப் படிக்க வேணும் என்டுதான் சொல்லி யிருக்காங்க..."

**அ**துக்கிடையில், அரிசிக்காரி கூவிக்கொண்டு வாறது கேட்டது.

"அரிசி...இருக்கிது...கோ...!!"

"ஆருகா .... வள்ளியம்மையா .... ? என்னகா...இன்டைக்கி, புதுசா அரிசியக் கொண்டு வந்து, கூறி விற்கிறாய்...? நாளும் வழமையும் போல, அளந்து கொட்டிப் போட்டு, காசை வாங்கிக் கொண்டு போறது தானகா...?"

அப்பச்சி அரிசிக்காரியோடு கதைத்தார்.

"அதெல்லாம் சரிதான்...ஆசியாரு...! ஒன்ட, சுண்டால அளந்து தந்தா, அரிசியும் குறையிது! காசும் குறையிது! 'ஒன்டும் தெரியாத மொக்கு மனிசி' என்டு, பேத்திமார் ஏசுறாளுகள்...! நான், என்ட சுண்டால சில்லறைக்கி விற்கப்போறன்! நீ, வேற ஆக்களிட்ட வாங்கு ஆசியாரு...!"

"நீ, என்னகா...மடச்சி மாதிரிப் பேசுறாய்...? அனியாயமா...அலைஞ்சி திரியாம அளந்து போட்டிட்டு காசை, வாங்கிக் கொண்டு வேளைக்கி வீட்ட போய்ச் சேருகா..."

"அலைஞ்சி திரிஞ்சாத்தானே...ஆசியாரு, இந்த வயித்துக்கு, கஞ்சியாலும் ஊத்தலாம்...! ஆசியாரு...ஒன்ட சுண்டு கொஞ்சம் பெரிசு...! எனக்குத் திரிய ஏலாது...ஒன்ட முகத்த முறிச்சுக்கவும் எனக்கு விருப்பமில்ல...சம்மத மெண்டால்...என்ட சுண்டால, அளந்து தாறன்."

"சரிசரி...ஒன்னப் பார்த்தா, பாவமாவும் கிடக்கு...இருக்கிறதையெல்லாம் அளகா...! இந்தப் போகம் எங்கிலும் நல்லா விளைஞ்சிருக்காமே...கொத்து, ஒரு ரூபாவும் ஏழு காசும் போட்டுக்க...!"

"என்ட அப்பனேய்...! அப்பிடியென்டால்...விட்டிரு ஆசியாரு...! ஒறுவாவும் எட்டுக்காசும் என்டால்தான் அளப்பன்!"

"சரி சரி அளகா..."

கிழவி அளக்கத் தொடங்கினாள்.

இவ்வளவு நேரமும் அந்த, பரிதாபத்துக்குரிய அரிசிக்கார கிழவிக்கும், அப்பச்சிக்கும் இடையில் நடந்த சம்பாஷணையை நான், கேட்டுக் கொண்டுதான் நின்றேன்.

"என்னடா நீ, முளிஞ்சி முளிஞ்சி பார்க்கிறாய்...? வாயைப் பார்த்துக் கொண்டு நிற்கத்தான் தெரியும்! வளர்த்த வளர்ப்பு அப்பிடி! வந்தால், வந்த வேலயப்பார்த்திற்றுப் போவன்டா...!"

என்று, என்னில் ஒரு பாய்ச்சல் பாய்ஞ்சிற்று, கல்லாப் பெட்டியைத் திறந்து காசை மாற்றித் தந்தார். எண்ணிப் பார்த்தேன்.

"ஒரு ரூபாக்குறையிது...?" என்றேன்.

"கடையில், சாமான் வாங்கின வகையில்...ஒரு ரூபா தருமதிய, எடுத்ததாம் என்டு போய்ச் சொல்லு...நிற்காத போ! நீ, வந்தும்...கன நேரமாப்போச்சு...!"

எனக்கு போக மனம் வரவில்லை. அங்கேயே இன்னும் கொஞ்ச நேரம் நிற்கவேணும் போல இருந்தது.

"போகச் சொன்னால் போவன்டா...!"

என்று, எனது பிடரியைப் பிடித்து தள்ளி விட்டார்.

"உன்ட, உசிர் போனாலும் சரிதான்...அந்த, அரிசி அவ்வளவையும் கிழவி அளந்து முடியிற வரைக்கும் அந்த இடத்தை விட்டு, நீ போகக் கூடாது"

என்று, என்ர மனசுக்குள் ஆரோ சொல்லிக் கொண்டிருப்பது போல இருந்தது!

கடைப் படியை விட்டு இறங்கி, கொஞ்சம் தள்ளிப் போய் நின்று கொண்டேன்.

கிழவி, தனது பனை ஓலைப் பெட்டியிலிருந்த அரிசி அவ்வளவையும் அளந்து, அவரின் சாக்கில் கொட்டினாள். எல்லாம் நாற்பத்திரெண்டு சுண்டு-பத்தரைக் கொத்து! அளந்து முடிந்தது! அரிசிப் பெட்டிக்குள் மிச்சமாகக் கிடந்த அரிசியையும் தட்டிக்கொட்டி சுண்டுப்பேணிக்குள் கொட்டினாள்.

"எவ்வளவு அரிசி இருக்கிது கா...?"

அளந்ததைக் கவனிக்காத ஆளைப் போல, அப்பச்சி கிழவியிடம் கேட்டார்.

"என்ன ஆசியாரு...நீ எண்ணலல்லயா...?"

"நான் எண்ணினது இருக்கட்டும், நீ எண்ணினது, எவ்வளவெண்டு சொல்லன்கா...!"

"பத்தரைக் கொத்தும்...இன்னா பேணிக்க மிச்சமும் கிடக்கிது..."

"இதுக்குத்தானே...நான் கேட்டது...? கணக்குத் தெரியாத இந்தக் கிழவியோட..., இதுதான் வாற சள்ளு! கோ...நாப்பது சுண்டா? நாப்பத்திரெண்டு சுண்டா...?"

"அந்த, அல்லா அறிய நாப்பத்திரெண்டு சுண்டுதான்...ஆசியாரு!"

"அப்ப திருப்பி அளகா...!"

"அளக்கிறதெண்டாப் போல, மனிசனுக்கு அலுப்பில்லயா...? என்ட, பேத்திமாரும் பத்தரைக் கொத்தும் மிச்சமும் கிடக்கிது...என்டுதானே சொன்னாளுகள்...!...நீ எத்தின சுன்டென்று சொல்லுறாய் ஆசியாரு...?"

"ஒன்ட காக் கொத்து அரைக் கொத்தெல்லாம் எனக்கு காணுமாகா...? நாப்பது சுண்டுதான்கா இரிக்கி ...வேணுமெண்டால்...திருப்பி அளந்த பார்...!"

"எதுக்கும்...அப்ப...திருப்பி அளக்கிறன்...

நல்லா, எண்ணிக்க ஆசியாரு...!"

முழித்துக் கொண்டிருக்கும் போதே முழியைத் தோண்டுகிற மாதிரி, இந்த அப்பாவிக் கிழவியின் கண்ணைத் தோண்டுகிற அநியாயத்தை நினைத்து, எனது மனம் பதறியது!

"கோ...அரிசிக்காரி! நீ, திரும்ப அளக்கத் தேவயில்ல! நீ அளந்தது சரிதான் கா...!! பத்தரைக் கொத்தும் மிச்சமும்

தான் இருக்கிது...!" என்று, ஒரு கத்து கத்தினேனோ இல்லையோ, ஒரே ஓட்டம்!

"வளர்த்த வளர்ப்பப்பாரு வழிசல்! சிக்கு ஹறாமில பொறக்கி...!"

அவ்வளவுந்தான் எனக்கு காதில் விழுந்தது! அப்பச்சி என்னை விரசினார். விரசி வந்து அவர் என்னைப் பிடிக்க ஏலுமா...? பிடிச்சால்தான் என்ன? இனிப்பிடிச்சி என்னவும் செய்தாரென்றால்...ஒரு கடியாவது கடிப்பன்!

திரும்பிப் பார்த்தேன். அப்பச்சியைக் காணவில்லை! வீட்டில் வந்துதான் தகைந்தேன். மாற்றிய காசை, உம்மாவிடம் கொடுத்துவிட்டு நடந்ததைச் சொன்னேன்.

"நல்ல காலம் வாப்பாவைக் காணல்ல! இருந் திருந்தால்...இன்டைக்கி அமளிதான்...! நான் நினைச்சது சரியாப் போச்சு...பிந்தப் பிந்த, என்னவோ நடக்கிது...என்டு, நினைச்சன்! சரியாப் போச்சு!! அப்பச்சி வந்தால்..., அதை நான் பாக்கிறன். நீங்க போய் காலைக் கையை கழுவிப்போட்டு வந்து குர்ஆன எடுத்துவச்சி ஓதுங்க...!"

**நா**ன், கிணத்தடிக்குப் போய், துலாந்தில் பத்திக்கையை பிடிச்சனோ இல்லையோ?

"புள்ள...,சுலஹாம்மா! எங்க, ஒன்ட தங்க மகன்...?"

"இருக்க வாங்க மாமா..."

"நான் இருக்க வரல்ல!"

"மனிசன், ஹறாமில பிள்ளையைப் பெத்துப் போட்டு ஒழுங்கா வளர்த்துப் போடுவான்! நீ, இவன வளர்க்கிறதென்டால் ஒழுங்கா வளர்க்க வேணும்!! உன்னால ஏலாட்டி என்னிட்டத்தா...! ஒழுங்கு தப்பிது...மகன், மக்கோனாக்கு* போகப் போறார் போலத் தெரியிது...!"

"எலும்பில்லாத நாக்கால, ஏன்மாமா இப்பிடியெல்லாம் கதைக்கிறயள்...? இது அல்லாக்கு ஏற்குமா...? அன்டைக்கும் நீங்க...அவனுக்கு ஈன இரக்கமில்லாம அடிச்சுப் போட்டயள்...! அவன் சின்னப்பிள்ள...அவனில, நீங்க உஞ்சில் போட்டு ஆடிறதென்ன...?"

"ஆரது...சாச்சப்பாவா...? எல்லாத்தையும் கேள்விப்பட்டுக் கொண்டுதான் வாறன்...! ஒங்கட வேலையளும் அப்பிடித்தான்...அவன் உங்களுக்கு செய்யிற அடாத்தும் அப்பிடித்தான். நீங்க நியாயமான ஆளென்டால் தானே...?"

'வாப்பா வந்திற்றார்! என்னவோ இன்டைக்கி நடக்கத்தான் போகிது! எப்பிடியும், அப்பச்சிக்கி ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேணும்...!'

தண்ணியை அள்ளி, முகத்தைக் கழுவிக் கொண்டே நினைத்துக் கொண்டேன்!

"கதைக்கிறதை, முளிப்பாக் கதைக்கவேணும்! என்ட நியாயத்துக்கு என்ன ஒய், குறைச்சல்...?

"அதையெல்லாம்...நான், சொல்லித்தான் தெரிய வேணுமென்டால்...ஒவ்வொன்டாக சொல்லுவன்...! சொல்லவா...? போட்டிட்டு,...இப்ப, வந்த விசயமென்ன...அதைச் சொல்லுங்க...?"

"வந்த விசயமா...? புள்ளய, எப்பிடிப் பெத்தாலும் வளர்க்காப் போல வளர்க்க வேணும்! அதத்தான் சொல்ல வந்தன்!"

"நாங்க, ஒழுங்காப் பெத்து, ஒழுங்காத்தான் வளர்க்கிறம்...! நீங்க ஒழுங்கா கதையிங்க! என்ன...? வளர்த்த வளர்ப்பைப் பத்தியெல்லாம் கதைக்கிறீங்க? நீங்க அரிசிக்காரிய ஏமாத்தினதாம் ... அதுக்கு, அவன் 'கத்திப் போட்டு' ஓடி வந்தானாம்...! வள்ளியம்மை

கண்டு...எல்லாத்தையும் சொல்லிப் போட்டுத்தான் போறாள்...! சும்மா தள்ளாம, போட்டிட்டுப் போங்க...!"

"அதையெல்லாம் சொல்லிறதுக்கு, இந்த, வம்பில பொறந்தவனுக்கு என்ன தேவைடா...?"

"வம்பில பொறந்ததா...? என்னப் பொல்லாதவனா, ஆக்காம...மரியாத வேணுமெண்டா...போயிரு...!! இல்லாட்டி இப்ப கொலைதான் விழும்!"

"என்னப் போகச்சொல்ல நீ ஆர்ரா...! இந்த...வள வுறுதி இன்னமும் எழுதல்ல...! இதில...எனக்கும் பங்கிருக்கி...மறந்திராத...!"

"இப்ப...உனக்கு...நான், பங்கு காட்டற்றா...? டேய் மனேய்! அந்த தேடாக்கயிற்ற எடுடாமனேய்!!"

"இஞ்ச...சும்மாயிருங்க! அவர் என்னென்டான கதைச்சிற்றுப் போகட்டும்...ஒங்கட, காலப் புடிச்சிக் கேட்கிறன்...! இஞ்ச..., சும்மாயிருங்க...!!"


உம்மா, வாப்பாவை மறிச்சிக் கொண்டு கதைக்கிறது கேட்டது! அதுக்குப் பிறகு, அப்பச்சியின் சத்தம் கேட்கவில்லை! ஆள், மாறியிருப்பார்! வாப்பாக்கு கோவம் வராது, வந்தால் வந்தது தான்! அப்பச்சிக்கும் அது தெரியும்!

எலி பிடிக்கப் பதுங்குகிற பூனைக்குட்டி மாதிரி, மெள்ள வீட்டுக்குள் வந்து, குர்ஆனை எடுத்து வைத்துக் கொண்டு நான் சத்தம்போட்டு, ஓதத் தொடங்கினேன்.

தாமரை - 1969

மக்கோனா* - இலங்கையில் சிறுவர் சீர்திருத்த பாடசாலை இருக்குமிடம்.

# இரங்கியபோது...



குருநாகல் பஸ் நிலையத்திலிருந்து, 'கொழும்பு எக்ஸ்பிரஸ்'' ஒரு நீண்ட பெருமுச்சை விட்டுக் கொண்டு புறப்பட்டது!

தனது, சிம்மாசனத்திலிருந்த அந்த பஸ்றைவர், ஒருதரம் எழுந்து நிமிர்ந்து சாறனை ஒதுக்கி வசதியாக வைத்துக் கொண்டு 'கியரை' மாற்றி, 'எக்ஸ்ல றேற்றரை' அமர்த்தினான்.

மீண்டும், ஒரு பெருமூச்சு - உறுமல்! தனது இலக்கை அடைவதற்காக கோபாவேசத்துடன் பாய்ந்து செல்லுகின்ற ஒரு வேங்கையைப் போல, அந்த, பஸ்வண்டியும் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது.

பிக்குமார்களுக்கென்று'றிஸேவ்'பண்ணி இருப்பார்களே அந்த ஸீட் - அதற்குப் பின் ஸீட்டின் மூலை - 'கோணர் ஸீட்டில்' நான் இருக்கிறேன்.

எனக்குப் பக்கத்தில், அழகான வண்ணாத்திப் பூச்சியைப் போல அவள் அமர்ந்திருக்கிறாள்! அவள் உடுத்திருந்த உடுப்பு, அதை அணிந்திருந்த ஸ்டைல் - அதன், அழகு எல்லாவற்றிலும் பாரம்பரிய சிங்கள முத்திரை பளிச்சிட்டது.

அவளுக்குப் பக்கத்தில், ஒரு கைப்பிள்ளைக்காரி, குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு நிற்கிறாள். வெய்யிலுக்கு சுடுபட்டு வாடிப்போய் நிற்கின்ற வாழை இலையைப் போல, தோற்றமளிக்கும் அந்தத்தாய், துவண்டுபோய் தோளில் கிடக்கும் குழந்தையின் மேனியை முடிந்தமட்டும் மூடியிருக்கிறாள்.

கோடை வெய்யிலின் அகோரத்தை தாங்க முடியாமல், வாடிவதங்கி சோர்ந்து போய்க் கிடக்குமே சூரியகாந்திப்பூ, அதைத்தான், அந்த பிஞ்சு முகம் எனக்கு நினைவூட்டியது!

அந்தத் தாய், நெற்றியில் வைத்திருந்த பெரிய குங்குமப் பொட்டும், போட்டிருந்த மூக்குத்தியும், காதுகளில் கிடந்த பெரிய தோடும், கழுத்தில் கட்டப்பட்டுக்கிடந்த சிவப்பு, பச்சை, கறுப்பு நிற சங்கு மணிகளும் எல்லாவற்றுக்கும் மேலாக, உழைத்தே உருமாறியிருந்த அவளின் உடலும் அதன் நிறமும் ஒரு தோட்டப் பகுதி தமிழ் மங்கையை அறிமுகம் செய்தது.

குழந்தையும் கையுமாக, அவள் இந்த பஸ்ஸில் ஏறி, இருக்க இடம் தேடிய போது, நான் இருக்கும் இதே ஸீட் டில் ஒரு இடம் அப்போது, காலியாகவே இருந்தது. ஆனால்...அந்த, 'வண்ணாத்திப் பூச்சி'க்குப் பக்கத்தில் இருப்பதற்கு அருவருப்பு பட்டவள் போல, முகத்தையும் 'உம்'மென்று வைத்துக் கொண்டு, தலைக்கு மேல் தொங்கிய வாரைப் பிடித்துக் கொண்டு அவள் நின்றாள்.

'ஏற்கனவே, இந்த 'பட்டாம் பூச்சியை' தனக்குத் தெரியும்...!' என்பது போல, அந்தத் தாயின் ஒவ்வொரு அசைவும் முகபாவமும் காட்டிற்று.

பஸ் புறப்படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அங்கு வந்த கண்டக்டர், "இதிங்...நோனா கொஹமத...?" என்று, எனக்குப் பக்கத்திலிருக்கும் அவளோடு பகிடி விட்டுக்கொண்டு 'ஒரு மாதிரி' சிரிப்பையும் உதிர்த்து விட்டார்.

அத்தோடு, அந்த கைப்பிள்ளைக் காரியையும் ஒருதரம் நிமிர்ந்து, பார்த்து "ம்...நங்கி, வாடிவென்ட...!" என்று, கூறி காலியாகக் கிடந்த அந்த ஸீட்டை சுட்டிக்காட்டிய

பிறகும் கூட அந்த கைப்பிள்ளைக்காரி அவளுக்குப் பக்கத்தில் இருக்க விரும்பவில்லை.

"ஆம்மா...குழந்தையையும் கையிலே வச்சின்டு, நிற்கிறியே... பஸ்ஓடச்சே பிறேக் போட்டான்னா விழுந்திடமாட்டே...? ஏம்மா...இரேன்...!"

என்று, அடுத்த ஸீட்டிலிருந்த அந்த வயோதிபர் கூறிய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்தாளோ என்னவோ, அதுக்குப் பிறகுதான் அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

ஆயினும், தொற்று நோயினால் பீடிக்கப்பட்ட ஆரோ ஒரு நோயாளியின் பக்கத்தில் கட்டாயத்தின் பேரில் இருக்கின்ற ஒரு சுக தேகி அடைகின்ற அருவருப்பு உணர்வுகளினால் பாதிக்கப்பட்டவள் போல, அவளது ஒவ்வொரு அசைவும் தென்பட்டது.

அப்போது...எனது, நண்பனொருவன்...எனது நினைவிற்கு வந்தான்!

குருநாகல் நகரத்தை அண்டிய, அந்தக் கிராமத்தின் ஒழுங்கை ஒன்றிற்தான் இவளை, முதன் முதலாக கண்டேன்! எனக்குப் பக்கத்திலிருக்கிறாளே...இவளைப் பற்றி, அந்த நண்பனும் 'அப்படித்தான்' எனக்கு...சொல்லி வைத்தான்.

"அவள்தான் என்ன செய்வாள்...? எல்லாத்திற்கும் காரணம் இந்த நாசமாப் போன வயிறுதானே...!"

என்று, அவனுக்கு நான் பதில் சொன்னதும்...அதுக்கு அவன்,

"மற்றவங்களுக்கெல்லாம் வயிறுமில்லை...அது பசிக்கிறதுமில்லையாக்கும்...?"

என்று, எனக்கு அவன், திருப்பி பதில் சொன்னதும்

அதைத் தொடர்ந்து, நான் விவாதிக்கத் தொடங்கியதும்...

"...சரிதான், இனி உன்ட 'பொருள்முதல் வாதம்'...ஆரம்பிச்சாச்சாக்கும்...? என்னவோ...நான் அவளைப் பற்றி கேள்விப்பட்டதைச் சொன்னேன்...!"

என்று, கூறியதெல்லாம் எனக்கு நினைவிற்கு வந்தது.

உண்மையில் அவள் அழகாக இருந்தாள்! அவளது பார்வையில், ஒரு கனிவும் எளிமையும் இருந்தது. அவளின் அந்த அழகு, வெறும் கவர்ச்சியாக எனக்குப்படவில்லை.

மலைக்குன்றுகளுக்கிடையே ஊற்றெடுத்து ஓடிவருகின்ற குளிர்ந்த நீரூற்றைப்போல, – அதைத்தொட்டு முத்தமிட்டு மிதந்து வருமே ஒரு மெல்லிய மந்தமாருதம் அதைப் போல, அவளது அழகு இதம் தந்தது!

எனது நண்பனும் நானும் தற்செயலாகக் கண்ட அந்த ஒரு சந்தர்ப்பத்திற்குப் பிறகு, அவளை எத்தனையோ தடவைகள், பஸ் நிலையத்தில், கோட்டைப் புகையிரத நிலையத்தில்...எல்லாம் கண்டிருக்கிறேன். அவளும் என்னைப் பார்த்திருக்கிறாள்.

இவ்வளவுக்கும் அவளோடு நான், ஒரு வார்த்தை கூட பேசியது கிடையாது! எதையோ, கதைக்க நினைப்பது போல, அவளின் முகமும் கண்களும் காட்டும்! நானும் அவளோடு பேச்சுக் கொடுக்க நினைத்திருக்கிறேன் கதைக்கவில்லை.

இதே பஸ்ஸில், வார விடுமுறையில் நான் பிரயாணம் செல்லும் போதெல்லாம் பெரும்பாலும் அவளை, சந்தித்திருக்கிறேன். "என்னைச் சந்திப்பதற்காகத்தான் அவள், இந்த பஸ்ஸில் வாரா வாரம் பிரயாணம் செய்கிறாளோ...?" என்று கூட, நான் நினைத்ததுண்டு.

அவளும் கொழும்பில்தான் வந்து இறங்குவாள். இறங்கும் போது, ஒரு மெல்லிய சிரிப்பை மாத்திரம் பகிர்ந்து கொண்டு பிரிந்து விடுவாள்.

இன்று, நான் எதிர்பார்க்கவே இல்லை! எனக்குப் பக்கத்திலேயே வந்து இருந்துகொண்டாள். கொஞ்சம் கூச்சமாகவே இருந்தது. கண்டக்டர், றைவர் அந்த கைப்பிள்ளைக்காரி உட்பட எல்லோரும் என்னையே அவதானிப்பது போல...நான் நினைத்துக் கொண்டேன்.

அந்த கைப் பிள்ளைக்காரியின் தோளில் கிடந்த குழந்தை விழித்துக்கொண்டு அடம்பிடித்துக் கத்தத் தொடங்கியது! அதை அமத்த-அரவணைக்க அந்தத் தாய் என்னென்னவோ எல்லாம் செய்து பார்த்தாள்; முடியவில்லை.

தனது மடிக்குள் கட்டிவைத்திருந்த பாண் துண்டை எடுத்து அந்தக் குழந்தையின் கைக்குள் வைத்த பிறகுதான் அழுகையை கொஞ்சம் நிறுத்தியது. காய்ந்து, உலர்ந்து போயிருந்த அந்தப் பாண்துண்டு, அதன் உமிழ்நீர் பட்டுக் கரைந்து வாய்க்குள் சென்று கொண்டிருந்தது.

சுவையான 'சொக்களேட்' கட்டியை சுவைப்பது போல, அந்தக் குழந்தை, அந்தப் பாண்துண்டை ருசிதட்டிச் சுவைத்துக் கொண்டிருந்தது! இந்தக் காட்சி எனது இதயத்தை வறுத்தெடுத்தது. அந்த குழந்தைக்காக எனக்குள் இரங்குவதைத் தவிர அப்போது, என்னால் எதையுமே செய்ய முடியவில்லை.

எனக்குப் பக்கத்திலிருந்த அவளும் ஏக்கமும் தாபமும் நிறைந்த அவளது விழிகளால், அந்தக்குழந்தையை ஆதங்கம் ததும்ப பார்த்துக் கொண்டாள்.

எப்படியோ, இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் பஸ்ஸுக்குள் கழிந்தாக வேண்டும். இதற்கிடையில் வழி நெடுகிலும் இந்த பஸ் வண்டி போட்டு வருகின்ற 'கடபுட' சப்தம், அது கக்கிக் கொண்டு வருகின்ற 'டீசல்' புகை நாற்றம், மனிதர் கக்குகின்ற பீடி, சுருட்டுப் புகை, வாய் நிறைய வெற்றிலை பாக்கை கொதுப்பிக் கொண்டு அடிக்கின்ற அரட்டை, அவர்கள்...அவர்களை அறியாமலே தெளிக்கின்ற 'செம்பன்னீர்த்' துளிகள்...இவற்றை எல்லாம் அனுபவித்தே தீரவேண்டும்! இதற்கும் சேர்த்துத்தான் டிக்கட்கட்டணம் அறவிடுகிறார்களாக்கும்...

இவற்றை கொஞ்ச நேரமாவது மறக்க, கையில் வைத்திருந்த தினசரியை விரித்தேன். 'விரிக்க விடமாட்டேன்' என்பது போல, சில்லென்று வந்து மோதிய எதிர்காற்று என்னோடு போர் தொடுத்தது! போரில் எனக்குத்தான் வெற்றி! படிப்பதற்கு வசதியாக, தெண்டித்து விரித்து, மடித்து அளவாக எடுத்துக்கொண்டு படிக்க முயற்சித்தேன்.

கண்கள், எழுத்துக்களை மேய்ந்தனவே தவிர அவற்றை கிரகிக்க முடியவில்லை? பஸ் பிரயாணத்தில் படிப்பது என்பது என்னைப் பொறுத்த மட்டில் அது ஒரு பம்மாத்து! வேண்டுமானால், லைட்டாக ஏதும் சினிமாச் செய்திகள், படங்களென்றால் பார்க்கலாம்! ஆனால், அதுவும்...இப்போது, முடியாமல் என் மனம் மறுக்கத் தொடங்கியது.

பக்கத்திலிருக்கும் இந்த பட்டாம் பூச்சியோடு பேச்சுக் கொடுக்கலாமென்றால்...எனக்குத் தெரிந்த அரை குறைச் சிங்களம் அதைத் தாங்காது. வேண்டுமென்றால்..."எங்க போறீங்க...வாறீங்க? எந்த ஊர் நீங்க..." என்று, கேட்டு வைக்கலாம்! ஆனால்...இன்று...எனக்குப் பக்கத்தி லிருக்கின்ற அவளிடம் அதைக்கூட கேட்டுவைப்பதற்கு எனக்கு துணிவு வருவதாக இல்லை.

இதற்கிடையில், அந்த பஸ்றைவர், தனது நெற்றிக்கு மேல் கொழுவி இருக்கின்ற அந்த நீள்சதுரக் கண்ணாடிக்கூடாக அவளையும் அவளோடு சேர்ந்தாற் போல என்னையும் தனது ஓரக்கண்ணால் நோட்டமிடுவதையும் என்னால் அவதானிக்க முடிந்தது. அவளின் முகமும் அதை உணர்த்தியது. அவள் என்மீது, நெருக்கமாக சாய்ந்து கொள்ள விரும்பினாள்.

அந்த றைவர், என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டானோ...நான் நிமிர்ந்திருந்து தலையை வெளியே போட்டுக் கொண்டேன்.

சில்லென்று வந்து மோதிய கூதற்காற்று, முகத்திற்பட்டது. அது புதுத்தெம்பையும் உற்சாகத்தையும்

தந்தது. முகத்தில் வந்து விழுந்த தலைமயிரை கைகளால் கோதி விட்டுக் கொண்டேன்.

அடிவானம் சிவப்பது தெரிந்தது. செவ்வானத்தின் அந்த பிரகாஷமான ஒளியில் அந்தி அழகு சிரித்தது! அந்த ரம்மியமான வேளையை கொண்டாடி மகிழ்வது போல, வானத்தில் பறந்து கொண்டிருந்த பறவைகள் ஆடிப்பாடின!

வானத்தின் முகட்டையே தொட்டுவிட்டது போல, அலை அலையாக தொடர்கின்ற மலைத் தொடர்கள் அந்த. அடிவானத்துக்கும் அப்பால்...அப்பால் ஏதோ...கைநழுவிச் சென்று கொண்டிருக்கின்றதோ...? என்ற, ஒரு பிரமை! ஆயினும், அதன் பகைப்புலனில்...விரிந்து, பரந்து, வளர்ந்து கொண்டேயிருக்கும்...அந்த செவ்வானத்தின் பிரகாஷமான ஒளி, ஒரு நம்பிக்கையை ஊட்டியது.

மலைகளின் உச்சியிலே இருந்து, ஊற்றெடுத்து ஓடிவருகின்ற அந்த அருவிகளெல்லாம் மனித சமுதாயத்தின் பாதார விந்தங்களுக்கு செலுத்துகின்ற காணிக்கையாகவும், அந்த அருவிகளின் ஓசைகளெல்லாம், கோடானகோடித் தொழிலாளர்களின் உழைப்பின் கீதத்தை வெற்றிப் பெருமிதத்துடன் பாடுவதாகவும்...அவை...எனக்கு தூது சொல்லி அனுப்புவது போலிருந்தது.

பாதையில் மருங்குகளிலே, தங்கக் குவியல்களென விளைந்து, பாளம் பாளமாகப் புரண்டு கிடக்கின்ற வயல் வெளிகளும் அதில், பஞ்சம் பசி தெரியாமல் பறந்து திரிகின்ற பறவைகளும் எனது, நெஞ்சச்சுவர்களில் புதுப்புதுச் சித்திரங்களைத் தீட்டின...

**மீ**ண்டும் அந்தக் குழந்தை அழுது கத்தத் தொடங்கியது.

எனது, கற்பனைச்சரடு அறுந்து விழுந்து, அழகிய கனவு கள் கலைந்தன!



ம 8

தலையை, மெல்லத் திருப்பி, கத்துகிற குழந்தையைப் பார்த்தேன். பாணதுண்டைச் சுவைத்துக் கொண்டிருந்த அந்தக் குழந்தை, இப்போது தனது விரல்களை சுவைத்துக் கொண்டிருந்தது!

அந்தக்குழந்தை, மீண்டும் அலறிக் கத்தியது!

பஸ் வண்டியின் கடபுடல் சப்தம், எஞ்சின் போடுகிற இரைச்சல், பிரயாணிகள் போடுகிற கூச்சல், இவற்றையெல்லாம் மீறிக்கொண்டு அந்தக் குழந்தை வீல்வீலென்று கத்தியது!!

பஸ்ஸரைவரும் ஒருமுறை கண்ணாடிக்குள் பார்த்துக் கொண்டார்! கண்டக்டரும் வந்து தாயையும் குழந்தையையும் பார்த்துவிட்டுப் போனார்.

குழந்தையை அரவணைப்பதற்காக அந்தத் தாய் எடுத்துக் கொண்ட எல்லா உபாயங்களும் தோற்றுப் போயிற்று!

அவளது நெஞ்சுச் சட்டையைத் திறந்து, அந்த, பால் மடியில் மோதுவதற்கு, அந்தக்குழந்தை படுகின்ற பாட்டுக்கு ஈடுகொடுக்க அந்தத் தாய்மையால் இயலவில்லை! ஆயினும்..., அந்தத் தாய்மை இரங்கிச் சுரந்தது!!

மகிழ்ச்சி ஆரவாரத்தோடு, மடியில் முகத்தை புதைத்துக் கொண்டு குழந்தை அருந்தத் தொடங்கியது. ஆனால், அந்தச் சுனை, வற்றி வரண்டு கிடந்தது!

மீண்டும், முகத்தை திருப்பிக் கொண்ட குழந்தை, ஏமாற்றத்தை தாங்க முடியாமல் விம்மிவிம்மி அழத் தொடங்கியது! தனது, முந்தானையை, கையிலெடுத்துக் கொண்ட அந்தத் தாய் கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டாள்!

"அனே...! 'படகினி'...!!"

எனக்குப் பக்கத்திலிருந்த அவளும் இரங்கினாள். இரங்கியது மட்டுமல்ல, அதைச் செயலிலும் காட்டினாள்.

"நங்கி...கிரி தே தியன்னே...!" என்று, கூறிக் கொண்டே, அவள் கொண்டுவந்திருந்த 'பிளாஸ்க்கை' சட்டென்று குனிந்து எடுத்து, திறந்து கோப்பையில் ஊற்றிக் கொடுத்தாள்!

அதை, அறவே விரும்பாதவள் போல, "எப்பா!" என்று, கூறிவிட்டு முகத்தை, மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவளுடைய பிடிவாதமும், அவள் நடந்து கொண்ட விதமும் அந்த வயோதிபர் உட்பட பக்கத்து ஸீட்டிலிருந்த அனைவருக்கும் ஆச்சர்யமாக இருந்தது!

அவளோ, சோகம் இழையோடிய ஒரு மெல்லிய புன்னகையை மட்டும் உதிர்த்து விட்டு, கோப்பையை மீண்டும் நீட்டினாள்! அந்த, பிஞ்சுக் குழந்தை, அதை அண்ணாந்து பார்த்தது!

அதையெல்லாம் பொருட்படுத்த அவள் தயாராக இல்லை! வார்த்தை, வெடித்துச் சிதறியது!!

"எப்பாளு எப்பா! - வேணாமென்டால் வேணாம்!!" சட்டென்று அதை தட்டிவிட்டாள்!

'டட், டடார்...!' என்று, அந்தக் கோப்பை கீழே விழுந்து தேநீர் சிதறியது! சிதறிய அந்தக் துளிகளில் சில, எனது ஷேர்ட்டிலும் பட்டது! கைலேஞ்சை எடுத்து, துடைத்துக் கொண்டேன். 'தேயிலைக் கசறு, போகுமோ என்னவோ...? எதுக்கும், - டோபியிடம் போட வேணும்!' என்று, நினைத்துக்கொண்டேன். பாவம், அவளுடைய அந்த அழகான 'கிறீம்' கலர் சாறி...? என்ன செய்வாளோ...?

எனக்கு ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமாக இருந்தது! அவள் எதுவுமே பேசவில்லை! மெதுவாக திரும்பி, என்னையும் ஒருதரம் பார்த்துக் கொண்டாள். அந்த ஒரு பார்வையில், ஆயிரமாயிரம் வேதனைகளைத்தான் என்னால் தரிசிக்க முடிந்தது. அவளது அந்தராத்மா, என்னோடு எதையோ

கதைக்கத் துடிப்பதுபோல, அவளது விழிகள் காட்டிற்று! அது, எனது இதயத்தை ஊடுருவி உறுத்திற்று!

என்ன நினைத்துக் கொண்டாளோ? திடீரென்று எழுந்தாள்! 'பெல்லை' அடித்தாள்! எதிர்பாராமல், எதிர்பாராத இடத்தில் அடிக்கப்பட்ட அந்த, 'எலக்டிக் பெல்' றைவர்கிளினரை மட்டுமல்ல, தூங்கி வழிந்து கொண்டிருந்த பிரயாணிகளையும் ஒரு உலுப்பு உலுக்கியது.

எதிரே இருந்த கண்ணாடிக்குள் அண்ணாந்து பார்த்த றைவர், கியரை மாற்றி, ஒரு உறுமல் உறுமிக் கொண்டு பஸ்ஸின் வேகத்தை சமநிலைக்கு கொண்டுவந்தார்.

பஸ்ஸில் ஏறும் படிகளில் நின்று கொண்டுவந்த கண்டக்டர்,

"கௌத...? பஹின்ட? மே...எக்ஸ்பிறஸ்! றைட் றைட்!"

என்று, சட்டத்திற்கு உட்பட்டு கத்தியது கேட்டது!

அதையெல்லாம் பொருட்படுத்த அவள் தயாராக இல்லை!

"மட, பஹின் டோன...!" அவள் கத்தினாள்!

அந்த, வார்த்தைகளில், யாருமே அசைத்துவிட முடியாத உறுதியும் கம்பீரமும் தொனித்தன! இறங்கும் படிகளில் அவள், வந்து நின்றாள்!

'கிர்ர்...ரீச...!!' அது, சடின் பிறேக்!

அவசர அவசரமாக இறங்கி, அவள் நடந்து கொண்டிருந்தாள்!

ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுக் கொண்டு, அந்த பஸ் மீண்டும் புறப்பட்டது.

அந்த வயோதிபர், அந்த கைப்பிள்ளைக்காரியை அடிக்கடி, வெறித்துப் பார்த்துக் கொண்டார்! அழுது அழுது கத்தி அலுத்த அந்தக் குழந்தை, இனி கத்த இயலாமல், உறக்கத்தில் கிடந்தது! அந்தத் தாயின் முகத்தில், கேள்விக் குறியோடு கூடிய, ஏதோ ஒரு சோகம் மூட்டம் போட்டிருப்பதாகவே எனக்குப்பட்டது...!

அந்த, பஸ் சம்பவத்திற்குப் பிறகு, நானுந்தான் போகிறேன் வருகிறேன், அந்த அழகான பட்டாம் பூச்சியை பார்க்க, கிடைக்கவே இல்லை...! அவளை...எப்படியாவது, எங்காவது சந்தித்து...அவளோடு மனம் திறந்து கதைக்க வேண்டும் போல, எனது, மனம் பதறியது...! ஆனால், எங்கு...? எப்படி...? அவளைச் சந்திப்பது என்றுதான் தெரியவில்லை!

ஒருநாள், எனது அந்த நண்பனைச் சந்தித்தேன்!

"அவளை..., அந்த பட்டாம் பூச்சியைத் தான்...கேட்கிறேன்...? எங்காவது, அவளைக் கண்டயா...? அவள்...பாவமடா...!" என்று, கேட்டுவைத்தேன்.

"நீ...அவளை, இன்னும் மறக்கவே இல்லையா...?" என்றான்.

"பாவம், எப்படி அவளை மறக்க முடியும்...?"

பஸ்ஸில் நடந்ததைச் சொன்னேன்.

"அவள்...இப்போது, ஒருத்தனோடு குடும்பம் நடத்துகிறாள்...!"

என்றான் அவன்.

நான், நிம்மதியாக ஒரு பெருமூச்சை விட்டுக் கொண்டேன்!

'அப்பாடா...!'

மனப்பாரமொன்று இறங்கியது போலிருந்தது!

1970 – வீரகேசரி

# காலத்தின் குரல்கள்!



“உன்னை, அவசரமா வந்திற்றுப் பேகட்டாம்...!”

“என்னவாம், அவ்வளவு அவசரம்...?”

“எனக்குத் தெரியா...”

“தெரிந்த மட்டில சொல்லன் பார்ப்பம்...?”

“எனக்கி...ஒன்டுந் தெரியாது...!”

“சரிசரி, போய்...வாறனென்டு சொல்லு...!”

விசகளம் சொல்ல வந்தவன் போய் விட்டான்.

மீரானுக்கு, ‘போறதா...? இல்லையா...?” என்று, ஒரே யோசனையாய்ப் போயிற்று! வாசலில் கிடந்த உரலை கவிழ்த்துப் போட்டு, அதில் இருந்து கொண்டு, கடுமையாக யோசிக்கத் தொடங்கினான்.

“என்ன...? பொண்டாட்டி செத்தவன் மாதிரி...குந்திக் கொண்டு கடுமையா யோசிக்கிறயள்...?” அங்கு வந்த, மீரானின் வீட்டுக்காரி மைமூனா, புருசனிடம் கேட்டாள்.

“இன்டைக்கி, மட்டுமா யோசிக்கிறம்...? எத்தின தலைமொறயாத்தான் யோசிக்கிறம்...? நாமளாவது யோசிச்சி, ஒரு முடிவுக்கு வராட்டி...நமக்குப் பொறக்கப் போற புள்ளயளும் யோசிக்கவேணும்...!! எல்லாத்துக்கும் ஒரு வழி இல்லாமலா போகும்...?”

"அது இருக்கட்டும்...அவன் உமறுலெவ்வ வந்துபோனது என்ன...?"

"அடுப்படியில குந்திக்கிருந்த உனக்கு, அவன் – உமறு லெவ்வை வந்து போனதெல்லாம் தெரிஞ்சிற்றுதா...?

"தெரியாம என்ன...? அவர் - போடியார் தானே...அவன அனுப்பினது...?"

"ஓம்...அவசரமா, வந்திற்றுப் போகட்டாம்..."

"போகல்லயா...?"

"அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தன்..."

"இதில், யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு...? நீங்க இனி, அந்தாள்ள வெள்ளாமச் செய்ய, நிற்கிறதும் சரிதான், நாம நஞ்சி குடிச்சி சாகிறதும் சரிதான்!"

"செத்தாப் போல, பிரச்சினை தீர்ந்து போகுமா...?

"அதென்டால் மெய்தான்...அப்ப, என்ன செய்யப் போறயள்...?"

"நம்மால ஏன்டதை, நாம செய்வம்...! பயணமொன்டு போக வேணும்! அதுவும், அந்த வழியாலதான் போகவும் வேணும்! வேற வழியுமில்ல, ஆனால் குறுக்கால மலை ஒன்று நிற்கிது! அது...வழியை மறிச்சுக் கொண்டு நிற்கிது!! என்ன செய்யிறது...? 'இவ்வளவு பெரிய மலையை, நாம மட்டும் என்ன செய்யிறது...? என்டு, நினைச்சிப்போட்டு

ஒவ்வொருத்தரா திரும்பிப் போனா...அந்தப் பயணத்த போய் முடிக்கிறதில்லையா...?"

"போகத்தான் வேணும்...! இப்ப, என்ன சொல்லிறியள்...?"

"நம்மால ஏன்டதை நாம செய்வம்...! அல்லாதந்த காலும் கையுமிரிக்கி, ஏன்ட மட்டுக்கு, அந்தக் கல்ல கொத்திச் சரிப்பம்! மிச்சமிருந்தால், நம்மிட பிள்ள குட்டியள் கொத்திச் சரிக்கட்டும்! அதிலையும் மிச்சமிருந்தால்...அது கள்ள பிள்ளை குட்டிகள் வெட்டிச் சரிக்கட்டும்! எப்பிடியோ மலை சரிஞ்சி போகும்...வழியும் திறபட்டுப் போகும்! சேர வேண்டிய இடத்துக்கும் போய்ச் சேர்ந்துக்கலாம்...என்ன...நான் சொன்னது விளங்கிதா...?"

"விளங்காம என்ன...? மண்டைக்க களிமண்ணையா வச்சிக் கொண்டிருக்கிறன்...? ஆனா...இந்த போடிமார், முதலாளிமாருக்கு ஏன் இதெல்லாம் விளங்கிறதில்ல...?"

"போடிமார், முதலாளிமாருக்கு ... விளங்கிறதில்லையா...? ஆரு சொன்னது...?! அந்தாக்களுக்கும் விளங்கும்! ஆனா ஒத்துக்க மாட்டானுகள்! பூனைக்கிட்டப் போய் 'மீன் தின்னப்படா' என்டால் கேக்குமா...? ஒவ்வொன்டுக்கும் ஒரு குணமிருக்கு...! சொத்துக்கும் ஒரு குணமிருக்கு! அதுட அசில மாத்த ஏலாது! கஷ்டந்தான்...! ஆனால் மனிசரில ... இரக்கம், அன்பு, அல்லாக்கு பயம் ... என்டிருந்தால்...கொஞ்சம் மாறும்...! ஆனால், முழுக்க மாத்த ஏலாது..."

"நீங்க, சொல்லிற 'மாறுகிற' காலமெல்லாம் வாறதுக் கிடையில, கடல் வத்தி கருவாடுதின்ன காத்திருந்து குடல் வத்திச் செத்த பூனையிர கதையாத்தான் முடியும்!"

"மாறாது புள்ள! மாத்த வேணும்!!"

"நம்மால மட்டும் மாத்த ஏலுமா...?"

"இப்பதானே சொன்னன், நம்மால ஏன்டதைச் செய்வமென்டு...!"

"நாம ஏழையள்...!, காலக்கையை கசக்கி, வாய்வயித்த கழுவிற, நமக்கு மேல்மிச்சமா கிடைக்காட்டியும் பாடுபடுறதுக்குரிய பலனாச்சும் கிடைக்குதில்லயே...? அதுபோக... போடியார் கூப்பிட்டனுப்பியிருக்காரே அதுக்கு, என்ன சொல்லப் போறயள்...?"

"அந்தாள்...திரும்பவும் கூப்பிட்டனுப்பியிருக்கிறான்... அதுதான், எனக்கு விளங்குதில்ல...?"

"காலையில்தானே, அங்க போய் வந்தயள்...? அப்ப அந்தாள் ஒன்டும் கதைக்கல்லயா...?"

"கதைச்சதுதான்...!"

"என்ன கதைச்சது...?"

"கட்டாயம் சொல்ல வேணுமா...!?"

மீரான், கொஞ்சம் கோவமாகவே கேட்டுவிட்டான்!

"சொல்லாட்டி விடுங்களன்...! அதையெல்லாம் சொல்லிறதுக்கு...வேற ஆக்களிருக்காங்களாக்கும்...?"

"அதுக்குள்ள, முயல், மூக்கில புல்லுக்குத்திற் றாக்கும்...? சரி பின்ன சொல்லிறனே... கொழும்பில் டாக்குத்தரா இருக்காரே போடியார்ர மகன்... அவரும், அவர்ர கூட்டாளிமாரும் நாளைக்கி வாறாங்களாம் நாலைஞ்சி நாள் நிற்பாங்களாம்...அதுவரைக்கும், அணிவிடை பணி விடைசெய்ய, உன்னவந்து நிற்கட்டாம்...என்டு சொன்னாரு..."

"நீங்க என்ன சொன்னயள்...?"

"என்ன சொல்லுவன்...? முகத்தில அடிச்சாப்போல, 'அதுக்கு வேறாளப் பாருங்க!' "

என்டு, சொல்லிப் போட்டு வந்திற்றன்!

"வேறொண்டும்...சொல்லல்லயா...?"

"வேற...என்டால் என்ன...?"

"வித்தியாசமா...ஒன்டும் சொல்லல்லயே...? அப்ப,...அதை விடுங்க...!"

"வித்தியாசமென்டால்...என்ன...? நீ, எதையோ மறைக்கிறாய்...?"

"இது, ஒரு தொறட்டாப் போச்சி...! அந்தாள்...'அதபு'* இல்லாம, 'ஒருசாதிக்கதை' யெல்லாம் கதைக்கிறான்...! இனி அந்தாள்ள வளவுக்குள்ளயும் கால் வைக்கமாட்டன்...!என்டு, அன்டைக்கி...ஒங்களுக்கிட்ட சொன்னனல்லவா...? அதுக்குப்பொறகு,...இன்டைக்கி, ஒங்களிட்ட ஏதாச்சும்...அள்ளி வச்சிருப்பாரோ...? என்டு, அறியத்தான் கேட்டன்...?"

"அப்பிடி, ஒன்டும் கதைக்கல்ல! ஆனால், அந்தாள்ள கதை எனக்குப் பிடிக்கல்ல...! ஒரு, வேள...நாங்க அட்டப் பள்ளத்துக்குள் வெள்ளாமச் செய்யிற செய்யக் காரன்களெல்லாம் கூடி, ஒரு சங்கமாச் சேர்ந்திருக்கமே... அதப்பத்தி கேள்விப் பட்டிருப்பாராக்கும்...?"

"அதக் கேள்விப்பட்டு என்ன செய்யப் போறாராம்...? இவர்ர வீட்டால கஞ்சிக்கு உப்பென்ன? கறிக்கி மொளகென்ன? நாம, காலக் கையை கசக்கினாத்தானே...அதுகும், பிச்சை போடிறார்...!"

"அது சரிதான்...! ஆனால்... நாங்க சங்கமாச் சேர்ரதையெல்லாம் அந்தாக்கள் பொறுத்துக்க மாட்டானுகள்! அந்தாக்களிட்ட காசி பணம், செல்வாக்கு எல்லா மிரிக்கி ஈனமிரக்கமில்லாத சாதியள்! எதுவும் செய்வானுகள்...! நாம, கொஞ்சம் கவனமாயிருக்க வேணும்! அதுகும், நீ, கவனம்!"

"சும்மாதான் போச்சி...! அப்பிடி, என்னமும் நடந்தா அவன்ட, மணிக்குடலப்பிச்சி மாலையாப் போட்டிட்டுத்தான் மறு வேல பார்ப்பன்!!"

---

அதாபு*-வேதனை.

"டேய்...மீரான்...!"

"போடியாரா...வாங்க!"

"ஒ... போடியார்தான்"

"இருக்க வாங்களன்..."

"இருக்க வரல்ல! ஒரு முடிவு கட்டிற்றுப் போக வந்திருக்கன்...!"

"என்ன, சொல்லிறயள் போடியார்...? விளங்கச் சொல்லுங்களன்...!"

"ஒங்களுக்கு இப்ப, விளங்க மாட்டாடா! நீங்கெல்லாம் இப்ப பெரிய ஆக்கள்...! கூப்பிட்டனுப்பினா வர மாட்டயள்...! ஒரு வேலவெட்டிக்கு, அவளுகள அனுப்பச் சொன்னா அனுப்ப மாட்டயள்...! அந்த மட்டுக்கு நீங்கெல்லாம் வந்திற்றியள்! எல்லாம் கேள்விப்பட்டுக் கொண்டுதான் வாறன்...!"

"என்ன, கேள்விப்பட்டயள் போடியார்...?"

"என்னடா ஒன்டும் தெரியாதவனைப்போல கதைக்கிறாய்...? செய்யக்காரனுகளெல்லாம் சேர்ந்து சங்கம் அமைச்சிருக்கயளாமே ... அதுக்கு, நீதானாமே காரிய தரிசி...?"

"அதெல்லாம் மெய்தான்"

"மெய்தானா...? நீங்க, கூடி...சங்கம் அமைச்சி... அதையும் நாங்க, பாக்கத்தான் போறம்! நல்ல தனமாச் சொல்லிறன்...இதையெல்லாம் விட்டிட்டு...ஒழுங்கா வந்து, தேவையானதை வாங்கிக்கிட்டு, தொழிலைச் செய்! அந்தப் பொடிச்சையும் அனுப்பிவை!"

"அது நடக்காது போடியார்...!"

"அப்ப, என்ன சொல்லிறாய்...?"

"என்ன சொல்லிறது...? செய்யக்காரன் – கூலிக்காரனுகள்ற சங்கமிது...! இதுக்கேன் போடியார், நீங்க, பயந்து சாகிறயள்...? அதுவுமல்லாம... பொடிச்சையெல்லாம் அனுப்பி வைக்கிற வேலையெல்லாம் இனி நடக்காது!"

"சும்மா, மடத்தனமா கதைக்காத...! அனியாயமா, அழியப்போறயள்!"

"இப்ப, என்ன அழியாமலா இருக்கிறம்...?"

"உங்களுக்கெல்லாம் வாய் நீண்டு போச்சுடா... மருந்து கட்டினால்தான் சரிவரும்!"

"என்ன, பயங்காட்டிறயளா...? அது, காலம் மலை ஏறிப்போச்சு..."

"அப்ப, இப்ப என்ன சொல்லிறாய்...?"

"என்ன சொல்லிறது...? எங்கள வெட்டி, துண்டுதுண்டா போட்டாலும் சரிதான் சங்கத்த கலைக்க மாட்டம்!!"

"துபூ...! நாயளும், நாயள்ள சங்கமும்!"


"போடியார்...! போ வெளியே...! என்ட, ஆத்திரத்தக் கிளப்பாத...! மரியாதையாச் சொல்லிறன் போவெளியே!!"

அதுக்குப் பிறகும், அங்கு நிற்பதற்கு போடியாருக்கு ஒன்றும் புத்தி கெட்டுப்போகவில்லை!

குறிப்பு ;

**கலாநிதி சி. மௌனகுரு அவர்கள், இலங்கை வானொலிக்கு இதை நாடகமாக்கி ஒலிபரப்பியதாக ஞாபகம். ஏதோ, ஒரு பத்திரிகையிலும் வெளிவந்தது. ஆண்டு, எழுபதுகளாக இருக்கலாம்.**

# மண்பூனைகளும் எலி பிடிக்கும்!



**வி**ல்லுக்கத்தியும் ஆளுமாக, காமிது ஹாஜியார் அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள்! அதுமட்டுமல்ல, நெருப்புப்பெட்டி ஒன்றையும் எடுத்து, இடுப்புச் சாறனுக்குள் செருகிக் கொண்டார்!

தோளில் ஒரு துண்டு. தலையில் கூர் விழுந்த ஒரு வட்டத் தொப்பி. தாடி மீசை. அடியும் நுனியும் தறித்த பனங்குத்தி மாதிரி, தோற்றம். அவர்தான் காமிது ஹாஜியார்.

"இன்டைக்கி ரெண்டில ஒன்டு, பார்த்துப் போட்டுத்தான், தண்ணி வென்னி குடிக்கிற தென்டாலும் குடிப்பன்! குடும்பம், சாதி சனம் என்டெல்லாம் பார்த்தால், காரியம் நடக்கிதில்ல! இது ...காசோட கூடிய காரியம் கண்ணான வாப்பா எண்டாலும் சரிதான், பிஸ்னஸ் என்டால் பிஸ்னஸ்தான்!

'தின்னவும் இல்லாம, தொழில் செய்ய வசதியுமில்லாம கிடக்கிறம்...பா, ஒடித் தாங்க...நெய்து சாறனத்தாறம்' என்டு, கெஞ்சினதுக்கு...பா, ஒடிக் கொடுத்தா...ஒழுங்கா தொழிலச் செய்து, சாறனுகள தாறத விட்டிட்டு பக்கத்துக் கடையில நூல்விலை விசாரிக்கிறதும்...சாறன்ட விலைய விசாரிக்கிறதும்...இப்ப என்னடா என்டால்... ஆட்டைக் கடிச்சி மாட்டைக் கடிச்சி ... இப்ப, மனிசனை கடிக்கவந்தாச்சி...அவன் – மஹ்மூது மரைக்கானுக்கல்லவோ, சாறன் நெய்து கொடுத்திற்று நாலும் வாங்கிறாளுகளாம்...!

வேலிக்கு போட்ட முள்ளு...காலுக்கு தைத்த மட்டும் இனிச்சரிவராது! கணக்கு வழக்கைப் பார்த்து கறந்து போட்டுத்தான் மறுவேல...!"

புறங்கைக் கட்டை கட்டிக் கொண்டு, தன்பாட்டில் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்த காமிது ஹாஜியார், இவ்வாறு, உரத்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்!

"அந்த, நேரத்திலயே, நான் சொன்னன்! கேட்டாத்தானே...! மாமா-மருமகள் என்டு, உறவு கொண்டாடிக் கொண்டு வாறாளுகள்... நாளைக்கி, கையில நாலு சதத்தை கண்டாளுகளென்டால்... நமக்கு திரி வைப்பாளுகள்... எதுக்கும், அவளுகள்ள வளவுறுதிய வாங்கி வச்சிக் கொண்டு தறியை போட்டுக் குடுங்க...! என்டு, வழிக்கு வழியாகச் சொன்னன்! கேட்டாத்தானே...! இப்ப, பட்டுக்கு இழுங்க...!!"

ஹாஜியாரின் தர்மபத்தினியும் தனது தீர்க்க தரிசனத்தை பறைசாற்றிக் கொண்டார்!

"அடியேய்...! நீ, கத்தாதடி...!! குடுத்த எனக்கு வாங்கவும் தெரியும்!! ஆனானப்பட்ட பூனையெல்லாம் மண்கவ்விற்று, இந்த, மண்பூனை வந்துதான எலிபிடிக்கப் போகிது...? அதுக்கு, வேற ஆள்தான் பார்க்க வேணும்!

...இந்தாங்க, விதானையார்...! நான் சொன்ன முறைப்பாட்டையெல்லாம் எழுதிக் கொண்டீங்கதானே...? எழும்புங்க போவம்!"

ஹாஜியாரின் 'விஷேச' அழைப்பின் பேரில், சமுகமளித்து, அவரின் முறைப்பாட்டையும் எழுதி, அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க போவதற்காக வந்திருந்த விதானையார், சாவி கொடுத்தவிட்ட தலையாட்டிப்

பொம்மையைப் போல, ஹாஜியார் முன் செல்ல, பின்னால் அவர், நடந்து கொண்டிருந்தார்.

தலைவாசல் கதவை, தாண்டிய அவர்கள், கடற்கரைக் 'கொளனி'க்குப் போகின்ற அந்தக் கிறவல் றோட்டிலிருந்து இறங்கி, அந்த மணல் ஒழுங்கையில் நடந்து கொண்டிருந்தார்கள்.

"ஹாஜியார்... நான்... கேட்கிறன் என்று, கோபிக்காதீங்க...இப்ப, நீங்கபோட்ட முறைப்பாட்டை விசாரித்து, ஒரு சமாதானத்துக்கு வரத்தானே போறம்...?"

"இதென்ன கேள்வி விதான...!"

"அப்ப...இந்த...வில்லுக்கத்தி, நெருப்புப் பெட்டி...எல்லாம் என்னத்துக்கு ஹாஜியார்...?"

"சும்மா, தொடை நடுங்காத விதான...! என்ன வந்தாலும் நான், உன்னக் காப்பாத்துவன்...! நீ, யோசிக்காத...!"

"அப்பிடியெல்லாம், உங்கள்ள நம்பிக்கை இல்லாம கேட்கல்ல...நீங்க என்ன செய்யப் போறயள் என்றதை என்னிட்டயும் சொன்னால்...திட்டம் போட்டே விஷயத்தை வெல்லலாம்! அதுக்காகத்தான் கேட்டன்...!"

"திட்டம்கிட்டமெல்லாம் போட்டு, செய்யிறதுக்கு...இது, விஷயம் காணாது! எறும்பு, காலைக் கடிக்கப்பார்க்கிது...! அதை, கையால தட்டிறதுக்கு, என்ன திட்டமும் மண்ணாங்கட்டியும்?"

"அது சரிதான்... என்டாலும், குஞ்சிக் கோழி என்டாலும் குனிஞ்சிதான்அறுக்கவேணும்...அப்பிடியுமிருக்கு...! அதுக்காகத்தான் சொன்னன்...இனி, உங்கட இஷ்ட்டம்!"

"அதுவும் சரிதான்...தறி, நாலு போட்டுக்கொடுத்து ..., அவளுகள், நம்மிட்ட தொழில் செய்த வகையில, ஆயிரத்தி எண்ணூற்றி நாற்பத்தெட்டு ரூபாவும் சதக்கணக்கும் தருமதி இருக்கிது! அது நமக்கு இப்ப காசாக வேணும்!

இல்லாட்டி, கிடக்கிற தறியளும் பாவும் நமக்காக வேணும்! இதுதான் விஷயம்.

முதல்ல..., இந்தக்கடன் தாறதா, இல்லையா? என்டு, கேட்கவேணும்! 'தருவம்' என்டுதான் பதில்வரும். அப்பிடிச் சொன்னா...அடுத்த கேள்வி, 'எப்ப தாறது?' என்டு கேட்க வேணும்! அதுக்கு, 'கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தருவம்' என்டுதான் சொல்லுவாளுகள்! அப்பிடிச் சொன்னா..., 'அதுவரைக்கும்...என்ன உத்தரவாதம்...?' என்டு, அதைத்தான் கேட்டுப்பிடிக்க வேணும்! அங்கதான் விதான...ஒன்ட, கெட்டித்தன மிரிக்கி...!

இதுக்கெல்லாம், பிடி கிடைக்கல்லயோ, அதுக்குப் பொறகு, அதை, நான் பார்த்துக்குவன்! என்ன வந்தாலும் சரிதான், தறியில கிடக்கிற, பாவை அறுத்து, ஆரையென்டாலும் பிடிச்சி வீட்ட அனுப்பிரவேணும்! அதுக்குப் பொறகு வீட்ட வந்து, ஆக்கள் ரெண்டு பேரையும் வண்டிலையும் அனுப்பி, "தறிகளை ஏத்திக்கொண்டு வாங்கடா" என்டால் வந்திருவானுகள்!

இல்லாம...பாவை அறுக்க விடாம கத்திக்கொண்டு நின்டாளுகளென்டால்...கடைசி மருந்து ஒரு நெருப்புக்குச்சி சொன்ன வார்த்தை கேட்கும்!"

"அப்பிடியெல்லாம் வராமல்...ஒரு மாதிரி சமார் பிடிக்கலாம் என்டுதான் எனக்குப் படுகிது...! ஏனென்டால் பாருங்க ஹாஜியார் ... என்ன இருந்தாலும் அதுகள் உங்கட ரத்தம்...உங்கட கூடப் பொறந்த ராத்தாட மகள் - மருமகள், பேத்தி...பிள்ளையள் தானே...?"

"விதான...இந்தத் தேவையில்லாத கதையளப் போட்டிட்டு நான், சொல்லிறாப் போல கேளு...!"

"சரி ஹாஜியார்...! ஆனாலும் எனக்கொரு இன்னொரு யோசனையும் படுகிது...அப்பிடிச் செய்தால், விஷயம் இன்னும் லேசாக முடிஞ்சிரும் என்டு நினைக்கிறன்...!"

"அப்பிடி, என்ன யோசினையோ...?"

"பொலிஸுக்குப் போறதுக்கு திறமான றிப்போட் ஒன்டு தாறன். 'கொடுக்காப் போல கொடுத்து' பொலிஸயும் கையோடயே கூட்டி வந்திற்றால்... நினைச்சபடி விஷயத்தை முடிச்சக்கலாம்"

"விதான... நீ, ஏன் பயந்து சாகிறாய்...? பொலிஸுக்கு போகத் தெரியாம, உன்ன, நான் கூட்டிக் கொண்டுவரல்ல...! குடும்பம், பிள்ளைகுட்டி என்டும் பாராம...ஏதோ, நான்தான் பிழை செய்த மாதிரி, நாலுபேர் இவளுகளுக்காகவும் கதைப்பானுகளே...அதிலிருந்து தப்பத்தான் உன்னக் கூட்டிவாறன்...என்ன, இப்ப விஷயம் விளங்கிதா விதான...? இது, காதோட காது வச்சாப் போல காரியத்தை முடிச்சுக்கலாம்...!"

"சரி, ஹாஜியார்"

"விதான...இனி, உன்ட ஆலோசன ஒன்டும் வேணாம்! அந்தா...தெரியுதே...! தகரக் கடப்பு போட்ட வேலி,...அதுக்குள்ள தெரியிறதுதான் வீடு!"

**ம**ருதமுனைக் கிராமத்தின் மத்தியில், குடியிருப்பு காணிகளுக்கு எற்பட்டு வருகின்ற தட்டுப்பாட்டிற்கு, கிராமத்தின் கடற்கரை ஒரமாக கிடந்த வெம்பு மணல்பூமி, ஒரளவுக்கு ஈடு கொடுத்தது!

இந்த நிலைமையில், நிலம் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர், மேலதிகாரிகள், ஊழியர்களின் காலைக் கையைப் பிடித்து, "குமர்குட்டிகள் கிடக்கிது...இருக்க நிலமில்ல, குடியிருக்க வீடுமில்ல" என்று, முறைப்பாடு செய்ததன் பயனாகவும் அதிகாரிகளுக்கு 'அதை இதை'க் கொடுத்ததன் பேரிலும் ஒரு வளவுத் துண்டுக்கு 'பேமிட்' பெற்றதென்பது, மம்மதுப் பிள்ளை-செய்தும்மா தம்பதிகளைப் பொறுத்தமட்டில் ஒரு அறபு – இஸ்ரவேல் யுத்தம்தான்.

அந்த நேரத்தில் செய்யதும்மாவைப் பெற்றவர்கள்,... தம்மால் முடிந்த மட்டும் சீரும் சிறப்புமாகத்தான் மம்மதுப்பிள் ளைக்கு'முடித்து'வைத்தார்கள். அவர்களுக்கு தலைப் பிள்ளை

பெண்ணாகப் பிறந்த அதிஷ்டம், மம்மதுப்பிள்ளை தம்பதிகளுக்கு சீதனமாக கிடைத்த வீடும் வளவும் முதலாவது எடுத்த மருமகனிடம் பறிபோயிற்று!

அதுக்குப் பிறகு, பராயப்பட்டுப் போயிருந்த இரண்டு குமர்களையும், இளசுகளையும் அள்ளிக்கொண்டு அந்த வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை! நல்ல காலம், இந்தக் கடற்கரைக் 'கொளனி'யாவது தஞ்சமடையக் கிடைத்தது!

மம்மதுப்பிள்ளை, கே. எம். மரைக்காரின் தம்மங்கடுவ, புகையிலை வாடியிலும், மாட்டு வாடியிலும் மாறி மாறி நின்று, தொழில் செய்து, காலத்தையெல்லாம் கரியாக்கியது மட்டுமல்லாமல், மரைக்காரை ஹாஜியாராகவும், ஒரு பெரிய போடியாராகவும் உயர்த்துவதற்கு உதவியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, உருக்குவாள் மாதிரி இருந்த தனது உம்பை, தூண்டில் போடக் கொண்டு போகும் களைக்கம்பு மாதிரியும் ஆக்கி வைத்திருக்கிறார்.

செய்யதும்மாவின் விடாப்பிடியாலும் கெட்டித்தனத்தாலும் கடந்த, சில ஆண்டுகளாக மம்மதுப்பிள்ளை ஊரோடயே நின்று, பரம்பரைத் தொழிலான நெசவுத் தொழிலைச் செய்து வருகிறார்.

கூலிக்கு, நெசவு செய்துகொண்டிருந்த மம்மதுப் பிள்ளைக்கும் குறிப்பாக, மருமகள் - செய்யதும்மாவுக்கும் ஹாஜியார் மாமா கூறிய மகத்தான ஆலோசனையின் பேரிலும் 'நமக்கும் சொந்தத்தில தறிபோட வருகிறதே...' என்ற, ஒரு சின்ன ஆசையின் பேரிலும்தான் நாலு தறியும் அதுக்குத் தேவையான நூலும் உபகரணங்களும் 'நியாயமான' விலை போட்டுக் கொடுக்கப்பட்டது!

தாயும் தகப்பனும் குமர்களும் குட்டியளுமாகக் கிடந்து இரவும் பகலும் சந்துப்பட்டை கடுக்ககடுக்க தறி அடித்ததுக்கும்...கட்டை, தார் சுத்தியதுக்கும் பொதுவில், தின்டதும் உண்டதும் சுண்டலும் சோறும்தான்! உடுத்ததும்

போட்டதும் தறிக்கிடைத் துண்டுகள்தான்! ஆனால் வருஷா வருஷம் நோன்புக்கு கணக்கு வழக்கு பார்க்கும் போது மட்டும் மாமாவுக்கு இரண்டாயிரம் ரூபாவுக்கு குறையாத கொடுமதி இருந்து கொண்டே வந்தது!

இந்த நிலைமையில், நெய்கிற சாறன்களை, பக்கத்து வியாபாரிகளுக்கு கூடிய விலைக்கு விற்கவும், குறைந்த விலைக்கு நூல், தேவையான சாமான்களை வாங்கவும் மம்மதுப் பிள்ளை – செய்யதும்மா தம்பதிகள் நினைத்தார்கள் என்பது உண்மைதான்! ஆனாலும், 'ஹாஜியார் மாமாவின் கடனை மாதாமாதம் இறுத்து முடிச்சிரவேணும்' என்பதில், செய்ய தும்மா மிகவும் சிரத்தையோடுதான் இருந்தாள்.

**த**கரக் கதவில் தட்டுகிற சத்தம் கேட்டது!

"ஆரது...?"

"நான்தான், விதானையார் வந்திருக்கிறன்..."

"விதானையாரா...? வாங்க..." என்று, மம்மதுப்பிள்ளை, கூறிக்கொண்டு, தறியிலிருந்து இறங்கி வாசலுக்கு வருவதுக்கும், விதானையாரும் ஹாஜியாரும் வாசலில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

"ஏன் வாசல்ல நிற்கிறீங்க...? இருக்க...திண்ணைக்கு வாங்களன்...!"

"இருக்க வரல்ல! தொழில் செய்த வகையில கடன் தருமதி கிடக்கிது...அத, வாங்கத்தான் விதானயாரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறன்! தொழில் செய்யிற தென்டால்...ஒழுங்கா செய்திருக்க வேணும்! இது... பக்கத்தில நாலுபணம் கூட, போட்டானென்டால் அவனுக்கு சாறன் குடுக்கிறதும்...அவனுகளிட்ட நூல் வாங்கிற தும்...அதுக்கு, உங்கட வீட்டு முதலாயிருக்க வேணும்! இந்த...சள்ளெல்லாம் என்னத்துக்கு...? கணக்கு வழக்கைப் பார்த்து தீர்த்துக்குவம்...! எங்க ... அவ...? தொழில்

செய்யிறதுக்கு கடன்பட்டுக்கொண்டு வந்தாவே...அவ, அவவைத்தான் வரச் சொல்லு...!"

"அவவும் பிள்ளையளும் அச்சி - விழுது கோருக்கிறாங்க...என்ன செய்ய வேணுமென்டு என்னிட்ட சொல்லுங்களன்...?"

"ஒன்னிட்டச் சொல்லி, ஒன்டும் ஆகப்போறதில்ல...! அதுவுமல்லாம, ஒனக்கும் இதுக்கும் அலுவலுமில்ல...! அவ வத்தான் கூப்பிடு!!"

"ஏன், அவியளுக்கு அலுவலில்லாம...? சொல்லிறத, அவியளிட்ட சொல்லுங்க. நான், இங்கால கேட்டுக் கொண்டுதான் இருக்கிறன்...கையில வேல...! வந்துக்க ஏலாது..."

வழக்கத்திற்கு மாறாக, 'என்ன ஏதென்று' வந்து கேட்காமல், இருந்த இருப்பிலேயே, செய்யதும்மா சொன்ன பதில், ஹாஜியாரை மட்டுமல்ல, விதானையாரையும் கூட கொஞ்சம் திணுக்குற வைத்தது!

"செய்யதும்மா...நான் விதானையாரும் வந்திருக் கிறன்...நான், என்ட கடமையையும் செய்யவேணும். நீங்க...தொழில் செய்த வகையில்...ஒழுங்கா நடந்திக்க இல்லையாம்...அதனால கணக்குவழக்கப் பார்த்து, தீர்த்துக் கொண்டு போக, ஒங்கட மாமா – ஹாஜியார் வந்திருக்கிறார். இதுக்கு...என்ன சொல்லுறயள்...?"

"இதுக்கு, என்ன சொல்லுறது...விதானயார்? கணக்கு வழக்கு பார்க்கிறதுக்கு என்ன இரிக்கி...? எல்லாம் தெரிஞ்ச கணக்குத்தானே...? மாமாக்கு, நாங்க, இரண்டா யிரத்துக்குள்ள கொடுமதி இருக்கும். அத நாங்க கொடுப்பம்! கொடுக்காம மௌத்தாக மாட்டம்!!"

"அது சரிதான் புள்ள...எப்ப கொடுக்கப் போறயள்...? அது தானே தெரிய வேணும்..."

"விதானயார்...இது நாங்க, தொழில் செய்யப்பட்ட கடன்! தொழில் செய்து தான் இறுக்கவேணும்...! மொத்தமா அள்ளிக்கொடுக்க எங்களிட்ட என்ன இரிக்கி...?"

"அப்பிடித்தான்...என்டாலும், அதுவரைக்கும் ஒரு நம்பிக்கை வேணுமே செய்யிது...!"

"இது வரைக்கும் என்ன நம்பிக்கை இருந்துதாம்? அது தான் இனியும்...!"

"......................"

விதானையாருக்கு வாயடைத்துப் போயிற்று.

"விதான...! கனக்கக்கதை தேவையில்ல! ஆயிரத்தி எண்ணூற்றி நாப்பத்தெட்டு ரூபாவும் சதக்கணக்கும் தருமதி இருக்கிது...இனி, இவிய என்னிட்ட தொழில் செய்யவும் வேணாம், சாறன் சாமான் தரவும் வேணாம்! தரவேண்டிய காசுக்கு, கிடக்கிற தறியையும் பாவையும் கணக்குப் போட்டு தரச் சொல்லு!"

"எவ்வளவு லேசா இருக்கும்...!! நானும் என்ர குமர்குட்டியளும் அஞ்சி வருஷமாக் கிடந்து முதுகுமுள்ளு முறிஞ்சதுக்குப் பொதுவில், நாலு தறிக்கம்பும் ஒரு தறிக்குப் பாவும் இருக்கிது...! போதாக்கொறைக்கி இரண்டாயிரம் கடனுமிரிக்கிது...! தறியையும் பாவையும் கணக்குப் போட்டு தந்திற்று நாங்க தெருவிலயா நிற்கிறது...?"

"எங்க நின்டாத்தான் எனக்கென்ன...?"

"அது சரிதான்...! நீங்க அப்பிடித்தான் சொல்லு வியள்...! இதுக்கு அல்லாதான் கூலி தரவேணும்! என்ன செய்யிறது...? எல்லாம் மனுசர்ர கைக்குள்ள அகப்பட்டுப் போச்சே...! பால், வார்க்காட்டியும் பால்வார்த்த பானையையாவது பார்க்கப்படாதா...? எங்களிட்டையும் இருந்தால்...மாமாவும்தான் மருமகளும்தான்! எங்களிட்ட இல்லையே...?"

"இந்தா...கனக்க கதைக்காத...தருமதிக்கி, இந்த தறியையும் பாவையும் தாறதா, இல்லையா?"

"என்ர, சீவன் போனாலும் சரிதான்! அதுமட்டும் நடக்காது!!"

"நடக்காதா...? அந்த மட்டுக்கு வந்திற்றயா? ஒரு நெருப்புக்குச்சி சொன்ன வார்த்தை கேட்கும்!"

இடுப்புச்சாறனுக்குள் செருகி வைத்திருந்த நெருப்புப் பெட்டியை கையிலெடுத்தார், ஹாஜியார்!

"என்ன செய்யப் போறயள்...!? அல்லாவின் பேரில, சத்தியமா சொல்லிறன்...! என்னவும் நடந்திதோ...இந்த அரிவாக்கத்திதான் பதில் சொல்லும்...!"

செய்யதும்மாவின், அந்த அகோரத் தோற்றத்திற்கு முகம் கொடுக்க, பாவம் ஹாஜியாரால் முடியவில்லை! பக்கத்தில் நின்ற விதானையாரையும் காணவில்லை.

1971, தாமரை

# கடுகதி பறக்கிது



"இறங்கென்று சொன்னால் இறங்கன்! எத்தின தரம் சொல்லிறது? வந்தனோ...? பிடரியில் பிடித்து தள்ளிக் கொண்டுபோய் விட்டிட்டுத்தான் மறுவேல பார்ப்பன்!! மரியாத வேணுமென்டால்... மெதுவா இறங்கிரு...!...நீங்க சொல்லுங்க...எங்க போறயள்...?"

"ஏனையா... எரிஞ்சி விழுறீங்க ... உசிரோடயே கண்ணத்தின்டு போட்டு தவிச்சித்திரியிற கர்மக்காரனையா ... இடுவார் பிச்சையகெடுவார் கெடுக்காதீங்க...ஐயா...தர்மம் போடுங்கசாமி...!"

"பஸ் போகப் போகிது...இறங்கப் போறயா இல்லையா?"

"இன்னம் டிக்கட் வெட்டி முடியல்ல...அதுக்குள்ள பஸ் போகப் போகிதா...? என்னையா... ஈனமிரக்கமில்லாத ஆளாயிருக்கிறயே..."

கண்டக்டர் புலியாக மாறினார்! ஒரே பாய்ச்சல்!

"என்னடா கொள்ளையாக் கதைக்கிறாய்...?

எடுக்கிறது பிச்சை...! அதுக்குள்ள வாய்...? வாயைக் கிழிச்சிப் போடுவன் றாஸ்க்கல்!!"

"ஐயோ...கடவுளே...!"

கண்டக்டரின் திடீர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க அந்த மனிதரால் முடியவில்லை! தலை அடிபட விழுந்து மிதிபலகையில் தடபுடவென்று உருண்டு, தரையில் போய் விழுந்தார்!

அந்தக் கண்டக்டரை, அப்படியே பிடித்து அடித்து நொறுக்கி எறிய வேண்டும் போலிருந்தது! ஆனாலும் சகித்துக் கொண்டு உடனே இறங்கினேன். அந்த மனிதனை, மெல்லத் தூக்கி நிமிர்த்தினேன். விழுந்து கிடந்த அவரின் கைத்தடியையும் சிதறிக் கிடந்த சில்லறைகளையும் பொறுக்கி அவரின் கைகளுக்குள் வைத்தேன். அடிபட்டு, உரஞ்சுப்பட்ட காயத்திலிருந்து இரத்தம் கசிந்த கொண்டிருந்தது,

சனங்கள் கூடிவிட்டனர்.

"ஐயோ, பாவம்...இதென்ன அக்கிரமம்...? அதுவும்...பிச்சைக்காரனுக்கு கைநீட்டிறதா...?"

என்றார்கள் சிலர்.

"இவங்களுக்கு, இதுவும் வேணும் இன்னமும் வேணும்...இவனுகள்ட தொல்லை, பெருந் தொல்லையாப் போச்சு..."

என்றார்கள் வேறு சிலர்.

இன்னும் சிலர், புதினம் பார்த்துக் கொண்டு நின்றார்கள்!

'என்ன நடந்தால் நமக்கென்ன...?" என்று இருந்த இடத்திலேயே இருந்தார்கள் வேறு சிலர்.

இதற்கிடையில்,

"என்ன இது...?" என்று, கேட்டுக்கொண்டு கூடி நின்ற சனங்களை விலக்கியபடி வந்து சேர்ந்தார் அந்த பஸ் றைவர்!

“உங்கட, கண்டக்டர்ர கெட்டித்தனம்!” என்றேன்.

“இருக்கும், இருக்கும்...!”

என்று, பதில் சொல்லிக் கொண்டே அந்த பஸ்ஸுக்குள் ஏறினார் றைவர்.

“சீ...! நீயும் ஒரு மனிசனா...? மிருக சாதி கூட, இப்பிடிச் செய்யாது...! போயும் போயும் ரெண்டு கண்ணும் தெரியாத பிச்சைக்காரனுக்கு கைநீட்டிற்றியே...! உன்ன கண்டக்டராப் போட்டுக்கொண்டு டியூட்டி செய்ய வந்தால்...மானம், மரியாத, மனுசத்தன்ம எல்லாத்தயும் வித்துப் போட்டுத்தான் வரவேணும்...! உன்னோட, எனக்கு வேலை செய்ய ஏலாது...!”

என்று, கன்டக்டரோடு றைவர் கத்தினார்!

“உன்னோட வேலைசெய்ய...நானும் ஆயத்தமா இல்ல...அதைப் போய் டிப்போவில் பாப்பம்...! நடந்ததை என்னென்டு கேட்காமல் ஏன் கத்திறாய்...?”

“நடந்தது தான் தெரியிதே...உன்ன...எனக்குத் தெரியதா...? இப்பிடி எத்தின விஷயம்...”

“இந்தா...நீ, உன்ட வளையத்தைப் பிடி பார்ப்பம்...”

“நான் வளையத்தப் பிடிக்கிறன்...ஆனால்...மனிசன்ர பாவம் உன்ன, சும்மா விடாது...!”

என்று, கூறிக் கொண்டு...பஸ்ஸிலிருந்து இறங்கி வந்தார் றைவர்.

“உரஞ்சுப்பட்ட இந்த காயங்களுக்கு கொஞ்சம் பெற்றோல் போட்டால் டக்கென்று காய்ஞ்சி போகும்...பெரியவர்...! என்னோட கொஞ்சம் வாறயளா...?” என்று, கூப்பிட்டார்.

"அதெல்லாம் ஒன்டும் போடவேணாம்...! அப்பிடித்தான் போட்டாலும் தண்ணிகிண்ணி பட்டால் பழுத்துப் போகும்...! பொறகு அது பெரிய தொல்லையாப் போகும்...! இதெல்லாம் எங்களுக்குப் பழக்கம்தான்... தம்பி! அதெல்லாமில்ல, உங்களுக்கெல்லாம்... நீங்க செய்த உதவிக்கு... என்னென்டு நன்றி சொல்லிறது என்டுதான் தெரியல்ல!"

"நாங்க ... ஒரு உதவியும் உங்களுக்கு செய்ய இல்லையே பெரியவர்...?" நான், சொன்னேன்.

எனக்காக, நீங்கெல்லாம் அனுதாபப்படுறதும் தூக்கினதும் சாத்தினதும் உதவிதானே மனே...எங்க, அவன் பிள்ள கண்டக்டர்... அவனுக்கு கொஞ்சம் புத்தி சொல்லுங்க...! ஏழை எளியதுகளக் கண்டால் கொஞ்சம் இரங்கச் சொல்லுங்க இல்லாட்டி, அந்த பாவம் எப்பிடியாவது வந்து சுத்தும் என்டு, சொல்லுங்க...? சரிசரி எல்லாரும் கலையுங்க...? என்னத் தூக்கின தம்பி எங்க...? நீங்களும் போங்க...! றைவர்...எங்க...? நிற்கிறயளா...? என்னால இன்டைக்கி பஸ்ஸும் சுணங்கிப் போச்சில்லையா...? என்னென்ன அவசரத்தில, சனங்கள் வந்ததோ...நீங்க, போங்க றைவர்...! போங்க, போங்க...! எல்லாரும் கலையுங்க...!"

அவர், தனது கைத்தடிக்கம்பினால், முன்னுக்கும் பக்கங்களுக்கும் தட்டிப் பார்த்து, அடையாளம் கண்டு பிடித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்.

**நீ**ண்ட பஸ்ஹோன் அடித்தது!

அவசர அவசரமாக ஓடிப்போன சிலர், பஸ்ஸில் ஏறி தமது 'ஸீட்டை' காப்பாற்றிக் கொண்டனர்.

றைவரும் நானும்தான் கடைசியாக ஏறினோம். சாவீட்டில் சந்தித்துக் கொண்ட நெருங்கிய உறவினர்களைப் போல, நானும் றைவரும் ஆளையாள் முகத்தைப் பார்த்து தலையைக் குனிந்து கொண்டோம்.

கைகளைப் பின்னால் வைத்து, புறங்கையைக் கட்டிக்கொண்டு, 'அறுக்க' கொண்டுபோகிற ஆட்டுக்

கிடாயைப் போல, றைவர் போய் பஸ்ஸில் ஏறினார். நானும், எனக்குள் ஒரு பெருமுச்சை விட்டுக் கொண்டுபோய் பஸ்ஸில் ஏறினேன்.

நான், ஏற்கனவே இருந்த அந்த 'ஸீட்'டில், ஆரோ ஒரு கிழவி, சௌடாராக இருந்து கொண்டு, வெற்றிலைக் குட்டானுக்குள்ளிருந்த பாக்குத்தூளையும் வெற்றிலையையும் எடுத்துக்கசக்கி, தனது பொக்கை வாய்க்குள் போட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தக்கிழவியின் சந்தோஷத்தை கலைக்க, எனது இதயம் இசையவில்லை! தலைக்கு மேல் தொங்கிய வாரைப் பிடித்துக்கொண்டு நின்றுவிட்டேன்.

எதிர்பாராத விதமாக, எனக்கு ஏற்பட்ட அந்த ஏமாற்றத்தை, கிழவி எப்படி ஊகித்து விளங்கிக் கொண்டாளோ...? மெல்ல ஒருதரம் தலையை உயர்த்தி என்னைப் பார்த்தாள்.

அந்த அழகான கிழவியின் பார்வையில் இருந்த குளுமை, என்னை அப்படியே உறையச் செய்தது.

"தம்பி...! கன்டக்டர் ஐயாதான்...என்ன, இதில் இருக்கச் சொன்னார்...ஆனா..., இதில் ஆளிருக்கென்டு ஆரோ சொன்னதும்தான்! இப்ப, அதுக்கென்ன நீ, வந்து இருதம்பி...!"

"ஆச்சி...நீங்க இருங்க! உங்களுக்கு நின்டு கொண்டு வாறது கஷ்டமா இருக்கும்... எனக்கு நின்டுகொண்டு வாறதுதான் சுகமாயிருக்கு...!"

கண்டக்டர், கடைக்கண்ணால் என்னை ஒருதரம் பார்த்துக் கொண்டார். அந்தப் பார்வையில், எனது ஸீட்டை கிழவிக்கு கொடுத்துவிட்டு என்னைப் பழிவாங்கி விட்ட எக்களிப்பு நிழலாடியது. 'பாவம் இந்தக் கண்டக்டர்' என்று, நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன்!

"இல்ல...மனிசனுக்கு, எத்தினதரம் சொல்லிறது...? சொன்னால் கேட்கவேணும்! மனிசன்ர விசரைக் கிழப்பப படாது...! விடிஞ்சால் பொழுதுபட்டால்...இந்த, பிச்சைக்காரனுகள்ர தொல்லை பெருந் தொல்லையாப் போச்சு...! அதுவும்...இந்த, பஸ்ஸுக்குள்ள...நாலு நல்லமனிசர், பெரியமனிசர் பிரயாணம் பண்ன ஏலாது... என்ன ஸேர்...நான் சொல்லிறது, சரியா இல்லையா...?"

என்று, 'டிக்கட்'டை எழுதிக்கொண்டே அந்தப் பெரிய மனிதரைப் பார்த்துக் கேட்டார், கண்டக்டர்.

பஸ்ஸின் தடபுடல் சத்தம், ஆட்டம், குலுக்கல்...இவற்றுக்கு மத்தியிலும், சத்தம் போட்டு, தனது கட்சிக்கு ஆள்சேர்க்கும் வேலையில் 'கண்டக்டர்' ஈடுபட்டு 'அந்தரப்படுவதை' நினைத்துப் பார்த்துக் கொண்டேன்!

"யேஸ்...யூ ஆ...றைட்! சரியாத்தான் சொன்னீர்! ஒரு, 'மெனஸ்' தெரியாது...! நேரம், காலம் தெரியாமல் வந்து, கை நீட்டிறாங்கள்...! நீர் செய்ததுதான் சரியான வேலை!"

என்று, அந்தக் காற்சட்டையும் போட்டு, 'டை'யும் கட்டியிருந்த அந்த கனவான் கண்டக்டருக்கு தாளம் போட்டார்.

அதுக்குப் பிறகும், ஏதாவது கதைக்கவேணடுமென்று அவர் நினைத்தாரோ...என்னவோ, மெள்ள எழுந்து... தலையை பஸ்ஸுக்கு வெளியே நீட்டி வாயிலிருந்த சுருட்டை சப்பிய அந்த, எச்சிலை துப்பிவிட்டு, கடைவாயில் இருந்த அந்த யாழ்ப்பாணச் சுருட்டை மீண்டும் ஒரு சப்புச் சப்பி, இழுத்து, 'குபுக்' என்று, புகையை வெளியே தள்ளினார்.

'மெனஸ்' என்று, அவர் கூறிய அந்த ஆங்கிலச் சொல்லுக்கு அவரது அகராதியில் என்ன கருத்திருந்ததோ...? தெரியவில்லை.

பஸ், கக்கி வருகின்ற டீசல் புகையோடு. அந்த சுருட்டுப் புகையும் போட்டி போட்டுக் கொண்டு 'கமழ்ந்தது!' அதை, தாங்க முடியாத தலை இடியோடு, கையில் வைத்திருந்த

பத்திரிகையினால் எனது முகத்துக்கு நேரே வீசிக் கொண்டேன். பஸ்ஸுக்குள் சனநெரிசல் மனிச வெக்கை-அவிச்சல் அதுவேறு! கைலேஞ்சியை எடுத்து மூக்கைப் பொத்திக் கொண்டேன்.

என்னுடைய நல்லகாலம், அந்தச் சுருட்டு நூர்ந்து விட்டது! வருத்தத்தோடு, அந்தச் சுருட்டுக்குறையை கையில் ஒருதரம் எடுத்துப்பார்த்துவிட்டு வெளியே வீசினார்! 'அப்பாடா,' என்று, எனக்குள் நிம்மதியாக, ஒரு மூச்சு விட்டுக் கொண்டேன்.

"டிக்கட்ஸ்! எடுக்காதவங்க, ஆருமிருந்தால், டிக்கட்ஸ் எடுத்துக் கொள்ளுங்க..."

கண்டக்டரின் கடைசி அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது!

"மட்டக்களப்பிற்கு, ஒரு டிக்கட்" என்றேன்.

வந்து தந்தார். வாங்கிக் கொண்டேன்.

"புளியந்தீவுக்கு...எனக்குமொரு டிக்கட் தாமனே...!" என்று, கூறிக்கோண்டே தனது, முடுச்சை அவிழ்த்து ஒரு ரூபாக்குத்தி ஒன்றை கண்டக்டரிடம் நீட்டினாள் அந்தக்கிழவி.

சட்டென்று, காசை வாங்கி, தனது காக்கிச் சட்டைக்குள் போட்டுக்கொண்ட கண்டக்டர், டிக்கற்றையும், மீதி பத்து சதத்தையும் கொடுத்தார்.

டிக்கட்டை, பக்குவமாக வாங்கிய கிழவி, அதை பவித்தரமாக மடித்து, கையில் வைத்திருந்த வெற்றிலை பாக்குக் குட்டானின் ஒரு மூலைக்குள் வைத்துக் கொண்டாள்.

றைவர் வந்து தனது சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டார். தலைக்குமேல் கட்டியிருந்த பெல், "கணங்...! ணங்...!! என்று, இரண்டு தரம் அடித்தது!

ஓர், உறுமல் உறுமிக்கொண்டு அந்த, "கல்முனை - மட்டக்களப்பு" கடுகதி பஸ்வண்டி புறப்பட்டது.

நான், கொக்குத் தவம் செய்கிறேன்...! அதுவும், இன்னும் ஒரு மணித்தியாலத்திற்கு! இதற்கிடையில், கிழவி

என்னை, அடிக்கடி திரும்பி அண்ணாந்து பார்த்துக் கொண்டதையும் நான் அவதானித்துக் கொண்டேன்.

"தம்பி,...மனே ஒன்னத்தான்! கொஞ்சம் தள்ளியிருக்கிறன்...! நீயும் இருடா மனேய்...!" என்று, எனக்கு ஓர் உருக்கமான வேண்டு கோள் விடுத்தாள் கிழவி.

"வேணாம்... ஆச்சி! நீங்க இருங்க...! எனக்கு நிற்கிறதுதான் சுகமாயிருக்கு..." என்றேன்.

"அப்ப..., சரி மனே...!" என்று கூறிவிட்டு அந்த கிழவி மௌனமாக இருந்து விட்டாள்.

கல்முனையிலிருந்த புறப்பட்ட பஸ், பாண்டிருப்பு...மருதமுனை...பெரிய நீலாவணை...என்று, பறந்து கொண்டிருந்தது!

"தம்பி...ஏன்டா மனே...! இவ்வளவு விசையா, இது பறக்கிது...?"

"விசையா பறக்கிறதுக்குத்தான் இந்த பஸ்ஸை போட்டிருக்காங்க...!"

"அதுக்காக, இப்பிடிப் பறக்கிறதா...? தப்பித்தவறி குழந்தை குட்டியள் குறுக்கால வந்திற்றால்...என்ன கதிரா மனேய்...? அப்பனே...முருகா இதென்ன ஓட்டமடாப்பா...? குடல் வெளிய வந்திரும் போலகிடக்கு...! காதில, கிடக்கிற தொங்கட்டான் பிஞ்சி, பறந்திரும் போல கிடக்கு...!"

என்று, கேட்டுக்கொண்டே எதிர்காற்றுக்கு சிலும்பிப்பறந்து கொண்டிருந்த நரைத்த கூந்தலை, கைகளால் கோதிவிட்டுக் கொண்டாள்.

ஒருத்தரும் பெல் அடிக்கவில்லை! ஆனால், நெடுமூச் செறிந்து கொண்டு, பெரிய நீலாவணை தாமரை மடுவடி, வளைவில் பஸ் நின்றது!


ம 10

கறுப்புநிறமான 'ஒப்பல் வேகன்' ஒன்றிலிருந்து, சாம்பலநிறத்தில் காற்சட்டை கைச்சட்டை போட்ட இரண்டு பேர், அவசர அவசரமாகஓடிவந்து முன்னும் பின்னுமாக பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள்.

பிரயாணிகள் அனைவரும் தமது டிக்கற்றுகளை தடவிப் பார்த்துக் கொண்டார்கள்.

தனது, தலைக்கு மேலே இருக்கும் அந்த நீள் சதுரக் கண்ணாடியையே அண்ணாந்து பார்த்துக் கொண்டே இருந்த றைவர், ஒரு தரம் திரும்பிப் பார்த்து, கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார். துவாயை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

கன்டக்டரின் கைகளிலிருந்த, 'ரிக்கற்' புத்தகம் சட்டென்று பரிசோதகர் ஒருவரின் கைக்கு மாறியது! அவர், பிரயாணிகளின் மொத்தத் தொகையையும், புத்தகத்திலுள்ள தொகையையும் எண்ணிப் பார்க்கத் தொடங்கினார்! மற்றவர், 'டக்டக்'கென்று ரிக்கற் பரிசோதனையில் ஈடுபட்டார்!

'ரிக்கற்' புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டி எண்ணிக்கையைக் கூட்டி, அவர், குறித்து வைத்திருந்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தார்! பிறகு, உதட்டைப் பிதுக்கி, தலையை ஆட்டிக் கொண்டு புத்தகத்தை மூடிக்கொண்டார்!

கிழவியிடமிருந்த ரிக்கற்றும் வாங்கி பரிசோதிக்கப்பட்டது! ஆனால்...அது திருப்பிக் கொடுக்கப்படவில்லை!

"ஆச்சி...எங்க போறீங்க...? எவ்வளவு கொடுத்தீங்க...?"

என்று மட்டும் அந்த பரிசோதகர் கேட்டார்.

'ரிக்கற் செக்கிங்' முடிந்தது!

பரிசோதகர் இருவரும் தங்களுக்குள் எதையோ கதைத்துக்கொண்டு, குறிப்புகளை எழுதிக்கொண்டனர்.

கண்டக்டரின் முகம், காய்ந்த பலா இலையை நினைவூட்டியது! பிரயாணிகள் தமக்குள், ஒருவருக்கொருவர் கதைத்துக் குசுகுசத்துக்கொண்டனர்.

"தம்பி...என்னடா மனே...என்ர, டிக்கட்ட மட்டும் வாங்கிக் கொண்டு போறாங்க..."

கிழவி, என்னிடம் கேட்டாள்.

"பதினெட்டு காசிக்கித்தானே ஒங்களுக்கு டிக்கட் வெட்டவேணும்...ஆனா ஒங்களுக்கு...ரெண்டு காசுக்குத்தான் டிக்கட் வெட்டிரிக்காம்...

"அப்ப...மிச்சம், பதினாறு காசும் எங்கயாம்...?"

"அதுதான் ஆச்சி, இப்ப வந்திருக்கிற தொறட்டு...! அதுக்காகத்தான், அவரைப் பிடிச்சி இருக்காங்க...!"

"என்ன இருந்தாலும்...அவன்-கண்டக்டர் பாவம்டா மனே...என்ன கஷ்டத்தில...இப்பிடிச் செய்தானோ...அந்த பதினெட்டு காசையும் கட்டுவம்...அவனை விடச் சொல்லன்டா மனே..."

"இப்பபோய், அப்பிடிச் சொல்ல ஏலாது ஆச்சி...! கஷ்டம் இருக்கிறதுக்காக, எல்லாரும் இப்படி, செய்யத் தொடங்கினா...என்ன, ஆகிறது ஆச்சி...?"

"அதுவும் மெய்தான்டா மனே...! என்டாலும்...அவன விட மாட்டாங்களா...?"

"விடாம என்ன ஆச்சி...? மறியலுக்கு அனப்ப மாட்டாங்க, அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டால்...மன்னிப்பு கொடுப்பாங்க...ஆனா, இது முதல் தடவையா இருக்கவேணும்...!"

"அப்ப, சரிடா மனே...! நீ,,,எங்க போறாய்...? ஏன் நிற்கிறாய்...? தள்ளியிருக்கிறன்...நீயும், வந்து இரன்...! எனக்கு, ஒரு மாதிரியா இருக்கிது...நீ, நெடுக நின்று கொண்டு வாறாய்!"

"இல்ல, ஆச்சி...! நீங்க இருங்க...!!"


ரிக்கட் பரிசோதகர்கள் இறங்கினார்கள்.

மீண்டும், ஒரு பெரிய உறுமலுடன் பஸ் புறப்பட்டது. நான், இந்த அழகான ஆச்சியை நினைத்துக் கொண்டேன்!

சுமையாகத் தொடங்கிய பயணம் இப்போது, கொஞ்சம் சுகமாக இருந்தது!

**1969 வீரகேசரி**

# நவயுகப் பிசாசுகள்!



‘பொல்லாதவன்’ ‘சண்டைக்காரன்’ என்று, இங்கு, ‘வாழ்வாங்கு வாழ்கின்ற’ பெரிய, மனுஷர்கள் மத்தியிலும் பெரியமனுஷர்களாக ஆக, நினைக்கின்ற ‘லட்சியப் புருஷர்கள்’ மத்தியிலும் ‘பேரோடும் புகழோடும்’ வாழ்பவன் அப்பாஸ்.

உண்மையாகவே, அவர்களுக்கு அப்பாஸ் பொல்லாதவன்–சண்டைக்காரன்தான்! அவர்கள் நாகபாம்பாக படத்தை விரித்தால்...அவன், கீரிப்பூனையாக பாயநினைக்கின்றான்! அவர்கள், முதலையாக வாயைப் பிளந்தால்...வேட்டைக்காரனாக துப்பாக்கியை நீட்டுகிறான்! அதனால் அவன் சண்டைக்காரனேதான்.

தலை எழுத்து! அப்பாஸ் ஒரு வாத்தியார். அதுவும் தமிழ் வாத்தியார்! கேட்கவா வேணும் பஞ்சப்பாட்டுக்கு? அதுக்கு குறைச்சலே இல்லை. ஆனால், அப்பாஸ் அந்த பஞ்சப்பாட்டுகளுக்கு அப்பாற்பட்டவன்! அப்படித்தான்...அது, கேட்பதாக இருந்தால்...அவள்–பாதி காமிலாவைத்தவிர, ஆருக்கும் கேட்காது! அப்படித்தான், அது கேட்டுத்தான் ஆகவேண்டுமென்றால்...அது, அப்பாஸின் தோழர்களுக்கு மட்டும்தான் கேட்கும்.

இந்த, வாத்திமார்–‘கிளாக்கு’மார்...அதாவது சராசரி உத்தியோகம் பார்க்கின்ற ‘இரண்டும் கெட்டதுகள்’ இங்கு

பருகின்ற பாடு, பெரும்பாடு! அதுவும் இந்த வாத்திமார், சரியோ பிழையோ, நீதியோ அநீதியோ அதைப்பற்றியெல்லாம் மூச்சுவிட முடியாது! ஆரும் தப்பித்தவறி இங்கு, நீதிநியாயமென்று ஆராச்சும் 'மூச்சு விட்டால்...' அவ்வளவுதான்! பொலிஸில் என்றி அல்லது, கல்வி மேலதிகாரிகளுக்கு பிட்டிஸம்! அல்லது தொகுதி 'எம்பி'யின் தயவில், அனுராதபுர மாவட்டத்திலுள்ள 'தண்ணியில்லாத' காட்டுக்கு 'ரான்ஸ்வர்!' அதனால், பாவம் இந்த வாத்திமார் மூச்சுக்காட்ட மாட்டார்கள்!

ஏனென்றால், ...'எல்லாம் வல்லவர்களாக' இங்கு, சிலர் இருக்கிறார்கள். அவர்கள் 'எதையும்' செய்வார்கள்! அதனால், 'தானுண்டு தன்பாடுண்டு' என்று, 'மரியாதையாக' ஒதுங்கிக்கொண்டு, 'வாழுகின்ற' சீவன்கள்தான் இங்கு அதிகம். அவர்கள் மத்தியில் அவர்களின் 'பரிபாஷையில்' சொன்னால் அப்பாஸ் 'வாழத் தெரியாத ஒரு வாத்தி' மடயன்.

அவனுக்குத்தான் வாழத்தெரியவில்லை! மடயன். பாவம், அந்த 'புத்திசாலிகளாவது' வாழ்கிறார்களா என்றால், அதுவுமில்லை. அவர்கள், சதா செத்துப் பிழைக்கிறார்கள்!! ஆயிரம் பீத்தல். அதைப் பொத்துவதிலேயே அவர்களின் பாடுபோகிறது.

ஆனால், மாதா மாதம் கடையில் 'கொப்பிபோட்டு'-கடனுக்கு வாங்கும் கறிக்குரிய சாமான் தொடக்கம், பால்மா, சீனி வரைக்கும் 'நியாயமான' விலைகளுக்கு விற்று, மாதாமாதம் சுளைசுளையாக எண்ணி வாங்குகின்ற அந்த, பெரிய கடை முதலாளிக்கும் அது, தெரியும்.

ஊரில், முடுக்குகடைகளில் பொட்டைத் தராசுகளை வைத்துக் கொண்டு, 'சில்லறைக்கடை' நடத்துகின்றவர்கள் தொடக்கம், அரசாங்கம் உத்தியோகம் பார்க்கின்ற வாத்திமார், கிளாக்குமார் வரைக்கும் அங்குதான் அந்தப் பெரிய கடையில்தான் வாடிக்கை! அப்பாஸுக்கும் அங்குதான் வாடிக்கை. 'வாடிக்கை' என்றால், 'நாளைக்கு பின்னைக்கு' என்றோ, 'கொப்பி போட்டோ' அப்படி எதுவும் கிடையாது. ஆயிரம் கஷ்டங்கள் இருக்கும்! அப்பாஸுக்கு கடன் இருக்காது.

அந்தப் பெரியகடையின் சொந்தக்காரர் ஊரில் கணிசமான மனிதர். 'பெரிய மனிதர்' என்று, பேரெடுத்தவர். போன வருஷம் அவரும் அவரின் பிள்ளைகுட்டிகளுமாக மக்காவுக்குப் போய் வந்ததோடு மூன்று முறை புனித பூமியை மிதித்துவந்த பாக்கியம் பெற்றவர்!

நேரம் தவறினாலும் ஒரு நேரம் தொழுகை தவறாதவர். அவருடைய உதவி நன்கொடை மேற்பார்வையின் கீழ் 'குர் ஆன் மத்ரஸாக்'களும் நடைபெறுவதாகவும் கேள்வி. இது மட்டுமல்ல, ஏழை எளியதுகள்-என்று, வந்து நின்று தலையைச் சொறியும்போது 'அஞ்சைப் பத்தை' பார்த்தும் பாராமலும் உதவுவார். இதைத்தவிர, எந்தக் கட்சியில், ஆரு, அபேட்சகராக வந்தாலும் வலது கைக்கு கொடுப்பது, இடது கைக்கு தெரியாமலும் இடதுகைக்கு கொடுப்பது, வலது கைக்கு தெரியாமலும் 'நியாயமான' அளவில் உதவவும் செய்வார்! அதனால், யார் ஆட்சிக்கு வந்தாலும் அவரின் நலன்கள் பாதுகாப்பாகவே இருந்தன.

இப்படியெல்லாம், இருக்கத்தக்கதாகத்தான், அவரின் கடையில், "கட்டுப்பாட்டு விலைக்கு சாமான்கள் விற்கப்படுவதில்லை" என்றும் "பால் மா

பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது" என்றும், ஆரோ அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு செய்திருந்தார்கள்.

எப்படியோ, அது பெரிய கடைக்குப் பொசிந்து விட்டது! அப்படிச் சொல்வதிலும் பார்க்க, 'வழமை போல' மேலிடத்திலிருந்து அது, 'அடியாட்களால்' அறிவிக்கப்பட்டது! என்பது தான் பொருத்தம்!

அதைத்தொடர்ந்து, 'பிட்டிஸம்' போட்டார்கள் என்று, சந்தேகப்பட்டவர்களிலெல்லாம் அந்த, பெரியகடை முதலாளி நேரடியாகவும் மறைமுகமாகவும் எரிந்து விழுந்து, பொரிந்து தள்ளினார். அத்துடன், சாமான் நிறுக்கின்ற பையன்கள் தொடக்கம், பெரியகணக்கப்பிள்ளை வரைக்கும் அனைவரும் உசாராக்கப்பட்டனர்.

இந்தச் சங்கதிகள் அப்பாஸுக்குத் தெரியாது! அவன், அந்த கடைக்குப் போயிருந்தான்!

பெரிய கணக்கப்பிள்ளை தான் 'கவுண்டரில்' இருந்தார், அவர் முதலாளியின் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அவரை 'கணக்கப்பிள்ளை' என்பதை விட, 'சின்ன முதலாளி' என்றாற்கூட பொருத்தமாகத்தானிருக்கும்!

காய்ந்த கம்புத்துண்டு மாதிரி, அந்தக் கடைக்கு வந்து சேர்ந்த கணக்கப்பிள்ளை, இப்போது, கொழுத்த செம்மறி ஆட்டைப் போல மாறியிருக்கிறார்!

"கடைக்கணக்கு எழுதத் தெரியும்"...அதுவும், 'சோலி தொறட்டு' சொந்த பந்தம், எதுவுமே இல்லாத ஆளென்று கூட்டிவந்து, கடையில் நிற்பாட்டி, வளர்ந்தவர்தான் கணக்கப்பிள்ளை! அதற்குப் பிறகு, 'பொண்ணும்' பார்த்துக் கட்டிவைத்து, மந்திரிக்கு, 'கொடுக்காப் போல கொடுத்து', இலங்கைப் பிரஜையாகவும் ஆக்கப்பட்டவர், கணக்கப்பிள்ளை! இந்த, நன்றியை எல்லாம் மறக்காமல் அவர், இரவுபகலாக உழைக்கிறார். அதுவுமல்லாமல், 'கணக்கு படைப்பதில்'

விண்ணனாகவும் பிஸ்னஸ் விஷயத்தில் 'விண்ணாதி விண்ணனாகவும்' அவர் விளங்குகிறார்.

பெரியகடைக்குப் போய் பார்த்தால் தெரியும்! மத்தியானம் மட்டும்தான் கொஞ்சம் ஆறுதல். மற்ற நேரங்களிலெல்லாம், காலையில் எட்டு மணிக்குத் திறந்து இரவுக்கு பத்து மணிக்கு பூட்டுகிற வரைக்கும் கணக்கப்பிள்ளை சதா 'பிஸி'யாகவே இருப்பார். நடுச்சாமம் இரண்டு மணிக்கு போய், தட்டி எழுப்பி சாமான் கேட்டாலும் வந்து, கடையைத்திறந்து, எடுத்துத்தருவார். 'உழைப்பில்' அப்படி ஒரு மூர்க்கம்!

'டெலிபோன் கோல் புக்' பண்ணி, கொழும்பு–புறக்கோட்டை மார்க்கட் நிலவரத்தை, அறிந்து...'ஓடர்' போட்டுக் கொண்டே...சின்னக் கணக்கப்பிள்ளை போட்ட 'பில்'களைச் 'செக்' பண்ணி காசு வாங்கி, கல்லாப் பெட்டியில் போட்டுக்கொண்டே கடைக்கு, வருகின்ற போகின்றவர்களை, 'இருங்க...' என்று, தானே...புட்டுவத்தை எடுத்துப் போட்டு உபசரிப்பதும்..."ஸேல்வேன்"காரர்கள், கொண்டுவந்து வைத்த 'ஸெம்பல்'களைப் பார்த்து 'ஓடர்' கொடுப்பதுமான கருமங்களை...எல்லாம் மிகவும் சுறுசுறுப்பாக ஒரே நேரத்திலேயே செய்யக்கூடிய அட்டாவதானியாக கணக்கப்பிள்ளை இருந்தார்.

"ஆரு...மாஸ்ட்டரா...? வாங்க வாங்க! அடேய் ஆபுதீன்...? மாஸ்ட்டருக்கு புட்டுவத்தை எடுத்துப் போடு! இருங்க மாஸ்டர்...! இந்த, 'பில்லை' ஒருக்கா, செக்பண்ணிப் போட்டு வாறன்...எப்பிடி மாஸ்டர்...சுகமா இருக்கிறீங்களா...? 'ஆ...ஹலோ...ஆரு பேசுறீங்க? கச்சேரியிலிருந்தா...? ஆ...சொல்லுங்க சொல்லுங்க...! எல்லாத்துக்கும்...கிளாக்கரை ஒருக்கா வந்திற்று, போகச் சொல்லுங்க...! சரிசரி வைக்கறன்...!' பிறகு...எப்பிடி மாஸ்ட்டர்...? நம்ம பையன் வகுப்பில் எப்பிடி மாஸ்ட்டர்...? அவனில், விஷேசமா கொஞ்சம் கவனமெடுங்க மாஸ்டர்...? என்ன...குடிக்கிறீங்க...?

"ஒரு, மாஸ்ட்டரைப்பேசி ரியூஷன் கொடுங்க"

"அதுக்குத்தான்... நீங்க, 'ஏலாது' என்டு, சொல்லுறீங்களே மாஸ்ட்டர்...?"

"நான், ஏலாதென்று சொல்லலயே... உங்கட வீட்டுக்கு வர ஏலாது... பின்னேரத்தில, ஸ்கூலுக்கு அனுப்புங்க என்டுதானே சொன்னன்...!"

"அது, கரைச்சல் மாஸ்ட்டர்...! வீட்டுக்கு வந்து ரியூசன் கொடுக்கக்கூடிய ஒரு மாஸ்ட்டரத்தான் பார்க்கவேணும்... அவர் கேட்கிறத கொடுக்கலாம்... எங்க...? விடிஞ்சால் பொழுதுபட்டால் இது மறியலாப் போச்சு...! லீவு கிடைக்குதில்லையே...! கொஞ்சம் பொறுங்க மாஸ்டர்...! ஆமா சேகுபீரு சின்னவெங்காயம், ஹோல்ஸலுக்கு... என்ன, போட்டே...? மார்க்கட்ல சாமான் தட்டுப்பாடப்பா... கொழும்பு மார்க்கட், அந்தருக்கு முப்பது ரூபா கூடப்பா...! இந்தா... இங்க வா, அப்பா...? இந்த பில்லைத் திருத்தி, 'ஆனாக்காவன்னா' புள்ளியைப் போட்டுக் கொடு...! பிறகு எப்பிடி மாஸ்ட்டர்... சொல் லுங்கோ...? இதுதான், மாஸ்ட்டர்... இந்தத் தொழில்! மனிசனோட முகம்பார்த்து கதைக்கக்கூட நேரமில்ல...!"

"அதுசரிதான்... காசு, கூடக்கூட நேரமும் காணாமத்தானிருக்கும்...!"

"அதென்டால் மெய்தான் மாஸ்ட்டர் அடே ஆபுதீன், இங்க வாடா! மாஸ்ட்டருக்கு குடிக்கிறதுக்கு... ஒறேஞ் பார்லி எடுத்து வாடா! "

"எனக்கு, அதெல்லாம் ஒன்டும் வேணாம்..."

"ஏன், மாஸ்ட்டர் அப்பிடிச் சொல்லுறீங்க...? மத்தியானம்தானே மாஸ்ட்டர்... சும்மா குடியுங்கோ... அடே, ஆபுதீன், நீ எடுத்துவாடா!"

"இப்பதான் குடிச்சன்...! தேவையில்லாமல் குடிப்பானேன்...?"

"அடே... ஆபுதீன் அப்ப விடு! மாஸ்ட்டர் வானாம்...

வாணாம்...என்கிறாரு...! பிறகு, எப்பிடி மாஸ்ட்டர்...சொல்லுங்க...? அடேய்...சிகரட்டின்னையாவது கொண்டு வாடா...அதையாவது பத்தட்டும்...!"

"அதெல்லாம் வேணாம் கணக்கப்பிள்ளை... அதையெல்லாம் விட்டிட்டன்...!"

"மிச்சம் நல்லம்...! வீணான செலவு...அது சரி...நீங்க, எங்கள கவனிக்கிறீங்களில்லையே மாஸ்ட்டர்...?"

"என்ன சொல்லிறயள்...நாங்க உங்கள கவனிக்கிறதா?"

"ஏன் இல்லாம...? ஊரிலிருக்கிற உத்தியோக காராக்கள் எல்லாருமே எங்களிட்டத்தான் எக்கவுண்ட்! நீங்க, ரெண்டொரு பேர்தானே மிரண்டுக்கு நிற்கிறீங்க?"

"அதுக்கென்ன...? எக்கவுண்ட்டுக்கு விற்காமல்...காசுக்கு விற்கிறது..., உங்களுக்கு, நல்லது தானே...?"

"நல்லதுதான் மாஸ்டர்...! ஒங்கட காசெல்லாம்...ஊருக்கு, வெளியே அல்லவோ போகிது...! அதுவுமல்லாமல்...எந்த நேரமும் மனிசர்ர கையில காசா இருக்கிது...? தட்டுப்பட்ட சாமான, கூச்சமில்லாம வாங்கிறதுக்கு எக்கவுண்ட் இருந்தால்...நல்லதுதானே மாஸ்ட்டர்...? நல்லதைச் சொல்லவந்தன்...அதுவுமல்லாம மாஸ்ட்டர், உங்களப்போல ஆக்களுக்கு, எங்களிட்ட எக்கவுண்ட் இருக்கிறது...எங்களுக்குப் பெருமை... அதுக்குத்தான் சொல்லவந்தன்...!"

"அப்படித் தேவை வந்தால்...அதை, பிறகு பார்ப்பம்...! இப்ப, பால்மா வகைகள் ஏதுமிருந்தால் சொல்லுங்க?"

"அதுதானே மாஸ்ட்டர்...ஒரு விலைக்கும் கிடைக்குதில்ல...! சாமான் தட்டுப்பாடு அப் பிடித்தான்...கூடக் கொடுத்து, வாங்கி வந்து, விக்கவும் ஏலுதில்ல...! அதுவுமல்லாமல்..ரெண்டு ரூபா கூட வித்துப் போட்டு இந்த ஊரானுகளோட சண்டை பிடிக்கவும் ஏலாது...ஏன் மாஸ்ட்டர்...கோப்பிறட்டி கடைக் குத்தானே...அரசாங்கம் பால் மாவையெல்லாம் கொடுக்கிது...அங்க, நீங்க கேட்டுப் பாக்கல்லயா, மாஸ்ட்டர்...?"

"அங்க இருந்தால்...ஏன் இங்க வாறம்...? அது, ஆகவும் மோசம்...!"

"நாங்க என்ன செய்யிறது...மாஸ்ட்டர்...? சாமான் நல்ல தட்டுப்பாடு! ஒங்கட அரசாங்கமும் இறக்குமதி செய்யிதில்லையே...? 'இல்லை' என்டு, சொல்லாமல், விக்கிறதுக்கு, ரெண்டு கேஸ் பால்மா, நேற்று வந்தது.தான்..அதை, ஒங்கட மாஸ்ட்டர் மார்தான் ஆளுக்கொரு ரின்னாக கொண்டு போயிற்றாங்க...!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது...அவசரமா பிள்ளைக்கு கொடுக்கிறதுக்கு எனக்கொரு 'டின்' வேணும்!"

"உண்மையாத்தான், சொல்லிறன் மாஸ்ட்டர்! சாமான் முடிஞ்சு போச்சு...! எதுக்கும் கொஞ்சம்..., பொறுங்க மாஸ்ட்டர்...! உங்களால எனக்கு தப்பவும் ஏலாது...! சாண்ஸ் இருந்தால் பார்ப்பம்...! அடே...இந்தா சேகுபீரு...? அவர்–சாமித்தம்பி கிளாக்கருக்கு எடுத்து வச்சதை...கொண்டு போயிற்றாரா...? அதப்பாரு...!"

"அவர் ஊரில இல்ல...!"

"உங்களுக்கு சாண்ஸ்தான் மாஸ்ட்டர்! அடே... அதை மாஸ்ட்டருக்கு குடு...!"

"எனக்கு, சாண்ஸோ இல்லையோ...! என்ட மகள் பாடு பறவாயில்ல...!"

"ஓ...மெய்தான்! மகள் சுகமாக் கிடக்கிறாளா...மாஸ்ட்டர்...?"

"இருக்கிறாள்...அதுசரி, மா ரின்னுக்கு எவ்வளவு?"

"இதுக்கெல்லாம் விலைதலை கேட்கிற காலமா மாஸ்ட்டர்? என்ன விலைக்கும் சாமான் கிடைச்சாலே போதும், என்டு நினைக்கிற காலம்...இழுத்தெறியுங்களன் மாஸ்டர்...!"

"அப்பிடியெல்லாம் இழுத்தெறியிற காசு, எங்களிட்ட இல்ல...! எங்கட வருமானம் எண்ணிச் சுட்ட பணியாரம் மாதிரி...நீங்க விலையைச் சொல்லுங்க!"

"என்ன இருந்தாலும்...நீங்க கடுமாள்தான் மாஸ்ட்டர்...?"

"இல்லாட்டித்தான்...தலையத்தடவி, கண்ணை பிடுங்கிப் போடுவியளே...! அதுவு மல்லாமல்...கேட்கிற விலையையே தந்திற்று வாங்கிறதுக்கு...விற்கிறவங்க நியாயத் தோடயா விக்கிறாங்க...?"

"நாங்கென்டால்...நியாயத்தோடதான் விக்கிறம்"

"அது என்னவோ...அது இருக்கட்டும்! மா'ரின்'னுக்கு எவ்வளவு தரவேணும் அதைச் சொல்லுங்க...?"

"கொஞ்சம் பொறுங்க..., மாஸ்ட்டர்! இந்தாப்பா...சேகுபீரு...? நம்ம, 'கஸ்ட்டமர்'மாருக்கு மா'ரின்'... என்ன புள்ளி போட்டது...?"

"ஆவன்னா க்கானா..."

"நீங்க அதைத்தாங்க மாஸ்ட்டர்-அஞ்சி ரூபா...!"

"அப்பிடியென்டால், கடனுக்கும் அஞ்சு ரூபாத்தான்...காசுக்கும் அஞ்சு ரூபாத்தானா...?"

"எங்கட வியாபாரம் அப்பிடித்தான் மாஸ்ட்டர்...! கடனென்டாலும் காசென்டாலும் ஒரே விலைதான்...!

கடனுக்கு ஒரு விலை, காசுக்கு ஒரு விலை நாங்க விக்கிறதில்ல..."

"அது சரிதான்...ஒங்களப் போல பெரியமனசு, எல்லாக் கடைக்காரருக்கும் வராது...! அதெல்லாம் இருக்கட்டும்...என்னிட்ட அஞ்சு ருபா, கேட்காதீங்க... நான் தரமாட்டன்."

"இப்ப...இது, எல்லாருக்கும் தெரிஞ்ச விலைதான் மாஸ்ற்றர்! கரைச்சல் படுத்தாமல்...காசைத் தாங்க..."

நியூஸ் பேப்பரால் சுற்றப்பட்டு, அதற்கு மேலால் மெல்லிய சணலால் கட்டப்பட்ட பால்மா 'ரின்' ஒன்று, அப்பாஸின் கைக்கு மாறியது.

அந்த, ஐந்து ரூபாத்தாளை வாங்கிய கணக்கப்பிள்ளை, அதை லாச்சுக்குள் போட்டு, இழுத்து மூடினார்!

"வேற சாமான் ஒன்டும் எடுக்கல்லயா மாஸ்ட்டர்...? நேற்றுத்தான் வந்த, கச்சான், பட்டாணி, கடலை...எல்லாம் இருக்கிது...கோப்பிறட்டி விலைக்கே தருவம்...போடுவமா மாஸ்ட்டர்...?"

"அதையெல்லாம் பிறகு பார்ப்பம்...மிச்சக்காசு தர மறந்திட்டீங்க...!"

"அது...கணக்குச் சரி மாஸ்ற்றர்...!"

"சும்மா பகிடி விடாமல்...மிச்சக் காசை தாங்க...!"

"ஒங்களால பெரிய கரைச்சல் மாஸ்ற்றர்...! அது கோட்டாக்கு வந்த சாமானில்ல. நாங்களும் கூட கொடுத்துத்தான் வாங்கினது...! எல்லாருக்கும் இந்த விலைதான் போட்டுக் கொடுத்தம்...! நம்பிக்கை இல்லாட்டி, கணக்கு கொப்பியைக் காட்டிறன்! அதுவும்..., ஒரு விலைக்கும் சாமான் இல்ல...! உங்களுக்கு, தெரியுந்தானே மாஸ்ற்றர்...?"

"கணக்கப்பிள்ளை...! எனக்கு எல்லாம் தெரியும்...! சும்மா கதை விடாம...ரின்னுக்கு, மூன்று ரூபா முப்பது சதம்!

அதுதான் அதிர விலை...! அதுக்கு மேல, ஒரு சதமும் தரமாட்டன்! மீதி, ஒரு ரூபா எழுபது சதத்தையும் எடுங்க..."

"நல்ல யாவாரந்தான்...! சுண்டங்கா காப்பணம், சுமை கூலி முக்காப்பணமாத்தான் முடியும்!! இதுக்காகத்தான், சாமான் இருந்தாலும் உங்களப்போல ஆக்களுக்கு காட்டிறதில்ல... உங்களால பெரிய தலையிடி மாஸ்ற்றர்...! அப்பிடித்தான்... உங்களுக்கு ஒரு சலுகையைச் செய்தால்...அதையும் எல்லாரிட்டயும் சொல்லுவீங்க...! இந்தாங்க..., இதை வச்சிக் கோங்க...! இந்த, விலையை ஆரிட்டையும் சொல்லாதீங்க...!"

ஒரு, ஐம்பது சத குத்தியை அப்பாஸின் கைக்குள் வைத்தார், கணக்கப்பிள்ளை.

"என்ன கணக்கப்பிள்ளை கைக்குள்ள நசிக்கிறீங்க? இதெல்லாம் சரிவராது...! மீதி, ஒரு ரூபா எழுபது சதத்தையும் எடுங்க...!!"

"அப்ப... நீங்க, வருத்தப்படாமல்...சாமானை வச்சிற்று, காசை வாங்கிக் கொண்டு போங்க...!"

"சாமான...வச்சிற்றுப் போகவா...?!"

"ஒத்துவராட்டி வேறென்ன சொல்லிறது...?"

"அது..., நடக்காது...! மிச்சக் காசெடுங்க...!!"

"என்ன மாஸ்ற்றர்...சண்டித்தனமா...?"

"நியாயத்தைக் கேட்கிறதுக்குப் பெயர், சண்டித்தனமென்டால்...சண்டித்தனம்தான்! உசிரோடயே... கண்ணைத் தோண்டப் பார்க்கிறயளே...? அது, என்னிட்ட நடக்காது...மரியாதையா, மிச்சக் காசைத் தாங்க...! ரின்னை, தரமாட்டன்!"

"என்ன மாஸ்ற்றர்...? சண்டைபிடிக்கவா வந்து நிற்கிறயள்? மாஸ்ற்றர்..., மனவருத்தம் வேணாம்... அந்த

விலைக்குவேணாமென்டால், சாமான வச்சிற்று இந்தாங்க, உங்கட காசு...! வாங்கிற்றுப் போங்க...!"

"அது...நடக்காது...கணக்கப் பிள்ளை...!"

"நடக்காதா...?! கைக்குள்ள, டெலிபோனும் பொலிஸும் இருக்கிது மாஸ்றர்...!"

"பொலிஸா...? என்ன, பூச்சாண்டி காட்டிறயளா...? அதுக்கு, வேறாளப் பாருங்க...!"

"அதையெல்லாம் செய்யிறதுக்கு...எங்களுக்கு கன நேரம் செல்லாது...பாலை, பார்க்காட்டியும் பால்வார்த்த பானையப் பார்க்கவேண்டியிருக்கிது..."

"அப்பிடியெல்லாம் நீங்க, பார்க்க வேணாம்...நான், ஆரிட்டையும் ஏமாற, விரும்பிறதில்ல...எடுங்க மிச்சக் காசு...!?"

"திரும்பத்திரும்ப கேட்காதீங்க மாஸ்றர்...நாங்க, உங்கள ஏமாத்திறமா?"

"அதிலென்ன சந்தேகம்...? நான் உரிய விலைக்கு சாமானக் கேட்கிறன்-! அதாவது, நியாயத்தைக் கேட்கிறன்...?"

"கண்டறியாத, நியாயமும் மண்ணாங்கட்டியும்..."

"கதைக்கிறத ஒழுங்காக் கதைக்க வேணும்...!"

"என்ன...? ஆகக் கூடினால்...'ஜிஏ'க்கும், அவன் 'கொன்றோல்' இன்ஸ்பெக்டருக்கும் 'பிட்டிஸம்' போடுவீங்க...! அதையெல்லாம் சமாளிக்கத் தெரியாட்டி...இந்த, தொழிலை நாங்க செய்யத் தேவயில்ல...! போட்டிட்டுப் போங்க மாஸ்றர்...!!"

"எவ்வளவு காலத்துக்கு நீங்க சமாளிக்கப்போறிங்க...?

என்று, நாங்களும் பார்க்கத்தான் போறம்...அதெல்லாம் இருக்கட்டும்! இப்ப, மிச்சக்காசெடுங்க...?!"

"ஏலாது...!!"

"ஏலாதா...?"

"பொறுங்க-பொறுங்க!! என்ன, இது...? இதென்ன கடையா...? இல்லாட்டி...மீன் சந்தையா...? றோட்டில சனத்தைப் பார்த்தயளா...? சனம், புதினம் பார்க்கிது...! கணக்கப்பிள்ள...ஒங்களுக்கு புத்தி எங்க போச்சிது...?"

என்று, கேட்டுக் கொண்டே அங்கு வந்து சேர்ந்தார், முதலாளி. கணக்கப் பிள்ளை கல்லாப்பட்டறைக் கதிரையில் இருந்து எழுந்து, தலையை குனிந்து கொண்டு நின்றார்!

"...இவ்வளவு நேரமா,...நானும்...எல்லாத்தையும் கேட்டுக் கொண்டுதான் உள்ளுக்கு...படுத்தன்! இதுதான், யாபாரம் பண்ணிற லட்சணமா...? ஆரிட்ட எப்பிடி நடந்திக்கிறதென்டு உங்களுக்கு தெரியல்லயே...? மிச்சக் காசைக் கொடுத்திற்று...வேலையப்பாருங்க...! தம்பி...மாஸ்ற்றர்...! நீங்களும் பிடிச்சால் ஒரு பிடியிலதான் நிற்பயள்...! பிறகு வந்து..., என்னிட்டச் சொன்னால்...தராமலா விடுவன்...?

"பிறகு, என்ன வாறதும்...உங்களிட்டக் கேட்கிறதும்? காசைக் கொடுத்து சாமான வாங்கினால்...உரிய காசை எடுத்துக்கு மிச்சத்தை தரவேண்டியது தானே...?!"

"அதுசரி...நீங்க மிச்சத்தை வாங்கிக் கொண்டு போங்க மாஸ்ற்றர்...!"

உண்மையில், அவர், 'அனுபவம் நிறைந்த' அசல் முதலாளியாகவே நடந்து கொண்டார்!

கணக்கப்பிள்ளை, இப்படி எதிர்பார்க்கவே இல்லை.

அம்மிக்குழவி மாதிரி கறுத்துக் கொண்ட அவரின் முகம், அதை தெளிவாகக் காட்டியது!

மனசுக்குள் சிரித்துக் கொண்டு, மிச்சக்காசை வாங்கி எடுத்த அப்பாஸ், கடையைவிட்டு இறங்கி, கம்பீரமாக நடந்து கொண்டிருந்தான். றோட்டில் புதினம் பார்த்துக் கொண்டு நின்ற சனங்களுக்கும் கலைந்தனர்.

முதலாளி, அக்கம் பக்கம் ஒருதரம் பார்த்துக் கொண்டார்! கடையில், சிப்பந்திகள், கணக்கப் பிள்ளை,...இவ்களைத் தவிர, வேறு யாருமே இல்லை! குறிப்பாக, கணக்கப் பிள்ளையைப் பார்த்துக் கொண்டு, கதைக்கத் தொடங்கினார்...

“என்ன இருந்தாலும்... ஆரோட, எப்பிடி வியாபாரம் பண்ணிறது...? எப்பிடி நடத்திக்கிறது...? என்டு, இன்னமும் நீங்க படிக்கல்ல! ஊரில உள்ள எல்லானுமா, இப்பிடி வந்து சண்டை பிடிக்கானுகள்...? இவனுகள்...ரெண்டொரு பேர்தான்...நீதி நியாயம்-சட்டதிட்டமென்டு...கத்திக் கொண்டு திரியிறானுகள்! இவனுகள் கத்திறதுக்கு...நாம கொஞ்சம் விட்டுக் கொடுக்கத்தான் வேணும்...! அதிலையும் இவன்-மாஸ்றர்தான் இதுக்கெல்லாம் தலையாரி! அவனிட்டப் போய் கதைச்சிக்கொண்டு, சும்மா நேரத்தை மினக் கெடுத்திப் போட்டயளே..., கணக்கப்பிள்ளை...!”

“இப்ப..., ‘ஜிஏ’க்கி பிட்டிஸம் போட்டிருக்கிறவனுகள், நாளைக்கி ‘ஜிஏ’யையும் அவன்-‘கொன்ரோல் இன்ஸ் பெக்டரையும்’ கையோட கூட்டிவந்து கடைக்க பாயுவானுகள். அதுக்குப் பொறகு, அந்தாக்களை சமாளிக்கிறதும் சரிதான் இதில, உழைக்கிறதும் சரிதான்.”

"போனகிழமதான், 'பிட்டிஸம்' ஒன்டு, போட்டிருக்கானுகள்...! அதச்'செக்' பண்ணி 'இரை விழுங்க' இன்டைக்கோ நாளைக் கோ வந்திறங்கு வானுகள்...! அதுக்கிடையிலயும் ... இப்பிடிச் சண்டைபிடிச்சால் ,... நாம, உருப்பட்ட மாதிரித்தான்...! என்ன தெரிஞ்சாலும்...உங்களுக்கு, ஆரிட்ட, எப்பிடி நடக்கிறது...என்டு...இன்னமும் தெரியல்லயே...? நான் வாறன்...!"

இவ்வளவு நேரமும், தலையைக் குனிந்து கொண்டு நின்ற, கணக்கப்பிள்ளை, இப்போதுதான் அந்தக் கதிரையில் அமர்ந்தார்!

"அஞ்சலி" மாத இதழ் - 1970.

# வெறும் கைகளும் முழமிடும்!



"என்ன, வெயில்லாப்பா...! உச்சிமண்டை வெடிக்கப் பார்க்கிது...டேய்...ஒன்னத்தான்டோ...! தருமனத்தான் கூப்பிடுறன்...? வலை போட்டவனுகள் எல்லானும் வீட்டோட வாசலோட போய்ச் சேர்ந்திற்றானுகள்...! ஏன்டா...நாம போய், கஞ்சைத் தண்ணியை குடிக்கிறதில்லையா...? கதைக்கிறதென்டால்... பகலைக்கெல்லாம் கதைச்சிக் கொண்டிருப்பான்...வாறதென்டால், சட்டென்று வாடோ... போய்...வலை ஏத்தவும் திரும்பி வர வேணும்!... இதென்ன...வெயிலா...? இல்லாட்டி, நெருப்பு, மழையாப் பெய்யிதா...? இவனுகள்...இந்த தோணிக்காரனுகள் செய்யிற அக்கிர்மத்தில, இந்த ஊரும் உலகமும் தீய்ஞ்சி கருகப் போகிதாக்கும்...?!"

கடற்கரை ஓரத்து சுடுமணலிலேயே நடந்து திரிந்து கருகி தழும்பேறிப் போன அந்தக் கால்களே, அந்த வெயிலின் "நில்லு, தண்டயல்! நான், இன்னா,... வந்திற்றேன்!!" அகோரத்தை தாங்க முடியாமல் அலைவாய்க் கரையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

"நின்டாப் போலதானிரிக்கி...வாற தென்டால்... கெதியா வா!"

"இந்தா, வந்திற்றன்...! இந்த, நாசமத்துப்போன நங்கூரத்தையும் தூக்கிக் கொண்டு தானே நானும் வரவேணும்! நமக்கு இது...தலை எழுத்து!"

இடப்பக்கத்து தோளிலிருந்த சவளைத் தூக்கி, வலப்பக்கத்திற்கு மாற்றிவைத்து, 'பலன்ஸாக' அதற்கு மேல்

கையைப் போட்டுப் பிடித்து, தோளில் கிடந்த துண்டை எடுத்து, தனது மொட்டைத் தலையில் முக்காடு போட்டுக் கொண்டார், யாக்கூப் தண்டயல்!

அலை வாய்க்கரைக்குள், ஓடி வந்து நின்று, காலாறிய தண்டயல், ஒருதரம் திரும்பி நின்று, தருமனைப் பார்த்தார்.

'தண்டயல்ல மக்களின்' தென்னம் வாடிக்குள் நிழலில் கதைத்துக் கொண்டு நின்ற தர்மன், கொதிக்கும் அந்தப் பால் மணலில், கால் புதையப் புதைய துவண்டுதுவண்டு வந்து கொண்டிருந்தான். தோளில் இருந்த நங்கூரம், அவனை அழுத்திக்கொண்டிருந்தது!

"டேய் தருமா...மணல் கொதிக்கிது...வண்ணான் வெளுக்கிற தோணாவுக்கால இறங்கி, கரையால நடந்து...திட்டியாலே ஏறிக் கொண்டு வாடோ!!"

தண்டயலின் அந்த ஆலோசனைக்குரல் பிந்திவிட்டது. தருமன் கொதிக்கிற மணலில், தீப்பாய்ந்து கொண்டிருந்தான்.

"இதால வந்திற்றனே...! இனி என்ன செய்யிறது? நம்மிட பாண்டிருப்பு கோயில்ல, வருஷா வருஷம் தவமிருந்துதான் தீப்பாயிறது...இது, இப்ப தவமிருக்காம நான் தீய்ப்பாயிறன்...!! நல்லா தீய்ச்சிப் பொசுக்கட்டும்!! துபூ...நாமளும் நம்மட தொழிலும்...?! என்ன...சீவனா போகப் போகிது...?"

"சீவன் போகாட்டியும், உழைச்சித்தின்ன...கிடக்கிற சீவன், நல்லாக்கிடக்க வேணுமடாம்பி...!"

"நல்லாக் கிடந்திர...கிழிச்சி அடுக்கித்தான் போடுவம்...? சே...என்ன வெயில்லாப்பனே...! மெய்தான், இது பங்குனிக்கடைசல்லோ...? பங்குனி மாசம் பகல் வெளி நடந்தவன பார்த்திருந்தவனே பாவியாம்...! ஒருவேள...தண்டயேல்...! இவன் நம்மட...தோணிக்கார யாசீன் காசு பிரிக்கிற கர்மத்த பொறுக்க ஏலாமத்தான், நெருப்பாக் கொட்டுதோ என்னவோ...?!"

"தர்மா...நானும் இப்ப, கொஞ்ச நேரத்துக்கு முந்தி, அப்பிடியும் நினைச்சி பார்த்தன்டா...!"

"சரிசரி நட போவம்"

கொதிக்கும் மணலில், பொசுங்கிய அந்தக்கால்களை, ஒருவர் பின் ஒருவராக வந்த, அலைக்குமரிகள் கழுவிக்கழுவிச் சென்று கொண்டிருந்தனர். 'அவர்கள்' ஓடிவந்து, கரையையும் அந்தக்கால்களையும் தொட்டு, முத்தமிட்டுச் சொல்லுகின்ற அந்தக் காட்சி, தோணிச் சொந்தக்காரர்கள் செய்கின்ற அநியாயத்திற்காக, அலைக் குமரிகள் மன்னிப்புக் கேட்டு, காலில் விழுவது போலிருந்தது!

**வெ**யில் கொளுத்தினாலும், மழை பெய்தாலும் கடற்கரைக்கு, வலை போட வருகிறவர்களுக்கு, 'தண்டையல்ல மக்களின்' தென்னம் வாடிதான் தஞ்சம்! வலை போடுகிற நேரம் போக, மற்ற நேரங்களிலெல்லாம் அந்தவாடிதான் அவர்களுக்கு சொர்க்கம்! அங்கு கிடைக்கின்ற கிணற்றுத் தண்ணிதான் பானம்.

வலை போடுகிற காலங்களில் மட்டும் செயல் பட்டுக் கொண்டிருக்கின்ற, அசனார்க் காக்காவின் திமர்த் தேத் தண்ணிக் கடையும் அந்தக் கடையில் இருக்கிற குரக்கன் கஞ்சியும் வட்டர், றோஸ்பாண், பியான்றோல் பிளேன்டி.. எல்லாம், எல்லாருக்கும் கட்டுப்படியாகாது! அப்படிக்

கட்டுப்படியானால் வீட்டுக்கு கொண்டு போக கையில் மிச்சம் வராது! ஆனால், எந்த நேரமும் குளுகுளுவென்று வீசிக்கொண்டிருந்த காற்றும், ஓங்கி உயர்ந்து, வளர்ந்து நிற்கின்ற, அந்த தென்னை மரங்களின் நிழலும் நிச்சயமாக, எல்லாருக்கும் கட்டுப்படியாகும்.

"அவனக் கை கரைஞ்சி போவான்...! என்ன சாதி, காசு பிரிக்கான்டா...? பகலைக் கெல்லாம் கிடந்து வெயிற் பால் குடிக்கிறதும்...! ராவைக்கெல்லாம் கிடந்து...பனிப்பால் குடிக்கிறதும்தான் மிச்சம்...!"

"என்ன செய்யலாம்...? நம்மட தலை விதி, இதுவாப் போச்சு...! நமக்கு எழுதின கடவுள், இரும்புலக் கையால எழுதிப் போட்டார்..."

"எதுக்கெடுத்தாலும்...உனக்கு...இந்த, மண்ணாங் கட்டி தலைவிதிதான்...!"

"அப்ப..., தலவிதி இல்லாம என்ன இது...?"

"என்னவா...? மண்ணாங்கட்டி...!"

"உன்ட, முறுக்கை...என்னிட்டக் காட்டி என்னில ஏறாத...!"

"நாம..., இவன்-யாசீன்ட தோணிவல போடத்தானா வேணும்...?"

"நீயே கேட்டு, நீயே பதிலையும் சொல்லு..."

"எனக்குத் தெரியாது...!"

"தருமா...! ஏன்டா அப்பிடிச் சொல்லுறாய்...?"

"பின்ன, என்ன...? இப்பிடி, எத்தின தரம்தான்...கேட்டிருப்பாய்...?"

"கேட்டதான்...! இன்டைக்கி காரணத் தோடதான் கேட்கிறன்...!"

"என்ன காரணம்...? சொல்லன்...!"

"நான்...இவன்-யாசீன்ட 'பஞ்சமி'த் தோணிக்கி சவள் பிடிக்க வந்ததும்...நீ, இந்த நங்கூரம் தூக்கத் தொடங்கினதும்...எத்தின வருஷமிரிக்கும்...?"

"கொஞ்சம் பொறு...! எனக்கு இளைக்கிது... இந்த தோணிமுகரிக்கு கீழே, கொஞ்சநேரம் ஆறி அமர்ந்திற்றுப் போவம்...! நாசமத்த நங்கூரம், என்ன பாரத்தத்தான் பாரிக்கிது...? இஞ்சவா, இதக் கொஞ்சம்பிடி, இறக்கு..."

ஆறவும் அமரவும்தான் நமக்கு நேரமிருக்கு...? சிறுகுடல, பெருங்குடல் கடிச்சுத் தின்னிது...! எழும்பு...மெள்ளமெள்ள வீட்ட போய்ச் சேருவம்...! நங்கூரத்த என்னிட்டத்தா...! இந்தா, நீ, சவளைப் பிடி...! நட...போவம்...! ஏன்டாம்பி...எத்தின வருஷமாகிது...சொல்லன்?"

"ஏழெட்டு வருஷமாகிதாக்கும்...!"

"இந்த ஏழெட்டு வருசமா...அல்லாட இந்த 'பேங்'கில இருந்து, எவ்வளவு மீனைத்தான் அள்ளிக் கொட்டியிருப்பம்! வருஷம் தப்பினாலும் மீன்பிடி தப்பினதா...? சித்திர மீன்பிடி,...! மாரி மீன்பிடி...! நெத்தலி மீன்பிடி...! கீரி மீன்பிடி...! பாரை மீன்பிடி...! என்று, எந்த, மீன்பிடியையாவது தவற விட்டிருக்கமா...? இல்லைத்தானே...! ஏழுவருசத்திற்கும் எத்தின பீப்பா கருவாடு போட்டிருப்பம்...? எத்தின லட்சத்திற்கு மீன்பிடிச்சிருப்பம்...?"

"அந்தக்கணக்கெல்லாம்...இப்ப, ஞாபகமாகவா இருக்கிது...?"

"சரிசரி, அதை விடு. இன்டைக்கி, எல்லாம் எவ்வளவுக்கு மீன்பட்டிது...? சொல்லு பாப்பம்...?"

"இப்ப, என்னத்துக்காக, அந்த வயித்தெரிச்சலை

கிழப்பிறாய்? இப்பிடி, கணக்குப் பார்க்கிறதும்...பெருமூச்சு விடுறதும் நமக்கு தொழிலாப் போச்சி...!"

"தருமா...பெருமூச்சு..., ஒரு நாளைக்கி வெடிக்கத்தான் போகிது...! நீ, சொல்லு...முதல்பாடு எவ்வளவுக்கு பட்டிது...?"

"முதலாவது பாடு, இரண்டாயிரம். ரெண்டாவது பாடு, இரண்டாயிரத்தி நாறு. மூணாவது பாடு, ஆயிரத்திநாறு. எல்லாத்தையும் கூட்டிப்பாரன்...!"

"எல்லாமா...ஐயாயிரத்தி இருநூறு! அது இருக்கட்டும். தண்டுக்காராக்கள்...வலை விட்ட, மந்து பிடிச்ச, வலை முறுக்க மீன்மறிக்க எல்லாம் வேலகாராக்கள் எத்தினபேர்?"

"முப்பத்திரெண்டு பேர்...!"

"கொடுத்த காசு...ஆளுக்கு இருபத்தஞ்சி ரூபாப்போட்டு,...முப்பது கால் – எழுநூத்தம்பது. ரெண்டு கால்–அம்பது. எல்லாம் எவ்வளவு...? எண்ணூறு! நெனப்பு வச்சிக்க...! வலை இழுத்த கரைக்காராக்கள் எத்தின பேர்?"

"இருபத்தஞ்சி பேர்..."

"அதுக்கு கொடுத்த காசு...ஆளுக்கு பதினஞ்சி போட்டு, இருபத்தஞ்சி பத்து–இருநூத்தம்பது. இருபத்தஞ்சி அஞ்சி...நூத்தி இருபத்தஞ்சி...எல்லாம், முன்னூத்தி எழுபத்தஞ்சி! அப்ப, பிரிச்ச காசி–எல்லாமா எவ்வளவு?

"...எண்ணூறும், முன்னூத்தெழுபத்தஞ்சிம்... ஆயிரத்தி நூத்தி எழுபத்தஞ்சி ரூபா! அதோட... ஆரோ ஒரு நபி பேரில, சர்க்கரைக்கஞ்சி காய்ச்சி 'பாத்திஹா' ஓதவாம்...என்டு, ஒரு நீலத்தாள் அம்பது ரூபா! தென் தெருப்பள்ளி வாசல்ல அடங்கப்பட்டிருக்கிற அப்துல் றஹ்மான் செய்யிது–அவர்ர உண்டியலுக்கென்டு இருபத்தஞ்சி ரூபா! தோணி வலைக்கி தண்ணி ஒதிக்கழுவ–மடைபோட்டு, காய் வெட்டி கழிப்புக்கழிக்க, ஒரு செவத்தத்தாள்–நாறு!

இன்னுமென்னவோ ஒரு இழவுக்கு..., ஒரு நீலத்தாள்-அம்பது! எல்லாத்தையும் கூட்டு பாப்பம்!"

"கூட்டிற்றன்...அது சரி...இந்த ஆள்...ஒவ்வொரு முறையும் காசு பிரிக்கைக்க ஆராரோ அவுலியாட பேரிலயெல்லாம் காசு எடுத்து வச்சானே...எப்பவாச்சும் சர்க்கரைக் கஞ்சி காய்ச்சிருப்பானா...?"

"அப்ப, ஒன்ட கதையப்பார்த்தால்...எடுத்து வச்ச மத்தக்காசுக்கெல்லாம் அலுவல் நடந்த மாதிரியும்...சர்க்கரக் கஞ்சி மாத்திரம்தான் அவர், காய்ச்ச இல்ல...என்ட மாதிரியல்லவோ படுகிது...?"

"அப்பிடியில்ல...சும்மா ஒரு கதைக்குக் கேட்டன்... எனக்கென்ன தெரியாதா...? ரெண்டு சீப்பு, காய்ஞ்ச கதளிப் பழத்தை கொண்டு வந்து வச்சிப் போட்டு. தோணிதள்ளக்க பாத்தியா ஓதுறது...எனக்குத் தெரியாதா...?"

"நெருப்பத்தின்னுறானுகள்..., கரியாத்தான் பேலவேணும்!! எத்தின காசிக்காரனுகள், எப்பிடி எப்பிடியெல்லாம் இருந்து சீரழிஞ்சி போனானுகள்...! அது இருக்கட்டும்..., நாம பாத்து வந்த கணக்கை ஒருதரம் பார்த்து முடிச்சிருவம்...! எல்லாமா...மொத்தம் பிரிச்ச காசி எவ்வளவு...?

"ஆயிரத்தி நூத்தி எழுபத்தஞ்சும் இருநூற்றி இருபத்தஞ்சும் மொத்தம் ஆயிரத்தி நானூறு ரூபா!"

"எல்லாம்...இன்டைக்கி, மீன், எவ்வளவுக்குப் பட்டது...?"

"ஐயாயிரத்தி இருநூறு ரூபா!"

"ஐயாயிரத்தி இருநூறில இருந்து...ஆயிரத்தி நானூறைக் கழி பார்ப்பம்...?"

"மூ ஆயிரத்தி எண்ணூறு."



LIBRARY
Km / Shams Central College
Maruthamunai

“அவன்...கைகரஞ்சி போவான்! மூணில ஒருபங்கக் கூட பிரிக்கல்லேயடா தர்மா...!”

“தண்டயல்...! ஆரு, முதலாளி என்டாலும் லாபத்துக்குத்தான் தொழில் செய்வான்! அதுவுமல்லாமல் இந்த ஆள் ‘பத்து’, ‘இருபது’ என்று,...முதல் போட்டிருக்கான் என்னத்துக்கு...? ஒழைக்கத்தானே...!?”

“ஒழைக்கத்தான். ஆரு, வேண்டாமென்டது! நாம, தோணியத்தள்ளி, தண்டு போட்டு...வளைஞ்சி...வலைய இழுக்காட்டி மீன்படுமா...? அவர்ர காசிமட்டும் இருந்தால் போல அது, இதையெல்லாம் செய்யுமா...? நாம, படுற பாட்டுக்கு பலன், கிடைக்குதில்லையே...!”

“அது சரி...அவனிட்ட முதலிரிக்கி...! நமக்கிட்ட என்ன இரிக்கி...? காலும் கையும்தான் இரிக்கி...ஏன்டா தர்மா..., நாமளும் ஒரு தோணிவல வச்சி நடத்துவமா...?

“உன்ட கதையக் கேட்டால்...எனக்கு, சிரிப்புத்தான் வருது...! எல்லாம், ஒழிஞ்சி இலுப்பையில ஏறிச்சாம் முடப்பேய்!”

“ஏன்டா...ஒனக்கு பகிடியா இருக்கா...?”

“பகிடியில்லாம வேறென்ன கதைக்கிறாய்...? தோணிவல என்டால், அதென்ன தீப்பள்ளயத்தில வாங்கிற சாமானா...? இல்ல, வான லோகத்திலிருந்து நமக்கு இறங்கப் போகிதா...? தோணிவல வச்சால் உழைக்கலாம்தான்! பஞ்சம் பசி தெரியாமல் வாழலாம்தான்! ஆனால்...வெறுங்கை முழம் போடுமா தண்டயல்...?”

“தருமா...வெறும்கையென்டாலும்...அது நம்மிடகை! அது, ஒருநாளைக்கி நமக்கு, முழம் போடத்தான் போகிது. இப்ப,..அது போடிற முழத்தையெல்லாம் ஆராரோ அளந்து கொண்டு போகிறானுகள்...!! நம்மளப் போல பாடுபடுகிறவனுகள்...பத்துப் பதினஞ்சிபேர் சேர்ந்து,



LIBRARY
Km / Shams Central College
Maruthamunai

தோணிவல வச்சிருக்கானுகள்தானே...? நாமளும் கடனத்தனிசப்பட்டு, பத்தை நூத்தைப்போட்டு இருக்கிறவனிட்டைப் போய், எங்களுக்கும் ஒரு தோணிவல வச்சித்தா... ஆதாயத்தில, நீயும் ஒரு பங்கை எடுத்துக்க...என்டு கேட்டா...என்னடா...?"

"கேட்டா, என்ன...? ஏழுகையாலையும் வச்சி தருவானுகள்... ஆனா...அவனுகளும் நம்மள உறிஞ்சிப் போட்டுத்தான் விடுவானுகள்...! உருப்பட ஏலாது!!"

"நீ, ஒன்டயும் கேட்கமாட்டாய்...! ஒன்டுக்கு ஒன்டு, சொல்லிக்கித்தான் நிற்பாய். கல்முனைக்குடி கரீம் முதலாளி, அன்டைக்கொருநாள், என்னை ... கூப்பிட்டு, விசகளம் அனுப்பியிருந்தார்...! போய் என்னென்டு கேட்டன். நல்ல, வேலகாரனுகளாகப் பார்த்து, பதினைஞ்சி பேர் சேரட்டாம். ஆளுக்கு நூறோ இரு நூறோ, இருக்கிறதப் போடட்டாம்...மிச்சம் எல்லாத்தையும் அவரே போட்டு, தோணிவல வச்சித் தாறாராம். நெத்தலி வலை, சூடை வலை, தொண்டுவலை...எல்லாம் வச்சித் தாறாராம் ...."

"காசிக்காரனுகள் ... நைலோன் வலை மாதிரி! அவனிட்ட போய் அகப்பட்டமோ ... அவ்வளவுதான். 'முகவெள்ளையன்' தத்திக்காரனுகளும், 'பெரிய வைரவன்' தத்திக்காரனுகளும் அவரிட்ட, நல்லா சிக்காப் போனானுகளாமே...! நீ, கேள்விப்படல்லயா...?இருபதாயிரம் கடனுக்குப் பொதுவில, ஒரு ஓட்டைத் தோணியும் பிய்ஞ்ச வலையும் தான் மிஞ்சிக் கிடக்கிதாம்...அதுவுமல்லாம, தண்டயல்,...! காசிக்காரன், வலிய உதவிசெய்ய வாறானென்டால், அதுக்குள்ள ... என்னமோ இருக்கவேணும். எதுக்கும் நாமளும் நல்லா யோசிப்பம்...?"

"இதில யோசிக்க என்ன இரிக்கி? பதினஞ்சி பேர்,

சங்கமாச் சேர்ந்து, தோணிவலை வச்சவனுகள்...நம்மளப் பார்க்க நல்லாத்தானே இருக்கானுகள்! இப்ப, மருதமுனையில் கிடக்கிற தோணிவலையில, பன்னிரண்டு தோணிவலை அவர்-கல்முனைக்குடி கரீம் முதலாளி வச்சிக் கொடுத்த தோணிவலதானே...அல்லா நாடி...நாலு, மீன்மடி கரை ஏறிற்றால் கடன் அன்னா பறக்கிது...தோணிவல நம்மட பேருக்கு மாறி வரும்!"

"மாறி வரும்...! கடனை இறுத்து, தோணி வலை...நம்மிட பேருக்கு வாறதுக்கிடையில, நாமளும் அழிஞ்சி, தோணியும் ஓட்டையாகி, வலையும் இத்துப் போகும்! அதுக்குப் பொறகு, அடுத்த தோணிவல வைக்கிறதுக்கு அவருக்கிட்டையே திரும்ப கடன்பட வேணும்!

அதோட, முடிஞ்சால் பறவாயில்லையே கருவாடு போட்டால்...அவருக்குத்தான் கட்டவேணும்! பாரை! சூரை என்று, பெருஞ் சாதியள் பட்டால்...அவர்ர 'ஐஸ்' லொறி வரும்! அதுக்குத்தான் ஏத்த வேணும்!! ஏத்தினமோ...'இதுதான் அன்டைய கொழும்பு பஸார் விலை' என்டு, அவர் ஒரு விலை போடுவார்! இதெல்லாம்...உனக்குத் தெரியாதா...?"

"தெரியுந்தான்...என்ன செய்ய...? இவன்,...நம்மிட நாசமறுவான்-கைகரஞ்சி கழுத்தோட ஒட்டிருவான், பிரிக்கிற காசையாச்சும் ஒழுங்காப் பிரிக்கானா...? நாய் படாப்பாடு படுறமே! நம்மள, ஒழுங்கா நடத்திறானா...? ஒரு நாள் தின்டால்...ரெண்டுநாள் பட்டினி கிடக்கிறம்... இதையெல்லாம் நினைச்சி நினைச்சி என்ட மனம், நல்லாக் காய்ஞ்சி போச்சி...! இவன்ர, தோணி வலைய விட்டிட்டு, வேறெங்க தொலைஞ்சாலும் நல்லது போலத் தெரியிது...!! இப்ப, வரவர தோணியில ஏறிறதுக்கே மனம் இல்ல...! பகலைக்கெல்லாம் மாடுமாதிரிச் சாகிறம்...என்னத்தக் கண்டம்...?"

"மெய்தான்...இந்த ஏழு வருசமா, வெயிலென்டும் பாராமல், மழை என்டும் பாராமல் ராப்பகலாச் சாகிறம்...! உடுத்த சாறனுக்கு மறுசாறன் கிடையாது! இருக்கிற வீடு,

ஒழுகிக் கரையிது...! குமர்குட்டியள் அதுவேற...அந்த ஆள்...இந்தத் தோணிவலையாலயே உழைச்சி, பத்திருவது ஏக்கர் காணியும் வாங்கிப் போட்டான்! நாம, ஓடி ஓடி உழைச்சி, உடைஞ்ச ஓட்டத்தோணி மாதிரி, கரையில கிடக்க வேண்டியதுதான்!

"என்ன செய்யிறது...? ஒன்டு நல்லபாம்பு! மற்றது, புடையன் பாம்பு!! ரெண்டும் விஷம்தான். ஆனால்...ஒரு பாம்பு, நாம கண்டு, கதைச்சி பழகின பாம்பு! கொஞ்சம் பார்த்து நடந்திக்கலாம்...மற்றது, நாம காணாத-அறியாத பாம்பு. அவ்வளவுதான், சொல்லுவன்...!"

"அப்ப..., பழயபடி வேதாளம் முருங்க மரத்தில் ஏறின கதைதான்! அப்ப, காலமெல்லாம் ஆருக்கும் உழைச்சிக் கொடுத்துப் போட்டு, நாம மண்டையப் போட வேண்டியதுதான்!"

"நாம, படுகிற பாட்டுக்குரிய பலன் வந்து, நமக்கு கிடைக்கவேணும்! ஆனால், தண்டயல்...! அது வந்து...வலியக் கிடைக்கும் என்று மட்டும் நினைக்காத...!"

"என்ன, சொல்லுறாய் தருமா...?"

"மயிலே! மயிலே! இறகு போடென்றால் போடவா போகிது...? எதுக்கும்...இரவைக்கி முதலாளியாரிட்டப் போவம்! நம்மிட தன்மையைச் சொல்லி, நம்மையும் அவரோட பங்குக்கு சேர்க்கச் சொல்லுவோம். சரி வந்தால் பார்ப்பம், இல்லாட்டி...மற்றதை மறுகா யோசிப்பம்! என்ன...சரியா தண்டயல்?"

"அதுகும்...நல்ல யோசினைதான்...கேட்டுப் பார்ப்பம்...இதுக்குப் பொறகு...நீ வீட்டுக்குப் போய், சாப்பிட்டிட்டு, வலை ஏத்தப்போக வர நேரம் காணாது...வெயிலும் கடுமையா இருக்கிது...போகாத...! பால் நெத்தலி, அஞ்சாறு எடுத்து, கறிக்கி அனுப் பினன்...கன்னாளைக்குப் பொறகு நல்லாயிருக்கும்...வா, எங்கட வீட்டுக்குப் போவம்...!"

"ஏன் பின்ன...போவமே...!"

வீரகேசரி 1972.

# கருகாத அரும்புகள்



“பள்ளிக்கு வந்திருந்த பாறூக்கு வீட்டுக்கு ஓடிற்றான் ஸேர்...!”

மொணிற்றர் முறைப்பட்டான்.

“அவன்...ஒவ்வொரு நாளும் இப்பிடித்தான் ஸேர்...! இரண்டாம் பாடத்திற்கு ஒளிச்சானென்டால்...நாலாம் பாடத்துக்குத்தான் வருவான்...! வந்தாலும் அடுத்த பாடத்துக்கு ஒளிச்சி...இடை வேளைக்கித்தான் திரும்ப வருவான் ஸேர்...!”

மற்றொரு மாணவனும் சொன்னான்.

“பெரிய ஸேர்..., எவ்வளவுதான் இவனை உரிச்சாலும் ... இவன் இப்பிடித்தான் ஸேர்...! அதுகும்...இந்த கிழிஞ்ச கழிசானத்தான் போட்டுக்கு வருவான்!”

விலை உயர்ந்த ஷேர்ட்டும், ஷோட்ஸும் போட்டிருந்த ஒரு மாணவனும் முறைப்பட்டான்.

“இந்தா, வந்திற்றான் ஸேர்...!!”

மீண்டும், ஒரு மாணவனின் குரல், சத்தமாகக் கேட்டது.

நான், நிமிர்ந்து பார்த்தேன்!

கிழிந்து வெளிறிப் போன கட்டைக்கால் சட்டைதான், ஆனால், அதைக்கழுவி ஒட்டுப்போட்டு-இழைகுத்திப் போட்டிருந்தான். அதன் பொத்தான்களில் சிலது, பறந்திருந்தது. அந்தக் காற் சட்டையின் இரண்டு பக்கத்துப்பைகளும் சற்று விம்மிப் புடைத்திருந்தன. ‘நான், அதைப் பார்த்து விடக்கூடாது’ என்பதற்காக, அவன்,

நெளிந்து, சரிந்து நின்ற விதமே எனக்கு, அதைக் காட்டித் தந்தது.

எந்தப் புண்ணியவாளன் கொடுத்தானோ- ஆளுக்குப் பெரிய சட்டையையும் போட்டிருந்தான். அதன், சட்டைப் பைக்குள் பென்ஸில் ஒன்றும் நீட்டிக் கொண்டு நின்றது.

அந்தப் பாடசலைத் தகரக் கொட்டிலை தாங்கிக் கொண்டு நிற்கும் மரக்கால்களில் ஒன்றை, கட்டிப்பிடித்து சுரண்டிக் கொண்டும், கால்களால் தரைப் புழுதியை கிளறி அளைந்து கொண்டும் நின்றான்.

தலையைக் குனிந்துகொண்டு நின்ற அவனது முகத்தில், ஏதோ குற்றம் செய்து விட்டுவந்து, பீதியில் நிற்கின்ற உணர்வு படர்ந்திருந்தது.

"என்ன...பாறூக்...? அங்கேயே நிற்கிறாய்...? வா...வந்து, வகுப்பில் இரு...!"

தலையை, மெதுவாக நிமிர்த்தி, என்னைப் பார்த்தான். அவனது விழிகளில் தெரிந்த ஒரு பிரகாஷம் என்னைப் பறித்தது! எண்ணை வாடை கண்டறியாத தலையும், பொழு பொழுப்பில்லாத முகமுமாக இருந்தாலும்...அந்த பால் வடியும் முகத்தில் ஒரு களை விளங்கியது.

"ஏன் நிற்கிறாய் பாறூக்...? பாடம் தொடங்கவேணும்...வந்து வகுப்பிலிரு...!"

"என்னடா...இந்த ஸேர்...? அவனக் கூப்பிட்டு அடிபோடாமல்...வந்து, வகுப்பில இருக்கச் சொல்லிறார்...?" என்ற, தோரணையில், எல்லா மாணவர்களுமே என்னை ஆச்சர்யமாகப் பார்த்தார்கள்.

இது, ஆறாம் வகுப்பு "ஏ." இந்த, வகுப்புக்கு எனக்கு சமூக விஞ்ஞானப் பாடம். இந்தப் பாடசாலைக்கு மாறிவந்த மூன்றாம் நாள்-இன்றைக்கு, இந்த, வகுப்புக்கு

வந்திருக்கிறேன்...இவன்-பாறூக்கையும் இன்றைக்குத்தான் வகுப்பில் பார்க்கிறேன்.

நேற்று நடத்திய பாடத்தை ஒருமுறை ஞாபகமூட்டி- நினைவுக்குக் கொண்டு வந்து, தொடர்பு படுத்தி...இன்றையப் பாடத்தை ஆரம்பித்து கலந்துரையாடத் தொடங்கினேன்.

'கரும்பலகையை' இடது கையால், நிதானமாக பிடித்துக் கொண்டு பாடத்தின் தலைப்பை எழுதினேன்.

'எங்கள் நாட்டிற்கு அந்நியர்களின் வருகை'

"அந்நியர்கள், எங்கள் தாய் நாட்டிற்குள் கால் வைத்த காலம் தொடக்கம்...அவர்களால், எங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை விட, தீமைகளே அதிகம்! அவர்கள், எங்கள் மீது கொண்ட இரக்கம் காரணமாகவோ அல்லது, அக்கறை காரணமாகவோ எந்த, அபிவிருத்தியையும் நன்மையையும் செய்யவில்லை. தங்களின் தேவைகள் கருதியும் நன்மை கருதியுமே ஒவ்வொரு காரியத்தையும் செய்தார்கள்..."

"அப்பிடிச் சொல்லலாமா...ஸேர்...?"

எனது, பேச்சை இடைமறித்து, பாறூக்தான் கேட்டான்.

"இவன்..., இப்பிடித்தான் ஸேர்...! குறுக்கால கேட்பான்! இதுக்குத்தான்...ஸேர்மாரும் இவன ஏசிறதும்...அடிக்கிறதும்...!!"

ஒரு மாணவன் சொன்னான்.

"ஏன்...அவன், கேள்வி கேட்கக் கூடாதா...? பாவைப்பிள்ளை மாதிரி, தலையாட்டிற்றுப் போகத்தான் பள்ளிக்கி வாறயளா...? ஆரென்டாலும் சரிதான், தெரியாத விஷயங்களை கேட்கவேணும்! அப்பதான் இன்னமும், தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்..."

ஒருதரம், பாறூக் நிமிர்ந்து இருந்து கொண்டான்.

பொதுவாக, மாணவர்கள் வகுப்புகளில் கேள்வி கேட்பது, மிகவும் குறைவு. அவர்களை, சுயமாகச் சிந்திக்க-கேள்விகள் கேட்க சந்தர்ப்பம் அளிக்கப்படுவதும் மிகவும் அபூர்வம்தான். ஆனால், பயந்த பூனைக்குட்டி மாதிரி வந்து...குந்திக் கொண்டிருந்த பாறூக்கே...இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டானே...என்பதில், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது! அவனது, சுட்டித்தனத்தை நான் எதிர்பார்த்திருந்தேன். அவனது கண்கள், அதை அறிக்கை விட்டுக் கொண்டே இருந்தது...! அவன் மீது, 'இனமறிந்த' ஓர் அனுதாபமும், அக்கறையும்...எனக்குள் சுரக்கத் தொடங்கியது!

"பாறூக்! நீ, நேற்றுப் பள்ளிக்கு வந்திருந்தால்...இந்தக் கேள்விக்கு இன்னும் விளக்கமாகவே பதிலை அறிந்திருக்கலாம். ஆனாலும், உனக்காக சுருக்கமாக ஓர் உதாரணத்தைச் சொல்லி, விளங்கப்படுத்திய பிறகு...பாடத்தை தொடரலாம் என்று, நினைக்கிறேன்... என்ன,...அப்பிடிச் செய்வமா...?"

மாணவர்களைப் பார்த்துக் கேட்டேன். விரும்பியோ விரும்பாமலோ அவர்களில் பலர் தலையை ஆட்டினார்கள். நான் பாடத்தை தொடர்ந்தேன்.

"...எங்கள் நாட்டை, கடைசியாக ஆட்சி செய்த அந்நியர்களான ஆங்கிலேயர் என்ற வெள்ளைக்காரர்கள ... கொழும்பிலிருந்து கண்டிக்கு நெடுஞ்சாலையை- றோட்டைப் போட்டார்கள்! பாலம் போட்டார்கள்! அதுவும், தரையிலிருந்து, மலையின் உயரத்திற்கு - மலைக்கு மேல், காடுகளை வெட்டி கஷ்டப்பட்டு றோட்டுப் போட்டார்கள்! இதுக்காக, லட்சக்கணக்கில் பணத்தையும் செலவிட்டார்கள்! ஆனால், இதுக்குத் தேவையான காசையும் ஆட்களையும் அவர்கள் தங்கள் நாடான இங்கிலாந்திலிருந்து கொண்டு வரவில்லை! எங்கள் நாட்டிலிருந்து 'அள்ளிக் கொண்டு' சென்றதில் ஒரு சிறு பகுதியையே இதற்காக

செலவு செய்தார்கள்! இதை, அவர்கள், எங்கள் நாட்டு மக்கள் மீது இரக்கம் கொண்டு செய்யவில்லை. பின்னெதற்காக இதைச் செய்தார்கள்? யாருக்காக றோட்டுப் போட்டார்கள்? யாருக்காகப் பாலம் போட்டார்கள்...? இதுக்கு, யார் பதில் சொல்ல முடியும்? தெரிந்தவர்கள் யாராவது சொல்லலாம்...?"

ஒவ்வொரு மாணவனாகப் பார்த்தேன். "அவர்கள் போற வாறதுக்கு..."

ஒருவன் சொன்னான்.

"எங்கு...போறவாறதுக்கு...?" நான் திரும்பவும் கேட்டேன்.

"தங்கட வீடுவாசல்களுக்கு" மற்றொருவன் சொன்னான்.

"சரி..., அதுக்கு மட்டும்தானா...? வேறொரு முக்கியமான காரணமும் இருந்தது...அதை யாருக்கு சொல்ல முடியும்?"

ஆளையாள், முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள்.

"நான் சொல்லிறன் ஸேர்!" பாறூக்தான் எழுந்து நின்றான்.

"சரி, சொல்லு பார்ப்பம்...?"

"தங்கட, தேயிலைத் தோட்டங்களுக்குப் போறதுக்கு...!"

"கெட்டிக்காரன்! சரியாகச் சொன்னான். உண்மையாகவே,... ஆங்கிலேயர், தங்களின் தேயிலை, றபர் தோட்டங்களுக்கு போய் வருவதற்காகவும் அங்கு விளைந்த, தேயிலையையும், றபரையும் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு செல்வதற்காகவுமே பாதைகளையும் பாலங்களையும் போட்டார்கள்! அது...எங்களுக்கும் பிறகு, உபயோகமாகியது."

அவன் - பாறூக்கின் முகத்தில் மட்டுமல்ல, எல்லா மாணவர்களின் முகத்திலும் ஒரு மலர்ச்சி-பிரகாசம் தெரிந்தது.

"சரி..., நாங்கள், இன்றையப் பாடத்திற்கு வருவமா...? இந்த சமுத்திரத்தின் மத்தியில், எங்கள் நாடு-இலங்கைத் தீவு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில்...கப்பல் போக்கு வரத்திற்கும், வியாபாரத்திற்கும் வசதியாக அமைந்துள்ளது! இதை, படம் கீறி விளக்கினால், உங்களுக்கு, இன்னும் தெளிவாக விளங்கும் என்று நினைக்கிறேன்...!"

அந்த 'வெண்பலகையை' மிகவும் அவதானமாகப் பிடித்துக்கொண்டு..., இலங்கையின் நிலையத்தையும்;, கப்பல் போக்குவரத்து பாதைகளையும், அண்டை நாடுகளையும் படம் வரைந்து விளக்கினேன்.

அடுத்த பாடத்துக்கு 'பெல்' அடித்தது! நான் எழும்ப ஆயத்தமானேன்.

"ஸேர்...! பாறூக்கு, வறுத்த கச்சான் கொட்டை வச்சிருக்கான்..."

மொனிற்றர் முறைப்பட்டான்! நான்தான், இந்த வகுப்புக்கு கிளாஸ் மாஸ்ற்றர். விசாரிக்க வேண்டியதும் எனக்குக் கடமை.

"அதுக்கென்ன...? நீ, கச்சான்கொட்டை சப்பிறதில்லையா...?"

"இவன்...யாபாரம் பண்ண வச்சிருக்கான் ஸேர்..."

ஏற்கனவே... நான், அவனைப் பார்த்தபோது, புடைத்துத்தெரிந்த, அவனின், அந்தக் காற்சட்டைப் பைகளிரண்டையும் நினைத்துக் கொண்டேன்!

ஒருதரம், அவனை, உத்து-உறுத்திப் பார்த்தேன். எனது, அந்தப் பார்வைக்கு முகம்கொடுக்க முடியாமல்,

தலையை குனிந்து கொண்டான். அவனைப் பார்க்க பரிதாபமாகவுமிருந்தது.

"பாறூக்!! எழும்பு...! இங்க, வா..."

அவன் அசையவில்லை.

"இரண்டு பக்கட் நிரம்பவும், கச்சான் கொட்டைதான் ஸேர்...வச்சிருக்கான்!"

மொனிற்றர் மீண்டும் முறைப்பட்டான்.

"பாறூக்...உன்னை நான், கூப்பிட்டது..., கேட்கல்லயா...?!"

வார்த்தைகளுக்கு கொஞ்சம் அழுத்தம் கொடுத்து, அவனை, மீண்டும் ஒரு முறை உத்துப் பார்த்து அதட்டினேன்! பயந்து நடுங்கிக் கொண்டு வந்து, எனது மேசைக்கருகில் நின்றான்.

"பொக்கட் நிரம்ப, என்ன வச்சிருக்கிறாய்...?"

"...................."

அவன், பதில் சொல்லாமல், தலையைக் குனிந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

"பாறூக்...! பயமில்லாமல் சொல்லு...? நான் அடிக்கமாட்டன்..."

"கச்சான் கொட்டைதான் ஸேர்...!"

"எல்லாத்தையும் எடுத்து வை..."

பயந்து பயந்து, மெதுமெதுவாக எல்லாக்கச்சான் கொட்டைகளையும் எடுத்து மேசையில் வைத்தான். 'இவ்வளவும்...இவனது, இந்த இரண்டு 'பொக்கட்டுக்குள்ளும் என்னென்று இருந்தது...?' என்று, எனக்குள் ஒருகணம் வியந்து கொண்டேன்! அதன் பிறகு, அவன் அணிந்திருந்த அந்தக்கால்சட்டையை உத்துப்பார்த்த போதுதான் அது, ஒல்ட்டேசன் பண்ணிய ஒரு 'ஷோட்ஸ்' என்று, எனக்குத் தெரிய வந்தது!

சடுதியாக, இந்த வகுப்பைக் கடந்து, சென்று கொண்டிருந்த அதிபரும் அவனைக் கண்டார். என்னையும் ஒருதரம் பார்த்தார்!

"மாஸ்ற்றர்...இவனுக்கு, எவ்வளவுதான் சொன்னாலும் அடிச்சாலும் இவன் திருந்தவே மாட்டான்...இவன், பள்ளிக்கு வாறது படிக்கிறதுக்கில்ல...இவன் வாறது...கச்சான் விக்கிறதுக்கு...இவனுக்கெல்லாம் என்ன படிப்பு...? இவனை, வீட்டுக்குத்தான் அனுப்ப வேணும்...!"

அதிபர் அவர்கள், தனது அனுபவம் மிக்க, மேலான அபிப்பிராயத்தைச் சொல்லிவிட்டு போய்க் கொண்டிருந்தார்.

"அதிபர்...சொன்னது...காதுக்கு கேட்டதா?"

நான், அவனைப்பார்த்து கேட்டுவைத்தேன்.

"..........."

அவன் பேசாமலே நின்றான்.

அடுத்த பாடத்திற்கு, ஆசிரியர் வந்துவிட்டார்.

இது எனக்கு 'ஒவ் பீரியட்'தான். பாறூக்கையும் கூட்டிக் கொண்டு, அந்தக் கச்சான் கொட்டைகளையெல்லாம் அள்ளி, ஒரு தாளுக்குள் சுருட்டி எடுத்துக் கொண்டு 'றூம்' ஒன்றுக்குள் நுழைந்தேன்!

அங்கு கிடந்த மேசையில், அதை, வைத்துவிட்டு கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டேன். அவனையும் கதிரை ஒன்றில் இருக்கும்படி சொன்னேன். நான், எவ்வளவு வற்புறுத்தியும் "நான் நிற்கிறன் ஸேர்...!" என்று கூறி, இருக்கமறுத்து விட்டான். அது, எனக்குச் செய்கின்ற மரியாதை என்று, அவன் நினைத்திருக்கவேண்டும்.

"இவ்வளவும் எத்தனை றாத்தல்...?"

"அரை றாத்தல்...!"

அந்தப் பதிலில் ஒரு குழைவு இழையோடியிருந்தாலும், ஒரு கம்பீரமே தொனித்தது.

"பள்ளிக்கு கொண்டுவந்து, எத்தன றாத்தல் விற்பாய்...?"

"ஒரு றாத்தல்!"

"எத்தினை தரம் வீட்டுக்குப் போய் வருவாய்...?"

"ரெண்டு தரம்"

"ஒரு தரத்தோடயே கொண்டு வந்தா...என்ன...?"

"களிசான் கொள்ள மாட்டாது ஸேர்...!"

"ஒரு றாத்தல் கச்சான் என்ன விலை...?"

"ஒரு ரூபா ஐம்பது சதம்"

"அவ்வளவையும் எவ்வளவுக்கு விற்பாய்...?"

"ஆகக் கூடினால்...மூணேகால் ரூவாவிற்கு விற்பன்...சிலநேரம்..., குறயவும் செய்யும்."

"லாபம் எவ்வளவு கிடைக்கும்.?"

"ஒண்டுக் கொண்டு - ஒண்ணரை ரூபா...கிடைக்கும் ஸேர்! சில நேரம்...கடைக்காரன்ட தராசி, பொட்டத் தராசென்டால்...இல்லாட்டி...விலையை கூட்டிற்றா னென்டால்...லாபம் குறைஞ்சிபோகும்...!"

"லாபத்தை என்ன செய்வாய்...?"

"உம்மாட்டக் கொடுப்பன்...!"

"வாப்பா...இருக்காரா...?"

"இருக்கார்...ஆனா...இப்ப அவர் எங்களோட இல்ல...உம்மாவோட, கோவிச்சுக்குப் போயிற்றார்..."

"உனக்கு, காக்கா, தம்பி, தாத்தா, தங்கச்சி... இல்லையா?"

"ஒரு, ராத்தாவும், மூனு தங்கச்சியும் இருக்கிதுகள்... எல்லாம் நாங்க...பிள்ளையள் ஐந்து பேர்...!"

"ஐந்து பேரா...?"

"ஓம் ஸேர்...! அதாலதான் உம்மாக்கும் வாப்பாக்கும் ஒரே சண்டை. வாப்பா உழைக்கிறது காணாதாம்...மனசாற, அவர் மட்டும் உழைச்சி எத்தின பேர் தின்னிறது...? அவர்தான் என்ன செய்வார்...? கூலிக்கி, நெசவடிச்சவங்க ஆர்தான் உருப்பட்டிருக்காங்க...? போதாக் குறைக்கி..., நெய்யிறதுக்கு இப்ப தறியும் கிடைக்கிறதில்ல...பாவம் வாப்பா என்ன செய்வார்...? உம்மாவோட கோவிச்சுக்குப் போனாலும் வாப்பா, உம்மாவோட உசிர்! நான், வாப்பாக்கிட்டப் போற வாறது தான்...நானும், உம்மாவும் போய்...வாப்பாவக் கூப்பிட்டால் வந்திருவார்...!"

தங்கு தடை எதுவுமே இன்றி பாறூக் கதைத்துக் கொண்டே போனான்.

அவன் வாழும் அந்த, பகைப்புலனிலிருந்து எவ்வளவு அனுபவங்களை, இந்தப்பிஞ்சு மனம் கிரகித்து, அதனால் பாதிக்கப்பட்டு..., அதை, எதிர்கொள்ளவும் தயாராக இருக்கிறதே...என்று, நினைத்து எனது, மனம் அவனுக்காக இரங்கத் தொடங்கியது.

"கச்சானை ஆரு வறுக்கிறது...?"

"உம்மாதான்...! சில நேரம் நானும் வறுப்பன்...! எல்லார்ர கையிலயும் வேலை இருந்தால்...நான்தான் வறுப்பன். நாங்க இப்ப...வீட்டில இருக்கிறது எல்லாமாக ஏழு பேர்...!"

"அதெப்பிடி ஏழுபேர்...?"

"வாப்பா...கோவிச்சுக்குப் போனாலும்...வாப்பம்மா எங்களோடத்தான். அவவும், வேறயா கச்சான் விற்பா...உம்மாக்கு காசு கொடுப்பா...எங்களையும் கவனிப்பா...அவவயும் சேர்த்தா நாங்க ஏழுபேர்தானே?

ஸேர்...? நான், பள்ளிக்குள்ளயும் ஊருக்குள்ளயுமா, ரெண்டு றாத்தல் விற்பன்...! எங்கட, தாத்தாவும் பள்ளிக்குப் போறதில்ல...அவ, பெரிய மனிசி ஆயிற்றாவாம்...! அவ, வீட்டோட இருந்து, கட்டை, தார் சுத்துறா... இன்னம்...நெய்யப் பழகல்ல...அதுகும், பெண்டுகள் நெய்யப்படாதாம் ஆகாதாம்...என்டு, ஆலிமுமார் சொல்லுறாங்களாம்...ஆனா, உம்மா நெய்வாங்க...! தங்கச்சி மாரில மூத்தது ரெண்டும் இஞ்சதான்...பள்ளிக்கி வருதுகள்...! இளயது–ரெண்டுக்கும் வயசு காணா...அதுகள் வீட்டோட நிற்கிதுகள்...! இப்ப, கட்டை, தார் சுத்துறதும், நெசவடிக்கிறதும்...நல்லாக் குறைஞ்சி போச்சி ஸேர்...எங்கட தறிச் சாமானுக்கு 'டிமான்டு'–மதிப்பு இல்லையாம் ஸேர்...! அதால், எங்கட பாடு இன்னமும் கஷ்டமாப் போயிற்று ஸேர்...! 'சாண் தச்சால்...முழம் கிழியிது...' என்டு, உம்மா, ஒரே புறுபுறுத்தபடிதான்...! அதாலதான், நானும் என்னால, ஏன்டதைச் செய்து...இதிலயெல்லாம் கிடைக்கிற வருமானத்திலிருந்துதான் எங்கட காலம் போகிது..."

"காலையில் என்ன சாப்பிட்டாய்...?"

"கிழங்கு...ஸேர்..."

"என்ன கிழங்கு...?"

"மயொறுக்கிழங்கு...ஸேர்...!"

"இரவு...என்ன சாப்பிட்டாய்...?"

"..........."

மௌனமாக தலையைக் குனிந்து கொண்டான்!

"ஏன்டா...இந்த கேள்வியைக் கேட்டோம்...?" என்றிருந்தது, எனக்கு. அவனது கண்கள் கலங்கின. அது, ஒருகணம் தான்! ஆனால், மீண்டும் அவன் கதைக்கத் தொடங்கினான்.

"...ராவு, நாங்க சோறாக்கிருப்பம் ஸேர்...., ஆனா...திடீரென்டு, உம்மாக்கு குளிர் எழும்பிற்று! நடுக்கமும் காய்ச்சலும். டாக்டரிட்ட கொண்டு போனம்...! அவர், மருந்துக்கும் ஊசிக்கும் சேர்த்து எட்டு ரூபா எடுத்திற்றார்! அதாலதான் ராவு...?"

"நீ, கச்சான் கொட்டை கொண்டு வந்து விற்கிறதுக்காக...உனக்கு, ஸேர்மார் அடிக்கிறது..., உம்மாக்குத் தெரியாதா...?"

"தெரிஞ்சாத்தான் உம்மா என்ன செய்வா...? நான்..., செய்யிறதும் பிழைதானே ஸேர்...! பள்ளிக்க கொண்டு வந்து, வித்தால்...அடிப்பாங்கதானே...ஸேர்...!"

"அப்ப..., ஏன் கொண்டு வந்து விக்கிறாய்...?"

"எங்கட கஷ்டம்...கொண்டுவந்து விற்கிறன்...! அடிச்சா அடிக்கட்டும் என்ன செய்ய...? இப்பெல்லாம், ஸேர் மார் அடிச்சால்...அதைப்பத்தியெல்லாம் உம்மாக்கு சொல்லிறதில்ல...சொன்னால்...சலிச்சிக் கொண்டு குளறுவாங்க...அதப் பார்த்தால்...எனக்கும் சலிப்பு வரும்... அதாலதான், அதையெல்லாம் உம்மாக்கு சொல்லிறதில்ல...!

...வாப்பாக்கு சொல்லுவன்...! அவருக்குத் தெரியும்...தெரிஞ்சாலும் அவரும் என்ன செய்ய...? ஆத்திரத்தில கத்துவார்...! அதிபரையும் அந்த ஸேரையும் ஏசுவார்! அந்தாக்களை கண்டுக்கட்டும் எண்டு சொல்லுவார்! எல்லாம் கதைக்கத்தோட சரி...! எப்பிடிப் போய் கேட்கிறது...? நாங்க செய்யிறது, பிழைதானே ஸேர்...? எங்கிட கஷ்டகாலம்...நான்,இதைச் செய்யிறன்...என்னை யாச்சும்...படிப்பிக்க வேணும் என்டு, உம்மாக்கும் வாப்பாக்கும் சரியான விருப்பம். எனக்கும் விருப்பம்தான். அதாலதான், அடியையும் ஏச்சையும் பட்டுக்கொண்டு, பள்ளிக்கி வாறன்... என்ன செய்யிறது...? இல்லாத எங்களுக்கு இது கஷ்டகாலம்...! அதுபோட்டு எங்கள, ஆட்டிது...! இது

அல்லா எங்களுக்கு எழுதின எழுத்து...அல்லாவும், எங்களத்தான் சோதிக்கான்...? எங்கள என்ன செய்யச் சொல்லுறீங்க...ஸேர்...?"

வயசுக்கு மூத்த மனவளர்ச்சி. அவனுக்கு, என்ன பதில் சொல்லுவது...? என்று, அப்போது, எனக்கு கஷ்டமாகயிருந்தது! ஆனாலும், அவனுக்கு பதில் சொன்னேன்!

"இல்லாதவங்களுக்கு எல்லாம், கஷ்டத்தை...அல்லா எழுதி வைக்கல்லடா...! அல்லா...ஓர நியாயம் செய்யிறதில்லடா...நாம தேடவேணும்...தேடினால் கிடைக்கும்! என்ன கஷ்டம் வந்தாலும் நீ பள்ளிக்கி வர வேணும். கெட்டித்தனமா படிக்கவேணும் என்ன பிரச்சின வந்தாலும்...நீ, என்னிட்ட சொல்ல வேணும்...என்ன, சொல்லுவயா...?

"ஓம்...ஸேர்! நான் வகுப்பில் இரண்டாம் பிள்ளை ஸேர்!"

"மிச்சம் சந்தோஷம்...நீ, அடுத்த முறை முதலாம் பிள்ளையாக வரவேணும். உனக்கு...கூடப் பிறந்த காக்கா இல்லையே...!"

"இல்லை...ஸேர்!"

"என்னை நீ, உன்ட கூடப் பிறந்த காக்காவாக நினைச்சுக்க...சரியா...?"

"ஓம் ஸேர்...!" நெகிழ்ந்தது அவன் குரல்.


"அதிபரிடம் பேசி..., 'இன்டேவல்' நேரத்துக்கு கச்சான் கொட்டை விற்கிறதுக்கு, உனக்கொரு ஒழுங்கு செய்து தரப்பார்க்கிறன்...! வகுப்புக்க விற்க மாட்டியே...?"

"இப்பவும் நான் வகுப்புக்க விற்கிறதில்ல ஸேர்...!"

அவன் கூறும் போதே அவனது கண்கள் கலங்கிக் கரைந்தன!

வீரகேசரி 1974

# சப்பாத்து



"கடைசி முறையாக எச்சரிக்கிறேன்! சில மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது."

கையில், நீண்ட பிரம்புடன் பத்தாம் வகுப்புக்குள் நுழைந்த, 'டிஸிப்ளின்' வாத்தியார் முகத்தை கடுக்கென்று வைத்துக்கொண்டு...கதைக்கத் தொடங்கினார்...

சற்று, இறுக்கமாக கட்டியிருந்த 'டை'யின் முடிச்சைப் பிடித்து, கழுத்தை ஒருதரம் திருப்பி அதை நுகைத்து விட்டுக் கொண்டார்.

"நானே, 'ஹொஸ்ற்றல்' மாணவர்களுக்கும் பொறுப்பாக இருக்கிற காரணத்தினால், அவர்களின் கட்டுப்பாடு, நடத்தைகளிலும் எனக்கு அக்கறை இருக்கிறது. நான், எனது கடமையைச் செய்யவேண்டும். அதற்கு, நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்...!

'டை'யை ஒருதரம் தடவி, விட்டபடி, அவர் அணிந்திருந்த அந்த சிங்கப்பூர் 'டெற்றோன் ஷேர்ட்டில்' சாடையாக பட்டிருந்த தூசியை, விரல்களால் தட்டிவிட்டுக் கொண்டார்.

"ஹொஸ்ற்றல் மாணவர்கள், மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேணும்! ஆனால்...சிலர், ஒரு 'யூனிபோமிற்றி'க்கு கட்டுப்படாமல்...உடையில்

கவனமில்லாமலும், சப்பாத்து அணிந்து வராமலும் கொலிஜின் டிஸிப்ளினைக் கெடுத்து வருகிறார்கள்! கட்டுப்பாட்டை மதிக்கிறார்களில்லை!

பிரிட்டிஸார் காலத்திலிருந்தே இந்தக் 'கொலிஜ்' எஜியூகேஷனில் மட்டுமல்ல, 'டிசிப்ளினி'லும் பேரெடுத்து வந்திருக்கிறது! அரசாங்கம் இந்தக் கல்லூரியை பாரமெடுத்த பின்பும் கூட, இதன் பெயர் பாதுகாக்கப்பட்டே வருகிறது...! தொடர்ந்து, இதன் நற்பெயரை பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எங்களுக்கு இருக்கிறது... ஆகவேதான், கொலிஜின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படாத மாணவர்கள்மீது, 'டிஸிப்பிளினரி அக்ஷன்' - ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது!"

"ஸேர்...'நான் கேட்கிறேன்' என்று, கோவிக்க மாட்டீங்களே...?"

கழுவிக்காயப்போட்டு, சுருக்கம் நிமிராத அந்த 'கொட்டின் வைற் பப்ளினில்' ஷேர்ட் அணிந்திருந்த அவன்-அப்துல்லா கேட்டான்!

"நோ...நான் ஏன் கோவிக்கவேணும்...? நீ, தாராளமாகக் கேட்கலாம்...?"

"நமது நாட்டு, சீதோஷ்ண நிலைக்கும், நாட்டு மக்களுக்கு இருக்கிற பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியிலும் இந்த, சப்பாத்தும் ஸொக்ஸும் அவசியந்தானா ஸேர்...?"

"ஷட்டப்...!! நீ, நல்லா முத்திப்போனாய்! எங்களுக்கெல்லாம்...தெரியாத, நாங்கெல்லாம் படிக்காத



ம 13

சீதோஷ்ண நிலையையும், பொருளாதாரக் கஷ்டத்தையும் தான் இவர்...புதுசாக்கண்டிட்டார்! பிஞ்சில பழுத்தால்...இப்படித்தான் கேள்விகள் வரும்! சிட் டவுண்!!"

'பொண்ட் கொலர்' வைத்துத் தைத்த, என்பதுக்கிருபது-'ரெட்ரோன் கொட்டன்' ஷேட்டும் 'பொலிஷ்' மங்காத முனைச் சப்பாத்துமாக வீற்றிருந்த மாணவர்களில் சிலர், டிசிப்பிளின் மாஸ்ட்டரின் அந்தப்பதிலை தாராளமாக ரசித்து கொல்லென்று சிரித்து மகிழ்ந்தார்கள். மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

சிரித்து ஓய்ந்த மாணவர்களையும் அந்த ஆசிரியரையும் ஒருதரம் அலட்சியமாக திரும்பிப்பார்த்த அப்துல்லா, அவர்களுக்காக ஓர் அனுதாபச் சிரிப்பை மாத்திரம் உதிர்த்துவிட்டு மெல்ல அமர்ந்தான்.

டிசிப்பிளின் மாஸ்ட்டர், ஒரு 'நக்கல்' சிரிப்பையும் பார்வையையும் உமிழ்ந்தார். அவரோடு சேர்ந்து, அந்தச் சில மாணவர்களும் சிரிப்பை கொட்டினார்கள்!

இன்னும், சில மாணவர்கள் சிரிக்கவும் முடியாமல் அழவும் முடியாமல் தலையைக் குனிந்து கொண்டு இருந்தார்கள்.

சிலகணம், வகுப்பில் ஒரு மயான அமைதி நிலவியது.

அதன் பிறகு சப்பாத்தும், சீருடையும் அணிந்து வராத மாணவர்களை ஒவ்வொருவராக எழுந்து நிற்கச் செய்து விசாரிக்கத் தொடங்கினார்!

"என்ன பழீல்...? நீ இன்னும் சூஸ் வாங்கல்லயா?"

"உங்களிட்ட உண்மையைச் சொன்னால்...என்ன ஸேர்...? சப்பாத்தும் ஸொக்ஸூம் வாங்கற தென்டால்...இப்ப, எழுபத்தைந்து ரூபா வேணும்! ஆனால், முப்பத்தைந்து ரூபாதான இப்ப, இருக்கிதாம்...மிச்சக் காசையும் எப்பிடியாவது சேர்த்து, அடுத்த மாதம் அனுப்பிறதாக வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கு ஸேர்...!"

"நீங்களெல்லாம் ஏன்டாப்பா...இவ்வளவு கஷ்டப்பட்டு கொலிஜுக்கு, படிக்க வாறீங்க...? உங்களுக்கெல்லாம் அட்மிஷன் தந்ததே பிழையாப் போச்சு...! அங்க...உங்கட ஊரிலேயே படிச்சிருக்கலாமே...?"

"இல்லாத நாங்க, அப்பிடித்தான் செய்திருக்கவேணும்! ஸ்கொலஷிப்ல பாஸ் பண்ணினதுக்கு கிடைச்ச தண்டனை இப்படியாப் போச்சு ஸேர்...!"

"எல்லாரும் நல்லா கதைக்கப்பழகிற்றீங்கடா... என்ன...ஜோஜ், உனக்கு வைற் ஷேட் கிடையாதா? 'ஷு' எப்ப வாங்கப் போறாய்...?"

"இருக்கிற வெள்ளை ஷேட்டை கழுவிப் போட்டிட்டேன்...இன்னொரு 'வைற் ஷேட்டுக்கு பப்ளின் வாங்க வசதியில்ல...சப்பாத்தும் ஸொக்ஸும் வாங்கலாமென்றும்...நான் நினைக்கயில்ல ஸேர்...! 'சப்பாத்து போடவேணுமாம்' என்று, அப்பாவுக்கு கடிதம் எழுதினேன்...அதுக்கு, 'படிச்சது போதும், போட்டிட்டு வந்து தொழிலைப்பார்...!' என்று, பதில் வந்திருக்கு...!"

"என்ன, எல்லாரும் சேர்ந்து பகிடியா பண்ணுறீங்க? இவன் அப்துல்லாவோடச் சேர்ந்து, எல்லாரும் கெட்டுப் போனீங்கடா...! அப்படி என்டால்...படிப்பை விட்டுப்போட்டு வேற தொழிலைப் பார்க்கிறது தானே...? இந்த, அரசாங்கமும் தொழில் கல்வியை பற்றித்தானே...பெரிசா கதைக்கிது! ஏன்டாப்பா...! கொலிஜ்ஜிட பேரைக் கெடுக்கிறீங்க? என்ன பஷீர்...? நீ என்ன சொல்லப் போறாய்?"

"சப்பாத்துக்கு ஏறியிருக்கிற விலை...எங்களுக்கு சரிவராது ஸேர்...! அது, பெரிய இடத்துப் பிள்ளையளுக்குத் தான் சரி. அதுவுமல்லாம ... சப்பாத்துப் போடிறதுக்கு ... நோக்கமென்ன ஸேர்...? காலுக்கு பாது காப்புத்தானே ... ? குறைஞ்ச விலைக்கு ... ஒரு சப்பாத்து அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிதாம்...அதை, அணிஞ்சி கொண்டு ஸ்கூலுக்கு போனால் போதுமாம்...என்று, பதில் கல்வி மந்திரி பேசி இருக்கிறார்...பேப்பரில் கிடக்கு...! அந்த, சப்பாத்தை வாங்கி போடட்டா ஸேர்...?"

"நீ ... நல்லாவே முத்திப் போனாய்! பேப்பரில

கிடக்கிறதையெல்லாம் நாங்க அமுல் நடத்த ஏலாது வாற ஒவ்வொரு மினிஸ்ற்றரும் ஒவ்வொன்றைச் சொல்லுவான். அதையெல்லாம் நாங்க செய்ய ஏலாது...! நீங்க..., நாங்க சொல்லிற மாதிரி 'ஷு'தான் போட்டுக் கொண்டு வரவேணும். என்ன...பொன்னையா...? நீ என்ன...பூனை மாதிரி முளிக்கிறாய்...? உனக்கு இந்த ஷோர்ட்டைத் தவிர வேற வைற் ஷேட்டே கிடையாதா...?"

"வைற் பப்பிளின் கிடைக்குதில்லையே ஸேர்..."

"நீ, காசைக் கொண்டுவா...! நான் வாங்கித்தாறன்!...எல்லாரும் பிஞ்சில பழுத்துப் போனீங்கடா...அதுசரி...நீ 'ஷு' வாங்கற தில்லயா...?"

"வாங்கத்தான் வேணும், காசு இல்லையே ஸேர்...?"

"என்ன பேய்க்கதை கதைக்கிறாய்? காசில்லாமல் 'ஷு' வாங்க ஏலுமா...? இதெல்லாம் எனக்குத் தெரியாது...எல்லாரும் 'ஷு' வாங்கியே தீரவேணும்!! என்ன...றபீக்! உனக்கு, எழும்பி...நிற்கவும் ஏலுதில்லையோ...? சரி சரி இரு! இருந்து கதை!! இன்னும் உன்ட கால் சிரங்கு ஆறவே இல்லையா...?"

"இல்லை ஸேர்..."

அவனின் இடதுகால் பாதத்தைச்சுற்றி, வெள்ளை 'பென்டேஜ்' துணியால் கட்டப்பட்டிருந்தது, அதில், பட்டிருந்த, மஞ்சள்-சிதள்தண்ணியில் கொசுக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன! அவற்றைக் கலைப்பதற்கு, காலை, அடிக்கடி தூக்கி மாற்றிவைத்துக் கொண்டிருந்தான்.

"இதென்ன...சிரங்கப்பா...? இது உனக்கு வந்து..., அஞ்சாறு மாதமிருக்கு மில்லையா...?

"ஓம்...ஸேர்"

"இப்ப என்ன மருந்து கட்டியிருக்கிறாய்...?"

"கை மருந்துதான் ஸேர்...அதோடச் சேர்ந்து 'டெட்றா சைக்கிளின்'–குளிசையும் விழுங்கிறன்...!"

"ஹொஸ்பிற்றலுக்கு கொண்டு போய் காட்டடல்லயா...?"

"காட்டி...பென்ஸிலின் இன்ஜெக்ஷனும் போட்டு மருந்தும் கட்டினதுதான் ஸேர்...சுகமாகிது, ஆனால் திரும்பித் திரும்பி வருது ஸேர்...! சிலர், இதை 'எக்ஸிமா' என்று, சொல்லிறாங்க ஸேர்...?"

"ஒரே, மசமசவென்று கடிச்சி, தண்ணி ஒடுதா...?"

"ஓம் ஸேர்...?"

"சரிதான்...இதை ஒரு 'ஸ்கின்' ஸ்பெஸலிற்'றிட்டத்தான் காட்டவேனும்! அதுக்கு முந்தி, உன்ட பிளட், யூறின் எல்லாம் 'செக்' பண்ணவேணும்!"

"இப்ப, கடைசியா பூசியிருக்கிற மருந்துக்கு கொஞ்சம் சுகமாகிக் கொண்டுதான் வருகிது ஸேர்...! எதுக்கும் அடுத்த கிழமை வரைக்கும் பார்ப்பம்...!"

"நீயும் உன்ட கைமருந்தும்...!? இப்ப...எத்தினை மாதமாப் போச்சு...? இந்த கைமருந்து கால்மருந்து கதைகளையெல்லாம் விட்டிட்டு, பின்னேரம் போய், ஒரு 'ஸ்பெஷலிஸ்ற்'றைச் சந்திப்போம் 'றெடி'யாகு!"

"வேண்டாம் ஸேர்! வீணான செலவு வரப்போகிது...! வேணுமென்டால்...ஆஸ்பத்திரிக்குப் போய், ரத்தம், யூறின்...எல்லாத்தையும் 'செக்' பண்ணிக் கொண்டு வாறன் ஸேர்...! நீங்க வந்து அலைய வேணாம் ஸேர்..."

"இதிலென்ன அலைச்சலிருக்கு...? ஒரு ஹொஸ்ட்றல் மாணவனுக்கு செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்யப் போறேன்...! ஓ...ஐ ஸீ...! எனக்கும் நல்லதாப் போச்சு, உனக்கும் நல்லதாப் போச்சு...! இந்த மாதம் முதற் தேதியோட, இந்த ஹொஸ்ப்பிற்றலுக்கு 'டிஎம்மோ'வாக மாறி வந்திருப்பவர் என்ட, பிறன்ட் – நண்பர்...! நானும்

சந்தித்ததாய்ப்போகும், உன்னையும் காட்டினதாப் போகும்...!"

"இந்த சின்ன விஷயத்துக்கெல்லாம்... நீங்க ஏன் ஸேர்... வந்து அலையப் போறீங்க...? அவருக்கு, நீங்க ஒரு 'லெற்றர்' தந்தால்... நானும் பொன்னையாவுமாகப் போய் புண்ணைக் காட்டி மருந்து கட்டிக்கொண்டு வாறமே... ஸேர்!"

"நோ, நோ...! நானும் டிஎம்மோவை சந்திக்க வேண்டியிருக்கு! பின்னேரம் சரியாக நாலுமணிக்கு, புறப்பட றெடியா இரு!"

டிசிப்ளின் மாஸ்றறர், மீண்டும் ஒருமுறை நிமிர்ந்து நின்று, வகுப்பு முழுவதையும் ஒரே பார்வையில் நோட்டமிட்டார்! குறிப்பாக அப்துல்லாவையும், சப்பாத்து வாங்க வசதியற்றிருக்கின்ற மாணவர்களையும் வெறித்துப் பார்த்தார்! பிரம்பை, ஒருதரம் மேசையில் ஓங்கி அடித்துக் கொண்டு சொன்னார்,

"கடைசியும் முதலுமாக எச்சரிக்க விரும்புகிறேன்! கல்லூரியின் நல்லபெயரைப் பாதுகாப்பதற்காக சிலர் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருப்பதை இனியும் பிற்போட முடியாது! ஆனாலும், இதுவரைக்கும், சப்பாத்தும் சீருடையும் வாங்கி முடிக்காதவர்களுக்கு இம்மாதம் முடியும் வரைக்கும் அவகாசம் தரப்படுகிறது! இது உங்களுக்குத் தரப்படும் இறுதிச் சந்தர்ப்பம்! அது மட்டுமல்ல, இதுவே, இறுதி எச்சரிக்கை!!"

டிசிப்ளின் வாத்தியார், வகுப்பை விட்டு வெளியேறி போய்க்கொண்டிருந்தார். அவரின் சப்பாத்து, தரையில் பட்டு, எழுப்பிய "கிறீச், கிறீச்" சத்தம், மெது மெதுவாக... தேய்ந்து கொண்டிருந்தது.

பின்னேரம், சரியாக மூன்று ஐம்பதுக்கு, 'ஹொஸ்றறல்' வாசலில் வந்து கார் நின்றது.

இழைக்குத்திப் போட்டிருந்த, "பி, லெவன் கார்க்கி" காற்சட்டை! கசங்கிய பப்ளின் ஷேட்! கையில் ஒரு போத்தல்!

விடுதியின் விறாந்தை வழியாக காலையும் கெந்திக் கெந்தி, ஒரு கையால் வயிற்றையும் பொத்திக் கொண்டு வந்து நின்றான் றபீக்.

"என்ன...வயிற்றையும் பொத்திக் கொண்டு வந்து நிற்கிறாய்...?"

"வயிறு வலிக்கிது...நிற்கிது! பிறகு வலிக் கிது...நிற்கிது...! நாளைக்கி போவமா ஸேர்...?"

"அதையும் காட்டுவம்! ஏறு...!!"

மாஸ்றறர், விசுக்கென்று காருக்குள் ஏறி, பின் 'ஸீற்'றின் இடது பக்கத்து மூலையில் சாய்ந்து கொண்டார்! றபீக், மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு, முன் ஸீட்டில் ஏறி இருந்து கொண்டான்.

சரியாக நான்கு மணிக்கு கார் புறப்பட்டது.

மாத முடிவில், ஹொஸ்ற்றலுக்கும் கொலிஜுக்கும் கட்டவேண்டிய காசோடு சேர்த்து, இம்மாதம் மேலதிகமாக 'காலு'க்காக செலுத்தவேண்டிய காசையும் நினைத்து...றபீக்கின் மனம் சலிக்கத் தொடங்கியது...!

சின்ன வயதிலேயே, தந்தையைப் பறி கொடுத்த பின் ஏழைத் தாயொருத்தியின் கனவுகளுக்கு லட்சியவடிவமாக, ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்து மத்திய கல்லூரி ஒன்றுக்கு படிக்க வந்தவன் றபீக்!

தனது மகனின் படிப்பே உயிராக – அதற்காக, இரவு பகலாக அடுப்பு நெருப்பே தலை விதியாக உருகுகின்ற தனது தாய் – 'அப்பக்கார ஆமினா'வை, ஒருதரம் நினைத்துப் பார்த்தான்! அவனை, அறியாமலே அவனது, கண்கள் கலங்கின!

"ஏன் தம்பி...அழுறாய்...? கால் நோகிதா...?" றைவர், கேட்டார்.

"ஓமண்ணே...!"

"இந்தா வந்திற்றம்...! கொஞ்சம் பொறு...!"

மாஸ்றர், அந்த மாதம் வெளிவந்த, வளுவளுப்பான அட்டைப்படம் போட்ட 'சினிமா ஸ்டார் மெகஸீன்' ஒன்றில் மூழ்கிக் கிடந்தார்.

கார் நின்றது.

சட்டென்று, இறங்கிய மாஸ்றர், 'D.M..O.' என்று, எழுதப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தார்.

அவருக்குப் பின்னால் றபீக் நடந்தான்.

நண்பர்களின் கல்கலப்பான சந்திப்புக்குப் பின்னர், றபீக்கின் பெயர் சொல்லி அழைக்கப்பட்டது.

டாக்டரின் அறைக்குள் சென்ற றபீக், கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான். காலில் கட்டியிருக்கும் கட்டை அவிழ்க்கும்படி டாக்டர் சொன்னார்.

தயங்கித் தயங்கி கட்டை மெதுவாக அவிழ்த்தான். அவனது கைகள் நடுங்கின!

அந்த நடுக்கத்தை அவதானித்த டாக்டர்,

"இவனுக்கு, 'நேவ்ஸ் றபிள்' - நரம்புத் தளர்ச்சியும் இருக்கிறாப் போல...?" என்று, கூறினார்.

அந்த மஞ்சள் தண்ணீர் பட்டிருந்த வெள்ளை பெண்டேஜ் துண்டுகள், டிஸிப்ளின் மாஸ்றரையும், டாக்டரையும் பார்த்து, வாயைப் பிளந்து கொண்டு சிரிப்பது போலிருந்தது.

டிஸிப்ளின் மாஸ்றரின் கண்களில் அக்கினி பறந்தது. ஆனால், அவரால், றபீக்கை எரித்துவிட முடியவில்லை!!

டாக்டர், தலையில் கைகளை வைத்துக் கொண்டு இருந்து விட்டார்.

றபீக், தலையைக் குனிந்து, கால் பெரு விரலால் நிலத்தை சுரண்டிக்கொண்டு நின்றான்! அவனது கலங்கிய கண்களிலிருந்து, நீர் கொட்டியது.

வீரகேசரி 1975

# ஒரு மல்லிகை



"இன்றைக்கி, இந்தக்களவை கண்டுபிடிக்கத்தான் வேணும் ஸேர்...! இது, எங்கட ஆறாம் வகுப்பு 'ஏ'க்கே அவமானம்...!!"

"கண்டு பிடிச்சாச்சு! என்று, வச்சிக்குவம். அதுக்குப்பிறகு என்ன செய்யிறது...? அது, பாவம்தானே...?

"யார் தின்டாலும் நன்மை கிடைக்குமாம் விட்டிடுவம்...!"

"அதுக்காக, களவெடுத்து தின்ன வேணுமாக்கும்...?"

"வேற, என்ன செய்யிறது? இல்லாதவன், களவெடுப்பான்! இல்லாட்டி தட்டிப்பறிப்பான்!"

"நல்லாயிருக்கு, உன்ட கதை ... இல்லாதவனெல்லாம்...களவெடுக்கவும் தட்டிப்பறிக்கவும் தொடங்கினால்... எப்பிடியிருக்கும்...? உழைச்சித் தின்டால் என்னவாம்...?"

"ஏழையள் உழைக்காமலா இருக்கிதுகள்...?" அதுகளுக்கு உரிய பலன் கிடைக்குதில்லயே...?"

"அதைத் தின்ட பிள்ளைக்கு தாயிருக்கோ...? தகப்பனிருக்கோ...? அல்லது, என்ன கஷ்டமோ...? ஆருக்குத் தெரியும்?"

"அடியேய்...! அதுவும், இவள் – கல்யாணி – பணக்காரி கொண்டுவாற சாப்பாடுதானடி களவு போகிது...?"

"அது சரி ... அவள் பணக்காரி கொண்டாற சாப் பாடு ... ருசிதானே ... திண்டவளுக்கு ஆசை யில்லையா ...? பாவம் எடுத்துத் திண்டவளை... விட்டுப்போடுவம் ...!

"இல்லயில்ல...இது மூன்றாவது தடவையா... இந்தக்களவு நடந்திருக்கு...இதுக்குமேல் மன்னிக்க ஏலாது! ஸேர்...வரட்டும்! இன்றைக்கு இதை கண்டு பிடிச்சிப் போட்டுத்தான் மறுவேலை...!"

"என்ன இது சத்தம்!? இதென்ன வகுப்பா...இல்லை, மார்க்கட்டா...!?"

நான், வகுப்புக்கு வந்ததும் வராததுமாக கொஞ்சம் சத்தம் போட்டுக் கத்தினேன்.

அமளி துமளி அடங்கி, மாணவர்கள் அவரவர் இடத்தில் போய் அமர்ந்து கொண்டார்கள்!

அவர்களுக்குள் நடந்த, வாக்கு வாதங்கள் - கேள்விகள் - பதில்கள் - அபிப்பிராயங்கள் - ஆவேசங்கள் ... எல்லாவற்றையும் வகுப்புக்கு, வெளியே நின்று அவர்களுக்கு தெரியாமல், கொஞ்ச நேரம் அவதானித்தவனாகவே வகுப்புக்குள் நுழைந்திருந்தேன்.

மாணவர்களின் இந்த வாதப்பிரதிவாதங்கள், என்னை திகைக்க வைத்த அதே வேளையில், சிந்திக்கவும் தூண்டின. அந்தக் கருத்துகள் அனைத்தும் சமுதாயத்தைப் பிரதிபலித்தன.

வகுப்புக்கு வந்து, சிலகணம் மலைத்துப் போய் நின்ற நான், இப்போதுதான் இருந்தேன். மாணவர்களின் விழிகளுக்கூடாக அவர்களின் இதயங்களை தொட்டுத்

தடவியதை அவர்கள் உணர்ந்தார்கள்! புயலோடு பெய்த பெருமழை ஒன்று, ஒருபாட்டம் பெய்து ஓய்ந்தது போலிருந்தது.

"என்ன...இன்றைக்கும் கல்யாணி கொண்டு வந்த 'லஞ்ச்' போயிற்றாக்கும்...என்ன...? இனி, விட்டு வைக்க ஏலாது ... கண்டுபிடிக்கத்தான் வேணும் ... என்ன, அப்பிடித்தானே...?"

"ஓம் ஸேர்...! இன்றைக்கி, கண்டு பிடிச்சே ஆகவேணும்!" ஏறக்குறைய எல்லாமாணவர்களும் ஒரே குரலில் கூறிவைத்தார்கள்!

இடாப்பு அடையாளம் முடிந்தது.

இதற்கு முந்தியும் இரண்டு தடவைகள். இந்த மாணவர்களின் 'தேடுதலை' திசை திருப்பியிருக்கிறேன்.

எனக்குள் ஒரு தர்ம சங்கடம்! 'அந்தப் பிஞ்சு மனம் திருந்த மாட்டாதா...? என்னும் ஆதங்கம்!.அதற்காக...எதை எதையோ எல்லாம் சொல்லி இந்த விசாரணையை அவர்கள் உணராமலே ஒத்திப் போட்டு வந்திருக்கிறேன். இன்றைக்கு என்ன செய்வது...?

இந்த, அழகான நந்தவனத்திற்கு, நான்தான் காவற்காரன். இதை பராமரிக்கின்ற பொறுப்பும் கடமையும் எனக்குத்தான்.

வெள்ளை றோஜா, சிவப்பு றோஜா...மல்லிகை, குண்டு மல்லிகை, கொடி மல்லிகை...செவ்ந்தி, செவ்வரத்தை, சூரிய காந்தி...என்று, எத்தனையோ வகைப் பூக்கள் இங்கு பூத்துக் குலுங்குகின்றன! அவை, ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக்கொண்டு மலர்ந்து மதாளித்துக் கொண்டு நிற்கின்ற அழகு, ஒரு தனி அழகு!

அந்த மல்லிகையில் ஒன்று, இன்று வாடிவதங்கி கருகிவிடப் போகிறதா...? அதுவும் என்னால்...? அதை, நினைத்துப் பார்க்கவே என்னால் முடியவில்லை!

அந்த மல்லிகைக்கு என்ன நடந்தது...? விடைகாண என் மனம் தவித்தது! அதற்கு, கொஞ்சம் தனியாக நீரூற்றி வளர்த்துவிட என்மனம் நாட்டம் கொண்டது. அது வீண்போகவில்லை.

காலங்காலமாக, அதன் தலைமுறை அகத் தாக்கங்களைவிட, புறத்தாக்கங்களாற்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டு வந்திருப்பதை என்னால் உணர முடிந்தது. ஆனாலும் இந்த, பிஞ்சுமல்லிகையை எப்படியும் காப்பாற்றி விடலாம் என்ற, நம்பிக்கை எனக்கிருந்தது. ஆனால், இந்த றோஜாக்களும், குண்டுமல்லிகையும், சூரிய காந்தியும்...பொறுமை இழந்து...நிற்கின்றதே...?

இந்த, வகுப்பில் நடந்துவருகின்ற இந்த சாப்பாட்டுக்களவுகள்..., நெருஞ்சி முட்களால் நெருடுவதுபோல, எனது நெஞ்சில் சதா நெருடிக்கொண்டே இருந்தன...

'அந்த மாணவியை' கண்டுபிடிப்பதற்கான தடயங்கள், சாட்சியங்கள் ஆதாரங்கள்...எல்லாம் ஏற்கனவே எனக்கு கிடைத்திருந்தது! ஆனால், அந்தப்பிஞ்சு மனதை எப்படி அணுகுவது...? அதை என்னென்று கேட்பது? அல்லது, கையும் மெய்யுமாக ஒரு நாளைக்குப் பிடித்து...நிரூபித்து அம்பலப்படுத்தி...? அல்லது, 'எனக்கேன் இந்தத் தொல்லை...?' என்று, அதிபரின் கவனத்திற்கு கொண்டுவருவதா...? இதில்...எதிலுமே எனது, மனம் உடன்படவில்லை!

எல்லாவற்றுக்கும் மேலாக, இது 'வயிற்றுப் பசியோடு' சம்பந்தப்பட்டு என்னை உறுத்தியதால்,'இதைக்கண்டுபிடித்து,' அந்தப் பிஞ்சு மனத்தை வருத்துவதற்கு என் மனச்சாட்சி

மிகவுமே சங்கடப்பட்டது.

அந்தப் பிஞ்சுமனத்தை, நோகாமல் எப்படி இதற்கொரு தீர்வைத் தேடலாம்...? என்பதிலேதான் என்மனம் சதா சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது.

எனக்குத் தெரிந்த உளவியல் அணுகு முறைகள் எல்லாம் ஏற்கனவே அந்த மாணவியிடம் தோற்றுவிட்டன. அற்காக, நானும் இந்த, மாணவிகளோடு சேர்ந்து நின்று, அந்த அரும்பைக் காட்டிக்கொடுத்து...பழிவாங்கி...அதனால் அதன், மன நிலை பாதிக்கப்பட்டு...எதிர்காலம்...பாழாகிப் போவதை நான் விரும்பவேயில்லை! எந்த விதத்திலும், அந்த வெள்ளை மல்லிகையில் எந்த ஒரு தூசு விழுவதையும் நான் அனுமதிக்கப் போவதில்லை.

நான், அறிந்த வரையில், 'கிறிஸ்தவ இல்லம்' ஒன்றிற்தான் அந்தப் பிஞ்சுக்கு அடைக்கலம்! அதுதான், அதுக்கு, அம்மா-அப்பா-உற்றம்-சுற்றம்...எல்லாம்!

அதற்குமேல் அந்த பிஞ்சு மல்லிகையிடம் தோண்டித் துருவி, கேட்டறிவதற்கு என்ன வேண்டியிருக்கிறது? அல்லாமல், அப்படியெல்லாம் கேட்டு, ஆராய்ந்து...அந்தப் பிஞ்சின் விவேகமுள்ள மூளைக்கு வேலை கொடுக்கவும் நான் விரும்பவில்லை. அதன் இதயத்தை நோவினைப் படுத்தவும் எனக்கு மனமில்லை!

இவ்வளவுக்கும் அவள்தான் வகுப்பில் முதலாம் பிள்ளை. படுசுட்டி-கெட்டிக்காரி! ஒரு விஷயத்தை, ஒரு தரம் சொன்னால் போதும் அதை அப்படியே கிரகித்துக்கொள்ளுகிற கெட்டித்தனம்! அப்பப்பா, அப்படியொரு பிள்ளையை எனது அனுபவத்தில் நான் சந்தித்ததே இல்லை!

கொஞ்ச நேரத்துக்கு முன்பு, வகுப்பில் எழுந்து நின்று, வகுப்பில் அமளிதுமளி எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்த மணவர்களின் மத்தியில், அவள்தான் கூடுதலாகச் சத்தம் போட்டாள்.

“அதுக்காக..., களவெடுத்து தின்ன வேணுமாக்கும்...?!” என்று, ஆக்ரோஷத்துடன் கேள்வி கேட்டு நின்றவளும் அவள்தான்!!

இதற்கு, என்ன சொல்ல...? எவ்வளவு சாதுரியமாக, எவ்வளவு துணிவோடு அவளே அதைக் கேட்டாள். எத்தனை கெட்டித்தனமாக அவள், தன்னை மறைத்துக் கொண்டாள்? இந்த, ஆற்றலுக்கு என்ன பெயர்...?

அந்த, அழகான கண்ணைப் பறிக்கிற ‘எவர்ஸில்வர் கரியறில்’ கல்யாணி கொண்டு வருகின்ற அதே உணவுதான் திருடப்பட்டு வந்திருக்கின்றது.

இன்றைக்கு, ‘பட்டரும்’ ‘ஜேமும்’ பூசிய பாணோடு, சீஸும், கோழிக்கூடு - வாழைப்பழமும் இருந்ததாம்...! இதுக்கு முந்தி, முதலாவது தடவை கோழி இறைச்சிக்கறியும் இடியப்பமும் சம்பலும் போயிற்றாம்...! இரண்டாவது தடவை சோறு மீன்குழம்பு, பொரியல், முட்டை எல்லாம் இருந்ததாம்...!

அடுத்த பாடத்திற்கு பெல்லடித்தது...

நான் எழுந்தேன்.

“மொணிற்றர்...இங்கவா! இந்த டாப்பைக் கொண்டுபோய் அதிபரின் மேசையில் வை!” என்று, கூறிவிட்டு எல்லா மாணவிகளையும் எனது கண்கள், ஒருதரம் மேய்ந்தன!

“இந்தக்களவை, இன்றைக்குப் பின்னேரம் கண்டு பிடிச்சே தீரவேணும்! பின்னேரம் ‘ஸ்கூல்’ விட்டதும் ஒருத்தரும் வீட்டுக்குப் போறதில்ல! எல்லாரும் ஆலமரத்தட்டியில் கூடவேணும்!! என்ன சரியா...?!”

என்று, கொஞ்சம் தொனியைக் கடுமையாக்கிக் கொண்டு கூறினேன். அப்போது, அந்த பிஞ்சு மல்லிகை - மல்லிகாவின் முகத்தில், என்கண்கள் ஒரு கணம் நின்று சென்றன. அதை, அந்தப் பிஞ்சுமனம், இலேசாக தரிசித்திருக்க வேண்டும்! அது ஒரு கணந்தான். அந்தக்கணத்தில், அந்த முகம் பனித்துளிபட்டுச்

சுருங்கிய தொட்டாற் சுருங்கித்தளிர் போலாயிற்று! ஆயினும் மறுகணம் அது மலர்ந்தது!!

இந்த, அற்புதத்தை, அந்த முகம் எனக்கு மட்டும் காட்டிற்று! இதை, வகுப்பிலிருந்த எந்தப் பிள்ளையும் பாரத்திருக்க முடியாது என்பதில், எனக்கு நிம்மதி!

இன்டேவலுக்கு பெல்லடித்தது!

நான், வகுப்பொன்றிலிருந்து வெளியேறி, 'கென்ட்டீன்' பக்கமாக நடந்து கொண்டிருந்தேன்.

கூண்டுக்குள்ளிருந்து திறந்து விடப்பட்ட வெண் புறாக்களைப் போல, மாணவர்கள் அங்கும் இங்குமாக நடந்தும் பறந்தும் திரிந்தார்கள்!

"ஸேர்..."

திரும்பிப் பார்த்தேன்.

"என்ன மல்லிகா...?"

"........."

"ஏன் பேசாமல் நிற்கிறாய்?"

"உங்களோட ஒரு விஷயம் சொல்லவேணும் ஸேர்..."

"என்ன விஷயம்...? சொல்லன்!"

"ஆரிட்டயும் சொல்லமாட்டன்...என்று, சத்தியம் பண்ணித் தருவீங்களா ஸேர்...?"

"உனக்கு...என்னில் நம்பிக்கை இல்லையா... மல்லிகா...?"

"அதுக்கில்ல ஸேர்..."

"அப்ப எதுக்கு...?"

"சும்மா கேட்டன் ஸேர்..."

அருங்கோடை காலத்தில், அதுவும் நல்ல மத்தியானத்தில், தேசிப்பழமும் வெள்ளைச் சீனியும் போட்டுக் கலந்து, இளநீர் குடித்தது போலிருந்தது எனக்கு!

அந்த அரும்பின் கண்கள் கலங்கிக் கசிந்தன!

"சரி சரி கையைக் கொண்டு வா! சத்தியம் பண்ணித் தாறன்!"

"வேணாம் ஸேர்...என்னை மன்னிச்சிக் கொள்ளுங்க ஸேர்...! கல்யாணி கொண்டுவந்த...அந்த..."

அதற்கு மேல் சொல்லுவதற்கு, அந்தப் பிஞ்சின் நா இதழ்கள்...விரியவில்லை!

தலையை குனிந்து கொண்டாள்.


அவளின் கண்களிலுருந்து முத்துக்கள் உதிர்ந்தன.

"மல்லிகா...! என்ன இது...? மற்றப்பிள்ளைகள் பாாக்கப் போகிது...அழாமல்...நீ, போ...!"

அந்த அரும்பு என்னை ஒருதரம் நிமிர்ந்து பார்த்தது. அந்தப் பார்வையில், அது...காலமெல்லாம் என் காலடியில் கிடப்பது போலிருந்தது.

வீரகேசரி 1979

# சீரழிவு
# தொடர்கிறது



"உம்மா, நானினி இலங்கைக்கு வரமாட்டேன்..."

"என்ர அல்லா...! மின்னாம முழங்காம இடி விழுகிறதென்னடா அல்லாஹ்!!"

கதிசாம்மா வாய்விட்டுக் கத்தினாள்.

"படிமனே...படி!"

இளயமகள் மஸாஹிறா தொடர்ந்து கடிதத்தை படிக்கத் தொடங்கினாள்.

..."அப்படி நான், ஊருக்கு வராமலே...இங்கேயே நான் மௌத்தாப் போனால்...என்னைப் போட்டு, இங்கயே புதைக்கட்டும்...! இதை, நீங்க படிக்கும்போது உங்கட மனமெல்லாம்...என்ன பாடுபடும்...? பதறும்...! என்றெல்லாம் தெரியாமல்...இதை நான் எழுதவில்லை!

அவர், ஸவாஹிரும் எனக்கு கடிதம் எழுதி இருந்தார்...அவர்ர உம்மா, வாப்பா யாராவது வந்தால் அவங்களுக்கும் இதைச் சொல்லுங்க!..."

"நிற்பாட்டுமனே...! என்ன இது...? புள்ளக்கி என்னமோ நடந்திற்று...? இல்லாட்டி, என்ர புள்ள இப்பிடியெல்லாம் எழுதாது...! போன கடிதத்தில்,"நோன்புப் பெருநாளைக்கி வருவனும்மா..." என்டுதானே எழுதியிருந்தித...அதுக்குள்ள என்ன இது...? என்னவோ மாராயம் நடந்திற்று...!?"

கதிசாம்மா பதறினாள்!

"படிமனே – படி!!"

மஸாஹிறா, தொடர்ந்து கடிதத்தை படித்தாள்.

"...என்ன, நோக்கத்துக்காக, இங்க வந்தனோ...எதுக்காக, நீங்களெல்லாம் சேர்ந்து, வழிஅனுப்பி வைத்தயளோ...அந்த நோக்கமாவது, நிறை வேறட்டும்...! கொஞ்சம் காசுதானே உம்மா வேணும்...? அதுகிடைக்கும்! அதுக்காகத்தானே உம்மா வந்து கிடக்கிறன்...? அதை, உழைச்சி எடுத்திற்றால்...கேட்கிறவங்களுக்கு, 'கைக் கூலி–சீதனமென்று' கொடுத்து, என்னையும் ஒருத்தன்ட கையில பிடிச்சிக் கொடுத்திற்றால்...உங்கட கடமையும் முடிஞ்சு போகும்...இல்லையா உம்மா...? இதுக்காக, நீங்க இனி கஷ்டப்பட வேணாம்...! வாப்பா, மௌத்தானத்திலிருந்து, நீங்க, எங்களையெல்லாம் வளர்க்கிறதுக்கு பட்டபாடு...பட்ட கஷ்டம்...ஒன்றையும் நான் மறக்கல்ல...! மறக்கவும் மாட்டன்! எல்லாத்துக்கும் மேலாக,...என்னை அவர் ஸவாஹிருக்கு முடிச்சுவைக்க நீங்க படுகிறபாடும் எனக்குத் தெரியும்! அதுக்கெல்லாம் இப்ப, அவசரமில்ல...! நான், ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன்...! அதுக்காக, நீங்க வருத்தப்படவேணாம்...! இது, பாலைவனந்தான் உம்மா...ஆனால், இங்கதான் பசுந்தரையும் தெரியிது! தங்கச்சி மஸாஹிறாவுக்கு, நல்ல ஒழுங்கான இடத்தில, உத்தியோக மாப்பிள்ளையா ஆனால்...'மனுசத்தன்மை உள்ளவனாப் பார்த்து' பேசுங்க...! 'பேசிவைக்காம' உடனேயே முடிக்கப்பாருங்க...அந்த மாப்பிள்ளைக்கு என்ன விலை? என்று, எனக்கு எழுதுங்க! காசு அனுப்பிவைக்கிறன்!! அது – மஸாஹிறா வாச்சும் ஊரோட

தேசத்தோட நல்லாயிருக்கட்டும்...!"

"மனேய்...! அதை, அப்பிடியே என்னிட்ட தந்திற்று, குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டுவா!"

கதிசாம்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்!

அந்தக் கடிதத்தை, பவித்திரமாக வாங்கி எடுத்தாள். அதை, கண்ணிலும் நெற்றியிலுமாக ஒற்றிக் கொண்டு மாலை மாலையாக கண்ணீர் சொரிந்தாள்.

இன்னும், படிக்காமல், மீதியாக இருக்கும் அந்த வரிகளை...அவள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற, அவசியம் அந்தத் தாய்க்கு இருக்கவில்லை!

அந்தக் கடிதத்தினூடாக,...எங்கோ, ஒரு கண்காணாத தேசத்தில் ஆரோ ஒருத்தனின் வீட்டில்...வேலைப் பளுக்களைத் தாங்க முடியாமல் ஒரு அநாதையைப் போல, நின்றுகொண்டு அழுது விம்முகிற தனது மகளின் வாடிய முகத்தைத்தான் கண்டாள்!

"மகளே...! உனக்கு...என்ன மாராயம், நடந்தது! மகளே...!!" என்று, திடீரென்று தலையிலடித்துக்கொண்டு கத்தினாள்!

"என்ன இது...? இப்பிடிக்கத்துறீங்க...?! அடுத்த வீட்டுக்காரர்கள், புதினம் பார்க்க வரப் போறாங்க...! இந்தாங்க, இதக் குடியுங்க...!"

தண்ணியை வாங்கி, மடக்கு மடக்கென்று குடித்தாள். ஆனாலும், ஆசுவாசமும் படபடப்பும் அடங்கவில்லை! முந்தானையை எடுத்து, முகத்தில் படிந்திருந்த வியர்வையை துடைத்தாள். எதிரில் நிற்கின்ற, இளய மகள் மஸாஹிறாவின் முகத்தையும் ஒருதரம் நிமிர்ந்து உற்றுப் பார்த்தாள். கச்சான் காற்றுக்கு அடிபட்டு முறிந்த கறிவேப்பிலைதான் கதிசாம்மாக்கு நினைவுக்கு வந்திருக்க வேண்டும்!

"இதுக்குள்ளதான்..., அவ, எங்களையும் அங்க – குவைத்துக்கு வரச்சொல்லி கடிதம் எழுதினதும்... 'ரைப்பிங்' எடுத்து, 'பாஸ்' பண்ணச் சொன்னதும்...!

இவன்...ஏஜன்டுக்கு கொடுத்திருக்கிற காசு, தொலைஞ்சாலும் பறவாயில்ல...! இந்த, குவைத்தும் வேணாம்...! இந்தச் சீரழிவும் வேணாம்! ஸாஹிறாவும் இந்தா...அப்பிடித்தான் எழுதியிருக்கிறா...நான், போக மாட்டன்!

...திடீரென்டு ராத்தா–ஸாஹிறா...ஏன் இப்படி எழுதினா...? 'ஏதும்...நடந்திருக்குமோ...? மிருக சாதிகளும் திரியிதாமே...? இருந்தாலும் இருக்கும்! சேச்சே...அப்பிடியெல்லாம் நடந்திருக்காது...! அதுக்கு, அல்லா விடமாட்டான் அப்ப..., பேப்பரில வாறது...? போற வாற ஆக்கள் சொல்லிறது...? தப்பி ஓடி வாறதுகள் கதைக்கிறது...? எல்லாமே பொய்தானா...? ஸவாஹிரும் கடிதம் எழுதினதாமே...அதிலேதும் இருக்குமோ...?"

என்றெல்லாம் தனக்குள் நினைத்துப் பார்த்த ... மஸாஹிறா, குழம்பினாள்! ஆனால், அந்த, நினைவுகளை தனது நெஞ்சின் அந்தரங்கப் பெட்டகத்துள் வைத்து பூட்டிக்கொண்டாள்!

"இப்ப...என்ன, குடிமுழுகிப் போச்சு...? நீ, ஏன்டி மகளே யோசிக்கிறாய்...? அல்லாட காவல்...ஒன்டும் நடந்திருக்காது! எல்லாத்துக்கும் அவன்தான் ... போதுமானவன் ... ஒரு முள்ளுக் கொப்பும் முறியாம...நோகாம...என்ர புள்ள ஊர் வந்து சேரும்...!! நீ போய், 'லுகஹரை'த் தொழுதிற்று, பள்ளிக்குப் போனதுகள் வாறநேரமாப் போச்சு...அடுப்படி அலுவலைப் பாருமனே!"

இப்படியாக...ஓர் ஆறுதலைக் கூறி, மகள் மஸாஹிறாவை அனுப்பிவைத்தாலும் கதிசாம்மாவின் பெற்றமனம், அறுத்துப் போட்ட கோழியைப் போல துடித்துக் கொண்டே இருந்தது!

'என்ன நடந்தா என்ன ...? படைச்சவன் படி அளக்கமாட்டானா ...? என்ட, புள்ளய அனுப்பினது...

மடத்தனமாப் போச்சு...!? இனி, என்ட புள்ள கண்ணுக்கெதிரே கிடந்தால் போதும்!! 'உம்மா மௌத்து' என்டு,...தந்தி அடிச்சாவது கூப்பிடவேண்டியதுதான்!'

கதிசாம்மா, தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

மகள் ஸாஹிறா குவைத்துக்குப் போனபிறகு, அனுப்பிவைத்திருந்த அழகான கலர் போட்டோக்கள், அதில், அந்த...கொம்பனி மனேஜர் குடும்பத்தோடு நின்று, எடுத்ததென்று அனுப்பியிருந்த போட்டோ...கறுப்பு 'வெல்வட்' துணியில், அழகான அறபு எழுத்துக்களினால் வரையப்பட்டிருந்த மக்கா, மதீனா படங்கள்...ஓடிக்குளோன் போத்தல்கள்...அழகான விரிப்புகள்...பிடவைகள்...கஸெட் றேடியோ...கதிசாம்மாவின் கையிலிருக்கிற 'தஸ்பீஹு' மணிக்கோர்வை...இவை, எல்லாம் ஒன்று சேர்ந்து, பூதாகாரமாக எழுந்து நின்று, தன்னைப் பார்த்து கெக்களம் கொட்டிச் சிரிப்பது போலிருந்தது, அந்தத் தாய்க்கு!

அந்தப் பொடியன் - ஸவாஹிர், வாங்கி அனுப்பச் சொன்னதென்று, போனமாதம்தான் மகள் ஸாஹிறா வாங்கி அனுப்பிய அந்தக் கலர் ரி.வி! அது, தனது கண்ணிரண்டையும் விற்றுவிட்டு, வாங்கிய 'பக்கிசு'ப் பெட்டியாகவே கதிசாம்மாக்கு தெரிந்தது.

இதற்கிடையில், "முடிந்தால் சாஹிறாவைத்தான் முடிப்பேன்! இல்லாட்டி கல்யாணமே முடிக்க மாட்டேன்!" என்று, சொல்லிக்கொண்டு, திரிந்த அந்தப் பொடியன் ஸவாஹிர், வாத்திவேலையை விட்டிட்டு, இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கும் போய் வியாபாரம் செய்து...இப்ப, கொழும்பிலையும் கடை எடுத்து நல்லாயிருக்கார்...

அந்தப் பொடியன்ர...உதவியாலதானே...என்ட புள்ள குவைத்துக்கும் போனது...இல்லாட்டி,...செலவளித்த காசுக்கு இங்கயே ஒரு அரசாங்க உத்தியோககாரனை வாங்கியிருக்கலாம்...? அதுக்கு, இப்ப என்ன செய்யிறது...? அதெல்லாம் அல்லாட நாட்டம்...!

'வியாபாரமென்டால் நல்லாப் போகிது...ஆனால், கடைக்கு, முதல்தான் காணாதாம்...' என்று, அந்தப் பொடியன்ர, உம்மாவும் வாப்பாவும் வந்து, கேட்டதுக்குத்தானே. மக்கள் வங்கியிலே என்ர பேரில, அவர் 'ஹயாத்தாளி' போட்டுவைத்திருந்த இருபதாயிரத்தையும் எடுத்து..., கொடுத்தன்...! அதுக்குப் பொறகு, மகள் குவைத்துக்குப் போன அடுத்தடுத்த மாதமே அந்தப் பொடியன்ர பேருக்குத் தானே...புள்ள ஸாஹிறா மூவாயிரம் 'றியாழ்' அனுப்பினது...

"இந்த வருஷம்...மருமகள் ஸாஹிறா பெருநாளைக்கு வாறத்தோட கல்யாணத்தையும் செய்திருவம்...இனி அது போகத் தேவையில்ல" என்று, மாப்பிள்ளை வீட்டாரே வந்து 'நிச்சயம் பண்ணிற்று'ப் போனதும்...

அதுக்கிடையில், மகள் ஸாஹிறா, இப்படி கடிதம் எழுதியிருக்கிறதும்...? இதையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக, அந்தத் தாய் நினைத்துப் பார்த்தாள்! அடுத்தது என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடி, குழம்பிச் சலித்தாள்...

"எனக்கு புத்தி சொல்லிப் போட்டு...நீங்க...என்ன, உம்மா...இப்பிடி இருந்த இடத்திலேயே இருக்கிறயள்...? நீங்க முஹர்* தொழல்லயா...? 'கழா'*வாகப் போகிது...? எழும்புங்க...உம்மா...! கடிதத்தை, தாங்க! கொண்டு போய் வைப்பம்...!" மஸாஹிறா கேட்டாள்.

"உம்மாவை உசிரோட பார்க்கவேணுமென்டால், இந்த பெருநாளைக்கி ஊருக்கு வரவேணும்!" என்டு, இன்டைக்கி லெற்றர் போடுமனே!"

"சரி உம்மா...எழுதிறன். நீங்க எழும்புங்க!"

**வி**டிந்தால்...பொழுதுபட்டால்...மகள் - ஸாஹிறாவிடமிருந்து, ஒரு செய்தியும் வரவில்லையே...? என்ற, கவலையைத் தவிர, வேறு எந்தக் கவலையும் அந்தத்தாய்-கதிசாம்மாவுக்கு இருக்கவில்லை!

ஒவ்வோரு நேரத் தொழுகையின் பின்பும் தொழுத பாயில் இருந்தபடியே, 'என்ர, புள்ள ஒரு ஆபத்து மில்லாமல் ஊர் வந்து சேர கிருபை செய் நாயனே...!' என்றுதான் 'து ஆ'க் கேட்டுப் பிராத்தித்தாள்!

அந்தக் கடிதத்திற்குப் பிறகு, கதிசாம்மாவை மட்டுமல்ல, அந்த வீடு முழுவதையுமே ஒரு சோகம் ஆக்கிரமித்திருந்தது.

ஒரு கனைப்பு செருமலோடு...

"மச்சி கதிசா...இருக்கயளா...?" என்று, கூப்பிடுவது கேட்டது!

"இருக்கிறம்...வாங்க மச்சி...வாங்க!"

சம்மந்தி வீட்டாரை கதிசாம்மா வரவேற்றாள்.

"என்ன மச்சி...? இந்த, நோன்பு லீவுக்கு...புள்ள–ஸாஹிறா...வாறல்லயாமா...?"

"ஏன் மச்சி, அப்பிடிக் கேட்கயள்...? புள்ள, வாறனேன்டுதான், கடிதம் போட்டிரிக்கி...!"

"இல்ல...சும்மா,...கேட்டுப் பார்த்தன்...? மச்சி..., முக்கியமான சங்கதி ஒன்று...அதைச் சொல்லிற்றுப் போகத்தான் வந்தன்...! அதை...நீங்க...அவிசரப்பட்டு, பிழையாக விளங்கிக் கொள்ளப்படாது...!"

"சும்மா ஆலா வர்ணம் போடாமல் விஷயத்தை சொல்லுகா...!"

"கல்யாணத்துக்கு இப்ப, அவிசர மில்லை ...என்டு...தம்பி ஸவாஹிர், சொல்லிற்றுப் போறான்...!"

"என்ன மச்சி சொல்லிறயள்...? நீங்க தானே...எல்லாரும் வந்து...ஆறு நோன்பு கழிச்சி வைப்பம் என்று, திட்டம் கட்டிப் போட்டுப் போனது...!? இப்ப என்ன புதுசா வந்து பூந்தது...?"

"சொன்னதெல்லாம் சரிதான்...! இப்ப, கல்யாணத்துக்கு தோதில்லயாம் என்டு, சொல்லிற்றான்...! அதோட, இந்த, பத்தாயிரத்தையும் உங்களிட்ட கொடுக்கச் சொல்லியும் தந்திற்றுப் போறான்...! மிச்சத்தை வாற மாதம் தாறானாம்...' "

"இதையெல்லாம் ஆரு இப்ப கேட்டது? இது, அந்தப் பொடியனுக்கு தொழிலுக்கென்று ... கொடுத்தது தானே...மச்சி...?"

"அதெல்லாம் சரிதான்...எல்லாம், அல்லாட நாட்டம், இருந்தால்தான் நடக்கும்...!"

"அல்லாட நாட்டமும், நம்மிட சம்தமமும் பொடியன்ர விருப்பமும் இருக்கப் போய்த்தானே...நாம, சம்மந்தம் கலந்ததும், கொடுக்கல் வாங்கல் செய்ததும் திட்டங்கட்டினதும்!! இப்ப என்ன, புதுக்கதை...?"

"அப்பிடி ஒன்டுமில்ல..."

"ஒன்டுமில்ல என்டால்...அப்ப என்ன? நீங்க, என்னத்தயோ விழுங்கிறயள்...? எனக்கு விளங்கிற மாதிரிப் பார்த்தால்...நான் சொல்லட்டா...? உங்களுக்கு, இப்ப..., மகனைத் தாறதுக்கு சம்மதமில்ல...! புதுசா...எதையோ கண்டிட்டயள்...? அதானே...விஷயம்...?"

"..................."

"என்ன உசும்பாம இருக்கிறயள்...? உங்களுக்கு பேசுறதுக்கு, எப்பிடி நாவரும்...? ஆனால், ஒன்டு...இந்தக் கல்யாணத்துக்கு, அவன் பொடியனுக்கு ஏன் சம்மதமில்லை என்டு, எனக்கு தெரிஞ்சாக வேணும்?"

"அதை, என்னென்டு சொல்லிறது...? ஆறுதலா சொல்லிறன்...!"

"இல்ல...! அதை, இப்ப சொல்லிற்றுத்தான், நீங்க

எழும்பவேணும்!"

"ஸாஹிறா...வெளி நாட்டுக்குப் போன பிறகு...அதை, முடிக்க அவனுக்கு அவ்வளவு விருப்பமில்ல ... போல ... மஸாஹிறாவை, என் டால்...முடிப்பான் போல கிடக்கு...!?

"என்ன...? வெளிநாட்டுக்குப் போனபிறகு...!? முடிக்க, விருப்பம் இல்லையாமா...? உத்தியோகம் எடுக்க இருந்த, என்ர குமரை...எடுக்க விடாமல் நிற்பாட்டி...கொழும்புக்கு கூட்டிக்கொண்டு அலைஞ்சி திரிஞ்சி..., குவைத்துக்கு ஏத்தி அனுப்பினது ஆராம்...? யாவாரம் செய்யிறதுக்கு...எங்கால காசு வந்ததாம்...? என்ன...? ஏன் பேசாம இருக்கிறயள்? எப்பிடி பேசுவயள்...தொண்டை கட்டிப் போச்சா...!? இடிதான் விழும்!! இருந்து பாருங்க...! அதுபோக, அதென்ன... புதுசா ஒரு கதை...? மஸாஹிறாவை என்டால் முடிப்பாராமா...? அந்தக் கொமர் வாழாட்டித் தேவையில்ல! அல்லாட காவலா நீங்க போய் வாங்க..."

**வீரகேசரி** 1981

---

**முஹர்***– மத்தியானத் தொழுகை.
**கழா***– விடுபட்டவை.
**துஆ***– பிரார்த்தனை.

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்


தரமான நூல்களின் தாயகம்

LIBRARY
Km/Shams Central College
Maruthamunai

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்

தரமான நூல்களின் தாயகம்

விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்
விடுதலை விருட்சம் வெளியீட்டகம்
தரமான நூல்களின் தாயகம்



கனி, பிரதானமான
ஒரு கலைஞர்தான்.
1960களில் ஈழத்தில் அலையடித்த
கவித்துவ வெள்ளத்தின்
கிழக்கிலங்கை ஊற்றுக்களில்
மருதூர்க்கனியும் ஒருவர்.
கனியின் கவித்துவம் கற்பனைகளின்
இரசனைக் கூடாரமாக
அமையவில்லை.
அது சமத்துவமான
சமூகத் தேடலுக்கான
ஆயுதமாக அமைந்தது.

மருதூர்க்கனியின் இந்தச்
சிறுகதைத் தொகுதியில்
கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை
கவித்துவ ஆற்றலுடன் வெளிப்படுகின்றது.
கவிஞனுக்குரிய நுண்ணுணர்வுடனும்
புனைகதையாசிரியனுக்குரிய
சித்திரிப்புத் திறனுடனும்
கதைகள் அமைந்துள்ளன.

பேராசிரியர்
கா. சிவத்தம்பி